பாரதியின் உரைநடையில் அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்கள்

நூலாசிரியர்

அ. சீனிவாசன்

பதிப்பாளர்

கர்மயோகி பதிப்பகம்

அ.சீனிவாசன்

நூலாசிரியர் / பதிப்பாளர்

நெ.6, யாதவாள் 2–வது குறுக்கு தெரு,

விருகம்பாக்கம்

சென்னை 600 092

நூலின் பெயர்	:	பாரதியின் உரைநடையில் அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்கள்
ஆசிரியர்	:	அ. சீனிவாசன்
மொழி	:	தமிழ்
வெளியீட்டெண்	:	முதல் பதிப்பு
ஆண்டு	:	2005
தாள்	:	16 கே.ஜி. மேப் லித்தோ
நூல் அளவு	:	1/8 டெம்மி
விலை	:	ரூ.90/–
உரிமை	:	ஆசிரியருக்கே
வெளியீடு	:	கர்மயோகி பதிப்பகம் அ. சீனிவாசன் நூலாசிரியர்/பதிப்பாளர் நெ.6, யாதவா 2–வது கிராஸ் தெரு, விருகம்பாக்கம், சென்னை – 600 092,
அச்சுவடிவமைப்பு	:	வி.எஸ். சாமிநாதன் 156 ராதாநகர் மெயின் ரோடு, பாதல் ப்ளாட், குரோம்பேட்டை, போன் # 2265 2294
அச்சிட்டோர்		ஆப்செட் முறையில் அச்சிட்டோர்.

பாரதியின் உரைநடையில் அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்கள்

பொருளடக்கம்

- முன்னுரை
- தோற்றுவாய்

1. பாரதியின் உரைநடை
2. நம்பிக்கை
3. உயிரின் ஒளியும் ஒலியும்
4. காலனிக் கொள்ளை
5. ஹிந்து தர்மத்தின் மேன்மை
6. முழுமையான விடுதலை – பரிபூரண சுதந்திரம்
7. பாரத ஜாதி
8. ஆரிய சம்பத்து
9. வறுமையின் காரணமும் விளைவும், தீர்வும்
10. அன்பு வழி
11. மனித மேம்பாடு
12. உலக வாழ்கையின் பயன்
13. உழைப்பு
14. ஹிந்துக்களின் ஒற்றுமை
15. கொள்கையும் செய்கையும்
16. ஹிந்துக்களின் சிறப்பு
17. ராகவசாஸ்திரி கதை
18. பதிவிரதை – பெண்ணுரிமை
19. சமுதாய ஒற்றுமை

20. சுதேசிய முயற்சி
21. தேசியக் கல்வி
22. ஹிந்துக்களின் கூட்டம்
23. ஹிந்துக்கள் யார்?
24. திலகர் கூறியது
25. பஞ்சமர்
26. ஜாதிபேத வினோதங்கள்
27. பிராமணன் யார்?
28. எதிர்ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை
29. மதிப்பு: ஹிந்துக்களின் மதிப்பும் மரியாதையும்
30. வருங்காலம்
31. தொழிலாளர்
32. பருந்துப் பார்வை:
    கலைகள்
    தென்மாநில மொழிகள்– மொழிவழிக்கல்வி
    உடம்பு, உடல் வலிமை
    செல்வம்
    தண்டனையின் கருத்து
    நீதி என்னும் தலைப்பில்
33. குரு
34. கொல்லாமை – ஜீவகாருண்யம்
35. ஐம்பெருங்குழு
36. அனந்த சக்தி
37. தமிழருக்கு
38. நிறைவுரை

நூலாசிரியரைப் பற்றி

பாரதியின் உரைநடையில் அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்கள்

முன்னுரை:

பாரதி ஒரு மகாகவி என்பதை நாம் அறிவோம். அதனாலேயே அவரை மகாகவி பாரதியார் என்று அடைமொழியிட்டு அழைக்கிறோம். பாரத நாடும் அவரை மகாகவி என்றும் மேலும் மேலும் அதிகமாக அங்கீகரித்து வருகிறது. பாரதி பெயரில் பாரதத்தின் தலைநகரான டில்லியில் தெருவும் அமைந்திருக்கிறது. பாராளுமன்றத்தின் மைய மண்டபத்தில் மகாகவி பாரதியாரின் திருவுருவப்படம் அலங்கரிக்கிறது.

தமிழ்மொழி செம்மொழி என்று இன்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மொழியின் உலக அந்த ஸ்தும் உயர்ந்து வருகிறது. மேலும் உயர்வதற்கான வாய்ப்புகளும் அதிகரித்து வருகின்றன. பாரத நாட்டின் பல வேறு நகரங்களிலும், மற்றும் உலகம் முழுவதிலும் பல்வேறு நாடுகளிலும் நகரங்களிலும் வாழும் தமிழ் மக்கள், தமிழ் மொழி பேசும் அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், தமிழ் மொழியின் சிறப்புகளையும், தமிழ் நாட்டின் தனிச் சிறப்புகளையும் தனித்தன்மைகளையும் அதன் பண்பாடுகளையும், பாரம் பரியங்களையும், வரலாற்றுச் சிறப்புகளையும், பாரத நாட்டின் பொதுச் செல்வத்திற்கு தமிழ் செலுத்தியுள்ள பங்கினைப் பற்றியும் உலகரியச் செய்யத் தங்களால் இயன்றதனைத்தையும் செய்ய முற்படும் போது தமிழ் மொழியின் உலக அந்தஸ்தும் பெருமையும் மேலும் அதிகமாக உயர்வதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன.

மகாகவி பாரதியாரின் படைப்புகளில், அவருடைய கவிதைகளில் தேசபக்திக் கவிதைகள் மிகவும் சிறப்பானவை. அதனாலேயே அவர் தேசிய மகாகவி என்றும் சிறப்பாக அழைக்கப்படுகிறார். தேசபக்தி நிரம்பிய கவிதைகளுடன் பாரதி படைத்துள்ள தெய்வ பக்திக் கவிதைகள், கண்ணன் பாட்டு, சுயசரிதைப் பாடல்கள், தமிழ் நாட்டைப் பற்றிய பாடல்கள், பாப்பாப் பாட்டு, பெண்ணுரிமைப் பாடல்கள், பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு மற்றும் பல தலைப்புகளிலும் அவர் பாடியுள்ள கவிதைகள் கருத்தாழம் மிக்கவை. பாரதப் பண்பாட்டு தளத்தின் மூலவேரிலிருந்து எழுந்தவை. தேசபக்தியும் தெய்வ பக்தியும் இணைந்தவை.

பாரதி வெறும் கவிஞராக மட்டும் மகாகவியாக மட்டும் இருக்கவில்லை. அவர் ஒரு தலை சிறந்த எழுத்தாளராக, பத்திரிகையாளராக, கட்டுரையாளராக விளங்கினார். அவர் காலத்தில் தமிழில் உரைநடை இலக்கியம் ஆரம்ப நிலையில் இருந்தது. இன்று தமிழ் உரைநடைக்கு ஏற்பட்ட வளர்ச்சிக்கு பாரதி ஆற்றியுள்ள பங்கு மகத்தானது. பாரதி தமிழ் உரைநடைக்கு ஒரு இலக்கணமே வகுத்தார்.

தமிழ் வசன நடையைப் பற்றிக் குறிப்பிடும்போது பாரதி, "தமிழ் வசன நடை இப்போது தான் பிறந்தது. பல வருஷமாகவில்லை. தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும். ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்த பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடியவரை பேசுவது போலவே எழுதுவது தான் உத்தமம் என்பது என்னுடைய கக்ஷி. எந்த விஷயம் எழுதினாலும் சரி, ஒரு கதை அல்லது ஒரு தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம், எதை எழுதினாலும் வார்த்தை சொல்லுகிற மாதிரியாகவே அமைந்துவிட்டால் நல்லது"

என்றும், "உள்ளத்திலே நேர்மையும் தைர்யமும் இருந்தால் கை பிறகுதானாகவே நேரான எழுத்து எழுதும். தைர்யம் இல்லாவிட்டால் வசனம் தள்ளாடும்" என்றும், "வசன நடை, கம்பர் கவிதைக்குச் சொல்லியதைப் போலவே தெளிவு, தண்மை, ஒளி, ஒழுக்கம் இவை நான்கும் உடையதாக இருக்க வேண்டும். இவற்றுள் ஒழுக்கமாவது தட்டுத் தடையில்லாமல் நேரே பாய்ந்து செல்லும் தன்மை. நமது தற்கால வசன நடையில் சரியான ஓட்டமில்லை. தள்ளாட்டம் அதிகமாகக் காணப்படுகிறது. உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலைநிறுத்திக் கொண்டால் கை நேரான தமிழ் நடை எழுதும்" என்றும் குறிப்பிடுகிறார். பாரதியின் படைப்புகள், அவருடைய எழுத்துக்கள், கவிதைகள், கட்டுரைகள், கதைகள் எல்லாம் பெரும்பாலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளியானவை.

1857–ம் ஆண்டில் நடைபெற்ற முதலாவது இந்திய சுதந்திரப் போராட்டம் பல காரணங்களால் தோல்வியைத் தழுவியது. ஆயினும் அந்த மாபெரும் போராட்டம் ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சியை அசைத்து ஆட்டம் காண வைத்தது. அதனால் பிரிட்டிஷ் பாராளுமன்றமே, இந்தியப் பிரச்னையில் தலையிட்டு, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகத் தன்னுடைய நேரடி ஆட்சியை 1858–ம் ஆண்டில் இந்திய நாட்டில் நிறுவிக் கொண்டது. பிரிட்டிஷ் ராணி இந்திய நாட்டின் சக்கரவர்த்தினியாக அறிவிக்கப்பட்டாள்.

ஆங்கிலேயேர்கள் ஒரு நூறு ஆண்டுகளுக்கு மேல் இந்தியப் பெருநாட்டில் நடத்திய கொள்ளை, போர்கள், படுகொலைகள் மற்றும், இந்த நாட்டுத் தொழில், குறிப்பாக நெசவுத் தொழில், வர்த்தகம், விவசாயம், நீர்ப்பாசன முறைகள், கால்நடைவளம், மனித வளம்

நமது கல்வி முதலியவற்றில் ஏற்படுத்திய சேதம் ஆகியவை கொஞ்சநஞ்சமல்ல. அதன் விளைவாக ஏற்பட்ட பஞ்சம் வறுமை, பசி, பட்டினி, நோய், கல்லாமை, அதனால் ஏற்பட்ட பெரும் பட்டினிச் சாவுகள், மனிதச் சேதங்கள், கால் நடைச் சேதங்கள் கணக்கில் அடங்காது. இந்தச் சூழ்நிலையில், வங்கம், தமிழ்நாடு, பாஞ்சாலம், மகாராஷ்டிரம் முதலிய பாரத நாட்டின் பல பகுதிகளிலும் பல மகான்கள் தோன்றி இந்த நாட்டில் ஒரு புதிய விழிப்புணர்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாயினர்.

தமிழ் நாட்டில் இராமலிங்க சுவாமிகள் தோன்றி ஒரு புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். விவேகானந்தர் தொடங்கிய புதிய சிந்தனைப் புரட்சியை தமிழகம் முதலில் அடையாளம் கண்டு, அவருக்கு ஆதரவளித்தது. அதைத் தொடர்ந்து பாரதியார் தனது உணர்ச்சிமிக்க, உண்மைமிக்க, கருத்தாழம் மிக்க கவிதைகளையும், கட்டுரைகளையும் நாட்டுமக்களுக்கு முன்பாக எடுத்து வைத்தார். அவை மிகவும் சக்தி வாய்ந்த பேராயுதங்களாகச் செயல்பட்டு மக்களுடைய உள்ளங்களில் சுதந்திர உணர்வையும் தன் மானத்தையும் கிளப்பியது. நாடு முழுவதிலும் எழுச்சி பெற்ற சுதந்திர வேள்வியில் பல மகான்கள் தோன்றி மக்களைத் தட்டி எழுப்பினார்கள்.

பாரதியார் ஒரு தேசிய கவியாக மக்களிடம் உலவினார். ஒரு மகாகவியாக மக்களிடம் அங்கீகாரம் பெற்றார். பத்திரிகைகளில் அவர் எழுதி வெளியிடப் பட்ட பல கவிதைகளும் அத்துடன் அவர் எழுதி வெளியிடப்பட்ட பல கட்டுரைகளும் விடுதலைப் போராட்ட வீரர்களின் உள்ளங்களில் பதிந்து அவர்களைத் தட்டி எழுப்பியது. அந்த மகாகவி நடுவயது ஆகுமுன்பே நம்மைவிட்டு இந்த உலகை விட்டுப் பிரிந்தார். அவர் மறைந்த முப்பது ஆண்டுகளுக்குள் இந்திய

நாடு விடுதலை பெற்றுவிட்டது. இந்த மாபெரும் பாரம்பரியமும் வரலாற்றுச் சிறப்பும் பண்டயப் பெருமைகளும் நிறைந்த பாரத தேசம் சேதமுற்றாலும், ஒரு மாபெரும் ஜனநாயக நாடாக ஒரு சிறப்பு மிக்க குடியரசாக உலகில் இன்று அங்கீகாரம் பெற்றுள்ளது.

அண்மையில் 1980–ம் ஆண்டுகளில் பாரதியாரின் ஜன்ம தினத்தின் நூற்றாண்டு விழாவின் போது அவருடைய படைப்புகள் மிகவும் விரிவாக மக்களிடம் கொண்டு செல்லப்பட்டன. அவரைப் பற்றிய, அவருடைய படைப்புகளைப் பற்றிய பல செய்திகளும், பல புதிய செய்திகளும் வெளிவந்தன. பல அமைப்புகளும் ஆர்வலர்களும், அப்பணியில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுப் பாரதியின் புகழைப் பரப்பினர். தமிழகத்தின் தவப்புதல்வனாகத் தோன்றிய அந்த மகானின், அந்த ஞானியின், அந்த சித்தரின் அந்த மகாகவியின் கருத்துக்களும், தத்துவங்களும் அவருடைய ஆணைகளும், கட்டளைகளும் தமிழ் மக்களின் உள்ளங்களை உலுக்கியது. அவரைப் பற்றிய அறிமுகமும் அங்கீகாரமும் மேலும் விரிவாகத் தமிழகத்திலும் பாரத நாட்டிலும் பரவியது.

மகாகவி பாரதி பாரதத்தின் தேசீய கவியாகப் புகழ் பெற்றார். ஆயினும் அவருடைய கவிதைகளைப் போல அவருடைய உரைநடை மொழியும், கட்டுரைகளும் அவைகளின் ஆழ்ந்த கருத்துக்களும் போதுமான அளவில் மக்களிடம் இன்னும் செல்லவில்லை என்று தமிழகத்தின் பல அறிஞர்களும் கருதுகிறார்கள். அந்தக் குறை நீடிக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் கூட திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை கழகத்தின் மூலம் பாரதியின் உரைநடைக் கருத்துக்களைப் பற்றிய ஒரு கட்டுரைப் போட்டி

நடைபெற்றது. அப்போட்டியில் தமிழறிஞர்கள், பாரதி அன்பர்கள் பலரும் பங்கு கொண்டனர். அந்த முயற்சி சிறப்பாகவே நடைபெற்றது. இவ்வாறு தமிழகத்தில் உள்ள இதர பல்கலைக் கழகங்களும் இதர தமிழ்துறைகளும் பாரதியின் உரைநடையையும் கட்டுரைகளையும் அதன் கருத்துக்களையும் பிரபலப் படுத்துவதற்கான இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள், ஆகியவற்றின் தமிழ் பாடநூல்களில் பாரதியாரின் உரைநடைக் கட்டுரைகளைக் கொண்டுவர வேண்டும். பாரதியின் கட்டுரைத் தொகுப்புகளைத் தனிநூல்களாக வெளியிட்டும் மாணவ மாணவிகளிடம் இளம் தலைமுறையினரிடம் கொண்டு செல்ல வேண்டும்.

பாரதி அன்பர்கள் பலரும், பாரதியைப் பற்றிப் பல ஆய்வுகள் செய்தும் அவருடைய படைப்புகள் தொடர்பான சில நூல்களை எழுதியும் வெளியிட்டுக் கொண்டிருக்கும் என்னிடம் பாரதியின் உரைநடை பற்றியும், விளக்க நூல்கள் எழுதும் படி ஆலோசனை கூறினார்கள். ஏற்கனவே, "பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி", "பாரதியின் புதிய ஆத்தி சூடி – ஒரு விளக்கவுரை", என்னும் எனது இரு நூல்களும் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை மூலம் சிறந்த நூல் என அங்கீகரிக்கப் பட்டு முதல் பதிப்பு வெளியிடப்பட்டு தமிழ்மக்களிடம் குறிப்பாகக் கல்வி நிலையங்களுக்கும், நூலகங்களுக்கும் சென்றிருக்கின்றன. முதல் பதிப்பு முடிந்து இரண்டாவது பதிப்பும் வெளியிடப்பட்டு அதன் பிரதிகளும் வேகமாகப் போய்க் கொண்டிருக்கின்றன. "பாரதியின் தேசீயம்" என்னும் ஒரு சிறு நூலும் நான் எழுதி வெளியிட்டு அந்த நூலும் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. பாரதியின்

உரைநடைப்பற்றி, "தமிழ்மொழி வளர்ச்சியில் பாரதியின் உரைநடை" என்னும் தலைப்பில் ஒரு நூல் எழுதி முடித்து வெளியிட்டுள்ளேன். இப்போது "பாரதியின் உரைநடையில் அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்கள்" என்னும் தலைப்பில் இந்த நூல் எழுதி வெளியிடப் படுகிறது. பாரதி தொடர்பான வேறு சில நூல்களும் எழுதிக் கொண்டிருக்கிறேன். "ஆழ்வார்களும், பாரதியும்" என்னும் நூலும் எழுதி முடித்து அந்த நூலும் விரைவில் வெளிவரவிருக்கிறது.

"பாரதியின் உரைநடையில் அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்கள்" என்னும் இந்த நூலை எழுதுவதற்கு, ஊக்கமளித்து இதை வெளியிடுவதற்கும் ஆதரவளித்த எனது இனிய நண்பர்களுக்கு எனது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது முந்திய நூல்களை வெளியிடுவதற்கும் வாங்கிப் பயன்படுத்துவதற்கும் ஆதரித்து உதவியது போல் இந்த நூலுக்கும் நல்லாதரவை நல்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

நாடு விடுதலை பெற்ற பின்னர், இப்போது நாட்டு முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்குமாக நாம் பாடுபட வேண்டிய கடமைகளை லட்சியமாகக் கொள்ள வேண்டும். அன்னிய ஆட்சியால் ஏற்பட்ட சேதங்களைப் போக்க, அவர்கள் ஏற்படுத்திய கடுமையான காயங்களையும், புண்களையும் ஆற்ற நாம் கடுமையாக உழைக்க வேண்டியதிருக்கிறது. அன்னிய ஆட்சி விட்டுச் சென்ற பஞ்சம், பசி, பட்டினி, வேலையின்மை, கல்லாமை, அறியாமை, வறுமை, சுகாதாரமின்மை, நோய், நொடிகள் அச்சம், சோம்பல் முதலிய கேடுகளைப் போக்குவதற்கு ஒரு மகிழ்ச்சியான வாழ்வை நாட்டு மக்கள் அனைவருக்கும் உண்டாக்குவதற்கு நாம் இன்னும்

கடுமையாக உழைக்க வேண்டியதிருக்கிறது. பாடுபட வேண்டியதிருக்கிறது. நாம் எல்லோரும் நீண்ட பாரம்பரியம் மிக்க பாரத புத்திரர்கள் என்னும் அடையாளத்தை உலகுக்குத் தெளிவு படக் காட்ட வேண்டியதிருக்கிறது. அப்பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு பாரதியின் கட்டுரைகளின் கருத்துக்கள் நமக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்துள்ளன. எனவே பாரதியின் கட்டுரைகளையும் அதன் கருத்துக்களையும் நமது உள்ளத்தில் செலுத்தி நாடெங்கும் பரப்பவேண்டுகிறேன். பராசக்தி உங்களுக்குத் துணை புரியட்டும்.

வந்தே மாதரம்

அ. சீனிவாசன்
நூலாசிரியர்.

பாரதியின் உரைநடையில் அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்கள்

தோற்றுவாய்

மகாகவி சுப்ரமணிய பாரதியாரை ஒரு மகாகவியென்று தமிழகம், தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறியும். பாரத நாடு முழுவதும் கூட இப்போது அவரை தேசீய மகாகவியென்று அறியத் தொடங்கியிருக்கிறது. தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அறிமுகமான மகாகவி பாரதியை, அவருடைய பன்முகப் பரிமாணங்களை பாரத நாடு முழுவதிலும் நன்கறியச் செய்ய வேண்டியதும், அவருடைய பெருமைகளையும், சிறப்புகளையும் உலகறியச் செய்ய வேண்டியதும், பாரதம் முழுவதிலும், உலகம் முழுவதிலும் பரவியுள்ள தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும். தமிழர்கள் வாழும் சகல இடங்களிலும் தமிழ் சங்கங்கள் அமைத்து பாரதியையும் இதர தமிழ்ப் பெரும்புலவர்களையும் அவர்களுடைய சிறந்த இலக்கியப் படைப்புகளையும் அறிமுகப்படுத்த வேண்டும். அவைகளின் ஆழ்ந்த மனிதாபிமானக் கருத்துக்களையும் செய்திகளையும் நாடறிய உலகறியச் செய்ய வேண்டும்.

மகாகவி பாரதி, சங்க காலப் புலவர்கள், கம்பன், திருவள்ளுவர், இளங்கோவடிகள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், தாயுமானவர், இராமலிங்க அடிகள் வழியில் தோன்றிய ஒரு தலை சிறந்த தமிழ்ப் புலவர். ஒரு மகாகவி, ஒரு ஆழ்ந்த தமிழ்ப் பற்றும் தேசப் பற்றும், தெய்வபக்தியும் கொண்டவர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் தமிழகம் முழுவதிலும் தேச பக்த உணர்வையும் விடுதலை வேகத்தையும் கிளப்பிய ஒரு மாபெரும் புரட்சிகர ஜனநாயகப் பெரும்புலவன். ஒரு மாபெரும் விடுதலை வீரன்.

அன்றைய தேசீய இயக்கத்தில், நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல் என்று கூறித் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட உணர்வு பூர்வமான தேசபக்தன், அரசியல் வழிகாட்டி. அவர் ஒரு சிறந்த தமிழ் எழுத்தாளர். பத்திரிகையாளர், பத்திரிகை ஆசிரியர், கட்டுரையாளர், தமிழ் மொழியில் ஒரு புதிய உரைநடை மரபைத் தோற்றுவித்தவர். ஒரு புதிய கவிஞர் பரம்பரைக்கும் பத்திரிகையாளர் பரம்பரைக்கும் முன்னோடியாக, முன்னுதாரணமாக விளங்கியவர்.

பாரதி சுதேசமித்திரன் பத்திரிகையின் துணையாசிரியராக இருந்து வெகு சிறப்பாகப் பணியாற்றியவர். ஆங்கிலேயர் ஆட்சியின் அடக்குமுறை காரணமாக அவர் பிரஞ்சிந்தியப் பகுதியான பாண்டிச்சேரியில் தங்கியிருந்தார். அவர், இந்தியா, விஜயா, சக்கரவர்த்தினி, கர்மயோகி, சூரியோதயம், பாலபாரதம் தர்மம் முதலிய பெயர்களில் பத்திரிகைகளில் நேரடியாக ஆசிரியர் பொறுப்பிலும் வேறு முக்கிய பொறுப்புகளிலும் பணியாற்றினார். விவேக பானு, ஞானபானு, நியூ இந்தியா, சர்வஜன மித்திரன், முதலிய பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள் அனுப்பியும் பாரதி ஒரு சிறந்த பத்திரிகையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

எனவே பாரதி ஒரு சிறந்த கவிஞராக மட்டுமில்லாமல் ஒரு சிறந்த எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும், கட்டுரை –யாளராகவும் விளங்கினார். அதன் மூலம் பாரதி தமிழ் மொழியின் உரைநடையின் வளர்ச்சிக்குப் பெரும் அளவில் தனது பங்கை ஆற்றியுள்ளார்.

பாரதிக்கு முன்னர், தமிழ் உரைநடையின் தொடக்க காலம் எனக் கூறலாம். ஆரம்பத்தில் தமிழ் உரைநடை பண்டித நடையில் இருந்தது. வள்ளலார் தமிழ் உரைநடையில் எளிமையாக

மக்களுக்குத் தனது கருத்துக்களை எழுதி வெளியிட்டார். அதற்கு அடுத்த படியாக பாரதியார், தமிழ் உரைநடையை, மக்களுக்கு பழக்கத்தில் இருந்த பேச்சு நடைக்கேற்ப சாதாரண மக்களும் எளிமையாகப் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் எழுதத் தொடங்கினார்.

பாரதியாரின் படைப்புகளில் அவருடைய கவிதைகளைப் போலவே அவருடைய உரைநடைக் கட்டுரைகளிலும் பலவேறு தலைப்புகளிலும் உயர்ந்த பல கருத்துக்களை வெளியிட்டுள்ளார். ஆயினும் அவருடைய கவிதைகளின் அளவுக்கு அவருடைய உரைநடைக் கட்டுரைகள் அவைகளின் சிறந்த கருத்துக்கள் பிரபல மடைந்ததாகக் கூற முடியவில்லை. காரணம் நாம் பாரதியை மகாகவியாகவே, கவிஞராகவே அறிமுகப்படுத்தியதும், அவருடைய கட்டுரைகளைப் பிரபலப்படுத்தாமையேயாகும். எனவே, பாரதியின் கவிதைகளைப் போலவே அவருடைய உரைநடைக் கட்டுரைகளையும் அவை பற்றிய விளக்கவுரை நூல்களையும் வெளியிட்டு அவருடைய பன்முகத் தன்மைகளை மிகவும் விரிவான முறையில் பிரபலப்படுத்த வேண்டும். மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். பலவேறு மொழிகளிலும் பாரதியின் கட்டுரைகளையும், விளக்க நூல்களையும் மொழியாக்கம் செய்து நாடறியச் செய்ய வேண்டும் உலகரியச் செய்ய வேண்டும். அதற்கென தனி முயற்சிகளும் தேவைப்படுகின்றன. பாரதி மன்றங்கள், பாரதி ஆர்வலர்கள் இம்முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இந்த நோக்கத்தில் "தமிழ் மொழி வளர்ச்சியில் பாரதியின் உரைநடை" என்னும் தலைப்பில் ஒரு நூல் எழுதி, வெளியிட்டுள்ளோம். அந்த நூலில் முக்கியமாக பாரதி எழுதியுள்ள பல கட்டுரைகளிலும் உள்ள உரைநடை மொழியினை மேற்கோள்கள் எடுத்துக் காட்டியுள்ளோம். அவைகளில் குறிப்பாக வசன நடைபற்றி

பாரதியின் கருத்துக்கள், முதல், தமிழ் விழாக்கள் பற்றியும், தமிழ் பத்திரிகைகள் பற்றியும் தமிழ் நாட்டில் ஏற்பட்டு வரும் விழிப்புணர்வு பற்றியும், தமிழ் மொழி வழிக் கல்வி பற்றியும், பாரதி தனது கவிதைகளுக்கு எழுதியுள்ள முன்னுரைகளில் உள்ள உரைநடை மொழியை மேற்கோள் காட்டியும், அவருடைய உரைநடைக் கட்டுரைப் பகுதிகளை எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. பாரதியின் மிகச் சிறந்த பணிகளில் ஒன்று பகவத் கீதைக்கு அவர் செய்துள்ள மொழியாக்கமாகும். பகவத் கீதை குறித்து பாரதியின் தமிழாக்கம் மிகச் சிறந்த படைப்பாகும். அத்துடன் அந்தத் தமிழாக்க நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரை ஒரு மிகச் சிறந்த இலக்கியமாகும், இந்த நூல் தமிழில் சில பதிப்புகள் வெளிவந்துள்ளன. இந்த நூல் மேலும் அதிகமாகத் தமிழ் மக்களிடம் பரவ வேண்டும். அந்த நூலுக்கு அவர் எழுதியுள்ள முன்னுரை ஒரு சிறந்த இலக்கியம் மட்டுமல்ல, அது அவருடைய உரைநடைத் தமிழுக்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பாரதி தன்னுடைய உரைநடைப் பகுதி கட்டுரைகளில் பல புதிய சிறந்த கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். அவைகள் எல்லாக்காலத்திற்கும் பொருந்தக் கூடியவை. நமது நடைமுறைச் செயல்பாடுகளுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாகும். இந்தக் கட்டுரைகளை மிகவும் விரிவாக மக்களிடம் கொண்டு செல்லவேண்டும்.

பாரதி தன்னுடைய உரைநடைக் கட்டுரைகளில் எடுத்துக் கூறியுள்ள கருத்துக்கள், நான்கு புருஷார்த்தங்களுக்கும் அவர் கூறியுள்ள சுருக்கமான விளக்கம், ஒரு நாட்டில், அதன் பண்பாட்டில், கொள்கை நிலைபாட்டில், வளர்ச்சியில், மேம்பாட்டில், அறிவாளிகளின், படிப்பாளிகளின் கல்வித்துறையில் முன் வரிசையில் உள்ளவர்களின் நிர்ணயமான பங்கும் பாத்திரமும், வேதங்களின் மொழி, இந்திய

சமுதாயத்தில் பௌத்த, சமண சமயங்களின் மிகப் பெரிய தாக்கங்கள், முக்கியமாக சர்வ ஜன சமத்துவம், ஜீவ காருண்யம் பற்றிய கொள்கைகளின் செல்வாக்கு, துறவு நிலையும் அவற்றின் செல்வாக்கும் பங்கும் விளைவுகளும் நாட்டில் நிகழ்ந்த க்ஷத்திரிய நாசம், புலவர்களுக்கும் அறிஞர்களுக்கும், ஞானிகளுக்கும் எடுக்கவேண்டிய விழாக்கள் பற்றிக் குறிப்பாகத் தமிழ் நாட்டில் சங்க காலப்புலவர்கள், ஔவை, கம்பன், வள்ளுவர், இளங்கோவடிகள், இடைக்கால, தற்காலப் புலவர்கள் சான்றோர்கள், விஞ்ஞானிகள் முதலியவர்களுக்கு ஜன்ம விழாக்கள், பாராட்டு விழாக்கள் எடுக்க வேண்டிய அவசியம், தமிழ் இசை அதன் சிறப்பு, அதன் பெருமை, அதை மேம்படுத்த வேண்டிய அவசியம், பெண்கள் விடுதலை, ஆண் பெண் சமத்துவம் பற்றி அவருடைய தெளிவான கருத்துக்கள், சாதிக் கொடுமைகள், பாகுபாடுகள், வேறுபாடுகளை சமுதாயத் –திலிருந்து நீக்க வேண்டும் என்பது பற்றியும், இந்துக்களின் ஒற்றுமைபற்றி அவருடைய உறுதியான கொள்கை நிலைபாடு, தேசியக் கல்வி பற்றி அவருடைய கருத்துக்கள், இவையெல்லாம் நாம் முன்னுதாரணமாக எடுத்துக் கொண்டு செயல்படுத்த வேண்டியவைகளாகும்.

தேச விடுதலை பற்றி பாரதியின் கருத்துக்களும் நிலைபாடும் முன்பின் முரணில்லாதவை. புரட்சிகர ஜன நாயகத் தன்மையும் நெடிது நோக்கும் கொண்டவை. முதலில் பாரத தேசம் அன்னிய ஆட்சியிலிருந்து முழுமையாக விடுதலை பெற வேண்டும். ஆட்சி முறை முழுமையான மக்களாட்சி முறையாக இருக்க வேண்டும். சமுதாயத்தின் சகல பணிகளிலும் மக்கள் அனைவரும் மேலும் மேலும் அதிகமாக பங்கு கொள்ளும்படியாக இருக்க வேண்டும். சாதி வேறுபாடுகள் பாகுபாடுகள், கொடுமைகள் நீங்கி மக்கள் அனைவரின் சமத்துவமும் ஒற்றுமையும் மேலும் மேலும் அதிகப்பட வேண்டும். விடுதலைபெற்ற பாரதத்தில் சமுதாய முன்னேற்றம்

என்பது அனைத்து மக்களின் குறிக்கோளாக அமைய வேண்டும். தேச முன்னேற்றத்திற்கு கல்வி, தொழில் துறைகளில் முன்னேற்றம் காண்பது என்பது முதல் கடமையாகிறது. கல்வி என்பது தேசீயக் கல்வியாக இருக்க வேண்டும். தொழில் என்பது விவசாயம், கால்நடை பராமரிப்பு உள்பட சகல தொழில்களும் அடங்கும். முதல் நிலை உற்பத்தி, மறு உற்பத்தி ஆகியவை அதிகரித்து நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் அனைத்துத் தொழில்களும் இதில் சேரும். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் மேம்பாட்டிற்கும் அடிப்படையாக உள்ளது அதன் கல்வியும் செல்வமும் ஆகும் என்று பாரதி தனது கட்டுரைகளில் வலியுறுத்திக் கூறுகிறார்.

பாரதி பலவேறு தலைப்புகளில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். அவைகளில் தனது கொள்கை நிலைபாடுகளையும் அடிப்படையான அரசியல் சமுதாயக் கருத்துக்களையும் வெளிப்படுத்தியுள்ளார். அவைகளில் அக்கால நடப்பு அரசியல் பொருளாதாரம், சமுதாயப் பிரச்னைகள் தொடர்பான பல கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார். அரசியலில் நாட்டு விடுதலையும், நாட்டு ஒற்றுமையும், நாட்டு முன்னேற்றமும் நமது லட்சியமாகக் கொள்ள வேண்டும் என்பது பாரதியின் கொள்கை நிலைபாடாகும்.

அதே சமயத்தில் நாட்டையும் நாட்டு மக்களையும் பாதிக்கும் பலவேறு பிரச்னைகளைப் பற்றியும் பாரதி எழுதியுள்ளார். உடனடிப் பிரச்னைகளையும் அதே சமயத்தில் நீண்ட காலப் பிரச்னைகளையும் பாரதி தனது கட்டுரைகளில் விவாதித்துள்ளார். அவர் தொடாத பிரச்னை இல்லை.

நாட்டு விடுதலைக்காகத் தலைவர்கள் ஒன்று கூடி, கூட்டங்கள், சபைகள், மகாநாடுகள், நடத்தித் தீர்மானங்கள் போடுவதுடன், பல்லாயிரக் கணக்கான, பல லட்சக்கணக்கான மக்களையும் உணர்வு பூர்வமாகத் திரட்ட வேண்டும் என்று பாரதி எழுதுகிறார். ஹிந்து

தர்மத்தை, ஹிந்து நாகரிகத்தை, ஹிந்து கலாச்சாரத்தை நிலை நிறுத்துவதற்காக நமது சமுதாயம் நடைமுறையில் ஏற் படுத்தி –யிருக்கும் கோவில் திருவிழாக்களில் பல்லாயிரக் கணக்கில் பல லட்சக் கணக்கில் நாட்டு மக்கள் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் குடும்பம் குடும்பமாய் திரளுவதைப் போல, நாட்டு விடுதலைக்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும், சாதி மத இன மொழி வெறுபாடுகளின்றி ஒன்று திரள வேண்டும் என்பதும், ஒன்று திரட்டப் பட வேண்டும் என்பதும் பாரதியின் கருத்தாக இருந்திருக்கிறது.

தேச விடுதலை தேச முன்னேற்றம் என்பது நாட்டின், நாட்டு மக்களின் சுதந்திரமும், கல்வியும், கல்வி அறிவும், செல்வச் செழிப்பும் மேம்பட வேண்டும் என்பதில் கோடிக்கணக் கான பாரத மக்களின் உணர்வு பூர்வமான செயல்பாடுகள் அதிகரிக்க வேண்டும் என்பதாகும். வெறும் பேச்சோடு இல்லாமல் செயல்பாடுகளிலும் பங்கு கொள்ள வேண்டும் என்பது பாரதியின் விருப்பமாக, கருத்தாக இருந்திருக்கிறது என்பது தெளிவாகத் தென்படுகிறது. இதை நிறைவேற்ற நமது மக்களின் ஒற்றுமையும் ஒன்றுபட்ட செயல்பாடும் அவசியமாகும்.

இந்தப் பிரச்னையில் நான் நேரில் கண்ட மூன்று நிகழ்ச்சிகளை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவைகள் சிறந்த முன்னு –தாரணங்களாகும்.

1. மதுரை மாநகரில் ஆண்டு தோறும் சித்திரை மாதத்தில் ஒரு பெரிய திருவிழா நடைபெறுகிறது. அதற்குத் சித்திரைத் திருவிழா என்று மக்கள் குறிப்பிடுவார்கள். இந்தத் திருவிழாவில் அருள்மிகு அன்னை மீனாட்சி திருக்கல்யாண விழாவும், அழகர் ஆற்றில் இறங்கும் விழாவும் முக்கிய தெய்வீக நிகழ்ச்சிகளாகும்.

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் கோவிலில் மீனாட்சி திருக்கல்யாண நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. தனது தங்கையின் திருமண நிகழ்ச்சிகளைக் காண்பதற்காக மதுரைக்கு வடக்கே சிறிது தொலைவில் உள்ள அழகர் மலையிலிருந்து அருள்மிகு கள்ளழகர் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டு வருகிறார். வைகையின் வடகரைக்கு வந்து சேர்ந்து ஆற்றில் மணல் வெளியில் இறங்குகிறார். அப்போது அருள்மிகு மீனாட்சியம்மன், திருக்கல்யாண நிகழ்ச்சி நடந்து முடிந்து விடுகிறது. இந்த செய்தியைக் கேள்விப்பட்டு வைகை ஆற்றில் இரங்கிய அழகர் பெருமான் தனது குதிரை வாகனத்தில் ஊர் திரும்பப் புறப்படுகிறார். இந்த அற்புதமான தெய்வீகக் காட்சியைக் காண்பதற்கு தென்னாடு முழுதிலுமிருந்தும், சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்தும் சாதாரண மக்கள் தங்கள் மனைவி மக்களுடன் குழந்தை குட்டிகளுடன் கட்டுச் சோறு கட்டிக் கொண்டு வந்து வ்வகையாற்று மணலில் கூடுவார்கள். இந்த நிகழ்ச்சியில் பல லட்சக் கணக்கான மக்கள் கூடுவார்கள். வைகை ஆறு முழுவதிலும் அழகர் பெருமானைச் சுற்றிலும் மக்கள் வெள்ளம் கூடியிருக்கும். எங்கு பார்த்தாலும், கோவிந்த நாமம் ஒலிக்கும். குறைந்தது பத்து லட்சம் மக்கள் தங்கள் கட்டுச் சோறு மூட்டை முடிச்சுகளுடன் ஆற்றில் இரங்கியுள்ள அழகரை சேவித்துவிட்டு, அந்த ஆற்றுமணலில் அமர்ந்து சோற்று மூட்டையை அவிழ்த்து குடும்ப சகிதம் பிள்ளைகுட்டிகளுடன் சாப்பிட்டுவிட்டு அழகர் கூடவே திரும்புவார்கள். அறிவு சார்ந்த சாதாரண மக்கள் கூட்டம் பேரலைபோல் பொங்கும்.

பத்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கூட்டம், சாதி மத இன மொழி வேறுபாடுகள் இன்றி ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக பக்திப் பரவசத்துடன் குதூகலமாக ஆற்றில் கூடுவார்கள். அழகரை சேவிப்பார்கள். மணல் வெளியில் அமர்ந்து சாப்பிடுவார்கள். சாப்பாடு முடித்து அழகருடன் சேர்ந்து ஊருக்குத்

திரும்புவார்கள். இந்த அற்புதமான காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். அழகருக்கு முன் அனைவரும் சமம். இவ்வாறு பல லட்சக்கணக்கான மக்கள் பக்திப் பெருக்குடன் ஒன்று திரண்டு குவியும் காட்சியை உலகில் வேறு எங்கும் காண முடியாது.

மதுரையைப் போலவே தமிழ் நாட்டில் பல கோயில் திருவிழாக்களிலும் தேர் திருவிழாக்களிலும் பல்லாயிரக் கணக்கான லட்சக்கணக்கான மக்கள் கூடுவதைக் காண்கிறோம். கும்பகோணம் மகாமகம், திருவண்ணாமலை கார்த்திகை தீபம், பழனி இன்னும் பல இடங்களிலும் சிறப்புமிக்க திருவிழாக்களில் சாதி பேதமின்றி அனைத்து மக்களும் கூடுகிறார்கள். இந்திய நாட்டிலும் கும்பமேளா, பூரி ஜகன்னாதர் தேரோட்டம் திருமலை பிரம்மோத்சவம் மற்றும் பல இடங்களிலும் லட்சோபலட்சம் மக்கள் கூடுகிறார்கள். பாரத புண்ணிய பூமியில் இவ்வாறு சாதி சமய வேறுபாடின்றி வேத தெய்வங்களை வழிபடும் மக்கள் இவ்வாறு திருவிழாக்களிலும் இதர விழாக்களிலும் ஒன்று கூடுவதைக் காண்கிறோம். இது பாரத நாட்டின் தனிப் பெரும் பண்பாடும் பாரம்பரியமும் ஆகும்.

தெய்வ பக்தியில் கோடிக் கணக்கில் மக்களை ஒன்று சேர்த்து ஒற்றுமைப் படுத்தும் பணியில் பல அருட் செல்வர்களும் பக்தி இயக்கத்தின் சான்றோர்களும், மகான்களும், ஆழ்வார்களும் நாயன்மார்கள், ஆச்சார்யர்களும், சாதுக்களும் வழிகாட்டிகளாக இருந்தார்கள். அய்யப்ப பக்தர்கள், மேல்மருவத்தூர் பக்தர்கள் ஆகியோர்களும் லட்சக் கணக்கில் ஒன்று கூடுவதையும் காண்கிறோம்.

தெய்வ பக்தியில் ஒன்று சேரும் இந்தக் கோடிக் கணக்கான மக்களை தேச பக்தியின் மூலமும் ஒன்று படுத்தி தேச முன்னேற்றப் பணிகளிலும் ஈடுபடுத்தலாம். ஆனால் அதற்கு வழி காட்ட வேண்டிய

அரசியல் கட்சித் தலைவர்கள், குறிப்பாக நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், ஆட்சிப் பொருப்பிற்கு வரும் பெரிய அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் அறநெறி ஒழுக்க நெறி தவறிக்கெட்டு, நாட்டு நலனை பின்னுக்குத் தள்ளி, சுய நலமும் லஞ்சமும் ஊழலும் நிறைந்து கிரிமினல் தொடர்புகள் கொண்டு, சில அதிகாரிகளுடன் இணைந்து கொண்டு நாட்டை சூரையாட முயற்சிப்பதால் நாட்டில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் காணமுடியவில்லை. ஆயினும் நமது மக்கள் தங்கள் சொந்த முயற்சியில் பல இன்னல்கள் இடையூறுகளையும் தடைகளையும் தாண்டி நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று கொண்டிருக்கிறார்கள்.

மேலும் நாட்டில் புதிய சிந்தனைகளும் முயற்சிகளும் வளரத் தொடங்கியுள்ளன. தெய்வ பக்தியையும், தேச பக்தியையும் இணைத்து பாரதி வழியில் புதிய காட்சிகள் தோன்றி மேலும் வளரும் என்பதில் சந்தேகமில்லை. "பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால் புன்மையிருட் கணம் போயின யாவும்" என்று புதிய காலத்திற்கான விடி வெள்ளி தோன்றி பலப்பட்டு வருகிறது. கீழ்வானம் வெளுத்து வருகிறது.

2. சென்ற ஆண்டில் மதுரையில் பக்திப் பேரவையின் சார்பில் அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோயிலில் ஒரு விளக்கு பூஜை நடைபெற்றது. இந்த விளக்கு பூஜையில் ஐயாயிரம் பெண்கள் கலந்து கொண்டார்கள். எனது இனிய நண்பர் பக்திப் பேரஃவயின் வழிகாட்டி திரு. சண்முகநாதன் அவர்களுடைய அழைப்பின் பேரில் அடியேனும் அந்தத் திருவிளக்கு பூஜைத் திருவிழாவைக் காண்பதற்காக மதுரை சென்றிருந்தேன்.

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் ஆலயத்தில் வடக்கு–மேற்கு ஆடி வீதிகளின் சந்திப்பில் மேடை ஏற்பாடு செய்து

இருபுறங்களிலும் ஆடி வீதிகளில் ஐயாயிரம் பெண்கள் அணிவகுத்து வரிசையாக அவரவர்களுக்குரிய இடத்தில் ஒளி விளக்குகளுடன் அமர்ந்திருந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. சக்தி கணங்களான நமது நாட்டுப் பெண்களின் தெய்வீக சக்தி அங்கு வெளிபட்டது.

பார்வையாளர் பகுதியில் நான் அமர்ந்து கொண்டு இந்தத் திவ்யமான காட்சியைக் கண்டேன். இந்த அருமையான காட்சி என்னை வியப்பில் ஆழ்த்தியது. நமது நாட்டுப் பெண்களின் தெய்வ பக்தியின் மகாசக்தியை நான் உணர முடிந்தது.

என் அருகில், பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த இரு ஐரோப்பியத் தம்பதியர், சுற்றுலாப் பயணிகளாக மதுரை வந்திருந்தவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் இத்தகைய திவ்யமான காட்சியைக் கண்டிருக்க மாட்டார்கள். மிகுந்த ஆச்சரியத்துடன் திருவிளக்கு பூசையைப் பார்த்துக் கொண்டும் இசை கானத்தைக் கேட்டுக் கொண்டும் இருந்தார்கள். அந்த ஐரோப்பிய தம்பதிகளில் ஒருவர் அருகில் இருந்த என்னிடம் எனக்கு ஆங்கிலம் தெரியுமா என்று கேட்டார். தன்னை பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்தவர் என்றும், பிரஸ்ஸல்ஸ் (பெலிஜியத்தில் தலை நகரம்) நகரில் பல்கலைக் கழகத்தில் பேராசிரியாக இருப்பதாகவும் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டார். எனக்கு ஆங்கிலம் தெரியும் என அவரிடம் தெரிவித்தபோது மிகவும் மகிழ்ச்சியடைந்து திருவிளக்கு பூசையைப் பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் அந்த ஐரோப்பிய தம்பதியினர் கேட்டார்கள். நானும் அவர்களுக்கு விளக்கு பூசையைப் பற்றியும், அதன் விவரங்களைப் பற்றியும் எடுத்துக் கூறினேன். அங்கு பாடப்பட்ட பாடல்களைப் பற்றியும் விளக்கிக் கூறினேன். நான் சொன்ன விவரங்களையெல்லாம் அவர் தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொண்டார். மேலும் அவர் என்னிடம் சில

கேள்விகளைக் கேட்டார் – "இத்தனை பெரிய கூட்டமாக ஐயாயிரம் பெண்கள் இங்கு கூடியிருக்கிறார்களே, இவர்கள் இஷ்டபூர்வமாக வந்தவர்களா அல்லது ஏற்பாடு செய்து அழைக்கப்பட்டு வந்தவர்களா"? என்று கேட்டார். பக்தர் பேரவை என்னும் பொது அமைப்பு இருக்கிறது. அது இஷ்டபூர்வமான தன்னார்வ அமைப்பாகும். அந்த அமைப்பின் பொது அழைப்பின் பேரில் இந்தப் பெண்கள் இஷ்டபூர்வமாகவே சொந்த ஆர்வத்துடன் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டு தெய்வ பக்தியின் ஆர்வத்தில் கலந்து கொள்கிறார்கள். வந்தவர்களை ஒழுங்கு முறைப்படுத்தி வரிசைப் படுத்தி, தன்னார்வத் தொண்டர்கள் வரிசைப் படுத்தி நிகழ்ச்சியை நடத்தி வைக்கிறார்கள். அந்தத் தன்னார்வத் தொண்டர்களும் பெண்கள்தான் என்று விளக்கிக் கூறினேன்.

பெண்களுக்குப் போதுமான சுதந்திரம் இந்தியாவில் இல்லையென்று கேள்விப் பட்டோமே? என்று கேட்டார்கள். இந்தியாவைப் பற்றி முன்பு ஆட்சி நடத்திய ஆங்கிலேயர்கள் குறிப்பாக சில கிறிஸ்தவ மதகுருக்கள் பல பொய்யான பிரச்சாரங்களைச் செய்திருக்கிறார்கள். இந்தக் கோயிலின் தலைமைத் தெய்வம் மீனாட்சி பெண் தெய்வமாகும், சக்தி தெய்வமாகும். தாய்க்கு முதலிடம் கொடுக்கும் சாக்தம் இந்தியாவில் அனுஷ்டிக்கப்படும் ஒரு மதமாகும், ஒரு வழிபாடாகும். எல்லா நாடுகளில் உள்ளதைப் போலவே இங்கும் பெண்ணுரிமை பற்றிய பிரச்னை சில உண்டு. அவைகள் படிப்படியாக தீர்க்கப்பட்டு வருகின்றன. அரசியல் சட்டப்படி இந்த நாட்டில் அனைவரும் சமம். ஆண்களும், பெண்களும் சமம். 18 வயது அடைந்தவர்கள் அதற்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஓட்டுரிமை இருக்கிறது. மாதர் சங்கங்கள், பெண்களுக்கென சுய தொழில்களுக்கான சுய உதவிக்குழுக்கள், கூட்டுறவு அமைப்புகள் இருக்கின்றன. நாட்டின் எல்லா துறைகளிலும் பெண்கள்

பணியாற்றுகிறார்கள். தங்கள் அமைப்புகள் மூலம் பெண்கள் பொது வாழ்க்கையில் பங்கு கொள்கிறார்கள். ஏராளமான பெண்கள் ஆசிரியர்களாக அரசுப் பணியாளர்களாக, வழக்கறிஞர்களாக, டாக்டர்களாக, பேராசிரியர்களாக, ஆராய்ச்சியாளர்களாக, நர்ஸ்களாக, என்ஜினியர்களாக பணியாற்றுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களாக, பார்லிமென்ட் உறுப்பினர்களாக மத்திய மாநில அமைச்சர்களாக இருக்கிறார்கள். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் பெண்களின் நிலைமையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இன்னும் பல குறைபாடுகள் பல பகுதிகளில் உள்ளன. அந்தக் குறைபாடுகளையும் களைவதற்கு பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்துப் பெண்களுக்கு இங்கு சொத்துரிமையும் இருக்கிறது. இந்தியா ஒரு பெரிய தேசம். ஆங்காங்கு சில பிரச்னைகள் இருக்கின்றன. அவைகளுக்கும் தீர்வு கண்டு வருகிறோம் என்று பதிலளித்தேன்.

"ஐயாயிரம் பேர் கொண்ட இந்த விளக்கு பூசையில் கலந்து கொண்டோர் எல்லாம் மேல் சாதிக்காரர்களா?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார்கள். அந்தக் கோள்வியால் நான் சிரித்துக் கொண்டே. இந்தக் கூட்டத்தில் எல்லா சாதிக்காரர்களும் இருக்கிறார்கள். இதில் எந்தவிதமான சாதிவேறுபாடுகளும் பாகுபாடுகளும் இல்லை என்று எடுத்துக் கூறினேன் அந்த வெளிநாட்டுத் தம்பதியினர் அவர்களுடைய சில சந்தேகங்கள் தீர்ந்து மகிழ்ச்சியடைந்தார்கள். இந்தியாவைப்பற்றி இன்னும் பல நாடுகளிலும், குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் பல தப்பெண்ணங்கள் இருக்கின்றன. அவைகளைப் போக்க நாம் முயற்சிகள் இன்னும் எடுக்க வேண்டும்.

இத்தனை பெரும் பெண்கள் கூட்டத்தை தெய்வபக்தி உணர்வில் ஒன்று திரட்டியதைப் போலவே, தேசபக்திப் பணிகளிலும்,

தேச முன்னேற்றப் பணிகளிலும், ஈடுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சுய உதவிக் குழுக்கள் இப்போது சிறப்பாகச் செயல்படுவதாகச் செய்திகள் வருகின்றன. அவைகளை மேலும் அபிவிருத்தி செய்யலாம். விரிவு படுத்தலாம். கூட்டுறவு அமைப்புகள் பலவும் சீர்கெட்டுப் போயிருக்கின்றன. அவைகளைச் சீரமைக்க வேண்டும். பல நகரங்களில் ஸ்திரி சேவா சங்கங்களும், மகிளா சபாக்களும் செயல்படுகின்றன. அவைகளின் பணிகளிலும் அபிவிருத்தி காணலாம்.

3. சென்ற ஆண்டு நான் பிறந்து வளர்ந்த கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு கம்மவார் நாயுடு சமூகத்தினருக்குப் பாத்தியப்பட்ட ஒரு கோவில் இருக்கிறது. அது அருள்மிகு ரேணுகாதேவி (எல்லையம்மன்) கோவில். அக்கோவில் நூறாண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட ஒரு சிறிய கோவில். அதைப் புதுப்பித்து பெரிய கோவிலாக கோபுரத்துடன் விமானத்துடன் கட்ட வேண்டும் என்று கம்மவார் சமூக இளைஞர்கள் பலரும் சமூகப் பிரமுகர்களும் சேர்ந்து முயற்சிகள் எடுத்தார்கள். நன்கொடைகள் சேகரித்தார்கள். இந்த கிராமத்தின் இந்த சமூகத்தைச் சேர்ந்த பலரும் மதுரை, திருச்சி, கோவை, சென்னை முதலிய நகரங்களிலும் லண்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும், பல உத்தியோகங்களில் வேலைகளில் இருக்கிறார்கள். டாக்டர்கள், என்ஜினியர்கள், வக்கீல்கள், ஆசிரியர்கள் மற்றும் அரசுப்பணிகள், சொந்தத் தொழில்கள் பலவற்றிலும், இருக்கிறார்கள். சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்கள் அரசியல் இயக்கத் தலைவர்களும் இருக்கிறார்கள். ஓரளவில் உயர்கல்வியும் விழிப்புணர்வும் உள்ள கிராமம் என்று கூறலாம்.

இந்த கிராமத்தைச் சேர்ந்தாற்போல, பக்கத்தில் பக்கத்திலுமாக ஐந்து ஊர்களும் இதர குடியிருப்புகளும் உள்ளன. அந்த

மக்களுக்குள் தொழில் விவசாயம் வியாபாரம் முதலியவற்றில் சேர்மானம் தொடர்புகள் அதிகம். இந்த ஊர்களிலும் குடியிருப்புகளிலும் பல வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

24 மனை தெலுங்கு செட்டியார்கள், தேவர் சமுதாயத்தினர், கொல்லு வேலை தச்சு வேலை முதலிய ஐந்தொழில் ஆச்சாரியார்கள். கொடிக்கால் பிள்ளைமார், கம்பளத்து நாயக்கர் சமூகம், மூன்று பிரிவுகளிலும் உள்ள தலீத் மக்கள், முஸ்லீம்கள், சலவையாளர்கள், யாதவர்கள், புலவர்கள், குலாலர்கள், நாடார்கள், இவ்வாறு பல பகுதி மக்களும் கூடி வாழ்கிறார்கள்.

அருள்மிகு ரேணுகாதேவி (எல்லையம்மன்) கோவில் ஆலயம் கட்டி முடித்து பிரதான தெய்வமும் பிரதிஷ்டை செய்யப்பட்டு இதர பரிவாரங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டு சென்ற ஆண்டில் மகா சம்ரோக்ஷணம் (கும்பாபிஷேகம்) நடைபெற்றது. அந்த விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மகா சம்ரோக்ஷணத்திற்கும் கோவில் திறப்பு விழாவிற்கும், கோவில் குழுவினர், ஐந்து ஊர்களிலும் குடியிருப்புகளிலும் உள்ள எல்லா சமூகத்தினருக்கும் சாதி மத வேறுபாடின்றி அனைவருக்கும் அழைப்பு அனுப்பி –யிருந்தார்கள். அந்த கிராமத்தில் பிறந்து வளர்ந்து பல வெளியூர்களில் உள்ளவர்களுக்கும் அழைப்பு அனுப்பி அவர்களும் வந்து குழுமியிருந்தார்கள்.

மகா சம்ரோக்ஷணம் முடிந்து கோவில் திறப்பு விழாவும் பூஜைகளும் நடந்து கொண்டிருந்த போது அந்த ஊர்களின் அத்தனை சமூகத்தினர்களும், முஸ்லிம்களும், தலீத் மக்களும் மற்றுமுள்ள அனைவரும் ஆண்களும், பெண்களும் கோவிலுக்குள் வந்து பரிசுகளும் காணிக்கைளும் செலுத்தினர். இந்த அபூர்வமான

காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தெய்வ பக்தி நிரம்பிய கிராம மக்களின் ஊர் ஒற்றுமை அனைவருக்கும் முன்னுதாரணமாக அமைந்திருந்தது.

சாதிமத வேறுபாடின்றி அனைவரும் விழாவில் பங்கு கொண்ட இந்த ஒற்றுமை, தெய்வ பக்தியின் அடிப்படையில் அமைந்த இந்த ஒற்றுமை, அந்த ஊர்களின் சேர்மானத்தின் முக்கியமான பொதுப் பிரச்னைகளிலும், குடிதண்ணீர், கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீர், கிராம சுத்தம், ஊரணிகள் பராமரிப்பு, மந்தை சந்தை, பள்ளிக்கூடங்களின் பராமரிப்பு, அபிவிருத்தி, இந்த ஊர்களைச் சேர்ந்த ஒன்பது பாசனக் கண்மாய்களின் மராமத்து பராமரிப்பு அந்த கிராமங்களின் உற்பத்திப் பொருள்களான நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி, வேர்க்கடலை, கரும்பு, தேங்காய், கொய்யா, மாம்பழம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்ட மறு உற்பத்தித் தொழில்கள், சந்தை, கூட்டுறவு நிர்வாகம், பஞ்சாயத்து நிர்வாகம் சிறு வழக்குகள் தீர்வு முதலிய அடிப்படையான கிராம மக்களின் பொருளாதார சமுதாயப் பிரச்னைகளுக்கு தீர்வு கண்டு ஊர் ஒற்றுமை, ஊர் மேம்பாடுகளை வளர்க்கவும், இந்த ஊர்கள் குடியிருப்புகளில் உள்ள அத்தனை கோயில்களையும் வழிபாட்டு ஸ்தலங்களையும் புதுப்பிக்கவும், பராமரிக்கவும், பூசைகள் நடத்தவும், பரஸ்பரம் உதவி செய்தும், தெய்வபக்தி தேசபக்தியை (ஊர் பக்தி) இணைத்து திருவிழாக்கள் நடத்தவும், கல்வியையும் செல்வத்தையும் பெருக்கவும் பரஸ்பர சகாயத்துடன் மனித சக்தியைப் பயன்படுத்தவும் முன் வரும் போது சுபீட்சமும் மகிழ்ச்சியும் பொங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இவையெல்லாம் சமுதாயத்தில் ஏற்பட்டு வரும் புதிய வளர்ச்சியாகும். இவை விரிவடைய வேண்டும். அனைத்து மக்களிடமும்பரவவேண்டும். மேலும் சமுதாயத் தீமைகளை, குடி,

களவு, ஜாதிப் பாகுபாடுகள், சூது கள்ளச் சாராயம் காய்ச்சுதல், முதலியவைகளை நீக்கவும், அனைவருக்கும் கல்வி கிடைக்கவும், அறிவை அபிவிருத்தி செய்வதற்கான நூல் நிலையங்களை படிப்பகங்களை நிறுவிப் பராமரிக்கவும், இசை விளையாட்டு, முதலியவற்றை வளர்க்கவும் கிராம ஒற்றுமையையும் ஒன்றுபட்ட செயல்பாடுகளையும் வளர்க்கவும் வேண்டும்.

குடும்ப அமைப்பு

பாரத சமுதாயத்தின் ஆகச்சிறிய அங்கமாக இருப்பது நமது நாட்டின் குடும்பமும் குடும்ப அமைப்புமாகும். இக்குடும்ப அமைப்பு என்பது இமயம் முதல் குமரிவரை ஒரே மாதிரியாகவே அமைந்திருக்கிறது. பல குடும்பங்கள் சேர்ந்தது ஒரு ஊர். பல ஊர்கள் சேர்ந்தது ஒரு குறுநாடு. பல குறுநாடுகள் சேர்ந்தது ஒரு பெருநாடு. பல பெருநாடுகள் சேர்ந்தது ஒரு பேரரசு. ஐம்பத்தாறு பேரரசுகள் சேர்ந்தது பாரத தேசம். குறுநாடு, பெருநாடு என்பதை குறுநிலம் பெருநிலம் என்றும் கூறலாம். இந்த அமைப்பில் பாரத தேசம் உருவாகி பலபல நூற்றாண்டுகளாக வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது. இந்த சமுதாய வளர்ச்சி, மேலை நாட்டு மனித சமுதாய ஆராய்ச்சிக்குட்பட்டதல்ல. பாரத சமுதாயம் மிகவும் தொன்மையானது. மேலை நாட்டு வரலாற்று காலத்திற்கு மிகவும் முந்தியது. எனவே மேலை நாட்டு வரலாற்று வட்டத்திற்குள் அடங்கியதல்ல. இந்த அடிப்படை நமது நாட்டு இன்றைய சிந்தனையாளர்களுக்குத் தெளிவுபடவேண்டும். பாரத சமுதாயத்தின் ஆத்மா நமது வரலாற்றுச் சிந்தயாளர்களுக்குத் தெளிவு படவேண்டும்.

இவைகள் ஒவ்வொன்றிற்கும் அதாவது குடும்பத்தின் மையமான தனிமனிதர், கணவன் மனைவியின் கூட்டுத் தலைமை,

குடும்பத்தின் அங்கங்கள், குடும்பம், குடும்ப அமைப்பு ஊர், குறுநாடு (குறுநிலம்) பெருநாடு (பெருநிலம்) பேரரசு, பாரத தேசம், அவைகளின் தலைமை, தலைவர்கள், அவர்களுடைய குழுக்கள் ஆட்சிக் குழுக்கள் ஒவ்வொன்றுக்கும் கடமைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அக்கடமைகளையே தர்மம், அறம் என்னும் சொல்லின் கருத்தமைவாகக் கொண்டிருக்கிறோம். தர்மம்–அறம் என்னும் சொல்லிற்கு சமமான சொல் உலகில் எந்த மொழியிலும் குறிப்பாக ஐரோப்பிய மொழிகளில் இல்லை.

இவைகளில் அங்கமாக ஒவ்வொரு மனிதனுடைய கல்வியும் கல்விப் பயிற்சியும் அறிவும் மனப்பண்பாடும் சீராக அமையுமாயின் கடமைகளும் சீராக நிறைவேற்றப்படும். அறம் நிலை நாட்டப்படும். நாட்டில் மகிழ்ச்சியும் முன்னேற்றமும் தடையில்லாமல் முன் செல்லும் என்பது பாரதியின் சிந்தனையின் சாரமாகும்.

இன்று புதிய பெயர்களில் அரசுகளும் ஆட்சி நிர்வாக அமைப்புகளும் பொது நிர்வாக அமைப்புகளும் உருவாகி வருகின்றன. குடும்ப அமைப்புகள் பல இடங்களில் சிதைந்துள்ளன. அதன் கடமைகள் சரிவர நிறைவேற்றப்படாமல் முடமாகி இருக்கின்றன. குடும்ப அமைப்புகளை புதிய முறையில் சீரமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும். அதற்கான கல்விமுறை கொண்டு வரப்படவேண்டும். குழந்தைகள் பராமரிப்பும் சமூகப் பாதுகாப்பு முறையும் அமையவேண்டும். குடும்ப அமைப்புகளைக் கட்டுக் கோப்பாகக் கொண்டு வரவேண்டும்.

குடும்பத்தில் கணவனும் மனைவியும் கூட்டுத்தலைமையாகும். இருவரும் ஒரே மாதிரியான வேலைகளில் ஈடுபட்டிருக்கலாம். நகரங்களில் வெவ்வேறு தொழில்களில் வேலைகளில் ஈடுபட்டிருக்கலாம். கிராமங்களில் விவசாய குடும்பங்களில்,

விவசாயத் தொழிலகங்களில் இன்றும் வேலைப் பிரிவினையில் ஆண்களும் பெண்களும் சேர்ந்துள்ள வேலைகளே நடைபெறுகின்றன. கால் நடைபராமரிப்பில், நெசவுத் தொழிலில், மீன் பிடித்தல் பிடித்த மீன்களைச் சேகரித்தல் ரகம் பிரித்தல் விற்பனை செய்தல், பனை தென்னை தொடர்பான தொழில்கள், கட்டிட வேலை, வியாபாரம் வீட்டு வேலைகள் முதலிய பல தொழில்களிலும், ஆண்கள், பெண்கள் சேர்ந்தும், இணைந்தும், வேலைப் பிரிவினை செய்து கொண்டுமே வேலை நடைபெறுகிறது.

கிராமங்களிலும் சரி, நகரங்களிலும் சரி, கணவனும், மனைவியும் வேலைசெய்து, குடும்பப் பொருளாதாரத்தைச் சீரமைத்துக் கொள்கிறார்கள். குடும்பம் இருக்குமிடம் வீடு, என்று ஒரு புனிதமான பெயரைப் பெற்றிருக்கிறது. வீடு என்பது சுவர்க்கம். சுவர்க்கம் இன்பகரமானது: அங்கு அக்குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் உழைப்பிலும், குடும்பத் தேவைக்கான வருவாய் ஈட்டுவதிலும், பொருளுற்பத்தி செய்வதிலும், வீட்டைப் பராமரிப்பதிலும், குழந்தைகளை வளர்ப்பதிலும் பராமரிப்பதிலும், உடன்பிறந்தோரைக் கரையேற்றுவதிலும், மூத்தோர் நலனைக் காத்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதிலும், சேமிப்பிலும், செலவு செய்வதிலும் நுகர்வதிலும், முதலிய அனைத்திலும் சமநிலையானவர்கள்.

இந்த நமது பாரம்பரியமான பண்பாட்டுச் செழுமைமிக்க சமுதாய வாழ்வில் தலைசிறந்த குடும்ப அமைப்புகளைச் சீரழிய விடாமல் பாதுகாக்க வேண்டும். அதற்கான கல்விமுறையும் அமைய வேண்டும். பாரதியார் நமது தேசியக் கல்வியை நமது குடும்பத்திலிருந்து தொடங்க வேண்டும் என்று கூறுகிறார்.

நமது செல்வம் என்பது அறிவுச் செல்வம், ஒழுக்கச் செல்வம்,

பொருட் செல்வம் ஆகிய மூன்றும் சேர்ந்ததாகும். அறிவுச் செல்வம் என்பது கல்விப் பயிற்சி மூலமும், மனிதனுடைய செயல்பாடுகளின் அனுபவத்தின் மூலமும் கிடைக்கிறது, சேருகிறது. ஒழுக்கச் செல்வம் என்பது பயிற்சியிலிருந்தும் பழக்க வழக்கங்களிலிருந்தும் உண்டாகிறது. பொருட் செல்வம் என்பது இயற்கை வளம் மனித வளம் ஆகியவற்றின் இணைப்பை அடிப்படையாகக் கொண்ட உழைப்பின் மூலம் கிடைக்கிறது. சேர்கிறது. இவையெல்லாம் பாரத நாட்டின் பாரம்பரியத்தில் குடும்பத்திலிருந்து அதன் செயல்பாட்டிலிருந்து தொடங்குகிறது.

ஆட்சி அமைப்பிலும், ஆட்சி நிர்வாகத்திலும், பொது நிர்வாகத்திலும், நமது பணிகள் குடும்ப அமைப்பிலிருந்து தான் இப்போது தொடங்குகிறது. அங்கிருந்து, கிராமப் பஞ்சாயத்து, ஒன்றியப் பஞ்சாயத்து, மாவட்டப் பஞ்சாயத்து, நகரசபை, மாநகர சபை, மாநில சட்ட மன்றம், பாராளுமன்றம், ஆகிய மக்களாட்சி அமைப்புகளும் இப்போது செயல்படுகின்றன. இந்த மக்களாட்சி அமைப்புகளிலும் அவைகளின் செயல்பாடுகளிலும் நிர்வாக முறைகளிலும் மக்களின் நேரடியான பங்கை மேலும் மேலும் அதிகப்படுத்த வேண்டும், விரிவுபடுத்த வேண்டும், அதுவே பாரதியின் சிந்தனையும் கருத்தும் ஆகும்.

கிராமங்களிலும், நகரங்களிலும், தெருக்களிலும் வட்டங்களிலும், மக்களுடைய நலன்களைக் காக்கவும். அவைகளை மேலுயர்த்தவும், சமுதாய முன்னேற்றத்தை உயர்த்தவும் மக்கள் நேரடியாகப் பங்கு கொள்ள வேண்டிய பல பணிகள் உள்ளன. அடிப்படை சுகாதாரம் கிராம சுத்தம், குடி தண்ணீர், ஆரம்பக் கல்வி ஆலயப் பராமரிப்பு, ஊருணிகள் குளங்கள் பராமரிப்பு, நீர்ப்பாசன ஏரிகள், குளங்கள், கண்மாய்கள், ஏந்தல்கள் மராமத்து, பராமரிப்பு, நூலகங்கள், படிப்பகங்கள், கலை மன்றங்கள், இலக்கிய மன்றங்கள், இசைப்

பயிற்சி, ஆடல்பாடல் பயிற்சி நிகழ்ச்சி, உடல் பயிற்சி, விளையாட்டுப் பயிற்சி மற்றுமுள்ள பல செயல்பாடுகளிலும், மக்கள் நேரடியாக சுய முயற்சிகளில் பங்கு கொள்ள வேண்டும். இது சாத்தியம். இவைகள் மூலம் அரசின் பாதி வேலை குறையும். அரசை வெறும் விமர்சனம் செய்வதும் குறைகூறுவதும் மட்டுமே நமது வேலையாக இருக்க முடியாது. மக்களை விரிவாகப் பல பணிகளிலும் தொண்டுகளிலும் பங்கு கொள்ளச் செய்வதே பொது அமைப்புகளின் பணியாக இருக்க வேண்டும்.

நமது குடும்ப அமைப்பில் நமது வீட்டிலுள்ள எல்லா வேலைகளையும் வீடு சுத்தம், தண்ணீர், சமையல், உணவு, குழந்தை வளர்த்தல், பராமரித்தல், படிப்பு, ஒழுக்கம், முதியோர் பராமரிப்பு முதலிய பல பணிகளையும், வேறுபாடுகள் இன்றி குடும்பத்திலுள்ள அனைவரும் சேர்ந்தே செய்கிறோம். அதுபோல, தெருக்களில், ஊர்களில், நகரங்களில், மற்றும் ஊர் ஒன்றியம் மாவட்ட பஞ்சாயத்துகள், வரையிலும், மாநில அளவிலும், தேசீய அளவிலும், அரசுகள் அளவிலும், அந்தந்த அரசுகளின் கீழ் உள்ள பலவேறு இலாக்காக்களிலும், குழுக்களிலும், துணைக் குழுக்களிலும், அவைகள் மூலம் நிறைவேற்ற வேண்டிய பலபணிகளிலும், பலவேறு துறைகளில் உள்ள மக்கள், வல்லுனர்கள், நிபுணர்கள், அனுபவம் வாய்ந்தவர்கள், ஆர்வலர்கள், முதலியோர் பங்கு கொள்ளும் வாய்ப்புகள் உள்ளன. இவ்வாறு சகல பகுதி மக்களின் திறமைகளையும் அனுபவங்களையும் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது பாரதியின் சிந்தனையும் கருத்துமாகும். இவ்வாறு நாட்டுப் பணிகளிலும் பொதுப்பணிகளிலும் சமுதாயப் பணிகளிலும் விரிவாக மக்கள் பகுதியினர்கள் பங்கு கொள்வதன் மூலம் மக்களாட்சி முறை விரிவடையும்.

பாரதி தனது கட்டுரைகளில் இந்து தர்மத்தின் மேன்மை,

இந்துக்களின் ஒற்றுமை, இந்துக்களின் சிறப்பு, இந்துக்களின் கூட்டம், இந்துக்கள் என்பவர் யார்? இந்துக்களின் மதிப்பும் மரியாதையும் என்னும் தலைப்புகளில் சிறந்த கருத்துக் கட்டுரைகளை எழுதியுள்ளார். பாரதியாரின் கருத்துப்படி இந்து மதம் எனபது ஒரு மதமல்ல. அது ஒரு தர்மம். வாழ்க்கை வழிமுறை. சைவர், வைஷ்ணவர், சாக்தர், சீக்கியர், பார்சி, புத்தர், சமணர், இப்போது வந்துள்ள இஸ்லாமியர், கிறிஸ்தவர், ஆகிய எல்லோரும் இந்தியாவில் வாழும் அனைவரும் இந்துக்களேயாவர். அன்னிய ஆட்சியாளர்கள் நமக்குள்ளே சில வேற்றுமை உணர்வுகளையும் பகை உணர்வுகளையும் உண்டாக்கி விட்டார்கள். அந்த விரோத உணர்வுகளைத் தவிர்த்து அனைத்து இந்திய மக்களையும் ஒன்று படுத்த வேண்டும் என்பது பாரதியின் கருத்தாக உள்ளது. அனைத்து இந்திய மக்களின் ஒற்றுமைக்கு மையமாக உள்ளது வேதவழிபாடுகளைக் கொண்ட இந்துக்களின் கட்டியான ஒற்றுமை மிகவும் அவசியமாகும் என்பதே பாரதியின் கருத்தாக உள்ளது.

இந்துக்களின் ஒற்றுமையின் மூலம் இதர மக்கள் அனைவருடைய ஒற்றுமையும் நலன்களையும் பாதுகாக்க முடியும். பெரும்பான்மை மக்களுடைய உணர்வுகளுக்கு மாறாக, எதிராக, அவர்களுடைய நலன்களுக்கும் நல்லெண்ணங்களுக்கும் எதிராக சிறுபான்மை மக்கள் என்பவர்கள் நடந்து கொள்வது என்பது அவர்களுக்கே நல்லதல்ல.

நமது நாட்டில் இன்றைய நிலையில் உண்மையில் சிறுபான்மையினர் என்பவர் யாருமில்லை. மத உரிமைகள் என்று கூறுவதானால், உலகில் வேறு எந்த நாட்டைக் காட்டிலும் பாரதத்தில் மத உரிமைகளும், வழிபாட்டு உரிமைகளும் அதிகமாகவே உள்ளன. அனைத்து மக்களுக்கும் வழிபாட்டு உரிமை முழுமையாக உள்ளது என்று கூறலாம். இங்குதான் எம் மதமும் சம்மதம் என்னும் உயர்ந்த

கோட்பாடு உருவாகியுள்ளது.

தமிழ் இசை, கர்நாடக சங்கீதம், குரல் வளம், இசைக் கருவிகள், ராகம் தாளம், சங்கீத சபாக்கள், நவரசம், பாட்டுக் கச்சேரிகள், கீர்த்தனைகள், நமது கீர்த்தனைகள், நமது இசையின் மேன்மை, அதை உலகரியச் செய்ய வேண்டிய நமது கடமை, முதலியன பற்றியெல்லாம் பாரதி தனது உரைநடைக் கட்டுரைகளில் மிகவும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறார்.

பெண்உரிமை, ஆண் பெண் சமத்துவம், சரி நிகர் சமானம், வரதட்சணைக் கொடுமை, பெண் கல்வி, பெண்ணின் பெருமை, முதலிய பெண்களின் தனிப் பிரச்னைகளைப் பற்றி மிகவும் மேலான கருத்துக்களை மகாகவி தனது கட்டுரைகளில் கூறுகிறார்.

சாதி ஒழிப்பு, சாதி சமத்துவம், சாதிக் கொடுமைகள், சாதி வேறுபாடுகளை மற்றும் பாகுபாடுகளைக் களைதல், இந்துக்களின் ஒற்றுமை, ஆகியவை பற்றித் தனது கவிதைகளில் கூறியுள்ளதைப் போலவே தனது உரைநடைக் கட்டுரைகளிலும், பாரதி தனது வலுவான கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார்.

தேசியக் கல்வி பற்றியும், நமது வளமான தொன்மையான நாகரிகச் சிறப்பு பற்றியும் பாரதி தனது கட்டுரைகள் பலவற்றிலும் எழுதியுள்ளார். சில தனிக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தமிழ் மொழி வழிக் கல்வியின் அவசியம், பற்றியும், தமிழில் அனைத்துப் பாடங்களையும் கற்க வேண்டும், கற்பிக்க வேண்டும் என்பது பற்றியும் தனது உறுதியான கருத்துக்களை பாரதி எழுதியுள்ளார்.

தேசியக் கல்வி பற்றியும், பொதுவாகக் கல்வி, பாடத்திட்டம், ஆரம்பக் கல்வி பற்றியெல்லாம் பாரதி கூறியுள்ள கருத்துக்களை யெல்லாம் பற்றித் தனி நூல் கொண்டு வர வேண்டும். அது

இக்காலத்திற்கு மிகவும் அவசியம். கல்வி பற்றியும், பாடத்திட்டங்கள் பற்றியும், மகாகவி கூறியுள்ள கருத்துக்கள், இக்காலத்திற்கும், எக்காலத்திற்கும் பொருத்தமுடையனவாகும்.

இன்னும் பாரதி, வறுமை ஒழிப்பு, பட்டினியைப் போக்கல், அன்பு வழி, மனித மேம்பாடு, உலக வாழ்க்கையின் பயன், உழைப்பு, பத்திரிகைகள் பற்றி, சுதேசி முயற்சி, பிராமணன் யார்? வருங்காலம், தொழிலாளர், உடற்பயிற்சி, குற்றங்கள், தண்டனை கொல்லாமை, ஜீவகாருண்யம், அநந்தமான சக்தி, செல்வம், காலனிக் கொள்ளை முதலிய பலவேறு தலைப்புகளில் சிறந்த பல நல்ல கருத்துக்கள் நிறைந்த கட்டுரைகள் மிகவும் எளிய சாதாரண உரைநடையில் எழுதியுள்ளார். அக்கட்டுரைகளில் உள்ள முக்கியமான கருத்துக்களைப் பற்றியும், அவைகளின் இக்காலப் பொருத்தங்கள் பற்றியும் எடுத்துக் காட்டி, இந்த நூலில் பாரதியின் உரைநடைப் பகுதிகளின் சிறப்புகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

பாரதியின் கட்டுரைகளை, பாரத நாட்டின் இதர மொழிகளிலும், உலக நாடுகளின் இதர மொழிகளிலும் சிறப்பாக ஆங்கிலத்திலும் மொழியாக்கம் செய்து பாரதம் முழுவதும் அறியச் செய்ய வேண்டும். உலகம் முழுவதும் அறியச் செய்ய வேண்டும். இப்பணியில் நல்லோர் பலரும் வல்லோர் பலரும், வசதியுள்ளோர் பலரும் ஈடுபடவேண்டும்.

பாரதியின் கவிதைகளைப் போலவே, அவருடைய உரைநடைப் பகுதிக் கட்டுரைகளையும் ஊரறிய, நாடறிய, உலகரியச் செய்ய வேண்டும்.

1. பாரதியின் உரைநடை

பாரதியின் கவிதைகளைப் போலவே, அவருடைய உரைநடைக் கட்டுரைகளிலும், அரசியல், பொருளாதார, சமூக சீர்திருத்தக் கருத்துக்களும், ஆன்மீகக் கருத்துக்களும் நிறைந்திருப்பதைக் காண முடிகிறது. தேசபக்தியும் தெய்வ பக்தியும் நிறைந்திருப்பதைக் காணமுடிகிறது. மகாகவி எழுதியுள்ள கவிதைகளோ, கட்டுரைகளோ, கதைகளோ, தத்துவ விளக்கமோ எதை எடுத்தாலும், தேசிய விடுதலை, தேச முன்னேற்றம், சமுதாய சீர்த்திருத்தம், பாரதப் பண்பாடு ஆகியவை பற்றிய கருத்துக்கள் முக்கிய இடம் பெற்றிருக்கின்றன.

பாரதியின் கவிதைகளில் தெய்வ பக்திக் கவிதைகளோ, தேச பக்திக் கவிதைகளோ, கண்ணன் பாட்டோ, பாஞ்சாலி சபதக் காவியமோ, வேதாந்தப் பாடல்களோ ஆகிய எதை எடுத்துக் கொண்டாலும், அந்தக் கவிதைகளில் நாட்டின் விடுதலை, பொருளாதார சமுதாய முன்னேற்றம், கல்வி, வளர்ச்சி, சமூக சீர்திருத்தம், சமூக நீதி, பெண்கள் விடுதலை, சாதிக் கொடுமைகளை ஒழித்தல் முதலிய கருத்துக்களை அழுத்தமாகவே குறிப்பிட்டி –ள்ளதைக் காண்கிறோம். பாரதியின் உள்ளுணர்வாக தேச விடுதலையும் சமுதாய விடுதலையும் இருந்ததே அதற்குக் காரணமாகும். தேசபக்தியே. அவருடைய உயித் துடிப்பாக அவருடைய படைப்புகளில் இருக்கிறது என்பதைக் காண்கிறோம்.

விநாயகர் நான் மணி மாலைப் பாடலில், "அச்சம் தீரும், அமுதம் விளையும், வித்தை வளரும், வேள்வியோங்கும், அமரத் தன்மையு மெய்தவும் இங்கு நாம் பெறலாம்" என்றும், "கடமையாவன, தன்னைக் கட்டுதல், பிறர்துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல், உலகெலாம் காக்கும் ஒருவனைப் போற்றுதல்", என்றும், "நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல்" என்றும், "நாட்டினைத்துயரின்றி நன்கமைத்திடுவதும்" என்றும், "மண் மீதுள்ள மக்கள், பறவைகள்,

விலங்குகள் பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள் யாவும் என் வினையால் இடும்பை தீர்ந்தே இன்புற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திடவே செய்திடல் வேண்டும்" எனவும், "பூமண்டலத்தில் அன்பும் பொறையும் விளங்குக, துன்பமும் மிடிமையும், நோவும் சாவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிர் எல்லாம் இன்புற்று வாழ்க" என்றும், நாட்டின் விடுதலை –யையும் நாட்டு மக்களின் நல் வாழ்வையும் மனதில் நினைந்து உளமுறுகிப் பாடுகிறார்.

"துன்பமும், நோயும் மிடிமையும் திர்த்துச் சுகமருளல் வேண்டும்" என்று கண்ணன் பாட்டிலே குறிப்பிடுகிறார்.

பாரதி பாஞ்சாலி சபதத்தில் வலுவான அரசியல் கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார்.

"நாட்டுமாந்தர் எல்லாம் – தம்போல்
நரர்கள் என்று கருதார்
ஆட்டுமந்தையாம் என்–றுலகை
அரசரெண்ணி விட்டார்,
காட்டும் உண்மை நூல்கள் – பலதாம்
காட்டினார்களேனும்,
நாட்டு ராஜநீதி – மனிதர்
நன்கு செய்யவில்லை" என்றும்,

"ஓரஞ்செய்திடாமே – தருமத்
துறுதி கொன்றிடாமே
சோரஞ்செய்திடாமே– பிறரைத்
துயரில் வீழ்த்திடாமே
ஊரையாளும் முறைமை – உலகில்
ஓர் புரத்துமில்லை" – என்றும்,

"பேயரசு செய்தால் பிணம் தின்னும்
சாத்திரங்கள்" என்றும் பாரதி உறுதிபடப் பேசுகிறார்.

2. நம்பிக்கை என்னும் தலைப்பில்

பாரதியார் ஒரு ஆத்மஞானி. அவர் ஜீவன் முக்தராக விளங்கினார். அவர் தனது சிந்தனையிலும், செயல்பாட்டிலும் சுதந்திரமாக இருக்க விரும்பினார். அதில் அவருக்கு முழு நம்பிக்கை இருந்தது. அவருக்கு அவருடைய பணிகளில் பல இடையூறுகளும், தடைகளும், கட்டுப் பாடுகளும் இருந்தன. அவர் சுதேசமித்திரனில் பணியாற்றிய போது, அவருடைய விருப்பப்படி அவருடைய உள்ளத்தில் எழுந்த கருத்துக்களை உள்ளுணர்வோடு எழுதுவதற்கு முடியாதபடி பல உத்தரவுகள் இருந்தன. துணையாசிரியராகவே பணியாற்றினார். அவருடைய பல கட்டுரைகளும் செய்திக் குறிப்புகளும், விமர்சனக் குறிப்புகளும் பலருடைய பார்வைக்குப் பின்னரேயே அச்சுக்குப் போகும். தலையங்கம் எழுதுவது முதலிய முக்கியமான கொள்கைப் பிரச்சைகளில் அவருக்கு சுயேச்சையாகத் தன் உணர்வுப்படி எழுதுவதற்கு வாய்ப்பு இல்லை. அனுமதியில்லை. இவையெல்லாம் வேண்டுமென்றே அவர் மீது திணிக்கப்பட்டக் கட்டு திட்டங்கள் அல்ல.

சுதேசமித்திரன் பத்திரிகை விடுதலை இயக்கத்தின் ஆதரவுப் பத்திரிகை. ஆங்கிலேய அரசாங்கத்தின் பார்வையும் கட்டுப் பாடும் தொல்லையும் தொந்தரவுகளும், வழக்குகளும், கெடுபிடிகளும் அடக்குமுறை ஏவுகணைகளும் அந்தப் பத்திரிகை மீது தொடர்ந்து இருந்து கொண்டிருந்தன. இத்தனை முள்வேலிகளையும் தாண்டி சுதேசமித்திரன் பத்திரிகை தேச விடுதலை இயக்கத்திற்கு ஆதரவு கொடுக்க வேண்டியதிருந்தது.

பாரதியாரோ தேசிய இயக்கத்தில் தீவிரவாதப் பிரிவின் ஆதரவாளர். வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணிய சிவா, வா.வே.சு. அய்யர் முதலிய பல தீவிரவாதிகளுக்கு ஆதரவாளராக இருந்தவர். அவருடைய எழுத்துக்களில் கவிதைகளில் வேகம் இருந்தது.

அதைக் கண்டு ஆங்கிலேய அரசாங்கத்தார் அச்சம் கொண்டனர். அவர்களுடைய அடக்குமுறை அம்புகள் அவர் மீது அடிக்கடி பாய்ந்தன. பாய்ந்து கொண்டே இருந்தன. அவைகளுக்கிடையில் பாரதி சில நேரங்களில் பக்கவாட்டில் இருந்தும் தனது கருத்துக்களை வெளிப்படுத்த வேண்டியதிருந்தது.

பாரதியாருடைய காலம் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம். முதலிரண்டு பத்தாண்டுகள். இந்திய விடுதலை இயக்கம் தோன்றி வளர்ந்து கொண்டிருந்த காலம். இந்திய தேசிய காங்கிரஸில் அதிகார பூர்வமாக பரிபூரண சுதந்திரம் வேண்டுமென்ற கோரிக்கையும் தீர்மான வடிவில் கூட இல்லாத காலம். ஆயினும் லோகமான்ய பாலகங்காதரத் திலகர் தலைமையில் தீவிர வாதப் பிரிவு வலுவாக வளர்ந்து கொண்டிருந்தது. "சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை" என்னும் கருத்து வளர்ந்து கொண்டிருந்த காலம். அத்துடன் பலவேறு தீவிரவாதக் குழுக்களும் பலவகையான ஆயுதப் போராட்டங்களுக்கும் கூட திட்டமிட்டுக் கொண்டிருந்த காலம். இவ்வாறு தேசிய இயக்கத்தில் மிதவாதமும் தீவிரவாதமும் மோதிக் கொண்டிருந்த காலம்.

பாரதிக்கு, பலவேறு உதாரணங்களையும் வரலாற்றுச் செய்திகளையும் எடுத்துக் காட்டி சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு, நிச்சயம் வெற்றி பெறுவோம், நாடு நிச்சயம் விடுதலை பெறும் என்னும் நம்பிக்கையூட்ட வேண்டிய உணர்வு வலுவாக இருந்தது.

நம்பிக்கை உண்டானால் வெற்றி உண்டு. நம்பிக்கையின் முக்கிய லக்ஷணம் விடா முயற்சி, கடும் முயற்சியை அக்காலத்தில் தவம் என்றார்கள். நமது நாட்டில் எத்தனையோ மகான்கள் தோன்றி பல இடையூறுகளையும் தடைகளையும், கஷ்டங்களையும் தொல்லைகளையும் எதிர்ப்புகளையும் தாண்டித் தங்கள்

கொள்கைகளை ஸ்தாபித்துள்ளார்கள். மனித சமுதாயத்திற்கு நன்மை தேடித் தந்திருக்கிறார்கள்.

இராமானுஜர் கணக்கில்லாத கஷ்டங்களைத் தாங்கி, வைணவத்தை நிலைநிறுத்தினார். நானா ஜாதி மக்களையும் திருமால் பக்தியில் ஈடுபடுத்தினார். ஜாதி வேறுபாடுகளை எதிர்த்து ஒற்றுமை உண்டாக்கி தீண்டாமையை எதிர்த்துப் போராடி சமத்துவத்திற்காகப் பாடுபட்டார். இராமானுஜருடைய வரலாற்றை எடுத்துக் கூறி பாரதி நமது நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஊட்டினார்.

திருநாவுக்கரசரின் வைராக்கியத்தையும் உறுதிப் பாட்டையும் நம்பிக்கையையும் எடுத்துக் கூறி விளக்கினார். "கற்றூணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயமே" என்று அப்பரடிகள் கூறியதை நினைவுபடுத்தி நமக்கு நம்பிக்கையூட்டுகிறார்.

சிவாஜி, இந்து ராஜ்யத்தை நிறுவிய சாதனையை எடுத்துக் கூறுகிறார். நமது தேசத்தார்கள் வேறு பல முயற்சிகள் எடுத்து வருவதையும் சுட்டிக் காட்டி விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு நம்பிக்கை ஊட்டுகிறார்.

"இக்காலத்தில் பலர் நமது பாஷைகளை ஒளிமிகச் செய்து பூமண்டலத்தார் வியக்கும்படி செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். பலர் நமது பூர்வ சாஸ்திரங்களின் உண்மையை உலகம் முழுவதும் கேட்டு உஜ்ஜீவிக்கும்படி செய்ய வேண்டுமென்று பாடுபடுகிறார்கள். பலர் நமது நாட்டு செல்வத்தை வெளியேற வொட்டாமல் தடுக்க வழிதேடுகிறார்கள். (அன்னிய ஆட்சியின் காரணமாக நமது நாட்டுச் செல்வம் கொள்ளை போகிறது. அதைத் தடுக்க வேண்டும் என்று பலர் பாடுபடுகிறார்கள்).

பலர் இந்து தேசத்திற்குத் தன்னாட்சி வேண்டுமென்று தொழில்செய்து வருகிறார்கள். பலர் ஆரிய வேதத்தைச் சரண்புகுந்து பூமண்டலம் வாழும்படி செய்ய வேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். இவ்வனைவருக்கும் வெற்றியுண்டு. நம்பிக்கை உண்டானால் வெற்றியுண்டு" என்று பாரதியார் எழுதுகிறார்.

இங்கு பாரதி, நமது நாட்டு பாஷைகளை அபிவிருத்தி செய்வது, நமது பூர்வ சாஸ்திரங்களை உலகரியச் செய்வது, நமது பழம் பெருமைகளை, பாரம்பரியங்களை உலகரியச் செய்வது, நமது நாட்டுச் செல்வங்களைப் பாதுகாப்பது, நமது சுயாட்சியை நிறுவுவது, நமது வேதங்களின் அடிப்படையில் பூமண்டலத்தை வாழும்படி செய்வது, ஆகியவற்றையெல்லாம் நமது விடுதலை இயக்கத்தின் கூறுகளாகக் குறிப்பிட்டிருப்பது நமது நாட்டின் உண்மையான பெருவடிவத்தை உயர்த்திக் காட்டும் மேலான அரசியலாகும். பாரதி அரசியலை தன்னாட்சி வடிவத்தில் மட்டும் காணவில்லை. நாட்டின் முழுமையான விடுதலையின் வடிவத்தில் காண்கிறார்.

பாரதியார் வாசக ஞானம் என்னும் தலைப்பில் ஒரு அருமையான கட்டுரை எழுதியுள்ளார். அதில் அரசியல் மற்றும் இதர லௌகீக விஷயங்களைப் பற்றி மிகவும் நுட்பமாக எடுத்துக் கூறுகிறார். சாதாரணமான விஷயங்களைப் பற்றி மக்களை பாதிக்கும் பிரச்சனைகளைப் பற்றி, எளிதில் அனைவரும் புரிந்து கொள்ளும் முறையில், மக்களின் போக்கு நடையில் பாரதி தன்னுடைய உரைநடையில் தனது கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார்.

இக்காலத்தில் பலவேறு துறைகளைப் பற்றிய அறிவு அனைவருக்கும் அதிகரித்துவருகிறது. ஆனால் நாம் அறிந்துள்ள அறிவின்படி அடைந்துள்ள ஞானத்தின் அளவில் நமது நடைமுறை செயல்பாடுகள் நிறைவாக இல்லை. குறைவாகவே உள்ளது.

புகை பிடித்தல் உடலுக்குக் கெடுதல் என்பது அனைவருக்கும் தெரியும். அப்படியிருந்தும் புகை பிடிப்போர் பலரும் அதைக் கைவிட இன்னும் ஏன் மறுக்கிறார்கள்?

கள்ளு, சாராயம் குடித்தல் கேடுவிளைவிக்கும் என்று தெரிந்தும் ஏன் இன்னும் குடி நிற்கவில்லை? மேலும் கள்ளச் சாராயம், விஷச்சாராயம் ஏன் நாட்டில் நடமாடுகிறது? அதனால் பல பாதிப்புகளும் உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டும் ஏன் அந்தக் கொடும் பழக்கம் நிற்கவில்லை?

மத போதனைகள் பல நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றன. அப்படியிருந்தும் ஏன் மத வெறியாட்டங்களும் மதக் கொலைகளும் நிற்கவில்லை?

நமது சாதி அமைப்புகளும் சாதிப் பாகுபாடுகளும் சாதி வேறுபாடுகளும் பொதுக் கருத்துக்களில் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. ஆயினும் நடைமுறையில் நீடிக்கிறது. சாதி அமைப்புகளுக்கு சாஸ்திர சம்மதமில்லை. பிறப்பால் ஜாதியில்லை. குணத்தாலும் செய்கையாலும் தான் வர்ணங்களின் வேறுபாடுகள் எடுத்துக் காட்டப்பட்டன. ஆனால் அந்த நல்ல கருத்துக்கள் நாசப் படுத்தப்பட்டு, சாதி அமைப்புகளும் வேறுபாடுகளும் தொடர்கின்றன. சாதி வேறுபாடுகளும், பாகுபாடுகளும் உயர்வு தாழ்வுகளும் தோன்றிய காலத்திலிருந்தே அதற்கு எதிரான கருத்துக்களும், போராட்டங்களும், கிளர்ச்சிகளும் நடந்து வந்திருக்கின்றன.

நமது அரசியல் சட்டத்தின் படி அனைவரும் சமம். கடந்த ஐம்பது ஆண்டுகளில் இந்தத் துறையில் நடைமுறையிலும் பல முன்னேற்றங்களும் அபிவிருத்திகளும் ஏற்பட்டிருக்கின்றன என்றாலும், வேறுபாடுகள், பாகுபாடுகளின் மிச்ச சொச்சங்கள் நமது நாட்டையும் சமுதாய வாழ்வையும் களங்கப் படுத்திக் கொண்டிருக்கிறது.

ஆண் பெண் சமத்துவம், சம உரிமை பற்றி அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் பாகுபாடுகளும், கொடுமைகளும், நீடிக்கின்றன. பல துறைகளிலும் ஆணாதிக்கம் நீடிக்கிறது. பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் நீடிக்கின்றன. சமத்துவம், சமஉரிமை என்பது பல துறைகளிலும் சொல்லளவிலேயே இருக்கிறது.

பாரதி தன்னுடைய வாசக ஞானம் என்னும் கட்டுரையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"வியாபாரம், கைத்தொழில், ராஜாங்க சீர்திருத்தம், ஜனசமூகத் திருத்தம் முதலிய லௌகீக விவகாரங்கள் எல்லா வற்றிலும் மனிதர் ஏறக்குறைய எல்லாத் திட்டங்களையும் உணர்ந்து முடித்து விட்டனர். ஒரு துறை அல்லது ஓர் இலாகாவைப் பற்றிய ஸூக்ஷ்ம தந்திரங்களை மற்றொரு துறையில் பயிற்சி கொண்டோர் அறியாதிருக்கலாம். ஆனால் அந்தந்த நெறியில் பயிற்சி கொண்ட புத்திமான்களுக்கு அதனையதனைப் பற்றிய நுட்பங்கள் முழுமையும் ஏறக்குறைய நன்றாகத் தெரியும்.

"பொதுவாகக் கூறுமிடத்தே மனித ஜாதியார் அறிவு சம்மந்தப் பட்ட மட்டில் மகா ஸூக்ஷ்மமான பரம சத்தியங்களை –யெல்லாம் கண்டு பிடித்துள்ளனர். ஆனால் அறிவுக்குத் தெரிந்ததை மனம் மறவாதே பயிற்சி செய்ய வலிமையற்றதாய் நிற்கிறது. அறிவு சுத்தமான பின்னரும் சித்த சுத்தி ஏற்பட வழியில்லாமல் இருக்கிறது. எனவே அறிவினாலே எட்டிய உண்மைகளை மனிதர் ஒழுக்கத்திலே நடத்திக் காட்டுதல் பெருங் கஷ்டமாக இருக்கிறது" என்று பாரதி குறிப்பிடுகிறார்.

பாரதியார் இந்தக் கட்டுரையில் தாயுமானவர் பாடல் ஒன்றையும் வள்ளுவரின் குறட்பாக்களையும் எடுத்துக் காட்டாகக் கூறி விளக்குகிறார்.

"வாசக ஞானத்தினால் வருமோ ஸுகம் பாழ்ந்த
பூச லென்று போமோ புகலாய் பராபரமே"

– தாயுமானவர்.

இதன் பொருள் "வெறுமே வாக்களவாக ஏற்பட்டிருக்கும் ஞானத்தினால் ஆனந்த மெய்த முடியவில்லையே? என் செய்வோம்? பாழ்பட்ட மனம் ஓயாமல் பூசலிட்டுக் கொண்டிருக்கிறதே? இந்தப் பூசல் எப்போது தீரும் கடவுளே! நீ அதனைத் தெரிவிப்பாய்."

"சொல்லுதல் யார்க்கும் எளிய அறியவாம்
சொல்லிய வண்ணம் செயல்."

–திருவள்ளுவர்.

இதன் பொருள் "வாயினால் ஒரு தர்மத்தை எடுத்துச் சொல்லுதல் யாவர்க்கும் சுலபமாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அந்த சொல்லின் படி நடத்தல் துர்லபம்"

இக்கட்டுரையில் பாரதி "வியாபாரம், கைத்தொழில், ராஜாங்க சீர்த்திருத்தம், ஜன சமூகத்திருத்தம், முதலிய லௌகீக விவகாரங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். இந்த லௌகீக விவகாரங்கள் இக்காலத்தில் மேலும் மேலும் விரிவடைந்து மனித சமுதாயம் முழுவதையும் கவர்ந்திருக்கிறது. இதில் குறிப்பாக அரசியல் விவகாரங்கள் அனைத்தளாவியதாக, உலகளாவியதாகப் பரவி நம்மைச் சூழ்ந்து நிற்கிறது. வெளிநாட்டு உறவு, ஐக்கிய நாடுகள் சபை, விவகாரங்கள், ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம், கலாச்சாரப் பரிவர்த்தனை, உலக வங்கி, சர்வதேச நிதிநிறுவனம், உலக வர்த்தக நிறுவனம் முதலியன உள் நாட்டுப் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்குப் பிரச்னைகள், அமைதியான சமூதாய வாழ்க்கை, உள் நாட்டுப் போக்குவரத்து, சாலை, ரயில், கப்பல், விமானப் போக்குவரத்துக்கள், பொருளுற்பத்தி, (தொழில், விவசாயம், கால்நடை, மீன் பிடித்தல்,

சுரங்கம் சிறு தொழில் முதலியன) எரிபொருள், இயற்கை வாயு, பெட்ரோல், வாணிபம் வர்த்தகம், கல்வி சுகாதாராம், கலாச்சார வளர்ச்சி, ஆடல்பாடல், விளையாட்டு முதலிய அனைத்துத் துறைகளும் அரசாங்க நிர்வாகத்தின் கீழ் வந்து விட்டன. அவை மேலும் விரிவு பட்டுக் கொண்டிருக்கின்றன.

எனவே அரசியல், அரசு, அரசாங்க நிர்வாகம் என்பது அனைத்தளாவியதாக விரிவடைந்து கொண்டு வருகிறது. இதில் அரசியல் கட்சிகளின் பங்கும் அதிகமாக உள்ளது. அரசியலில் ஒழுக்கம், நல்ல நடத்தை, சேவை, அர்ப்பணிப்பு, திறமை, பயிற்சி, செயல் திறன், தீவிரமான செயல்பாடு, மக்கள் பால் தயை, இரக்கம், அன்பு, நாட்டுப்பற்று, சமுதாய வளர்ச்சி பற்றிய ஆர்வம், ஒரு பக்கம், மறுபக்கம் வாய்ச் சவடால், அள்ளி வீசப்படும் (போலி) வாக்குறுதிகள், ஊழல்கள், லஞ்சம், ஏமாற்றுவித்தை, மோசடி, சுயநலம், நாட்டைப் பற்றியும் சமுதாயத்தைப் பற்றியும் அக்கரையின்மை, போலி வேடம், பயிற்சியின்மை, செயல்திறனின்மை முதலியவற்றை நாம் சந்திக்க வேண்டியதிருக்கிறது. அத்துடன் உண்மையிலேயே சொல்லுக்கும் செயலுக்கும் இடையே உள்ள இடைவெளியின் தூரம் இவைகளை எப்படி எதிர் நோக்குவது, நல்லனவற்றை எப்படி வளர்ப்பது, அபிவிருத்தி செய்வது, மேம் படுத்துவது, அல்லன வற்றைக் களைவது, சொல்லுக்கும், செயலுக்குமுள்ள இடைவெளியைக் குறைப்பது என்பது எல்லாக் காலத்திலுமுள்ள பிரச்னையாகும்.

விடுதலைப் போராட்ட காலத்திலும் கூட நடிப்புச் சுதேசிகளைப் பற்றி பாரதி ஒரு அருமையான பாடலைப் பாடியுள்ளார். நெஞ்சில் உறமும் இன்றி நேர்மைத் திறனும் இன்றி வஞ்சனை சொல்வாரடி கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி என்று தொடங்கும் அப்பாடல் கருத்துச் செரிவு மிக்கதாகும்.

"கண்ணைத் திறந்து கொண்டு படுகுழியில் விழுவது போல, மனித ஜாதி நன்மையை நன்றாக உணர்ந்தும், தீமையை உதரித்தள்ள வலிமையின்றித் தவிக்கிறது. இதற்கு என்ன நிவாரணம் செய்வோம். "தைரியம் தான் மருந்து."

தைரியம், துணிவு, வைராக்கியம், விடாமுயற்சி, அஞ்சாமை, இவ்வாறு பல நற்குணங்கள் நம்மை ஊக்குவிக்க வேண்டும்.

தாற்காலிக அசௌகரியங்களையும், கஷ்டங்களையும், பொருட் படுத்தாமல் மனிதர், தாம் உண்மையென்று கண்டதை நடத்தித் தீர்த்து விட வேண்டும். அங்ஙனம் தைரியத்துடன் உண்மை நெறிப்பற்றி நடப்போரை மற்றவர், புகழ்ச்சியாலும், சம்மானங்களாலும் ஊக்கப் படுத்த வேண்டும். கலி போதும், வீண் துன்பங்களும், அநாவசியக் கஷ்டங்களும் பட்டுப்பட்டு உலகம் அலுத்துப் போய் விட்டது" என்று நியாய மற்றவைகளை எதிர்த்து நிற்பதற்கு மக்கள் அனைவரையும் ஒன்று சேரும்படி பாரதி அரை கூவி அழைக்கிறார்.

"வாருங்கள், மக்களே! வாருங்கள். அண்ணன் தம்பி மார்களே, அக்கா, தங்கை மார்களே! வாருங்கள். ஒருவரிருவர் நேர் வழியில் செல்ல முயல்வதில் பல இடர்கள் ஏற்படுகின்றன. அதனால் நேர்மை வழியில் செல்ல விரும்புவோர்க்கெல்லாம் அதைரியம் ஏற்படுகிறது. வாருங்கள் உலகத்தீரே! கூட்டம் கூட்டமாக நேர்மை வழியில் புகுவோம்" என்று பாரதி கூறுகிறார்.

"ஆண் பெண் சமத்துவமே தர்மம் என்று தெரிகிறதா? அப்படியானால் வாருங்கள் மாதர்களை லக்ஷக்கணக்காக விடுதலை செய்வோம். ஜாதி பேதங்கள் பிரயோஜனம் இல்லை என்று தெரிந்ததா? நிறவேற்றுமைகளும், தேச வேற்றுமைகளும் உபயோகம் இல்லாதன என்று தெரிகிறதா? நல்லது வாருங்கள் கோடிக்கணக்காக சமத்துவ நெறியில் பாய்ந்து விடுவோம். பழைய கட்டுகளை லக்ஷக்கணக்கான மக்கள் கூடி நின்று தகர்ப்போம்.

"அன்பே இன்பம் தரும், பகைமையை அழிக்கும் என்று தெரிந்தோமா? நல்லது எழுங்கள் கோடிக் கணக்கான மானிடர் எங்கும் எப்போதும் எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தத் தொடங்குவோம்" என்று பாரதி கூறி முடிக்கிறார்.

சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலுள்ள இடை –வெளியைக் குறைப்பதற்கு அதன் வேறுபாட்டைக் குறைப்பதற்குக் கோடிக்கணக்கான மக்களைத் தயார் நிலைக்கு முன் வரும்படி அறை கூவல் விடுக்கிறார்.

இன்று இந்திய நாடு சுதந்திரம் பெற்று அரை நூற்றாண்டுக்கும் மேலான பின்னரும் உள்ள நிலைமையில் அரசும் அரசாங்க நிர்வாகமும், அரசியல் கட்சிகளும் மக்களின் சமுதாய வாழ்வனைத்திலும் சம்மந்தப் பட்டதாக, அனைத்தளாவிய அமைப்பாக இருப்பது பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். இன்று சொல்லுக்கும் செயலுக்கும் இடையிலுள்ள தூரத்தைக் குறைப்பதற்கு சகல துறைகளிலும் மக்கள் நேரடியாகப் பங்குகொள்ளும் நிலையை உருவாக்கி வளர்க்க வாய்ப்புகள் அதிகரித்து வருகிறது. அந்த வாய்ப்புகளைப் பயன் படுத்த வேண்டும்.

மக்கள் தேர்தல்களில் ஓட்டுப் போடுவதுடன் ஜனநாயகம் நின்று விடக் கூடாது. எல்லாப் பிரச்னைகளுக்கும் சர்க்கார் சட்டம் போட்டுத் தீர்க்க முடியாது. சட்டங்கள் போடப் பட்டாலும் அவற்றை அமுலாக்குவது எப்படி? அது தானாக அமுலாகி விடுமா? நடைமுறை செயல் பாட்டிற்கு வந்து விடுமா? அது நடப்பதில்லை.

கிராமப் பிரச்னைகள், தெருப் பிரச்னைகள், கல்வி, சுகாதாரம், குடி தண்ணீர், நீர்ப்பாசன அமைப்புகள், சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள், விவசாயம், பால் பண்ணைகள், சந்தைகள் மூலம் பண்டப் பரிவர்த்தனை கிராமக் கோவில் நிர்வாகங்கள் நகரங்களில் சிறிய கோயில் நிர்வாகங்கள், மொத்தத்தில் கோயில் நிர்வாகங்கள்,

பாட சாலைகள், சிறிய வழக்குகள் விசாரணையும் தீர்வும், நீர்நிலைகள், ஊருணிகள், குளங்கள், திருக்குளங்கள், ஏரிகள், முதலியன கிராமச் சாலைகள் அவைகளின் பராமரிப்பு, கூட்டுறவு அமைப்புகள், சுய உதவிக்குழுக்கள், சமூக சேவை அமைப்புகள், சபாக்கள், கலை இலக்கிய அமைப்புகள் முதலியவற்றையெல்லாம் தேவைப்படும் அளவிற்கு, வாய்ப்புள்ள அளவிற்கு அரசாங்க நிர்வாக அமைப்புகளின் ஆலோசனைகளையும் உதவிகளையும் சாத்தியமான அளவில் பெற்றுக் கொண்டும் நமது நாட்டின் கிராமப் புறங்களின் நகரப் புறங்களின் நிர்வாகத்தில் பல லட்சக்கணக்கான, பல கோடிக்கணக்கான மக்கள், ஆண்களும், பெண்களும் நேரடியாகப் பங்கு கொள்ளும் நிலைமை ஏற்படுமானால் மக்களுக்கிடையிலுள்ள பல பிரச்னைகளும் சுலபமாக சுமுகமாகத் தீரும். மக்களுடைய அறிவாற்றலும், சிந்தனை ஆற்றலும் செயல் பட்டு பல அற்புதங்களைப் படைக்கும்.

பாரதி தனது அரசியல் பார்வையில் தேச விடுதலை பற்றிய பிரச்னைகளில் முதல் முனைப்பு காட்டிய போதிலும், சமுதாயத்தில் உள்ள எல்லாவிதமான பாகுபாடுகளும், வேறுபாடுகளும் ஏற்ற தாழ்வுகளும் நீங்கி தேச பக்தியும், தெய்வ பக்தியும் நிறைந்த சுய நிர்வாகத்தை நடத்தும் முழுமையான விடுதலை பெற்ற சமுதாயத்தைப் பற்றி சிந்தித்தார்.

ஏற்கனவே பாரத சமுதாயத்தின் பொதுவான வளர்ச்சியில் முன்னேற்றத்தில் மக்களுடைய பங்கு மகத்தான பங்காக இருக்கிறது என்பது நமது வரலாற்று அனுபவமாகும்.

✡ ✡ ✡

3. உயிரின் ஒளி:

உயிரின் ஒளி என்னும் தலைப்பில் பாரதியார் ஒரு சிறந்த கட்டுரை எழுதியுள்ளார். இந்தியாவில் கொல்கத்தாவில் ஜெகதீஷ் சந்திரவஸு என்னும் உலகப் புகழ் பெற்ற சிறந்த இந்திய விஞ்ஞானி ஒருவர் இருந்தார். அவர் ஜெகதீஷ் சந்திபோஸ், ஜே.ஸி.போஸ் என்று பிரபலமாக அழைக்கப் பட்டார். அன்னிய ஆட்சி காலத்திலே உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானிகள், சர்.சி.வி.ராமன், கே.எஸ்.கிருஷ்ணன், கணித மேதை இராமானுஜன், ஜே.ஸி.போஸ், பி.சி.ராய் முதலியோர் பிரபலமான இந்திய விஞ்ஞானிகளாக விளங்கினார்கள். இவர்களுடைய அரிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் உலகப் புகழ் பெற்றிருக்கின்றன.

ஜே.ஸி.போஸ் அவர்கள் கொல்கொத்தாவில் ஒரு விஞ்ஞான ஆராய்ச்சி நிலையத்தை அமைத்திருந்தார். அதற்கு வஸு மந்திரம் என்று பெயர். அந்த ஆராய்ச்சிக் கூடத்தை பாரத மாதாவிற்குச் சமர்ப்பணம் செய்து ஒரு உரை ஆற்றியிருந்தார். அந்த உரையை பாரதியார் தனது கட்டுரையில் தமிழாக்கம் செய்து வெளியிட்டுள்ளார்.

"சில தினங்களுக்கு முன்பு கொல்க்கொத்தாவில் ஸ்ரீ ஜெகதீஷ் சந்திர வஸு தமது வஸு மந்திரம் என்னும் ஆராய்ச்சிக் கூடத்தைப் பாரத மாதாவுக்குச் சமர்ப்பணம் செய்கையில் "உயிரின் ஒளி" என்ற மகுடம் இட்டு ஒரு பிரசங்கம் செய்தார்" என்று பாரதியார் தனது கட்டுரையைத் தொடங்குகிறார்.

"அவருடைய கொள்கை எப்படியென்றால் நாம் ஜடபதார்த்தமாக நினைக்கும் உலோகாதிகளில் உயிர் நிறைந்திருக்கிறது. ஜந்துக்களைப் போலவே விருக்ஷாதிகளுக்கும் உணர்விருக்கிறது. ஆகவே மண், செடி, ஜந்து, மனுஷ்யன் அத்தனைக்குள்ளும் ஒரேவிதமான பிராண சக்தி இருக்கிறது. இந்த உலகமே உயிர்க் கடல்" என்பது அவரது சித்தாந்தம். அவர் பல

நுட்பமான கருவிகள் செய்திருக்கிறார். ஹிந்து தேசத்துத் தொழிலாளிகளைக் கொண்டு, அந்த ஸூக்ஷ்மக் கருவி –களையெல்லாம் செய்து கொண்டார். அந்தக் கருவிகளின் நேர்த்தியைப் பார்த்து ஐரோப்பிய சாஸ்திரிகளும் எந்திரிகளும் ஆச்சரியப் படுகிறார்கள்.

தன்னுடைய அபூர்வமான, அதிசயிக்கத்தக்க கருவிகள் மூலம் செடிகளின் நாடியுணர்ச்சிகளை ஆராய்ந்த தனது ஆராய்ச்சி முடிவுகளை வெளியிட்டுள்ளார்.

"இத்தகைய மகானாகிய மேற்படி ஜகதீச சந்திர வஸு நம்முடைய ஹிந்து மதத்தில் ஆழ்ந்த பக்தியுடையவர். ஹிந்துக்களின் மேன்மையைப் பற்றி அவர் வார்த்தை சொல்லும் போது அந்த வார்த்தைகளில் மிகச் சிறந்ததொரு ஜீவநாதம் உண்டாகிறது"என்று பாரதி குறிப்பிடுகிறார்.

ஸ்ரீ ஜகதீஷ் சந்திர வஸுவின் உரையை அப்படியே பாரதி தனது கட்டுரையில் கொடுக்கிறார்.

வஸு சொல்லுகிறார். சாதாரணக் கருவிகளால் மகத்தான காரியங்களை நிறைவேற்றிய மஹான்களின் சந்ததியிலே நாம் பிறந்திருக்கிறோம். . . . . ஒருவன் ஒரு பெருங்காரியத்தில் முழுதும் தன்னை ஈடுபடுத்தினால் அடைத்திருந்த கதவுகள் திறக்கும். அஸாத்தியமாகத் தோன்றுவது அவனுக்குச் சாத்தியமாகும். உண்மை தேடுவதையே தொழிலாகக் கொண்ட ஒருவன் சிற்றின்பங்களை விரும்பலாகாது. லாப நஷ்டங்களையும் வெற்றி தோல்விகளையும் ஒன்று போலக் கருதி அவன் தனது ஜீவனை உண்மைக்கு நைவேத்தியமாக விட வேண்டும். பாரத தேசம் இப்போது வென்று காப்பாற்ற வேண்டிய வஸ்து யாது?

சிறியதும் வரம்புற்றதுமாகிய ஒரு பொருளினால் பாரத மாதா திருப்தி அடைவாளா? இவளுடைய அற்புதமான பூர்வ சரித்திரத்தையும் பூர்வ சாஸ்திரங்களையும் செயல்களையும் யோசிக்கும் போது தாழ்ந்த தரமுள்ளதும் சில நாள் நிற்பதுமான லாபமொன்றை இவள் விரும்ப மாட்டாள் என்பது தெரியும்.

"இப்போது நம் கண்முன்னே இரண்டு விதமான தர்மங்கள் காணப் படுகின்றன.

"முதலாவது (ஐரோப்பியர்களைப் போல நாமும்) டிடிப்பின் பரவுதலாலும் நகரத்தாருக்குரிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதாலும், கைத் தொழில் வியாபார சம்பந்தமான பலவித முயற்சிகளாலும் பாரத நாட்டை வலிமையுடைய நாடாகச் செய்ய வேண்டும். இவையெல்லாம் தேசக் கடமையின் முக்கியாம்சங்கள். இவற்றைப் புறக்கணித்தால் நமது ஜீவனுக்கே ஆபத்து நேரிடும். வாழ்க்கையிலே ஜயமும் அவனவன் தன்தன் அவாவைத் திருப்தி செய்து கொள்ளும் வழியும் வேண்டிப் பாடுபட்டால் அதிலிருந்தே மேற் கூறிய லௌகீக தர்மத்திற்குத் தூண்டுதல் உண்டாகும்.

"இரண்டாவது, ஆத்ம தர்மம். க்ஷணமாயிருக்கும் இன்பங்களை மாத்திரம் கருதாமல் மனுஷ்ய வாழ்க்கையின் அதியுன்னதமான நோக்கத்தை நாடி உழைத்தவர்கள் நமது நாட்டில் எக்காலத்திலும் மாறாமல் இருந்து வருகிறார்கள்.

"ஆத்ம தர்மமாவது யாதென்றால் ஸ்ரீவஸு சொல்கிறார் "மனுஷ்ய ஜாதியின் பரம க்ஷேமத்திற்காக ஒருவன் தன்னைத் துறந்து விடுதல்" என்று வந்தேமாதரம். இந்த தர்மத்தை எக்காலத்திலும் இடை விடாமல் ஒரு சிலரேனும் ஆதரவு செய்து வந்தமையால் தான் அஸ்ஸிரியா தேசத்திலும் நீல நதிக்கரையிலும் தலை தூக்கி நின்ற பெரிய ஜாதிகள் அழிந்து போயின. நாம் அழியாமல் என்றும்

இளமை கொண்டிருக்கிறோம். கால வெள்ளத்தில் வரும் மாறுதல்களுக்கெல்லாம் மாறாமல் தான் அவற்றைத் தனதாக்கிக் கொண்டு வாழும் திறமை நமது நாட்டிற்கு இருக்கிறது. வந்தே மாதரம்.

இதைக் குறிப்பிட்டு பாரதியார் உணர்ச்சி பொங்கத் தனது கட்டுரையில் மேலும் தொடருகிறார்.

"இதுவே உயிரின் ஒளி. ஹிந்து ஸ்தானத்தை வணங்குகிறேன். ஹிந்து தர்மத்தைப் போற்றுகிறேன். லோக நன்மைக்காக என்னை மறந்து என்னை இரை கொடுப்பேன்.

"இதுதான் ஜீவ சக்தியின் சாந்தி வசனம். இந்து தர்மம் ஐரோப்பியருக்குத் தெரியாது. அதை நாம் ஐரோப்பியருக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய முயற்சிகளை நாம் கற்றுக் கொண்டு, பிறகுதான் அவர்களுக்கு நாம் உபாத்தியாயராகலாம்.

"ஐரோப்பாவின் தொழில் நுட்பங்களை நாம் பயிற்சி செய்தல் எளிதென்பது ஸ்ரீமான் வஸுவின் சரிதையிலே நன்கு விளங்கும். நம்முடைய சரித்திர தர்மத்தை ஐரோப்பியர் தெரிந்து கொள்வதால் அவர்களுக்கு விளையக் கூடிய நன்மையோ மிக மிகப் பெரியது" என்று பாரதி எழுதுகிறார். அவர் மேலும் மேற்கோள் காட்டுகிறார்.

ஸ்ரீ ஜகதீஷ் சந்திரவஸு சொல்லுகிறார் "தன்னை அடக்கியாளும் சக்தியில்லாமையால் மனுஷ்ய நாகரிகமானது சேதப் படுகுழியின் கரையில் நடுங்கிக் கொண்டு நிற்கிறது. ஸர்வ நாசத்திலே கொண்டு போய் சேர்ப்பதாகிய இந்த வெறிக்கொண்ட வேகத்திலிருந்து மனிதனைக் காப்பாற்ற மற்றொரு தருமம் வேண்டும். அதாவது நம்முடைய ஹிந்து தர்மம். ஏனென்றால் ஆத்ம தியாகம் தனக்குத் தனக்கென்ற அவாவினால் உண்டாகாது. எல்லாச்

சிறுமைகளையும் அழித்துப் பிறர் நஷ்டமெல்லாம் தனக்கு லாபம் என்று கருதும் அஞ்ஞானத்தை வேரறுப்பதால் விளையும்" என்றார் என்பதை பாரதியார் குறிப்பிடுகிறார்.

அத்துடன் ஜகதீச சந்திர வஸு முன்னொரு முறை சில வருஷங்களுக்கு முன் லண்டன் நகரத்தில் உள்ள "ராயல் சொஸைட்டி" என்னும் சாஸ்திர சங்கத்தில் பேசிய உரையைக் குறிப்பிட்டுள்ளார். அந்த உரையின் தமிழாக்கம் ஸ்வலி கீதங்களின் பேசாத ஸாக்ஷியத்தை நான் பார்த்தேன். எல்லாப் பொருளையும் தன்னுள்ளே கொண்ட ஏக வஸ்துவின் கலையொன்றை அங்கே கண்டேன். ஒளியின் சிறு திரைகளுக்கிடையே தத்தளிக்கின்ற துரும்பும் பூமியின் மேலே பொதிந்து கிடக்கும் உயிர்களும், நமது தலை மேலே சுடர் வீசும் ஞாயிறும் எல்லாம் ஒன்று. இதைக் கண்ட பொழுதே மூவாயிரம் வருஷங்களுக்கு முன்பு என் முன்னோர் கங்கைக் கரையிலே முழங்கின வாக்கியத்திற்குச் சற்றே பொருள் விளங்கலாயிற்று. இந்த ஜகத்தின் பேத ரூபங்களில் ஒன்று காண்பார் எவரோ அவரே உண்மை காண்பார். பிறர் அல்லர், பிறர் அல்லர். இதுதான் ஜீவஒலி. வாயு பகவானுடைய ஸ்ரீமுகவாக்கியம். எல்லாவற்றிலும் ஒருயிரே அசைகிறது. அதை அறிந்தால் பயமில்லை. பயம் தீர்ந்தால் சாவில்லை. அமிர்தம் ஸதா" என்று ஸ்ரீமான் வஸு பேசியதை மகாகவி பாரதியார் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீஜகதீச சந்திர வஸு ஒரு புகழ் பெற்ற விஞ்ஞானி மட்டுமல்ல. இந்து தர்மத்தில் திளைத்த மகாஞானி. அவர் மனிதனுடைய உயிர்த் துடிப்பை மட்டுமல்ல, உலகிலுள்ள அனைத்து பொருள்களிலும் உள்ள உயிர்த் துடிப்பை விஞ்ஞான பூர்வமாகக் கண்டு உலகிற்குக் காட்டி நிரூபித்துத் தெளிவு படுத்தினார். அதன் மூலம் பாரதத்தின் விடுதலை பற்றியும் உலகின் விடுதலை பற்றியும் சிந்தித்தார்.

பாரதியார் ஒரு மகாகவி. உலகத்தின் உயிர் ஒலியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். அவர் பாரத நாட்டின் தலை சிறந்த விஞ்ஞானியான ஸ்ரீஜகதீஷ் சந்திர வஸுவின் உள்ளத்துடிப்பை முழுமையாக அடையாளம் கண்டார். மகாகவி பாரதியார், ஸ்ரீஜகதீஷ் சந்திர வஸுவை நவீன கால விஞ்ஞானியாக மட்டுமல்ல, அவர் வடிவில் பாரதத்தின் பாரம்பரியமான ஒரு மகா ஞானியையும் அடையாளம் கண்டார். அதனால் பாரதி, ஹிந்துஸ்தானத்தை வணங்குகிறேன். ஹிந்து தர்மத்தைப் போற்றுகிறேன். லோக நன்மைக்காக என்னை மறந்து என்னை இரை கொடுப்பேன்", என்று உலக விடுதலைக்கான மகத்தான வாக்கியங்களைக் கூறுகிறார்.

பாரதியார், பாரத நாட்டின் விடுதலையைப் பற்றி நினைக்கும் போது வெறும் ஆட்சி மாற்றங்களைப் பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. உலகில் உள்ள அனைத்து மக்களின் அனைத்து உயிர்ப் பொருள்களின் முழுமையான விடுதலையைப் பற்றி சிந்திக்கிறார். மகத்தான ஹிந்து தர்மத்தின் மூலம் உலகம் முழுமையையும் விடுவிக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

✡ ✡ ✡

4. காலனிக் கொள்ளை:

ஐந்தாறு நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பிய நாட்டினர் பலரும் குறிப்பாக பிரிட்டிஷ்காரர்களும், ஸ்பானிஷ்காரர்களும் (ஸ்பெயின் தேசத்தார்) கடல் கொள்ளைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களில் பலரும் தங்கள் கப்பல் பயணத்தில் கடல் வழியாக அமெரிக்க ஆப்பிரிக்க நாடுகளுக்கும் ஆசிய நாடுகளுக்கும் சென்றார்கள். அந்த நாடுகளிலும் புகுந்து அங்கிருந்த ஏராளமான இயற்கைச் செல்வங்களையும் கொள்ளையடித்தார்கள். அந்த நாடுகளில் பலவற்றைக் காலனிகளாகப் பிடித்தார்கள். காலனிகளைப் பிடிப்பதற்காக அவைகளைக் கைப்பற்றுவதற்காக அந்த நாடுகளில் வாழ்ந்து கொண்டிருந்த பூர்வ குடிமக்களை ஆயிரக் கணக்கில் லட்சக்கணக்கில் கூட இரக்கம் இன்றிக்கொன்று அழித்தார்கள். அதன் காரணமாக வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூஜிலாந்து, ஆப்பிரிக்க நாடுகள் முதலியவற்றிலும், சுதேசி மக்கள் பலரும் இன அழிப்பு செய்யப் பட்டு பூண்டோடு அழித்து ஒழிக்கப் பட்டார்கள். இவையெல்லாம் காலனிக் கொள்ளை என்று உலக வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது. பின்னர் காலனிக் கொள்ளைகளுக்காகவும், வியாபார ஆதிக்கத்திற்காகவும், ஐரோப்பிய நாடுகள் தங்களுக்குள் சிலுவை யுத்தங்கள் என்றும், நூறாண்டு யுத்தங்கள் என்றும் பல போர்கள் நடந்து அப்போர்களில் பல லட்சக்கணக்கான பேர் பலியானார்கள்.

கடல் கொள்ளை, காலனிக்கொள்ளை, வியாபாரக் கொள்ளை ஆகியவை மூலம் திரட்டிய செல்வங்களை வைத்து தங்கள் நாடு நகரங்களை நவீனப்படுத்தினார்கள். நவீன விஞ்ஞான வளர்ச்சி மூலம் உற்பத்திக் கருவிகளும் உற்பத்தி சாதனங்களும் உற்பத்தி சக்திகளும் வளர்ச்சியடைந்தன. தொழில் வியாபார முயற்சிகள் அதிகரித்தன. ஐரோப்பிய நாடுகளில் தொழில் புரட்சிகள் ஏற்பட்டன. புதிய லௌகிக நாகரிகங்கள் தோன்றி வளர்ந்தன.

இவ்வாறு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல மேற்கத்திய வல்லரசுகள் அசுரத்தனமான ஆயுத பலத்துடன் வளர்ந்தன. அவர்களுக்குள் வியாபாரப் போட்டி தொழில் போட்டிமட்டுமல்லாமல் காலனி ஆதிக்கப் போட்டியும், ஆயுதப் போட்டியும் ஏற்பட்டு இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியிலேயே இரண்டு பெரிய உலகப் போர்கள் நிகழ்ந்து பல கோடிக்கணக்கான மக்கள் போர்களினால் மாண்டு போனார்கள். பல நாடு நகரங்களும் ஆயிரக்கணக்கான தொழிற் சாலைகளும் நாசமாயின, வயல் வெளிகள் அழிந்தன.

இக்கால முழுவதிலும் ஆசிய ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகள் பலவற்றில் கிறிஸ்தவ மிஷனரிகள் மூலம் அந்தப் பகுதி மக்களை நாகரிகப் படுத்துவதாகக் கூறி பல கொடுமைகளைச் செய்தும், ஏமாற்றியும், ஆசை வார்த்தை காட்டியும், அச்சுறுத்தியும், உள்ளூர் மக்களை மத மாற்றங்கள் செய்தும் பல மோசடிகளும் நடை பெற்றுள்ளன.

பொருளாதாரத் துறையில் வளர்ச்சியடைந்துள்ள இந்த நாடுகள் தங்களை வல்லரசுகளாகவும், நாகரிகம் மிகுந்த நாடுகளாகவும் அறிவித்துக் கொண்டு உலக நாடுகள் மீது தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்த முயன்று கொண்டிருந்தார்கள்.

இந்த ஐரோப்பிய நாகரிகங்கள் காரணமாக உற்பத்திச் சக்திகள் அபரிமிதமான அளவிற்கு வளர்ச்சியடைந்திருந்த போதிலும் உலகம் பேரழிவு ஆயுதங்களின் பெருக்கத்தால் நாசத்தின் விழிம்பிலும், இயற்கைச் சூழல்களின் கடுமையான பாதிப்புகளிலும் நின்று கொண்டிருக்கிறது. உலகத்தையே பலமுறை நாசம் செய்வதற்குரிய சக்தி வாய்ந்த ஆயுதங்கள் பெருகியுள்ளன. இயற்கை சக்திகள் மலைகள், ஆறுகள், காற்று, கடல், பூமி, ஆகாயம் முதலியவைகள் எல்லாம் அளவுக்கு அதிகமாக மாசுபட்டு இயற்கைச்

சூழல் படுமோசமாக பாதிக்கப் பட்டிருக்கிறது. இத்துடன் ஒரு பக்கம் உற்பத்தி தேக்கம், மறுபக்கம் பற்றாக்குறை, வேலையின்மை, நிதி நெருக்கடிகள், நாணய நெருக்கடிகள், எரிபொருள் நெருக்கடிகள் ஒழுக்க நெருக்கடிகள் முதலிய பலவகை நெருக்கடிகளும், லஞ்சம், ஊழல், மோசடி, கலப்படம், கருப்புப்பணம், கள்ளச்சந்தை பலவகை சமூக விரோதச் செயல்கள், உலகில் பல நகரங்களிலும் குற்றங்கள் அதிகரிப்பு முதலிய ஒழுக்கக்கேடுகளும் மனித குலத்தைச் சூழ்ந்து கொண்டு அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன.

✡ ✡ ✡

5. ஹிந்து தர்மத்தின் மேன்மை:

மகாகவி பாரதியார் தனது கட்டுரையில் "ஸ்ரீமான் ஜகதீஷ் சந்திர வஸு கூறுவதைக் குறிப்பிடுகிறார். தன்னை அடக்கியாளும் சக்தியில்லாமையால் மனுஷ்ய நாகரிகமானது சேதப் படுகுழியின் கரையில் நடுங்கிக் கொண்டு நிற்கிறது. ஸர்வ நாசத்திலே கொண்டு போய் சேர்ப்பதாகிய இந்த வெறி கொண்ட வேகத்திலிருந்து மனிதனைக் காப்பாற்ற மற்றொரு தர்மம் வேண்டும்" என்று குறிப்பிடுகிறார். அந்த மற்றொரு தர்மம் என்பது ஹிந்து தர்மம் என்பதை பாரதியும் எடுத்துக் கூறுகிறார்.

ஹிந்து தர்மத்தைப் பற்றி, அதன் உட்பொருளை ஸ்ரீமான் வஸுவின் வாயிலாக பாரதியாரும் எடுத்துக் காட்டுகிறார்.

ஹிந்து தர்மம் மிகவும் வலுவானது. அது ஜீவ சக்தியின் சாந்தி வசனம். ஹிந்து தர்மம் பாரதத்தில் நீண்ட காலமாக நிலைத்து நிற்கிறது. உலகில் எத்தனையோ நாகரிகங்கள் தோன்றி அழிந்து விட்டன. ஆனால் ஹிந்து தர்மம் தோற்றுவித்த நாகரிகம், பல படையெடுப்புகள், பலநாசங்கள் பல சோதனைகள், பல ஆக்கிர –மிப்புகள் ஆகியவற்றையும் தாண்டி நிலைத்து நீடித்து நிற்கிறது.

ஹிந்து தர்மம் எந்த நாட்டின் மீதும் படையெடுத்து காலனி ஆதிக்கம் செலுத்த வில்லை. ஹிந்து தர்மம் எந்த நாட்டின் மீதும் படையெடுத்து ஆயுதவலிமையின் மூலம் தனது தர்மத்தைப் பரப்ப முயற்சிக்கவில்லை. ஹிந்து தர்மம் தனது ஆத்மபலத்தின் மூலமாகவே, மற்றவர்களை ஆகர்ஷித்து வந்திருக்கிறது. ஹிந்து தர்மம் எந்தத் தனி மனிதனையும், மனிதக் குழுவையும், கூட்டத்தையும், வற்புறுத்தி, பயமுறுத்தி, ஆசைகாட்டி, மோசடி செய்து ஆயுதத்தைக் காட்டி, தன் பக்கம் மத மாற்றம் செய்ய முயற்சிக்க வில்லை. ஹிந்து தர்மம் யாரையும் ஏ, பாவிகளே என்று அழைக்க வில்லை. ஹிந்து தர்மம் எந்த மனிதக் கூட்டத்தையும் மந்தைக்

கூட்டம் என்று அவதூறு செய்யவில்லை. ஹிந்து தர்மம் யாரையும் எந்தத் தனி நபரையும் தனது ஆவணங்களில் பதிவு செய்யவில்லை. ஹிந்து தர்மமே இஷ்ட பூர்வமாகவே மக்களை ஒன்றிணைத்து வந்திருக்கிறது. உற்சவ மூர்த்திகளின் தேர்களை இழுக்க யாரையும் வற்புறுத்தி அழைப்பதில்லை.

பாரத தேசத்தில் எத்தனையோ கிரேக்க அராபிய, பாரசீக, மங்கோலிய படையெடுப்பாளர்கள், படையெடுத்து இங்கிருந்த கோவில்களையும் இதர செல்வங்களையும் கொள்ளையடித்துப் போயிருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கான வழிபாட்டு ஸ்தலங்களை இடித்து அழித்து ஒழித்திருக்கிறார்கள். கடைசியாக ஐரோப்பியர்கள் அதில் மிக அதிகமாக ஆங்கிலேயர்கள், ஆயுதபலம் கொண்டு, பாரத நாட்டின் செல்வங்களைக் கொள்ளையடித்தும், அழித்தும், நாட்டை ஆக்கிரமித்தும் சூரையாடினார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய் பணம் செலவழித்துத் தங்கள் மதங்களை நிறுவ முயன்றார்கள்.

பாரத நாட்டின் பாரம்பரியமான தொழில்களை அழித்தார்கள். சாகுபடி முறைகளை சிதைத்தார்கள். நீர்ப்பாசன முறைகளை சிதைத்தார்கள். கால்நடைகளைக் கொன்று தின்றார்கள். ஆக்கிர மிப்புப் போர்களால் மக்களின் அமைதியான வாழ்க்கையை சிதைத்தார்கள். தங்கள் கல்வி முறையைப் புகுத்தி இந்த நாட்டின் அறிவையும், ஆத்மாவையும் சிதைக்க முயன்றார்கள். பல லட்சக் கணக்கான பாரத மக்கள் பசி பட்டினியால் பஞ்சத்தால் செத்து மடிந்தார்கள்.

இவ்வாறாகக் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக பாரத நாடு பல அன்னியப் படையெடுப்புகளுக்கும் கொள்ளைகளுக்கும், ஆட்சிக் கொடுமைகளுக்கும் ஆளாகி பல நஷ்டங்களுக்கும், சேதங்களுக்கும்

பலியாகியிருக்கிறது. பல்லாயிரக்கணக்கான கோவில்களும், வழிபாட்டு ஸ்தலங்களும் அழிக்கப் பட்டன. மக்கள் நிர்பந்தமாக மத மாற்றம் செய்யப் பட்டு பல லட்சக்கணக்கான பள்ளிவாசல்களும், கிறிஸ்தவ தேவாலயங்களும் இந்த மண்ணில் கட்டப் பட்டன. ஹிந்து தர்மத்தை அழிக்கவும், பல முயற்சிகள் செய்யப் பட்டன. ஆயினும் ஹிந்து தர்மம் அழியவில்லை என்பதுமட்டுமல்ல, மேலும் வலுவான ஆன்மீக பலத்துடன் பாரத மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து இந்த மண்ணிற்கு வந்த அத்தனை கருத்துக்களையும் கிரகித்து, ஜீரணித்துத் தனதாக்கிக் கொண்டுமிருக்கிறது. மாறுபட்ட வழி பாட்டு முறைகளும், காலப் பயணத்தில் தனது தனித் தன்மையையும் தனி அடையாளத்தையும் இழந்து பொது நீரோட்டத்தில் கலந்து பாரத மயமாகியிருக்கிறது. சில வரலாற்று உண்மைகளை நினைவு படுத்திக் கொள்வதற்காகவே பழைய நிகழ்ச்சிகளை இங்கு நினைவு படுத்துகிறோம்.

இந்து தர்மத்திலும் சில பலவீனங்களும் விதியின் பிழைகளும் நிகழ்ந்திருக்கின்றன. அதையும் பாரதி நமது விடுதலை சிந்தனையில் நினைவு படுத்திக் கூறுகிறார்.

சிந்தையில் அற முண்டாம் – எனிற்
சேர்ந்திடுங்கலி செயு மறமு முண்டாம்

என்று பாஞ்சாலி சபதம் என்னும் நூலின் கவிதையில் குறிப்பிட்டு அதற்குக் கீழ்க்கண்ட விளக்கமும் கூறுகிறார்.

“ஒரு சங்கத்தின் ஒரு ஜாதியின் ஒரு தேசத்தின் அறிவு மழுங்காதிருக்கும் வரை, அதற்கு நாச மேற்படாது. பாரத தேசத்தில் முற்காலத்தில் பாரத ஜாதி முழுமையின் அறிவுக்குப் பொறுப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய வகுப்பினர் இருந்ததாகப் பழைய நூல்களிலே காணப்படுகிறது. அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தியிருப்பார்களானால்

மற்ற குலத்தவரும் நெறி தவறியிருக்க மாட்டார்கள். மஹா பாரதப் போர் நடந்திருக்காது. பாரத தேசத்தில் பெரியதோர் க்ஷத்திரிய நாசமும் கலியும் வந்திருக்க மாட்டா. ஒரு தேசத்தில் ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அந்த தேசத்திலுள்ள பிராமணர்களே பொருப்பாளி களென மேலே குறித்திருப்பதை விளக்கும் பொருட்டு மஹா பாரதப் போர் நடக்குமுன்பாகவே முதற் படப்பாவம் பிராமணருக்குள் புகுந்தது என்பதை நூல் தெரிவிக்கிறது.

மஹா பாரதப் போர் என்பது பாரத தேசத்திலிருந்த ஐம்பத்தாறு தேசத்து அரசர்களும் கலந்து கொண்ட மா பாரதப் போர். அந்தப் போரில் மிகப் பெரிய அளவிலான க்ஷத்திரிய நாசம் ஏற்பட்டது. வல்லமை மிக்க பெரிய வீரர்களும் சூரர்களும் போரில் மாண்டு போயினர். அதனால் மிகப் பெரிய அளவிலானதொரு க்ஷத்திரிய நாசம் ஏற்பட்டது. அதனால் பாரதத்தின் தோள் வலிமை குன்றியது.

அதே போல க்ஷத்திரிய அரசர்கள் சிலர் தவறு செய்த காரணத்தால் ஜமதக்கினி முனிவரின் குமாரன் பரசுராமன் தனது வல்லமை மிக்க ஆயுதத்தின் வலிமையால் ஆயிரக்கணக்கான க்ஷத்திரிய மன்னர்களைக் கொன்றான். அது பற்றி, "பூதலத்து அரசையெல்லாம் பொன்று வித்தனை" என்று இராமபிரான் பரசுராமனிடம் கூறுவதைக் கம்பன் தனது மகாகாவியத்தில் குறிப்பிடுகிறார்.

அக்காலத்தில் ஏற்பட்ட க்ஷத்திரிய நாசத்திற்குக் காரணமான பரசுராமன், இராமனை சந்தித்த போது ஒரு சமரசம் ஏற்பட்டு பரசுராமன் தனது தவ வலிமையனைத்தையும் தனது வல்லமை மிக்க விஷ்ணுதனுசையும் இராமனிடம் ஒப்படைத்து விட்டு வனம் சென்று விட்டான்.

இங்கு பாரதி குறிப்பிடும் பிராமணர் என்பது இக்காலத்து ஜாதியைக் குறிப்பிடவில்லை. பாரதத்தின் அறிவுக்குத்

தலைமையானவர் குணத்தாலும் செய்கையாலும், சீலம் அறிவு தர்மம் ஆகியவற்றாலும் உயர்ந்தவர்களே பிராமணராவார்கள். இன்றைய பாரதத்தில் படித்தவர்கள், அறிவுக்கு உடைமையானவர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், என்ஜினியர்கள், டாக்டர்கள், கணக்கியலாளர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோர்களெல்லாம் தொழிலால் பிராமணர்கள். இவர்கள் நமது பாரத தர்மத்தின் படி தங்கள் கடமைகளைத் தவறாது செய்ய வேண்டும். அதே போல க்ஷத்திரியர்கள் என்பவர்கள் ஆட்சிப் பொறுப்பில், அரசியல் கட்சிகளில் அரசியல் அதிகாரத்தில் நாட்டுப் பாதுகாப்பில், காவல் துறையில் உள்ளவர்கள், நமது ஹிந்து தர்மத்தின் படி தங்கள் கடமைகளைத் தவறாமல் நிறைவேற்ற வேண்டும்.

இன்றைய வைசியர்கள் என்பவர்கள், தொழில் விவசாயம் மற்றும் பல துறைத் தொழில் உற்பத்தியில் சேமிப்பில் அவைகளின் பாதுகாப்பில் வினியோகத்தில் உரிமையாளர்களாக இருந்து நாட்டுப் பொருளாதாரத்தை நிர்வகிப்பவர்கள். அவர்கள் தங்கள் தொழில் கடமைகளையும், பொருளுற்பத்திக் கடமையிலும் சமுதாயப் பொறுப்புகளிலும் சரிவரத் தங்கள் கடமைகளை நிறை வேற்றுபவர்கள்.

இன்றைய சூத்திரர்கள் என்பவர்கள் எல்லா வகையான உழைப்பிலும் சேவைத் தொழில்களிலும் உள்ளவர்கள் தங்கள் கடமைகளை சரிவர நிறைவேற்றி வருபவர்கள்.

இவர்கள் எல்லாம் அவரவர் தொடர்பு கொண்டுள்ள கடமைகளைத் தவறாமல் சரிவர நிறைவேற்றுவார்களானால் பாரத நாட்டின் வேகமான முன்னேற்றத்திற்கு எந்தவிதமான தடையுமில்லை.

✡ ✡ ✡

6. முழுமையான விடுதலை: (பரிபூரண சுதந்திரம்)

பாரதி விடுதலை பற்றிப் பேசும்போது மனித ஜாதி முழுவதினுடைய முழுமையான விடுதலையைப் பற்றிப் பேசுகிறார். பாரத நாட்டின் முழுமையான விடுதலையைப் பற்றிப் பேசுகிறார். அரசியல் அடிமைத் தனத்திலிருந்து, அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை என்பது மட்டுமில்லாமல் பொருளாதார விடுதலை, சமுதாய விடுதலை, சமூகநீதி, பெண் விடுதலை, எழுத்தறிவின்மையிலிருந்து (கல்லாமையிலிருந்து) விடுதலை, அறியாமையிலிருந்து விடுதலை, முதலிய அனைத்து அம்சங்களிலும் பரிபூரணமான விடுதலையைப் பற்றி சிந்திக்கிறார், பேசுகிறார், எழுதுகிறார். அதனால் இந்திய நாட்டின் சுதந்திரத்தைப் பற்றிப் பேசும் போது பரிபூரண சுதந்திரம் என்னும் சொல்லும் கோரிக்கையும் எழுந்தது.

பாரத நாட்டின் சிந்தனையே மனித குலம் முழுவதினுமான முழுமையான விடுதலையேயாகும். அதன் புருஷார்த்தங்கள் நிறைவேறும் போது மனிதகுலத்தின் முழுமையான விடுதலை லட்சியம் நிறைவேறுகிறது.

பாரதியார் தமிழருக்கு என்று ஒரு தனிக் கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் தமிழ் மக்களை உணர்வு பூர்வமாக, உணர்ச்சி ததும்பத் தட்டி எழுப்புகிறார்.

"தமிழா! தெய்வத்தை நம்பு. பயப்படாதே! உனக்கு நல்ல காலம் வருகிறது. உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர் பிறந்திருக்கிறார்கள். தெய்வம் கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்வான்கள், கை தேர்ந்த சிற்பர், பல நூல்வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணாடியிலே போய் பார்.

"நமது நாட்டு ஸ்திரிகளிலே பலர் சக்திக் கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீரியம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன,

தமிழா! பயப்படாதே! ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களையெல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடுசெய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே! "ஜாதியிரண்டொழிய வேறில்லை" என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்.

பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் பெண்ணை வாழ்க்கைத் துணை என்றார்கள். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும், பெண்ணும் சமம்." என்று பாரதி கூறுகிறார். விடுதலை பெற்ற பாரதத்தில் தமிழ் மக்களின் விழிப்புணர்வைத் தட்டி எழுப்புகிறார்.

இந்தக் கட்டுரையில் பாரதி மேலும் எழுதுகிறார்.

"இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள் இன்பம், வீடு என்பன.

"இவற்றுள் அறமாவது கடமை, அது உனக்கும் உனது சுற்றத்தாருக்கும் பிறர்க்கும் நீ செலுத்த வேண்டிய கடமை. பிறர் என்பதனுள் வையகம் முழுவதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

"பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும், கலையும் புகழும் நிறைந்திருத்தல். நல்ல மக்களைப் பெறுதல், இனப்பெருமை சேர்தல். இவையெல்லாம் செல்வம். இச்செல்வங்களைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

"இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண், பாட்டு, கூத்து முதலிய ரஸவஸ்துக்களை அனுபவிப்பது. இவ்வின்பங்கள் எல்லாம், தமிழா, உனக்கு நன்றாக அமையும் படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்சபூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. வீடு என்ற சொல்லுக்கு விடுதலை என்பது பொருள். மேல் கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈடேரிய பெரியோருக்கு, ஈசன் தானாகவே வீட்டு நிலை, அருள் செய்வான். தமிழா! உனது புருஷார்த்தங்கள் கை கூடுக." என்று பாரதியார் புருஷார்த்தங்களுக்கு விளக்கமும் பொருளும் கூறி அவை தமிழனுக்கு முழுமையாகக் கைகூட் வேண்டுமென்று வேண்டுகிறார். வாழ்த்துகிறார். அதுவே முழுமையான விடுதலையாகும்.

இவையெல்லாம் பாரத நாட்டின் பரிபூரண விடுதலைக்காக, பாரதி சிந்தித்த கருத்துக்களாகும். மேலும் மற்றொரு உண்மையை இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டியதிருக்கிறது. நமது நாட்டு மக்கள் வெறும் தற்காப்புக்காக மட்டும் நின்று தணிந்து போகவில்லை. பணிந்து போகவில்லை.

"நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன்" என்பது கீதா வாக்கியம். இது கிருஷ்ண பரமாத்மா நமக்கு விடுத்துள்ள கட்டளை, தர்மக்கட்டளை, நல்லோரைக் காக்கவும், தீயன செய்வோரை அழிக்கவும், அறத்தை நிலை நிறுத்தவும் நாம் எப்போதும் முனைப்பாக இருக்க வேண்டும். பகவான் எப்போதும் நமக்குத் துணை நிற்பார். தாற்காலிகமாக நமக்குச் சில சமயங்களில்

இதில் தோல்வியோ, பின்னடைவுகளோ ஏற்பட்டாலும் இறுதியில் நாம் நிச்சயமாக வெற்றி பெறுவோம். காரணம் தர்மம் நமது பக்கம் நிற்கிறது. நாம் தர்மத்தின் பக்கம் நிற்கிறோம்.

அவ்வப்போது நாம் நமது கடமைகளைச் செய்யத் தவறும் போது நமக்குக் கஷ்டங்கள் சூழ்ந்து நமது சமுதாயத்திற்கு சேதங்கள் ஏற்பட்டு விடுகிறது. இன்னும், "*அறம் தலை நிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித் திறம் தெரிந்து, உலகம் பூணச்செந்நெறி செலுத்தித் தீயோர் இறந்து உக நூறித்தக் கோர் இடர் துடைத்து ஏக ஈண்டு பிறந்தனன்*" என்று இராம –பிரானுடைய அவதாரக் கடமைப் பற்றி அனுமன் இராவணினிடம் சபையில் எடுத்துக் கூறுவதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

இங்கும் தருமத்தை நிலை நிறுத்துவது, தீயோரை ஒழிப்பது தக்கோரின் (நல்லவர்களின்) துயர் துடைப்பது ஆகிய கடமைகளைப் பற்றி அனுமன் எடுத்துக் கூறுவது குறிப்பிடப்படுகிறது.

எனவே நமது சாத்திரங்கள் வெறும் தற்காப்புப் பொறுப்புகளைப் பற்றி மட்டும் எடுத்துக் கூறவில்லை. நல்லோர் துயர் துடைக்கும் தாக்குதல் தன்மையும் கொண்டிருக்கிறது. ஆயினும் நமது மக்கள் அறிஞர்களும் ஆற்றல் மிக்கவர்களும் தொழில் முனைவோரும் தொழில் திறம் கொண்டோரும் இளம் தலை முறையினரும் தங்கள் கடமைகளைச் செம்மையாக முழுமையாக நிறைவேற்றத் தவறும் போது நமது நாடு துவண்டிருக்கிறது.

மேற்கு ஆசிய, மத்திய ஆசியப் படையெடுப்பாளர்கள் நமது நாட்டின் மீது படையெடுத்த போதும் அவர்கள் நமது நாட்டைக் கொள்ளையடித்த போதும், சூரையாடிய போதும் நமது மன்னர்களும் மக்களும் சேர்ந்து கடுமையான எதிர்ப்பு கொடுத்துள்ளோம். ஆயினும்

நம்மிடம் இருந்த வேறுசில பலவீனங்களால் நமக்குக் கஷ்டங்கள் நேர்ந்தன. ஆங்கிலேயர்கள் இந்த நாட்டை ஆக்கிரமிக்கத் தொடங்கிய 1757 பிளாசி யுத்த முடிவிலிருந்து 1857 முதலாவது சுதந்திரப் போராட்டம் வரை நூறாண்டு காலம் எத்தனை கஷ்டங்களுக்கிடையிலும் பிரிட்டிஷ் படைகளை எதிர்த்து நமது மன்னர்களும் படைகளும் மக்களும் கடுமையாகப் போராடினார்கள். நவீன வலுவான ஆயுதங்களும், சூழ்ச்சிகளும், சில துரோகங்களும் ஆங்கிலேயர்களுக்குப் பக்கபலமாக இருந்தன. ஆயினும் அந்த ஆங்கிலேயர்களுக்கும் இந்தியா முழுவதையும் பிடிப்பதற்கு நூறாண்டு காலம் பிடித்தது.

அதன் பின்னர் 1857–ம் ஆண்டிற்குப் பின்னரும் நமது நாடு அமைதியாக அடங்கியிருக்கவில்லை. 90 ஆண்டுகளிலேயே நமது விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்று 1947–ல் நமது நாடு சுதந்திரம் அடைந்தது.

மகாகவி பாரதியார், ஜெகதீஷ் சந்திரவசு போன்ற எண்ணற்ற மகான்கள் நமது நாட்டில் தோன்றி நமது சுதந்திரப் போராட்டத்திற்கு வழி காட்டி, நமது முன்னாள் பெருமைகளை எடுத்துக் காட்டி, நமக்கு ஊக்க மூட்டியிருக்கிறார்கள். நமது கடமைகளை நினைவூட்டி –யிருக்கிறார்கள். அவர்களுடைய சீரிய தலைமையில் நமது மக்கள் விடுதலைப் போராட்டத்தில் வெற்றி பெற்றார்கள்.

✡ ✡ ✡

7. பாரத ஜாதி:

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் அந்த அன்னியர் ஆட்சியை எதிர்த்து இந்திய நாடு சுதந்திரம் பெற வேண்டும் என்னும் கிளர்ச்சி பலவேறு வடிவங்களில் எழுந்தது. 1885–ம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் என்னும் ஸ்தாபனம் துவக்கப் பட்டது. அந்த ஸ்தாபனம் ஆண்டு தோறும் மகாநாடுகள் நடத்தி இந்திய மக்களின் பலவேறு உரிமைகளுக்கான கோரிக்கைகளையும், தீர்மானங்களையும் உருவாக்கி பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கும் லண்டன் பாராளுமன்றத்திற்கும் விண்ணப்பங்கள் அனுப்பிக் கொண்டிருந்தது.

அப்போது இந்திய அரசாங்க நிர்வாகத்திற்குள், இன்றைய இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பர்மா, இலங்கை ஆகிய பகுதிகளும் இருந்தன. பின்னர், பர்மா, இலங்கை ஆகிய பகுதிகள் பிரிக்கப்பட்டு பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தனி நிர்வாகங்கள் ஏற்பட்டுப் பின்னர் அவைகள் சுதந்திரம் அடைந்து இப்போது அவை சுதந்திரமான தனி நாடுகளாக உள்ளன.

பர்மாவும், இலங்கையும் பிரிக்கப் பட்ட பின்னர், இந்தியாவில் தனி நிர்வாகம் ஏற்பட்டது. இந்திய தேசிய காங்கிரஸ் ஸ்தாபனம் இந்திய தேசியம் என்னும் கருத்தை முன் வைத்தது. அதனடிப்படையில் படிப்படியாக இந்திய தேசீய காங்கிரஸ் கட்சியின் தேசிய கோரிக்கைகள் கொள்கைகளின் அடிப்படையில் தேசிய சுதந்திரம் என்னும் கோரிக்கையும் முன் வைக்கப் பட்டது. 1947–ம் ஆண்டு இந்திய நாடு இருநாடுகளாகப் பிரிக்கப் பட்டு இந்தியா, பாகிஸ்தான் என்னும் பெயரில் சுதந்திரம் பெற்றன.

அப்போது பாகிஸ்தான் என்பது மேற்கில் பஞ்சாப், சிந்து, பலுச்சிஸ்தானம், வடமேற்கு எல்லைப்புர மாகாணம் ஆகிய

பகுதிகளும் கிழக்கில் கிழக்கு வங்காளமும் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியாக அமைந்தது.

பின்னர் 1972–ம் ஆண்டில் கிழக்கு வங்காளத்தில் பாகிஸ்தானிலிருந்து பிரிய வேண்டும் என்று கோரிக்கை எழுந்து பெரும் கிளர்ச்சி ஏற்பட்டு, தனி நாடாகப் பிரிந்து பங்களாதேஷ் என்னும் நாடு ஏற்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இன்றைய இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் என்னும் மூன்று பகுதிகளும் சேர்ந்துதான் இந்திய தேசம் என்றும் அதனடிப்படையில் இந்திய தேசியம் என்னும் கருத்து வடிவமும் நிலை பெற்றிருந்தது. எனவே அன்று காங்கிரஸ் கட்சி சார்பில் எடுத்துக் கூறப்பட்ட இந்திய தேசியம் என்பது பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் சுதந்திரக் கோரிக்கைக்காக எழுப்பப் பட்ட அரசாங்க நிர்வாக அடிப்படையிலான தேசியமாகும். இந்த தேசியம், ஐரோப்பிய கருத்து வடிவத்தின் அடிப்படையில் உருவாக்கப் பட்ட தேசியம் பற்றிய கருத்துவடிவமாகும். ஆனால் 1946 – 1947–ம் ஆண்டுகளில் இந்திய தேசிய விடுதலைப் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்திருந்த போது முஸ்லீம்களைத் தனியாகப் பிரித்து முஸ்லீம்கள் தனி தேசம், முஸ்லீம் தேசியம் தனி தேசியம் என்னும் கருத்து தோற்றுவிக்கப் பட்டு, இந்தியா இரு நாடுகளாகப் பிரிக்கப் பட்டு முஸ்லீம் தேசியம் என்னும் பெயரின் வடிவமாக பாகிஸ்தான் உருவாயிற்று. பின்னர் அந்த முஸ்லீம் தேசியம் உடைந்து சோனார் பங்களா (தங்க வங்கம்) தேசியம் மொழியின் அடிப்படையில் உருவாகி பங்களாதேஷ் அமைந்தது. அப்போது மொழி வழி தேசியம் என்னும் கருத்து வடிவமும் வலுப் பெற்றது.

தெற்கில் (தென் பாரதத்தில்) திராவிடம் என்னும் கற்பனை தேசிய வடிவம் தோற்றுவிக்கப் பட்டு இனவழி என்னும் பெயரில்

திராவிட தேசியம் என்னும் கருத்தையும் சிலர் ஊக்குவித்தனர். அதற்கு ஆந்திரம், கேரளம், கர்நாடகப் பகுதியில் எந்தவித ஆதரவும் இல்லாமல் திராவிட தேசியம் உதிர்ந்து போய்விட்டது. பின்னர் மொழியின் அடிப்படையில் தமிழ் தேசியம் என்றெல்லாம் கூட கருத்துக்கள் தோன்றின. அவையெல்லாம் கால வெள்ளத்தில் கரைந்து போயின.

சேதமில்லாத ஹிந்துஸ்தானம் என்று பாரதி கூறினார். ஆனால் பாரதம் சேதப்பட்டு இரு பிரிவு, மூன்று பிரிவாக அரசுகள் அமைந்தன. சேதப்பட்ட இந்துஸ்தானத்தில் தனியாக இந்திய யூனியன் நிர்வாகம் அமைக்கப் பட்டது. ஒரு சமஷ்டி (கூட்டாட்சி) அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி இந்திய யூனியனில் மத்திய ஆட்சி, மாநில ஆட்சிகள் அமைந்தன. பின்னர் மொழி வழியில் மாநிலங்கள் அமைக்கப் பட்டு இந்திய அரசு என்பது கூட்டாட்சி அமைப்பாக உருவாயிற்று. அப்போது மாநிலங்களில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்றும், மாநிலங்கள் என்பது மொழியின் அடிப்படையிலான தேசியம் என்றும், இந்தியா என்பது பல தேசங்களைக் கொண்ட துணைக் கண்டம் என்றும் இந்திய தேசியம் என்பது ஒரு கூட்டு தேசிய அமைப்பு என்னும் கருத்துக்கள் தோன்றின.

ஆனால் இவையெல்லாம் பாரதத்தின் மரபு வழிக்கு அப்பாற் பட்ட கருத்துக்களாகும். அந்நிய ஆங்கிலேய ஆட்சியாளர்களால் ஆங்கிலேய கலாச்சார வழியில் உருவாக்கப் பட்ட ஐரோப்பிய சிந்தனை வடிவங்களாகும்.

எனவே இந்துஸ்தானம் பாரதம் என்பது நமது நீண்ட பாரம்பரியம் மிக்க மரபு வழியிலான தேசமும் தேசியமுமாகும். பல்லாயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வேதங்களாலும், நமது

பண்பாட்டாலும் பழக்க வழக்கங்களாலும் நடை உடை பாவனைகளாலும், வாழ்க்கை வழி முறைகளாலும், நெறி முறைகளாலும் ஒழுக்க முறைகளாலும், நமது ஆன்மீக நெறிகளாலும் தெய்வ வழிபாடுகளாலும் தத்துவ ஞான சிந்தனைகளாலும் இணைக்கப் பட்ட கலாச்சார தேசியமே பாரத தேசியமாகும். இதை அன்னியர்களும் அன்னிய சிந்தனையாளர்களும் புரிந்து கொள்வது சற்றுக் கடினம். பாரத தேசியம் தனித் தன்மைக் கொண்டது,. பல நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான மகான்களால், ரிஷிகளால், முனிவர்களால், மகரிஷிகளால், கவிஞர்களால், பண்டிதர்களால், மகா பண்டிதர்களால் செங்கோல் மன்னர்களால், ராஜ ரிஷிகளால், வீர தீரர்களால், பூரண ஞானம் பெற்றிருந்த பெரும் மகான்களால், தத்துவ ஞானிகளால் தெய்வீக அருள் பெற்ற மாமனிதர்களால் உருவாக்கப் பட்ட தேசமும், தேசியமும் தேச பக்தியுமாகும். இது புண்ணிய பூமி என்று போற்றப் படும் ஒரு மகத்தான பூமியாகும்.

இந்தப் புண்ணிய பாரத பூமியைப் பற்றி எங்கள் நாடு என்னும் தலைப்பில் பூபாளராகத்தில் பாரதி ஒரு அருமையான பாடலைப் பாடியுள்ளார். அந்த அற்புதமான பாடல் வருமாறு:–

“மன்னும் இமய மலையெங்கள் மலையே
மாநில மீது அதுபோல் பிரிதில்லையே
இன்னறு நீர்க்கங்கையாறெங்கள் ஆறே
இங்கிதன் மாண் பிற்கெதிரெது வேறே
பன்னிரும் உபநிடத நூலெங்கள் நூலே
பார்மிசையேதொரு நூலிது போலே
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவம் இஃதை யெமக்கிலையீடே

மாரதர் வீரர் மலிந்த நன்னாடு
மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு,
நாரத கானம் நலம் திகழ்நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம் பெரும் நாடே
பாடுவம் இஃதையெமிக்கிலை யீடே

என்று பாரதி பாடுகிறார்.

பாரதி தனது உரைநடையில் புனர்ஜன்மம்1 என்னும் கட்டுரையில் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

"ஹிந்து ஸ்தானம் என்பது ஹிந்துக்களின் ஸ்தானம். இது நமது தேசத்திற்கும், தேசத்திலுள்ள ஜனக் கூட்டத்திற்கும் பெயர். இந்த ஜனக் கூட்டத்திற்கு "பாரத ஜாதி" என்றும் பெயர் சொல்லுவதுண்டு.

பாரதம் பரதன் நிலை நாட்டியது. இந்த பரதன் துஷ்யந்த ராஜாவின் மகன். இமய மலை முதல் கன்னியாகுமரி முனை வரையிலுமுள்ள நமது நாட்டை இவன் ஒன்று சேர்த்து அதன் மிசை முதலாவது சக்ராதிபத்யம் ஏற்படுத்திய படியால் இந்த நாட்டிற்கு "பாரத தேசம்" என்று பெயர் உண்டாயிற்று. கங்கையிலே வந்து சேரும் வாய்க்கால்கள் எல்லாம் கங்கையாகவே மாறி விடும். பாரத தேசத்தில் வந்து குடியேறி தலை முறை தலைமுறையாக இங்கு வாழ்பவர்களெல்லாம் நமது ஜனக் கூட்டத்தைச் சேர்ந்தவராகின்றன.

கிறிஸ்தவர்களாயினும், பார்சிகளாயினும் மகமதியராயினும், எங்கிருந்து வந்து எந்த இஷ்ட தெய்வத்தைக் கொண்டாடிய போதிலும் பாரத பூமியிலே பிறந்து வளர்ந்து அதையே சரணாகக் கொண்ட மனிதர்களையெல்லாம் பாரத ஜாதியிலேயே சேர்த்துக் கணக்கிட வேண்டும். இது ஒரே ஜாதி, பிரிக்க முடியாதது. அழிவில்லாதது. இதற்கு ஆதாரமும் மூல பலமுமாவது யாதெனில் அதுவே ஆரிய சம்பத்து. அதாவது அதுவே ஆரியரின் அறிவும் அந்த அறிவின் பலன்களுமாகும்.

✡ ✡ ✡

8. ஆரிய ஸம்பத்து:

ஸம்பத்து என்பது ஸமஸ்கிருதச் சொல். இதன் பொருள் செல்வம். ஆனால் இங்கே செல்வம் என்பது திரவியத்தையும் பூஸ்திதியையும் ஆடுமாடுகளையும் மாத்திரமன்று. 1) அறிவுச் செல்வம், 2) ஒழுக்கச் செல்வம். 3) பொருட் செல்வம் ஆகிய மூன்றையும் குறிப்பிடும், "ஆரிய சம்பத்து" என்பது ஹிந்துக் –களுடைய அறிவு வளர்ச்சி பற்றியதாகும்.

"நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது ஸங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள், இவை அனைத்திற்கும் பொதுப் பெயர் "ஆர்ய ஸம்பத்து" காளிதாஸன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளஸீதாசர் செய்திருக்கும் ராமாயணம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி இவையனைத்திற்கும் பொதுப் பெயர் "ஆர்ய ஸம்பத்து."

தஞ்சாவூர்க் கோவில், திருமலை நாயக்கர் மஹால், தியாகய்யர் கீர்த்தனங்கள், எல்லோராவில் உள்ள குகைக்கோவில், ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால், சரப சாஸ்திரியின் புல்லாங்குழல் – இவையனைத்திற்கும் பொதுப் பெயர் – ஆர்ய சம்பத்து. எனவே ஆர்ய ஸம்பத்தாவது ஹிந்து ஸ்தானத்தின் நாகரிகம். இந்த ஸம்பத்தைப் பாதுகாக்கும் வரையில் இந்த ஜாதிக்கு உயிருண்டு. இந்த ஸம்பத்திலே துருப்பிடிக்க இடம் கொடுத்தால் இந்த ஜாதியை செல் அரித்து விடும்.

இந்த ஆரிய சம்பத்தை உலகம் உள்ள வரை ஸம்ரக்ஷணம் செய்து மேன்மேலும், ஒளியும், சிறப்பும் உண்டாகும் படி செய்யும் கடமை தேவர்களால் பாரத ஜாதிக்கு ஏற்படுத்தப் பட்ட கடமையாகும்" என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

அவர் மேலும் கூறுகிறார் "இந்த ஆர்ய சம்பத்தை நாம் பல நூற்றாண்டுகளாக ஆதரித்துக் கொண்டு வந்தோம். சென்ற சில நூற்றாண்டுகளாக இதில் துருப்பிடிக்க இடம் கொடுத்து விட்டோம். தேவர்கள் நமக்குக் கொடுத்த கடமையைக் கர்வத்தாலும் சோம்பராலும், சிறுமையாலும், உல்லங்கனம் செய்யத் தொடங்கினோம். தேவர்கள், இந்த பாரத ஜாதியைக் கொஞ்சம் செல்லரிக்கக் கடவது என்று ஆசீர்வாதம் செய்தார்கள்" என்று பாரதி விசனப்பபட்டுக் குறிப்பிடுகிறார்.

நாம் நல்ல நிலைமையில் இருந்தோம். நமது நாடு நல்ல நிலைமையில் இருந்தது. இடைக்காலத்தில் சிலகுறைகளும் சேதங்களும் ஏற்பட்டு பாதிக்கப்பட்டோம். மீண்டும் நமது கடுமையான முயற்சியால் நமது நாடும் மக்களும் க்ஷேமம் பெற வேண்டும் என்று பாரதி வேறு பல இடங்களிலும் குறிப்பிடுகிறார். அவர் நமது கவிதையில்,

"முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியும்,"

என்று குறிப்பிடுகிறார்.

இன்னும் லோக குரு என்னும் கட்டுரையில் "சாஸ்திரம் பெரிது, சாஸ்திரம் வலியது. அஷ்ட மகாசித்திகளும் சாஸ்திரத்தினால் ஒருவேளை மனிதனுக்கு வசப்படலாம். பூர்வ காலத்தில் பல வகைக் கணித சாஸ்திரங்களும் இயற்கை நூல்களும், பாரத நாட்டிலேதான் பிறந்து பின்பு உலகத்தில் பரவியிருப்பதாகச் சரித்திர ஆராய்ச்சியிலே தெரிகிறது. இப்போது "சயின்ஸ்" பயிற்சியில் இவ்வளவு தீவிரமாக மேன்மை பெற்று வருகிறோம். காலக்கிரமத்தில் தலைமை பெறுவோம்" என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

எனவே இடைக்காலத்தில் பாரத ஜாதிக்கு ஏற்பட்டுள்ள கேடுகளைப் போக்கி, இந்த நாடு அனைத்துத் துறைகளிலும் விடுதலை பெற்று மேன்மையுற வேண்டும் என்பது பாரதியின் கொள்கையாகும். அதைப் பாரதி, பாரத நாட்டிற்கு ஏற்பட்டுள்ள மறு பிறப்பு என்று கூறுகிறார். "இடைக் காலத்தே நமக்குச் சேர்ந்த கேட்டிற்கு, சங்கீதத்தையும் கவிதையையும் திருஷ்டாந்தமாகக் காட்டினோம். ஆனால் இந்தக் கேடு அவை இரண்டையும் மாத்திரமே தொட்டு நிற்கவில்லை. நமது சித்திரத் தொழில், நமது சிற்பம், நமது ஜனக் கட்டு, ஜன நீதி, நமது சாஸ்திரம், தலைகால் எல்லாவற்றிலும் இந்தக் கேடு பாய்ந்து விட்டது. நோய் முற்றிப் போயிருந்தது. நல்ல வேளையில் பராசக்தி நமக்குள் உயர்ந்த வைத்தியர் பலரை அனுப்பினாள். அவளுக்கு நம் மீது கிருபை வந்து விட்டது. எனவே பிழைத்தோம். ஆனாலும் இம்முறை பிழைத்தது புனர்ஜென்மம். இந்தப் புனர் ஜென்மத்தின் குறிகளை எல்லாவற்றிலும் காண்கிறோம். பாரத ஜாதி புதிதாய் விட்டது. தற்காலத்திலே பூமண்டலத்து மகாகவிகளிலே நமது ரவீந்திரநாதர் ஒருவர் என்று உலகம் ஒப்புக் கொள்கிறது. இதுவரை ஐரோப்பிய பண்டிதர்கள், இயற்கை, நூல், (பிரகிருதி சாஸ்திரம்) தமது விசேஷ உரிமையென்று கருதி வந்தார்கள். இப்போது நமது ஜகதீஷ் சந்திரவஸு அந்த வழியில் நிகரற்ற திறமை பெற்றவர் என்பதை மேல் நாட்டு வித்துவான்களில் ஒப்புக் கொள்ளாதார் யாருமில்லை. தமிழ் நாட்டிலே புதிய கவிதையும், சாஸ்திர ஒளியும் விரைவிலே தோன்றும். உலகம் பார்த்து வியப்படையும்.

"செத்துப் பிழைத்தோம். ஆனால் உறுதியாக நல்ல வயிரம் போல பிழைத்து விட்டோம். புதிய ஜன்மம் நமக்கு மிகவும் அழகான ஜென்மமாகும் படி தேவர்கள் அருள் புரிந்திருக்கிறார்கள். அதன் பொருட்டு அவர்களை இடை விடாமல் வாழ்த்துகிறோம்" என்று மகாகவி குறிப்பிடுகிறார்.

நமது நாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்தது. அந்த அடிமைத்தனம் நம்மை சகல துறைகளிலும் சூழ்ந்திருந்தது. அந்த இருள் விலகி வருகிறது.

"பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
புன்மையிருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற்கிங்குன்
தொண்டர் பல்லாயிரம் சூழ்ந்து நிற்கின்றோம்"

என்று பாரதி பாடுகிறார்.

எண்ணற்ற தேச பக்தர்கள், சிறந்த அரசியல் தலைவர்கள், தியாகத்தழும்பேரிய தொண்டர் பல்லாயிரம், ஆசிரியர்கள், படிப்பாளிகள், வக்கீல்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், டாக்டர்கள் பலரும் தோன்றி நாட்டுக்கு நல்வழி காட்டிக் கொண்டிருக்கிறார்கள். விரைவில் நாடு விடுதலை பெறும். அப்போது ஆனந்தக் கூத்தாடி பள்ளு பாடுவோம்" என்று பாரதி சிந்தித்தார்.

விடுதலை கிடைக்குமுன்பே சுதந்திரம் கிடைத்து விட்டது என்று,

"ஆடுவோமே, பள்ளு பாடுவோமே,
ஆனந்த சுதந்திரம் அடைந்து
விட்டோமென்று
ஆடுவோமே பள்ளு பாடுவோமே"

என்று பாடியவர் பாரதி.

✡ ✡ ✡

9. வறுமையின் காரணமும் விளைவும் தீர்வும் வழியும்

வறுமை காரணமாக சமுதாயத்தில் சில முரண்பாடுகளும் சண்டைகளும் ஏற்படுகின்றன. இதற்குத் தீர்வு காண்பதற்கு பாரதம் அன்பு வழியைக் காட்டியிருக்கிறது. இ,தைப் பாரதி மிகவும் தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

மேலை நாடுகளில் சில தத்துவங்களும் செயல்முறைகளும் உள்நாட்டுச் சண்டைகளுக்கும் உலகப் போர்களுக்கும் காரணமாகின்றன. இந்தச் சண்டைகளைத் தவிர்த்து உலகம் அமைதியாக வாழ பாரதம் அன்பு வழியைக் காட்டியிருக்கிறது. அரசியலிலும் அன்பு வழியே சிறந்தது என்பது பாரதியின் வாசகமாகும்.

ஒருவருக்கொருவர் பயப்படல் இல்லை. மானிடரே, இந்த வாதம் எடுத்துக் கொள்ளுங்கள். இது பிழைக்கும் வழி. தெருவில் நடக்கும் போதே முன் பின் தெரியாத மனிதர் கூட ஒருவருக்கொருவர் கோபம் அல்லது அவமதிப்பு அல்லது பயத்தோடு பார்த்துக் கொள்கிறார்கள். மனிதனுக்கு மனிதன் இயற்கையில் விரோதம் என்ற நிலையில் உங்களுடைய மூடத்தனமான மனுஷ்ய நாகரிகம் வந்து சேர்ந்திருக்கிறது. இதை மாற்றி அன்பை மூலாதாரமாக்க வேண்டும்" என்று பாரதி கூறுகிறார்.

"முதலாவது சிலருக்குச் சோறு மிதமிஞ்சி இருக்க, பலர்தின்னச் சோறில்லாமல் மடியும் கொடுமையைத் தீர்த்து விட வேண்டும். ,இது இலக்கம் ஒன்று. பூமியின் மீதுள்ள நன்செய், புன்செய் தோப்பு, துரவு, சுரங்கம் நதி, அருவி, குப்பை, செத்தை, தரை – கடவுளுடைய சொத்தில் நாம் வேலி கட்டக் கூடிய பாகத்தை யெல்லாம் சிலர் தங்களுக்குச் சொந்தமென்று வேலி கட்டிக்

கொண்டனர். பலருக்கு ஆகாசமே உடைமை. வாயுவே ஆகாரம். இதற்கு மருந்து என்னவென்றால் எல்லோரும் சமானம். அண்ணன் தம்பி போல, என்ற புத்தி உண்டாகி, ஏழைகள் வயிறு பசிக்காமல் செல்வர்கள் காப்பாற்ற வேண்டும்" என்று பாரதி கூறுகிறார்.

"அது முடியாவிட்டால் ஐரோப்பாவில் 'சோஷலிஸ்ட்' கட்சியார் சொல்வதைப் போல நிலத்தைச் சகலருக்கும் பொதுவென்று ராஜ்ய விதி ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்" என்று அவர் குறிப்பிடுகிறார்.

இங்கு ஒரு விஷயம் கருத்துப் பரிமாற்றத்திற்கு இடமளித்திருக்கிறது. பாரத நாட்டில் முற்காலத்தில் நிலத்திற்குப் பட்டா போட்டு தனிச் சொத்துடமையாக வேலி போட்டுக் கொள்ளும் பழக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. கோவில்களுக்கும், சில தர்மங்களுக்கும் பட்டயம் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் தான், ஐரோப்பியர் பழக்கத்தில் நிலத்திற்கு பட்டா போட்டு ரயத்து வாரிமுறை கொண்டு வரப்பட்டு நிலம் என்பது ஒரு சொத்தாகி, விற்பனைப் பொருளாகி ஒரு சிலர் கையில் நில உடமைக்குவியல் வந்தது. ஜமீன்தார் முறையிலும் ஜமீன் பட்டாக்கள் போடப்பட்டன. ஆனால் இன்று நாடு முழுவதிலும் நிலவுடமை நிலப் பட்டா பழக்கத்திற்கு வந்து விட்டது. இன்றைய நிலையில் நாட்டில் உள்ள பெரும் பகுதி விளைநிலம். குறு, சிறு, நடுத்தர விவசாயிகளின் கையில் இருக்கிறது. புள்ளி விவரக் கணக்கின் படி சுமார் பதினைந்து சதவீத நிலம் வசதியான விவசாயிகளின் கையில் இருக்கலாம், பெரும்பாலான மாநிலங்களில் நில உச்ச வரம்புச் சட்டங்கள் வந்துள்ளன.

பசி, பட்டினி, வறுமை என்பது எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் இருந்து வந்திருக்கிறது. அதைச் சமாளிப்பதற்கு பல நாடுகளிலும் பல முயற்சிகள் நடந்திருக்கின்றன.

பாரதத்தில் பண்டய காலத்தில் அநேகமாக, ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படும் வரையில், சாகுபடித் தொழில் மிகவும் சிறப்பாக சமுதாய முயற்சியில் ஒரு ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் நடைபெற்று வந்திருக்கிறது. பலவகை தான்யங்கள் மட்டுமல்லாது, பருத்தி, சணல், அவுரி, கரும்பு, எண்ணை வித்துக்கள், பயறு வகைகள் முதலிய பலவகைப் பொருள்களும் உற்பத்தி செய்யப்பட்டு வந்திருக்கின்றன. பாரத நாட்டில் சாகுபடித் தொழிலில் நிலத்திற்கு அடுத்த படியாக நீர்ப்பாசன முறை முக்கிய இடம் பெறுகிறது. நீர்ப்பாசன முறைகள் பெரும்பாலும் சமுதாயப் பொறுப்பில் பராமரிக்கப் பட்டு வந்துள்ளன. சமுதாயக் காடுகளும் மேய்ச்சல் நிலங்களும் கூட சமுதாயப் பொறுப்பில் இருந்து வந்துள்ளன. கால் நடை வளம் மிகவும் சிறப்பாக இருந்து வந்திருக்கிறது.

சாகுபடி முடித்து தான்யங்கள் களத்தில் குவிக்கப் பட்டபோது அவை பங்கு பிரிக்கப் பட்டு வினியோகமாகியிருக்கிறது. முதல் பங்கு நிலத்தில் வேலை செய்தவர்களுக்கு, அடுத்தது ராஜபாகம், இந்த இராஜ பாகம் தான் அரசாங்கத்திற்கு வரி, இந்த ராஜபாகம், பெரும்பாலும் ஆறில் ஒரு பாகம், சில நல்ல செங்கோல் அரசர்கள் பத்தில் ஒரு பாகம் வாங்கியிருக்கிறார்கள். போர் காலங்களில் அரசுக்குச் செலவுகள் அதிகமாகும் போது மூன்றில் ஒரு பாகம் வசூலித்ததாகவும், மொகலாயர் ஆட்சி காலத்தில் இரண்டில் ஒரு பாகம் வசூலித்ததாக வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. இராஜ பாகத்திற்கு அடுத்து கோவில் பாகம், சமுதாய ஊழியர் பாகம், காவல் பாகம் இவ்வாறு பங்கு பிரிக்கப் பட்டு பின்னர், காக்கை குருவிகள் முதலிய பறவைகள், எலி, எறும்பு, முதலிய ஜந்துக்களுக்கும் போக மீதம் சாகுபடியாளர்கள் எடுத்துக் கொண்டனர். அத்துடன் உபரியாக உள்ள தானியங்கள், ஊர்ப் பொதுக் களஞ்சியங்கள், கோவில் களஞ்சியம், அரண்மனைக் களஞ்சியங்கள் ஆகியவற்றில் சேமிக்கப்பட்டு, பருவ மழை தவறி

பஞ்சமும் வறட்சியும் ஏற்பட்ட காலங்களில் வினியோக செய்யப் பட்டிருக்கிறது.

அதுபோக அன்னதானங்கள், சத்திரம் சாவடிகளில் வழிப் போக்கர்களுக்கு, வறுமைப்பட்டவர்களுக்கு, வழிப் பயணம் செய்பவர்களுக்கு தேச யாத்திரை, கோயில் யாத்திரை செல்பவர்களுக்கும் அன்னதானம் செய்யப் பட்டிருக்கிறது. கோவில்களில் பக்தர்களுக்கும் வெளியூர் பக்தர்களுக்கும் சோறு போடப்பட்டிருக்கிறது. இப்போதும் கூட சில கோவில்களில் கோயிலுக்கு வரும் அனைவருக்கும் சாப்பாடு போடப்படுகிறது,. அதுபோக கோவில் திருவிழாக்கள், குடும்பங்களில் நல்லது கெட்டது நடக்கும் விசேஷ காலங்களில் ஊர் ஜனங்கள் அனைவருக்கும் அல்லது உறவினர்கள் மற்றும் உறவின் முறையினர் அனைவருக்கும் சாப்பாடு போடுவது என்பது, விருந்தளிப்பது என்பது இந்த நாட்டின் கலாச்சாரமாகும். காக்காய்க்குச் சோறு வைத்து விட்டு சாப்பிடுவது என்பது இந்த நாட்டின் பழக்கமாகும்.

ஐரோப்பிய நாடுகளில் இவ்வாறான அன்னதானக் கலாச்சாரம் கிடையாது. அங்கு நிலப் பிரபுத்வ மன்னராட்சி காலத்தில் நிலமெல்லாம் அரச குடும்பத்தினருக்கும், பிரபுக்களுக்கும், கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும், மடாலயங்களுக்கும் சொந்தமாக இருந்தது. அரச குடும்பத்தினர், பிரபுக்கள், தேவாலய மடாலய அதிபர்கள் கைகளில் அனைத்து அதிகாரங்களும் கல்வி நிறுவனங்களும் ஆட்சி நிறுவனங்களும் இருந்தன. இவையெல்லாம் சேர்ந்து மிகப் பெரும்பாலும் எதேச்சதிகாரக் கொடுங்கோன்மை மிக்க கூட்டாட்சிகளாகவே இருந்தன. அப்போது வறுமையால் பசி பட்டினியால் மக்கள் மாண்ட போது கேள்வி கேட்பாரில்லை.

பின்னர், இத்தகைய நிலப்பிரபுத்வக் கொடுங்கோன்மைக்கு எதிராகக் கிளர்ச்சிகள் நடந்த போது நிலமெல்லாம் சகலருக்கும்

பொதுவென்று ராஜ்ய விதி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று குரல் எழுந்தது. உழுபவனுக்கே நிலம் என்னும் கோரிக்கையும் அங்கிருந்து எழுந்ததுதான். அது அந்த நாடுகளின் சோஷலிஸ்டு கட்சியாரின் குரலாக இருந்தது.

ஐரோப்பிய நாடுகளில் நிலப் பிரபுத்வ முறையும் ஆட்சியும் ஒழிக்கப் பட்ட போது நிலப்புரபுக்கள் கையிலிருந்த நிலமெல்லாம் கை மாறி நிதி மிகுந்தவர்களின் தனிச் சொத்துடமையாக விற்பனைப் பொருளாக மாறி விட்டது. சாகுபடி செய்பவர்களின் கைக்கு வரவில்லை. பெரிய முதலாளித்வப் பண்ணைகளாக மாறி விட்டன. சாகுபடி செய்பவர்களின் கைக்கு நிலம் வரவில்லை. அவர்கள் எல்லாம் விவசாயக் கூலித் தொழிலாளர்களாக ஆகி விட்டார்கள். எந்த ஐரோப்பிய நாட்டிலும் நிலம் அனைவருக்கும் பொதுவானதாக சமுதாயச் சொத்தாக ஆக்கப்படவில்லை.

ரஷ்யாவில் 1917–ம் ஆண்டு அக்டோபர் மாதம் சோஷலிஸ்ட் புரட்சி என்னும் பெயரில் பெரும் புரட்சி ஏற்பட்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காலத்திலும் நிலப் பிரப்புக்களின் கையிலிருந்த நிலமெல்லாம் அரசுக்குச் சொந்தமாக்கப் பட்டு அந்த நிலமெல்லாம் சாகுபடியாளர்களுக்கு வினியோகம் செய்யப் பட்டு பின்னர் அவைகள் கூட்டுப் பண்ணைகளாக சேர்க்கப் பட்டன. அவ்வாறு கூட்டுப் பண்ணைகளாக மாற்றப் பட்டபோது, அக்கூட்டுப் பண்ணைகளுக்குத் தங்கள் நிலத்தைக் கொடுக்க மறுத்த விவசாயிகள் (நிலவுடைமையாளர்கள்) குலாக்குகள் என்னும் பெயரில் பலர் படுகொலை செய்யப் பட்ட வரலாறு உண்டு. பின்னர், அண்மைக் காலத்தில் ரஷ்யாவில் செயல் பாட்டில் இருந்த சோஷலிஸ்டு அமைப்பு நடைமுறையில் நீடிக்க முடியாமல் சிதைந்து விட்டது என்பதை அனைவரும் அறிவர்.

இந்திய நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் ஐரோப்பிய முறையிலான நிலவுடமை முறை செயல் படுத்தப் பட்டு, ரயத்துவாரி முறை, ஜமீன்தார் முறை என்று உருவாக்கப் பட்டது. அதன் படி நிலவுடமைப் பட்டாப் போடப் பட்டு, விற்று வாங்கப் படும் பண்டமாக்கப் பட்டது. இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் நிலச் சீர்திருத்தம் என்னும் பெயரில் ஜமீன்தார் முறை ஒழிக்கப் பட்டு நிலம் தனிவுடமையாக்கப் பட்டது. நாடு முழுவதிலும் ரயத்து வாரி முறை கொண்டு வரப்பட்டது. இதில் நிலக் குவியல் தடுக்கப் பட வேண்டும் என்று நில உச்ச வரம்புச் சட்டங்கள் பல மாநிலங்களிலும் கொண்டு வரப்பட்டு மிச்ச நிலம் வினியோகம் செய்யப் பட்டது. ஆனாலும் துண்டு துக்காணியான நிலத்தைப் பல குறுநில, சிறுநில நிலவுடமையாளர்கள் தாங்கள் சொந்த சாகுபடி செய்ய முடியாமலும், சாகுபடித் தொழில் கட்டுபடியாகாமலும் தங்கள் நிலங்களை மற்றவர்களுக்கு விற்பனை செய்து விட்டுத் தாங்கள் கூலி விவசாயிகளாக மாறியுள்ளனர். அல்லது வேறு தொழில்களுக்கு மாறியுள்ளனர், அல்லது குடி பெயர்ந்துள்ளனர்.

இத்தகைய விவரங்கள் பாரதியார் காலத்தில் முழுமையாகக் கிடைத்திருக்கவில்லை. அவர் காலத்தில் இருந்த நிலைமைகளில் பாரதியார் இந்தப் பிரச்னைகள் பற்றி மனிதாபிமான முறையிலேயே தனது கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார். மறுபக்கம் ஜமீன்தார்களின் ஆடம்பரங்களையும் வீண் செலவுகளையும் விமர்சனம் செய்துள்ளார்.

பாரதி ஜன வகுப்பு என்னும் கட்டுரையில் மேலும் கூறுகிறார்.

"மனிதர் அனைவருக்கும் போதுமான ஆகாரம் பூமிதேவி கொடுக்கும். பூமிதேவியின் பயனை நேரே, கையாளத் தெரியாமல் பொறாமையாலும் அறியாமையாலும், தாறுமாறாக விழல் படுத்தி, சேறு தேடுமிடத்தில் சோறு தேடாமல் பலர் ஒருவர்கொருவர் கொல்ல

வழி தேடி, பலர் வயிறு வாடச் சிலர் வயிறு ஜீர்ண சக்தியில்லாமல் போக மனிதர் பரிதாபகரமாகக் காக்கையினும் கடைப்பட்ட வாழ்வு வாழ்ந்து வீணே நசித்துப் போகிறோம். ஏழைகள் வருந்தினால் நமக்கென்ன என்று நினைப்பவர் பரம மூடர். பலர் சௌகர்யப்படும் வரை, சிலர் சௌகர்யம் அடைதல் இந்த உலகத்தில் சாத்திய மில்லை. பொருளாளி நல்ல உடுப்புகள் அணிந்து கொண்டு தெருவில் உலாவப் போவதையும், அவனுடைய கன்னத்தில் சதை உப்பியிருப்பதையும் அவனுடைய ஏவலாட்களின் தொகையும் சிறுமையும் மேற்படி பொருளாளி பிறரை அவமரியாதை செய்வதையும் கண்டு மயங்கிப் போய் அவர் பரமானந்த நிலையில் இருப்பதாக ஏழை நினைக்கிறான். அது தவறு. அவன் மனத்தில் ஒளிந்து கிடந்து அவன் உயிருக்கு நரக வேதனை செய்யும் துயரங்களை ஏழை அரிய மாட்டான். ஒரு வகுப்பின் மனம், மற்றொரு வகுப்புக்குத் தெரியாமலும் ஒருவனுடைய மனுஷ்ய நாகரிகம் அவ்வளவு மூடத்தனமான நிலைக்கு வந்து சேர்ந்திருக்கிறது" என்று பாரதி குறிப்பிடுகிறார்.

இங்கு வறுமையும் ஏற்ற தாழ்வும் சமுதாயத்தில் நீடித்திருக்கக் கூடாது என்பது பாரதியின் கருத்தாகும். அத்துடன் மனிதர் அத்தனை பேருக்கும் போதுமான ஆகாரத்தை பூமிதேவி கொடுக்கும். அதற்கேற்றவாறு முறைப்படுத்தி சாகுபடி முறையைக் கொண்டு வந்து செயல் படுத்த வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும். அத்துடன் மனிதர் அத்தனை பேருக்கும் போதுமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல் யாரும் பட்டினி கிடக்காமல் அனைவருக்கும் உணவு கிடைக்க ஏற்பாடுகளும் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் தீமைகள் பெருகும். போட்டியும் பொறாமையும் மோதலும் உண்டாகும் என்று பாரதி கருதுகிறார்.

எனவே இன்றைய நிலைமையில் அனைவருக்கும் உணவு கிடைக்கும் வகையில் தொடர்ச்சியாக உணவு உற்பத்தி பெருகும் வகையில் சாகுபடித் தொழில் வளர்ச்சியடையவும் மேம் படவும் ஒரு சரியான சாகுபடிக் கொள்கையும் அரசின்பால் உருவாக்கப் பட்டு, நிலம் நீர்ப்பாசனம், நல்ல விவசாயக் கருவிகள், நல்ல விதை, இயற்கை உரம், கால் நடைகளும், பண்ணைகளும், பயிர் பாதுகாப்பு, விவசாயத் துறையின் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் மேம் படுத்தல், உணவுப் பொருளைப் பாதுகாத்தல், சேமித்தல், சீராகக் கொள்முதல் செய்தல், முறைப் படுத்தப் பட்ட சீரான வினியோகம், ஆகியவற்றில் அக்கொள்கைகளை சரியாகச் செயல் படுத்த வேண்டும். அதுவே பாரதியின் சிந்தனைக்குச் செயல் வடிவம் கொடுக்கும் வழியாகும்.

இன்னும் வறுமையின் கொடுமைகள், அதன் விளைவுகள், ஆகியவற்றையும், அதற்கான தீர்வுகளைப் பற்றியும் பாரதி தனது கட்டுரையில் எடுத்துக் கூறுகிறார், கேளுங்கள். அதற்கு அன்பே வழியாகும்.

"ஏழையின் அழுக்குத் துணியையும் அழுக்குடம்பையும் சிரைக்காத முகத்தையும் பார்த்து பொருளாளியின் குழந்தைகள் மேற்படி ஏழை தனது மனுஷ்ய பதவிக்குத் தாழ்ந்த பன்றி, நாய், மாடு வகுப்பைச் சேர்ந்தவன் என்று நினைக்கிறார்கள். ஐரோப்பாவில் ஏழைக்கும் பொருளாளிக்கும் விரோதம் முற்றிப்போய் உள்நாட்டுச் சண்டைகள் நேரிட்டும், அப்படி நேரிடாதபடி தடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஜனங்களை ஒன்று சேர்க்கும் பொருட்டாக வெளி நாடுகளின் மீது சில ராஜாக்கள் போர் தொடங்கக் கண்டங்களில் போர் பரவியும், பூமண்டலம் தூள் தூளாகிறது. கிழக்கு தேசங்களிலும் யுத்தமில்லாமல் சமாதானத்துடன் இருக்குமிடங்களிலும், திருஷ்டாந்தமாக நமது தமிழ் நாட்டுப் பறையர் கூட ... கண்

விழித்துத் தாங்கள் மனிதர் என்பதைத் தெரிந்து கொண்டு மற்ற ஜாதி யாருக்குத் தாங்கள் சமானமென்றுச் சபை கூட்டித் தீர்மானம் செய்கிறார்கள். மந்திரி மாண்டேகுவிடம் முறையிட்டார்கள். கிழக்கு தேசங்களில் சமாதான எல்லைகளிலே கூட ஏழைகள் கண் திறந்து பொருளாளிகளை எதிர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

"சுருங்கக் கூறுமிடத்து சோற்றுக்காக மனிதர் ஒருவர்க்கொருவர் செய்து கொள்ளும் அநியாயம் நாய்களும் பன்றிகளும் தமது ஜாதிக்குள்ளே செய்யும் வழக்கமில்லை என்பது உலகப் பிரச்சித்தமான விஷயம்" என்று பாரதி கூறுகிறார்.

✡ ✡ ✡

10.அன்பு வழி:

இங்கு பாரதியார், மேல்ல நாடுகளிலும், கீழை நாடுகளிலும் உள்ள ஒரு உண்மை நிலையை எடுத்துக் கூறுகிறார். "ஐரோப்பாவில் ஏழைக்கும் பொருளாளிக்கும் விரோதம் முற்றிப் போய் உள் நாட்டுச் சண்டைகள் நேரிடுகின்றன" என்று கூறுகிறார்.

பிரிட்டனில் சார்ட்டிஸ்ட் இயக்கம் என்னும் பெயரில் பெரும் கூட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் பாராளுமன்ற முற்றுகைகளும் நடை பெற்றன. ஆவேசம் கொண்ட பல்லாயிரக்கணக்கான எழை மக்கள், தங்கள் கோரிக்கைகளைப் பட்டியலாகத் தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துக் கிளர்ச்சிகள் நடத்தினர். பிரான்ஸில் பாரிஸ் கம்யூன் என்னும் பெயரில் 1871–ம் ஆண்டில் பெரும் ஆயுதம் தாங்கிய கலவரம் நடைபெற்றது. அப்போது பாரிஸ் நகரத் தொழிலாளர்கள் ஒன்று திரண்டு பாரிஸ் நகரத்தைக் கைப்பற்றித் தொழிலாளர் ஆட்சியை அமைத்தார்கள். இதனால் அந்நாட்டில் பெரும் குழப்பமும் உள்நாட்டுக் கலவரமும் ஏற்பட்டுப் பல்லாயிரக் கணக்கானவர்கள் பலியானார்கள். எஞ்சியவர்கள் பலரும் பல நாடுகளுக்கும் தப்பி ஓடி அவதிப் பட்டார்கள். ஜெர்மனியில் நிலப் பிரபுக்களுக்கெதிரான பெரிய கலவரங்கள் ஏற்பட்டன. இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளில் நிலப் பிரபுக்களுடைய கொடுங்கோல் ஆட்சிக்கு எதிராகப் பெரும் ஆயுதம் தாங்கிய உள்நாட்டுக் கலவரங்கள் ஏற்பட்டுப் பல ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். மள்னர்களும் நிலப்பிரபுக்களில் பலரும் கொல்லப் பட்டார்கள்.

இந்தப் போராட்டங்களைப் பற்றியெல்லாம் ஐரோப்பிய அறிஞர்கள், எழுத்தாளர்கள் எல்லாம் வர்க்கங்கள் என்றும், வர்க்க முரண்பாடுகள் என்றும் வர்க்கப் போராட்டங்கள் என்றும் விவரித்து

எழுதினார்கள். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம், சோஷலிஸம், கம்யூனிஸம் என்றெல்லாம் பல கருத்துக்கள் எழுந்தன. வறுமைக்கு எதிராக ஏழை எளிய மக்களின் கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் வர்க்கப் போராட்டங்கள் என்று வகுத்துக் கூறினார்கள். அந்த உள் நாட்டுச் சண்டைகளைத் தவிர்க்கவும், திசை திருப்பவும் ஐரோப்பிய ஆட்சியாளர்கள் அடுத்த நாடுகளின் மீது போர் தொடுத்து, காலனிகளுக்கான போர்களையும் தொடுத்து அவை பன்னாட்டுச் சண்டைகளாகவும் உலகச் சண்டையாகவும் விரிவு பட்டு பல லட்சக்கணக்கான மக்கள் பலியானார்கள். சிலுவை யுத்தங்கள் என்றும், நூறாண்டு யுத்தங்கள் என்றும் ஐரோப்பாவில் நடைபெற்று ஏராளமாக உயிர்ச் சேதங்களும், பொருட் சேதங்களும் ஏற்பட்டன.

ஆனால் நமது நாட்டில் ஆங்கிலேயர்களின் ஆக்கிரமிப்புப் போர்கள் நடந்து முடிந்து அவர்களுடைய ஆட்சி ஏற்பட்ட பின்னர், அரசியலில் தாற்காலிகமாக சற்று அமைதி இருந்தது. ஆயினும் அன்னிய ஆட்சியின் கொள்ளையாலும், ஆக்கிரமிப்பாலும், கொடுங்கோல் ஆட்சி நிர்வாகத்தாலும், வியாபாரக் கொள்ளையாலும், வரிக்கொடுமை, வட்டிக் கொடுமை, விலை வாசிக் கொடுமையாலும், தொழில் நாசத்தாலும், கால்நடை நாசத்தாலும் வறுமை அதிகமாகி பல லட்சக்கணக்கான மக்கள் பஞ்சத்தால் பசி பட்டினியால் மடிந்தார்கள். இந்தப் பஞ்சத்தால் அதிகமான அளவில் கிராமப் புறத் தொழிலாளர்களும் ஏழை எளிய மக்களும் பாதிக்கப் பட்டார்கள். அதிலும் சாதிய முறையில் பார்த்தால் தாழ்த்தப் பட்ட மக்களும் பிற்படுத்தப் பட்ட மக்களும் மிகவும் அதிகமாக பாதிக்கப் பட்டு வறுமையால் பெரும் பெரும் துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் பசி பட்டினிக்கும் ஆளானார்கள்.

அது பற்றி பாரதியார் குறிப்பிடும் போது, "கிழக்கு

தேசங்களில் சமாதான எல்லைகளிலே கூடி ஏழைகள் கண் திறந்து பொருளாளிகளை எதிர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்" என்று கூறுகிறார்.

இதற்கெல்லாம் அன்புதான் தீர்ப்பு. எல்லா மனிதருக்கும், ஆணுக்கும் பெண்ணுக்கும் குழந்தைக்கும், வெள்ளைக்கும், மஞ்சளுக்கும், செம்புக்கும் கரு நிறத்து நீக்ரோவருக்கும் – சகலருக்கும் உள்ளே பரமாத்மா, பரம புருஷனாகிய நாராயணனே அந்தர்யாமியாக நின்று வெளித் தொழில்களை நிகழ்த்துகிறான். ஆதலால் மானிடரே, சகோதர உணர்ச்சியே தீர்ப்பு (தீர்வுக்கான வழி) சகோதர உணர்ச்சியைப் பற்றிக் கவிதைகள் பாடுவதும் நீதி நூல்கள் புகழ்வதும், வர்த்தமானப் பத்திரிகைகள் கர்ஜனை செய்வதும் இவ்வுலகத்தில் சாதாரணமாக இருக்கிறது. நடையில் (நடை முறையில்) எந்தக் கண்டத்திலும் எந்த மூலையிலும் அந்த முயற்சி காணப்படவில்லை. அது நடை (முறைக்கு) வர வேண்டும். கண்ணில்லாதவன் வான சாஸ்திரம் படிக்க முடியாது. ஆதலால் அன்பில்லாவிடில் இன்பமில்லை. இன்பத்தைத் தேடித்தேடி எங்கும் எப்பொழுதும் எதனினும் காணாமல் வருந்துகின்ற மானிடரே, கேளுங்கள்.

அன்புண்டானால் இன்பமுண்டு, என்பதை புத்த பகவான் கண்டு பிடித்துச் சொன்னார். அந்த யுக்தியின் மகிமையை நேரே மனிதர் தெரிந்து கொள்ளாமல் அவர் காட்டிய பயனை அடையாமலே இருந்து வருகிறார்கள். அன்பு கொள்கையில் இருந்தால் போதாது. செய்கையில் இருக்க வேண்டும் என்று பாரதி பேசுகிறார். செய்கையில் இருப்பதற்கு "பறையருக்கு போஜனம் செய்வித்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டு சாப்பிட்டால் நீ மனுஷ்யனிடம் அன்புடையவனாக விளங்குவாய்" என்று பாரதியார் முடிவு கூறுகிறார்.

பாரதி "வறுமையாலும் சாதிக் கொடுமைகளாலும் பாதிக்கப்

படும் மக்கள் பால் அன்பு காட்ட வேண்டும். அருகில் வைத்து சமத்துவமும், சகோதரத்வமும் பாராட்ட வேண்டும்" என்று வலுவாகத் தனது கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார்.

ஐரோப்பாவிலும், பிரான்ஸ் நாட்டில் தோன்றிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் மிக உயர்வான மனிதாபிமானக் கருத்துக்கள் தோன்றி அவை மக்களுடைய மனதில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்தின. ஆயினும் அங்கு அடுத்து நடைபெற்ற வர்க்கப் போராட்ட நெருப்பில் அவை சாம்பலாயின.

இந்திய நாட்டைப் பொறுத்த வரையிலும் அன்பு வழியிலும், ஆன்மீக வழியிலும், தெய்வீக வழியிலும், மனிதர்களுக்கிடையில் இசைவும் இணக்கமும் கொண்டு வருவதற்கு இடைவிடாது முயற்சிகள் நடைபெற்று வந்துள்ளன.

இந்திய நாகரிகத்தின் கலாச்சாரத்தின் அறிவாற்றலின், ஞானத்தின், செயலூக்கத்தின் தர்மத்தின் அடிப்படையாக உள்ள வேதங்களில் மனிதருக்குள்ளே வேறுபாடு கற்பிக்கப் படவில்லை.

நமது நாட்டில் சாதி அமைப்புகளும் அதனடிப்படையில் தோன்றிய வேறுபாடுகளும் பின்னர் ஏற்பட்டவை. அவைகளுக்கு சாஸ்திர சம்மதமில்லை.

பாரதி தனது கண்ணன் பாட்டில் !

"நாலு குலங்கள் அமைத்தான் – அதை
நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்,
சீலம் அறிவு தர்மம் – இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்
மேலவர் கீழவர் என்றே – வெறும்

வேடத்திற் பிறப்பினில் விதிப்பனவாம்
போலிச் சுவடியை யெல்லாம் – இன்று
பொசுக்கி விட்டால் எவர்க்கும் நன்மை யுண்டென்பான்"

என்று குறிப்பிடுகிறார்.

இந்திய நாட்டில் ஜாதிப் பிரிவுகளும் வேறு பாடுகளும் பாகு பாடுகளும் என்று தோன்றியதோ அன்று தொட்டே அதற்கு எதிர்ப்பான கிளர்ச்சிகளும் முயற்சிகளும் நடந்து வந்திருக்கின்றன.

இந்த நாட்டின் மகத்தான காவியங்களான உலகம் போற்றும் இதிகாசங்களான இராமாயணம் வேடர் குலத்தில் பிறந்த வால் மீகியால் எழுதப் பட்டதாகும். மகா பாரதமும், பாகவதமும் செம்படவப் பெண்ணின் மகனான வியாச முனிவன் எழுதியதாகும். தமிழுக்கு இலக்கணம் வகுத்த குருமுனி அகத்தியன் வியாச முனிவரின் தம்பியாகும். இந்த உண்மைகளையெல்லாம் நாம் உலகறியச் செய்ய வேண்டும்.

இன்னும் உலகம் போற்றும் திருக்குறள் செய்த திருவள்ளுவர் வள்ளுவர் குலத்தைச் சேர்ந்தவராகும். ஆதி பகவன் மகனாகும். மகான் இராமானுஜர் ஜாதி வேறுபாடுகளை நீக்கி வைணவ சம்பிரதாயத்தில் அனைவரையும் ஒன்று சேர்த்தார். நாலாம் குலத்தில் பிறந்தவராகக் கூறப்படும் நந்தனாருக்கும் திருப்பாணாழ்வாருக்கும் கோவில்களில் சன்னதி அமைத்து வழி படுகிறோம். இன்னும் இது போன்ற வரலாற்றுச் செய்திகள் ஏராளமானவை நமது பெருமைக்குரியனவாகும். இவைகளை –யெல்லாம் நாம் உலகரியச் செய்ய வேண்டும்.

இக்காலத்திலும் டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கார் அவர்களைத் தேசியத் தலைவர்களில் ஒருவராக நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். உயர் திரு.கே.ஆர்.நாராயணன் அவர்களை

ஜனாதிபதியாக்கி மகிழ்ந்தோம். மிகப் பெரிய ஜனநாயகம் பேசும் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஒரு நீக்ரோ மகன் இதுவரை ஜனாதிபதியாக வந்ததில்லை. அடித்தட்டில் உள்ள மக்களைக் கை தூக்கி விடுவதற்கு இட ஒதுக்கீடுகள் செய்து அவர்களை முன்னேற்றுவதற்கு அரசியல் சட்ட பூர்வமான நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளோம். இன்று நமது நாட்டின் அரசியல் சட்டப்படி அனைவரும் சமம் என்பது அங்கீகரிக்கப் பட்டிருக்கிறது. சாதிப் பாகுபாடுகளும் வேறுபாடுகளும் காட்டுவது சட்டப்படி குற்றமாகும். இவ்வாறு அரசியல் பூர்வமாகவும், சமுதாய பூர்வமாகவும் அதே சமயத்தில் அன்பு வழியிலும் மக்களுக்கிடையில் காட்டப்படும் வேறு பாடுகளைக் களைவதற்கு அனைத்து முயற்சிகளையும் நமது நாட்டின் அறிவார்ந்த மக்கள் எடுத்து வருகிறார்கள். பாரதி வழியில் இந்த அரசியல் மற்றும் சமுதாயக் கடமைகளை நாம் நிறைவேற்றி வருகிறோம்.

ஐரோப்பிய நாடுகளில், வட அமெரிக்காவில், உள்ள இன வேறுபாடுகளையும் பாகுபாடுகளையும், வர்க்க வேறுபாடுகளையும், பாகுபாடுகளையும் களைவதற்கான ஏற்பாடுகள் இல்லை. அதற்கான முயற்சிகளும் மிகக் குறைவாகவே உள்ளன. எனவே நமது தர்மத்தை ஐரோப்பாவிலும் இதர நாடுகளிலும் பரப்ப வேண்டும்.

இன்னும், இந்நாள் வரை பாதிக்கப்பட்ட மக்களை, புதிய வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தங்கள் சொந்தத் திறமைகளையும், ஆற்றல்களையும் தங்கள் சொந்த முயற்சிகள் மூலமும் வளர்த்துக் கொள்வதற்கு ஊக்க மூட்ட வேண்டும்.

✡ ✡ ✡

11.மனித மேம்பாடு:

தனி மனித மேம் பாட்டிற்கும், மனித வள மேம்பாட்டிற்கும் அதன் மூலம் சமுதாய மேம்பாட்டிற்கும் உலக மேம்பாட்டிற்கும் நமது முன்னோர்கள் வெகுவாக சிந்தித்திருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனையில் உருவான அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்கள் பற்றி உலகில் யாரும் இத்தனை தெளிவாக சிந்தித்திருக்க வில்லை.

மிருக சாம்ராஜ்யத்திலிருந்து வெளியேறி மனிதன் ஒரு மானுட சாம்ராஜ்யத்தை உருவாக்கிக் கொண்டு வந்திருக்கிறான். ஆயினும் மனிதனிடத்தில் சில மிருக குணங்களும் தொடர்ந்து நீடிக்கின்றன. சில தனி மனிதர்களைப் பற்றிக் கூறும் போது, அல்லது குறை கூறும் போது சில மிருக குணங்களைச் சுட்டிக் காட்டி திட்டுவதுண்டு. நாய் பேய் என்றும் நரி, ஓநாய் என்றும் கூறுவதுமுண்டு. சிங்கம், புலி என்று புகழ்வதும் உண்டு.

பாரதி யாரும் சில மனிதர்களின் குணங்களைக் குறித்து நரி, தேவாங்கு, பாம்பு, பன்றி, நாய், வேட்டைநாய், வெளவால், கிளிப் பிள்ளை, .கழுதை, வான்கோழி, தூண், கழுகு, ஆந்தை, என்று பல உயிரினங்களையும் உதாரணம் காட்டி, மனிதனுடைய அத்தகைய மிருக குணங்களைப் போக்கி முழு மனிதனாக மனிதனை உருவாக்க வேண்டிய அவசியத்தை பாரதி வலியுறுத்திக் கூறுகிறார்.

மனிதனிடமுள்ள மனிதத் தன்மைகளை, மனிதச் சிறப்புகளை, பல கோணங்களிலும், பல பரிமாணங்களிலும் உயர்த்த வேண்டும், மேம்படுத்த வேண்டும் என்பது பாரதியின் அவாவும் முயற்சியுமாகும்.

“ஒவ்வொரு நிமிஷமும் சத்தியமே பேசித் தர்மத்தை ஆதரித்துப் பரமார்த்தத்தை அறிய முயலுகிறவனே மனிதன் என்றும்

தேவன் என்றும் சொல்வதற்கு உரியவனாவான். மிருக ஜன்மங்களை நாம் ஒவ்வொருவரும் க்ஷணந்தோறும் நீக்க முயல வேண்டும்" என்று பாரதி தன்னுடைய கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

தனி மனித மேம்பாட்டிற்குப் பயிற்சி மிகவும் அவசியம். பயிற்சியில் குழந்தைப் பருவத்தில் தாய் தந்தையர் தங்கள் அனுபவத்தின் மூலம் குழந்தைகளுக்குப் பல விஷயங்களையும் தாங்கள் அறிந்திருந்ததைத் தெரிவித்து சொல்லிக் கொடுத்து குழந்தைகளைப் பயிலுவிக்கிறார்கள். இதுவே அவர்களுக்கு அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு அஸ்திவாரமாக அமைகிறது. தாய் தந்தையர்கள் அறிவு வளர்ச்சி பெற்றவர்களாக இருந்தால் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியின் அஸ்திவாரமும் பலமாக அமைகிறது.

அதன் பின்னர் குழந்தைகள் பள்ளிகளில் பயிற்சி பெறுகிறார்கள். பள்ளிக்குப் போகாத குழந்தைகள் தெருக்களில் வேலை செய்யும் இடங்களில் பயிற்சி பெறுகிறார்கள். பள்ளிகளில் ஆசிரியர்கள் மூலம், பாடப் புத்தகங்கள் மூலம், இதர நூல்கள் மூலம், கருத்துப் பரிமாற்றங்கள் மூலம் பயிற்சி பெறுகிறார்கள்.

ஒரு வீட்டில் ஒரு குடும்பத்தில் மூன்று, நான்கு அல்லது ஐந்தாறு பிள்ளைகளையும் பெற்றோர்கள் ஒரே மாதிரிதான் கவனிக்கிறார்கள். உணவளிக்கிறார்கள். ஆனாலும் அந்தப் பிள்ளைகள் உடல் வளத்திலும் சரி, உள்ளப் பண்பாட்டிலும் சரி, அறிவு வளர்ச்சியிலும் சரி, ஏற்றத் தாழ்வாக இருக்கிறார்கள். சற்று வித்தியாசப் பட்டும் இருக்கிறார்கள். அதற்குக் காரணமென்ன? இது ஒரு புதிரான கேள்வியாகும்.

அதே போல், பள்ளியில் படிக்கும் பிள்ளைகளுக்கு எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆசிரியர்கள் ஒரே மாதிரி தான் பாடம் சொல்லிக்

கொடுக்கிறார்கள். எல்லா மாணவ மாணவியருக்கும் ஒரே மாதிரியான பாடப் புத்தகங்கள் தான் இருக்கின்றன. இருப்பினும் படி,ப்பறிவிலும், கிரகிப்பதிலும், புரிந்து கொள்வதிலும், மதிப்பெண்கள் எடுப்பதிலும், ஏற்ற தாழ்வுகள் வேறுபாடுகள் ஏற்படுகின்றன. இதற்கான காரணம் என்ன? இதுவும் ஒரு புதிரான கேள்விதான்.

வீடுகளிலும், பள்ளிகளிலும் ஒவ்வொரு குழந்தைக்கும் தனி கவனம் செலுத்தி அதன் அறிவு வளத்தைப் பெருக்குவதற்கு தனி முயற்சிகள் மேற் கொள்ள வேண்டும் என்னும் ஏற்பாடுகளும் நடந்து வருகின்றன.

இங்கு ஒவ்வொரு தனி நபரும் குழந்தை, மாணவ, மாணவியர், மனிதர் ஆகியோரின் தனி முயற்சி, சுயமுயற்சி, வீட்டுப் பாடம், சுய படிப்பு ஆகியவை மனிதப் பயிற்சியில் மனித மேம் பாட்டில் முக்கிய இடம் பெறுகின்றன. எனவே ஒவ்வொரு நபரின் தனி முயற்சிகளை, சுய முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும். இதில் கவனம் அதிகமாக செலுத்த வேண்டும்.

இத்தகைய சுய முயற்சிக்கு வயது வரம்பு இல்லை. இங்கு ஏற்படும் மனித முயற்சிதான் ஒருவரை மிருக நிலையிலிருந்து உயர்த்துவதற்கு பெரிதும் உதவுகிறது. குடும்பப் பராமரிப்பும் பள்ளிக் கல்வியும் மனித வளர்ச்சிக்கு அடிப்படையை அமைக்கிறது. சுய முயற்சி மனிதனை உயர்த்துகிறது.

ஒவ்வொரு நிமிஷமும் சத்தியமே பேசித் தர்மத்தை ஆதரித்துப் பரமார்த்தத்தை அறிய முயலுகிறவனே மனிதன் என்றும், தேவன் என்றும் சொல்வதற்கு உரியவனாவான்" என்று பாரதி கூறுகிறார்.

இதில் சத்தியம், தர்மம், பரமார்த்தம் என்னும் அருமையான சொற்கள் இடம் பெற்றிருக்கின்றன. சத்தியத்தைப் பேச வேண்டும்.

தர்மத்தை ஆதரிக்க வேண்டும். இதில் பரமார்த்தத்தை அறிய முயல வேண்டும். சத்தியம் என்பது வாய்மை. தர்மம் என்பது கடமை. பரமார்த்தம் என்பது உண்மை நிலை (நிஜம்) இதற்கு மேலும் இந்த சொற்களுக்கு விரிவான பொருள் இருக்கிறது. இப்போது இந்தப் பொருளை மட்டும் எடுத்துக் கொள்வோம்.

இந்தியா விடுதலை பெறுவதற்கு அதற்கான கிளர்ச்சிகளை போராட்டங்களை, முயற்சிகளை மேற் கொள்வதற்கு சுய முயற்சியும் சுய பயிற்சியும் கொண்டு தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் ஏராளமான செயல் வீரர்கள் தேவைப்படுகிறார்கள். அவர்கள் சிறந்த மனிதர்களாகப் பயிற்சி பெற வேண்டும்.

இதை மனதில் கொண்டே பாரதி சத்தியம் பேசி, தர்மத்தை ஆதரித்துப் பரமார்த்தத்தை அறிய முயலும் மனிதர்கள் பலரும் தேவை என்பதை பாரதி கூறுகிறார்.

இப்போது நாடு விடுதலை பெற்ற பிறகு நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு இன்னும் அதிகமான அளவில் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் பல லட்சக் கணக்கிலும் இன்னும் கோடிக் கணக்கிலும் சத்தியம் பேசி, தர்மத்தை ஆதரித்து பரமார்த்தத்தை அறிய முயலும் எண்ணற்ற செயல் வீரர்கள் தேவைப் படுகிறார்கள்.

விடுதலைப் போராட்டத்தின் போது ஒரே நோக்கத்தில் ஒரே குறிக்கோளில் ஒரே கட்டுப்பாட்டுடன் கூடிய வீர குணம்மிக்க செயல் வீரர்கள் தேவைப் பட்டனர். அத்தகைய ஒழுக்கமும், கட்டுப்பாடும், தியாக உணர்வும் அர்ப்பணிப்பும் கொண்ட இளைஞர்களை முன் வரும்படி மகாத்மா காந்தி அழைப்பு விடுத்தார்.

நாடு விடுதலை அடைந்த பின்னர், நாட்டின் வளர்ச்சியும், முன்னேற்றமும் குறிக்கோள்களாக முன் நிற்கின்றன. வளர்ச்சியும்

முன்னேற்றமும் என்பது பன்முகப் பட்டது.

நாட்டை வளர்ச்சிப் பாதையில் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு ஒன்றிணைந்த பல பணிகளை நாம் மேற் கொள்ள வேண்டியதிருக்கிறது.

ஏற்கனவே ஆயிரம் ஆண்டு காலமாக நாட்டில் ஏற்பட்ட சேதங்கள், அழிவுகள், நாசங்கள், கொள்ளை முதலியவற்றால் ஏற்பட்ட படுகாயங்களை ஆற்ற வேண்டும், சேதங்களைப் பழுது பார்க்க வேண்டும். பல புனரமைப்புப் பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

நாடு சுதந்திரம் பெற்ற போது ஏற்பட்ட பிரிவினை, அதனால் ஏற்பட்ட சேதங்கள், படுகாயங்கள் அவைகளை பழுது பார்த்து சீரமைக்க வேண்டும், புனரமைக்க வேண்டும்.

அத்துடன் சேர்த்து வளர்ச்சிப் பணிகளை, முன்னேற்றப் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

நாட்டின் தற்காப்பைப் பலப்படுத்த வேண்டும். ஆயுத பலம் போதுமான அளவில் இருக்க வேண்டும். நமது நாட்டின் விவசாயத்திற்கு அடிப்படையானது நீர்ப்பாசனம். பழைய நிர்ப்பாசன நிலைகளை சீரமைக்க வேண்டும். புதிய நீர்ப்பாசன முறைகளுக்குத் திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டும். கால் நடைகளைப் பெருக்க வேண்டும். காடுகளை வளர்க்க வேண்டும். முதல் நிலை உற்பத்தியைப் பெருக்க வேண்டும். கட்டமைப்புகளை பலப் படுத்த வேண்டும், போக்குவரத்துத்துறை (சாலை, ரயில், கப்பல், விமானம், குழாய்) மின்சார உற்பத்தி வினியோகம், தபால், தந்தி, தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றில் சுய சார்பு நிலை ஏற்பட வேண்டும். சிறு தொழில் நடுத்தரத் தொழில், கனரகத் தொழில் பொருள் உற்பத்தித் தொழில் ஆகியவற்றை வளர்க்க வேண்டும். மக்களின் வளர்ந்து கொண்டிருக்கும் தேவைகளைப் பூர்த்தி செய்யும்

வகையில் உற்பத்திப் பெருக்கத்திற்குத் திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டும்.

கல்வியைப் பெருக்க வேண்டும். அனைவருக்கும் ஆரம்பக் கல்வி கிடைக்க வேண்டும். இன்னும் அதில் குறையிருப்பது, கல்லாமை நீடிப்பது அவமானம். அனைவருக்கு ஒன்பதாண்டு கல்வி கட்டாயம் கிடைக்கச் செய்ய வேண்டும். உயர் கல்வி, தனிக்கல்வி, தொழில் மற்றும் தொழில் நுட்பக்கல்வி, விஞ்ஞானம், விஞ்ஞானத் தொழில் நுட்பக்கல்வி, ஆராய்ச்சி மேம்பாட்டுக் கல்வி, முதலிய உயர் கல்வியில் அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும்.

ஆட்சி நிர்வாகம், கிரிமினல், சிவில் சட்டங்கள், காவல் துறை, நீதித்துறை முதலியவைகளில் பழைய ஆங்கிலேய ஆட்சி காலத்தில் சட்டங்களை விதி முறைகளை நீக்கி, மாற்றி புதிய ஜனநாயக முறையில் புதிய சட்டங்களை இயற்ற வேண்டும்.

நமது தேசீய மொழிகளை வளர்த்து மொழி வழி கல்வியைக் கொண்டு வர வேண்டும். இவ்வாறு நாட்டின் சகல துறை வளர்ச்சியை முன்னேற்றத்தையும் மேம்படுத்தி பாரதி கூறிய வையத் தலைமை கொள் என்னும் லட்சியத்தை நிறைவேற்றுவதை குறிக்கோளாகக் கொண்டு பணியாற்ற வேண்டும். பாரதத்தின் அடையாளத்தை உலகரியச் செய்ய வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நமது பாரம்பரியமான கலாச்சாரத்தை மேம்படுத்த வேண்டும். நமது ஆலயங்களை சீரமைக்க வேண்டும். சிதைந்து போன ஆலயங்களை பழுது பார்த்து புதுப்பிக்க வேண்டும். தேவைப்படும் புது ஆலயங்களை நிர்மாணிக்க வேண்டும். பூசைகள், விழாக்கள், திருவிழாக்கள் சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

நமது கலைகள், ஆடல், பாடல், இசை, கவிதை, இலக்கியம் முதலியவற்றை உலகறியச் செய்ய வேண்டும். நமது நாட்டு வைத்திய முறை மருந்தியலை அபிவிருத்தி செய்ய வேண்டும். நமது மனித வளம் மிகவும் உயர்வானது அதை மேலும் உயர்த்த வேண்டும். உலகத்திற்கு உதவியாக, வழி காட்டியாக அமைய வேண்டும்.

இவ்வாறு பாரத சமுதாயத்தின் அனைத்துத் துறை வளர்ச்சிக்காக நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். இது பாரதியின் சிந்தனை.

✡ ✡ ✡

12.உலக வாழ்க்கையின் பயன்:

உலக வாழ்க்கையின் பயன் என்னும் தலைப்பில் ஒரு சிறந்த கட்டுரையை பாரதி எழுதியுள்ளார். அக்கட்டுரையில் அவருடைய உலகியல் கருத்துக்களை மிகவும் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்.

உலக வாழ்க்கையில் மானிடராலும் மற்ற உயிர்களாலும் விரும்பப்படும் மிகச் சிறந்த பயன் யாது? எப்போதும் மாறாத எப்போதும் குறையாத இன்பமெய்தி வாழ்தலாகும்.

இவ்வகையான இன்பத்தை எய்தும் பொருட்டாகவே மானிடர் கல்வி கற்பதும், பொருள் சேர்ப்பதும், தவங்கள் செய்தலும், அரசாள்வதும், களவு செய்தலும், கொலை செய்தலும், பேசுதலும், சிரித்தலும், ஆடுதலும், பாடுதலும், அழுதலும், உழுதலும் – எல்லா தொழில்களும் செய்கிறார்கள். மனிதர் மட்டுமேயன்றி மற்ற எல்லா உயிர்களும் தாம் செய்யும் எல்லாத் தொழில்களையும் மேற்கூறிய ஒரே நோக்கத்தோடுதான் செய்கின்றன" என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

இந்திய நாடும் மக்களும் சுதந்திரத்தை இழந்து அடிமைப் பட்டிருந்த காலத்தில் எண்ணற்ற துன்ப துயரங்களுக்கு ஆளானார்கள். பல படையெடுப்புகளாலும் ஆக்கிரமிப்புகளினாலும் ஏராளமான மக்கள் மடிந்தார்கள். பல ஆலயங்களும், கோயில்களும் கலைச் செல்வங்களும் படையெடுப்பாளர்களாலும், ஆக்கிர –மிப்பாளர்களாலும் அடித்து நொறுக்கி நாசமாக்கப் பட்டன. கொள்ளையடிக்கப் பட்டன, சூரையாடப் பட்டன.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் நமது நாட்டு செல்வங்களும் சொத்துக்களும் சூரையாடப் பட்டன. சாதாரண மக்களுடைய தொழில்கள் விவசாயம், நீர்நிலைகள், பராமரிப்பு, கால்நடை பராமரிப்பு,

நெசவுத் தொழில், கிராமத் தொழில்கள், கப்பல் படகு கட்டும் தொழில்கள் வாணிபம், உள்நாட்டு வாணிபம், போக்குவரத்து முதலிய பலவும் சேதப்பட்டும் சிதைந்தும் மக்களுடைய வாழ்க்கை நிலை மோசமடைந்து பல்லாயிரக்கணக்கான பல லட்சக்கணக்கான மக்கள் பஞ்சங்களால் பசி பட்டினியால் செத்து மடிந்தும், கல்வியை இழந்தும், வாழ்க்கை வசதிகளை இழந்தும், சுதந்திரத்தை இழந்தும், பழைய கலாச் சாரத்தையும், பழம் பெருமைகளை இழந்தும், உலகின் முன்பாக சிறுமைப் பட்டோம்.

நாடு விடுதலை பெற்ற பின்னர், பழைய துன்ப துயரங்களையும், அடிமை வாழ்வையும் போக்கி, நாட்டு மக்கள் நல் வாழ்வு பெறுவதற்காகப் பல முயற்சிகளையும் செய்து வருகிறோம்.

விவசாயம், கால்நடை பராமரிப்பு, கிராமத் தொழில்களை சீரமைப்பதற்கும், பெரிய நீர்த் தேக்கங்களை நிர்மாணித்துப் பாசன வசதிகளைப் பெருக்கவும், மின்சாரம் சாலைப் போக்குவரத்து ரயில் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து குழாய் போக்குவரத்து ஆகியவற்றை அதிகப் படுத்தவும், கல்வியை விரிவுப் படுத்தவும், உயர் கல்வியை பெருக்கவும், மற்றும் மக்கள் நல்வாழ்வை மேம் படுத்தவும் பல முயற்சிகளையும் செய்து வருகிறோம். அந்த முயற்சிகளில் பல சாதனைகளையும் பெற்று வந்திருக்கிறோம்.

ஆயினும் இன்னும் நாட்டின் ஏராளமான பிரச்னைகள் நீடிக்கின்றன. வறுமை, வேலையின்மை, படிப்பின்மை, முதலிய கஷ்டங்கள் நீடிக்கின்றன. அவைகளைப் போக்கி மக்களுக்கு நித்தியமான சௌகர்யங்கள் ஏற்படுவதற்கும் முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

அன்னியர் ஆட்சி காலத்தில் மக்களுடைய துன்ப துயரங்கள், விடுதலை, நல்லாட்சி முதலியவைகளைப் பற்றியெல்லாம்

பாரதி சிந்தித்துத்தான் மக்களுடைய மற்ற ஜீவராசிகளுடைய துன்பங்களைப் போக்குவதற்கும் மனிதன் பலவகை முயற்சிகளையும் எடுத்து வருவதைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

மனிதன் எவ்வளவு தான் பாடு பட்டாலும் மக்கள் முழுமையான நித்தியானந்த நிலையை எய்தவில்லை. உலகத்தில் தவிர்க்க முடியாத துக்கம் நீடித்துக் கொண்டேயிருக்கிறது.

"இங்ஙனம் ஒவ்வொரு உயிர்க்கும் தன்னிடத்தும் பிற உயிர்களிடத்தும், பொருள்களிடத்தும் தீராத சகிப்பின்மையும் பயமும் வெறுப்பும், கவலையும் ஏற்படுவதற்குக் காரணம், அநாதி காலம் தொட்டு ஜீவர்களுக்குள்ளே நிகழ்ந்து வரும் ஓயாத போராட்டத்தால் ஏற்பட்ட பழக்கந் தவிர வேறொன்றுமில்லை" என்று பாரதி குறிப்பிடுகிறார். பாரதி அங்கிருந்து வேதாந்த நிலைக்குச் செல்கிறார். வேதாந்த ஞானத்தால் தான் அத்தகைய விரோதங்களையும் முரண்பாடான பழக்க வழக்கங்களையும் நீக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

"எல்லா வஸ்துக்களும் எல்லாக் குணங்களும் ஒன்றென்னும் வேதாந்த ஞானத்தால் இந்த அஞ்ஞானப் பழக்கத்தை நீக்க வேண்டும். மேற்படி ஞானம், உலகம் தோன்றிய காலம் முதலாக எத்தனையோ பண்டிதர்களின் மனத்திலும் கவிகளின் மனத்திலும் உதித்திருக்கிறது. எத்தனையோ கோடிக்கணக்கான பாமரர் மனத்திலும் உதித்திருக்கிறது. எத்தனையோ கோடிக்கணக்கான பாமரர் மனத்துள் அவை அழுத்தாமல், வாயினால் பிதற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பாரதி குறிப்பிடுகிறார்.

"ஆயினும் பண்டிதர்களும் பாமரர்களும் ஒருங்கே அந்த ஞானத்தை நித்ய அனுபவத்தில் கொண்டு வர முடியாத படி பழைய அஞ்ஞானம் தடுக்கிறது" என்றும் கூறுகிறார்.

"அஞ்ஞானத்தை வென்றால் தீராத இன்ப நிலை எய்தி வாழலாம்" என்று சாஸ்திரம், யுக்தி, அனுபவம், ஆகிய மூன்று பிரமாணங்களாலும் விளங்குகிறது. எனினும் அந்த அஞ்ஞானப் பிசாசையும் அதன் குட்டிகளாகிய காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறு எம தூதர்களையும் வெல்ல மனிதனுடைய சித்தம் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறது. எத்தனை புதிய இன்பங்களைக் காட்டிய போதிலும் மனம் அவற்றில் நிலை பெறாமல் மீண்டும் ஏதேனும் ஒரு துன்பக் குழியிலே கண்ணைத் திறந்து கொண்டு போய் விழுந்து தத்தளிக்கத் தொடங்குகிறது.

மனம் கலங்கிய மாத்திரத்தில் புத்தி கலங்கிப் போய் விடுகிறது. ஆகையால் புத்தியை நம்பி எவனும் மனத்தை கலங்க விடாதிருக்கக் கடவன். மனத்தைக் கலங்க விடாமல், விடாமல் பயிற்சி செய்வதே எல்லா வித யோகங்களிலும் சிறந்த யோகமாகும். மனம் தவறி ஒரு துன்பக் குழியில் போய் விழுங்காலத்தில் புத்தி சும்மா பார்த்துக் கொண்டு நிற்கிறது. ஒருவேளை புத்தி தடுத்த போதிலும் அதை மனம் கவனிப்பதில்லை. புத்தியை மீறி உழலும் சக்தி மனதுக்கு இருக்கிறது.

"ஆதலால் மனம் துன்பத்தில் நழுவி விழத் தொடங்கும் போது அதை உறுதி அல்லது தைரியம் என்ற கடிவாளத்தால் பிடித்து நிறுத்திப் பழகுவதே சரியான யோகப் பயிற்சியாம். இந்தப் பயிற்சி ஏற்படுத்திக் கொள்ளுமாறு சிலர் உலகத்தை விட்டு நீங்கித் தனியிடங்களிலிருந்து கண்ணை மூடிக் கொண்டு பழகுகிறார்கள். வேறு சிலர் மூச்சைப் பல இடங்களில் கட்டியும் அவயவங்களைப் பலவேறு திருப்பியும் பழகுகிறார்கள். தனியே இருந்து ஜயம் பண்ணிப் பார்க்கிறார்கள்.

"இதிலெல்லாம் இது வேகாது – உலகத்தாருடன் கூடி எல்லா வகைகளிலும் மற்ற உலகத்தாரைப் போலவே தொழில் செய்து கொண்டு உலக விவகாரங்களை நடத்திய வண்ணமாகவே சஞ்சலத்திற்குத் தன் மனதைக் கட்டக் கூடிய திறமையே பயன் தரக் கூடியது. மற்ற முயற்சிகளெல்லாம் வீண்.

"நீதி, ஸமாதானம், ஸமத்துவம், அன்பு இவற்றாலேயே இவ்வுலகத்தில் தீராத தைரியமும் அதனாலே தீராத இன்பமும் எய்தலாம். வேறு வழியில்லை" என்று பாரதியார் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

பாரதி உலக வாழ்க்கையின் பலன்களை அனுபவிப்பதே இன்பம். அதாவது முழுமையான பலன்களை முழுமையாக அனுபவிப்பதே முழுமையான இன்பம் என்னும் கருத்தை வலியுறுத்திக் கூறுகிறார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நமது புருஷார்த்தங்களும் அதையே கூறுகின்றன. பாரதியும் அந்த வழியில் தான் தனது கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார்.

மனிதன் மட்டுமல்ல. உலகில் உள்ள எல்லா உயிர்களும் மட்டில்லாத மகிழ்ச்சியுடன் இன்பத்தை எய்த வேண்டும். அதற்கான கடும் முயற்சிகளைச் செய்ய வேண்டும். மனப் பயிற்சி செய்து மன உறுதியும் தைர்யமும் பெற வேண்டும். இந்த மன உறுதியை எங்கோ போய் தனித்திருந்து பயிற்சி செய்து பெறுவதல்ல. உலக மக்களுடன் கலந்து உறவாடிப் பழகிப் பணியாற்றி, உலக விவகாரங்களை நடத்திக் கொண்டே மனப் பயிற்சியை மன உறுதியைப் பெற வேண்டும், என்பதும்,

நாடு விடுதலை பெற்று நாட்டு மக்கள் நல் வாழ்வு பெறுவதற்கு மக்கள் அனைவரின் மன உறுதி மிக்க செயல் பாடுகள், கட்டுப்பாடு மிக்க செயல்பாடுகள் மிக அவசியம், இது சாத்தியம் என்பதும் பாரதியின் உறுதியான நம்பிக்கையாகும்.

எனவே உலக வாழ்க்கையிலிருந்து பிரிந்து தனித்து நின்று எதையும் செய்து விட முடியாது. உலக வாழ்க்கையில் இணைந்து நின்றே அத்தனை கடமைகளையும் சாதிக்க முடியும். அத்தனை காரியங்களையும் சாதிக்க முடியும். அத்தனை காரியங்களையும் செய்து முடித்து நிறைவேற்ற முடியும் என்பது பாரதியின் அசையாத நம்பிக்கையாகும்.

✡ ✡ ✡

13.உழைப்பு:

உழைப்பு என்னும் தலைப்பில் பாரதியார் அருமையானதொரு கட்டுரை எழுதியுள்ளார். இது பற்றி அவர் கூறும் கருத்து இன்று மிகவும் பொருத்தமானது, அது என்றும் பொருத்தமானது.

"உழைப்பு எப்போதுமே உண்டு. தெய்வமே சரண் என்றிருப்போர் உள்ளத்திலே தாபம் இல்லாமல் உழைப்பார்கள் ஆனபடியால் அவர்களுடைய செய்கைக்கு வலிமை அதிகம், வேகம் அதிகம், உயர்வு அதிகம், அழகு அதிகம் பயன் அதிகம் என்று சொல்லாமலே விளங்கும்" என்றும், இன்னும், "உழைப்பு எப்போதும் உண்டு, இதிலே நான் என்னும் பாரத்தை நீக்கி விட்டு உழைத்தால் வேலை கிறு கிறு வென்று வேகமாகவும் பிழையில்லாமலும் நடக்கும். தன்னைத் தூக்கித் தலையிலே வைத்துக் கொண்டு வேலை செய்தால் வேலை குழம்பும்" என்று பாரதி கூறுகிறார்.

ஒரு வேலையில் அதைச் செய்யும் ஒருவர், தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு இன்னும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு அவ்வேலையைச் செய்தால் அவ்வேலை சிறப்பாக நடைபெறும், சிறப்பாக நிறைவு பெறும். இதையே பகவத் கீதை "நிஷ்காமிய கர்மம்" என்று குறிப்பிடுகிறது.

இன்று விடுதலை பெற்றுள்ள பாரதத்தில் நமது உழைப்பின் மூலம் பல முன்னேற்றங்கள் கண்டிருந்த போதிலும் பணிக் கலாச் சாரம் என்பது சில மட்டங்களில் சில பகுதிகளில் போதுமான அளவில் இல்லை என்று தான் கூற வேண்டியதிருக்கிறது.

வேலை நிறுத்த உரிமை வேண்டும் என்று கேட்பவர்கள் வேலை செய்யும் உரிமை வேண்டும் என்பதில் வேகம் காட்டவில்லை. படித்தவர்கள் அரசாங்க உத்யோகங்களைத்தான் எதிர் பார்த்துக்

கொண்டிருக்கிறார்களே தவிர சுய முயற்சிகள் செய்வது குறைவாகவே உள்ளது. வேலைத் தேடித்தரும் அரசாங்க அலுவலகத்தைத் தான் நம்பிக்கொண்டிருக்கிறார்களே தவிர சொந்த முயற்சியில் ஈடுபடுவது குறைவாகவே இருக்கிறது. படித்தவர்களுக்கெல்லாம் அரசாங்க அலுவலகங்களிலேயே உத்தியோகங்கள் கிடைப்பது என்றால் அது சாத்தியமில்லை. தமிழ் நாட்டில் இப்போது சில சுய முயற்சிகள் அதிகரித்து வருகின்றன. பெண்களில் சுய உதவிக் குழுக்கள் பெருகி வருகின்றன.

அரசாங்க அலுவலகங்கள், அரசுத்துறை, பொதுத்துறை, விவசாயத் தொழில் முதலிய பகுதிகள் பலவற்றில் பணிக் கலாச்சாரம் குறைந்திருப்பது பற்றிப் பல தகவல்கள் வருகின்றன. அது பற்றிச் சொல்வாரும் இல்லை, கேட்பாரும் இல்லை. பொதுவாக நமது நாட்டில் பணிக் கலாச்சாரத்தில் அபிவிருத்தி காண வேண்டும். உற்பத்தி திறனில் அபிவிருத்தி காணவேண்டும். நாட்டை உயர்த்த வேண்டும் என்னும் தேச பக்த உணர்வு மேலோங்க வேண்டும். அன்னிய ஆட்சியை எதிர்த்த வேகம் நாட்டை உயர்த்த வேண்டும் என்பதிலும் காண வேண்டும். உழைப்பால் தான் நாட்டை உயர்த்த முடியும். இதில் எந்த இடத்தில் எந்தக் குறை ஏற்பட்டாலும் அது நீக்கப் பட வேண்டும்.

எந்த வேலையிலும் நாம் முழுமையான ஈடுபாட்டோடு, அர்ப்பணிப்போடு செய்தால்தான் அவ்வேலை சோபிக்கும். முழுமை பெறும். நிறைவு பெரும் என்பதற்கு பாரதி ஒரு சிறந்த உதாரணம் கூறுகிறார்.

தன்னை மறந்து வித்தையின் இன்பத்திலே தன் புத்தி முழுவதையும் செலுத்தி ஆடும் ஒரு நாட்டியப் பெண் நன்றாக ஆடுவாள். நாம் ஆழகோ அழகில்லையோ, வகுப்பு சரியான

இருக்கிறதோ இல்லையோ, நெற்றிப் பொட்டு நேரே விழுந்திருக்கிறதோ இல்லையோ பாதி ஆட்டத்தில் வயிற்று வலி வந்து விடுமோ என்னவோ, இன்னும் பார்வையாளர்கள் ஆட்டத்தை நன்கு ரசிப்பார்களோ இல்லையோ, கைதட்டு கிடைக்குமோ? கிடைக்காதோ?" என்று சித்தம் குழம்பிப் போயிருந்தால் ஆட்டம் நேராக வராது" என்று கூறுகிறார்.

வேலை உயர்வு, இட மாற்றம் விடுமுறை, பிரயாணப் படிக் கணக்கு மேல்வரும் படி வட்டிக் கணக்கு, கிரிக்கட் ஆட்டம், சீரியல் ஓட்டம் – இவ்வாறு பல சிந்தனைகளும் இருந்தால் வேலை ஓடாது.

இன்னும் பல சேவைத்துறைகளிலும் அரசு அலுவல –கங்களிலும் வேலைக் குறை ஏற்படுமானால் அது நேரடியாக மக்களை பாதிக்கும். அத்துடன் லஞ்ச நோய் பெரு நோயாக அரசாங்கத் துறைகளிலும் அரசியலிலும் வேறு பல துறைகளிலும் பல மட்டங்களிலும் பரவியுள்ளது. இதில் மேல் மட்ட லஞ்சம் நாட்டின் வளர்ச்சியை, பாதிக்கும். நடு மட்ட லஞ்சங்கள் மக்கள் நலனை பாதிக்கும். அதிலும் காவல் துறையிலும் வருவாய்த் துறையிலும் வரித்துறைகளிலும் வளர்ச்சித் துறைகளிலும் பரவி ஆழ வேர் விட்டுள்ள லஞ்சங்கள் சமுதாயத்தைப் புற்று நோய் போல் பாதிக்கிறது.

உழைப்பு என்பது உடல் உழைப்பு மட்டுமல்ல. எல்லாவகை உழைப்பும் உழைப்பேயாகும். அறிவு உழைப்பும் தொழில் உழைப்பும், தொழில் நுட்பத் துறையும், நிர்வாகம், வைத்தியத் தொழில், இசை, பாட்டு, ஆடல், பாடல், கவிதை இயற்றுதல், படித்தல், கற்றல் கற்பித்தல் ஆராய்ச்சி, மேல் பார்வை முதலிய அனைத்துப் பணிகளும் உழைப்பேயாகும்.

✡ ✡ ✡

14.இந்துக்களின் ஒற்றுமை:

புராணங்கள் என்னும் தலைப்பில் சிறந்ததொரு கட்டுரையை பாரதி எழுதியுள்ளார். அதில் ஹிந்து மத ஒற்றுமை குறித்துப் பேசுகிறார். பாரதி இந்தக் கட்டுரையில் மிகவும் சிறந்த சில நுட்பமான உண்மைகளை எடுத்துக் கூறுகிறார்.

ஹிந்து மதம் என்பது ஒரு மதமல்ல. இது ஒரு வாழ்க்கை வழி முறையேயாகும். அது பல நம்பிக்கைகளையும், வழிபாடுகளையும் சமய நெறிகளையும் சடங்குகளையும் ஆசாரங்களையும் கொண்டது. ஆங்கிலேய ஆட்சியாளர்களின் பிரித்தாளும் அரசியல் சூழ்ச்சிகளாலும், சில ஹிந்து விரோதிகளாலும், வேறு சில அடிப்படை மதவாதிகளின் நடவடிக்கைகளாலும் இந்து மதம் என்று கூறப்படும் செய்தி நாட்டில் நிலை பெற்றிருக்கிறது. அது எப்படியிருப்பினும் பாரதி கூறும் சில கருத்துக்களை இங்கு கவனிப்போம்.

"வேதக் கொள்கைகளை எல்லா ஜனங்களுக்கும் உணர்த்தும் பொருட்டு முன்னோர்களால், புராணங்கள் ஏற்படுத்தப் பட்டன. "நான்", "எனது" என்னும் அகந்தையாலும் பிறருக்குத் தீங்கிழைப்பதும் தமக்குத்தாமே பலவிதமான அச்சங்களும் தீங்குகளும் விளைவித்துக் கொள்வது ஜீவர்களின் இயற்கை. இந்த இழிவு கொண்ட இயற்கையை ஞானத்தீயில் போட்டு பொசுக்கி விடுதல் வேத ரிஷிகளால் ஏற்படுத்தப் பட்ட யக்ஞம் அல்லது வேள்வியின் கருத்து" என்று பாரதி குறிப்பிடுகிறார். இவை கருத்துச் செறிவான வார்த்தைகளாகும்.

நான், எனது, என்பது அகந்தை, தன்னகங்காரம் இதனால் தான் ஒருவன் மற்றவர்களுக்குத் தீங்கிழைப்பதும் கொடுமைகள் செய்வதும், தனக்குத்தானே தீங்கிழைத்துக் கொள்வதும், அழிவைத் தேடிக் கொள்வதும் நிகழ்கிறது. இவை மனிதனிடம் இயல்பாக

ஏற்படுகிறது. இவைகளை ஞானத் தீயில் சுட்டெரித்து விட வேண்டும். இந்த ஞானத்தைப் பெறுவது எப்படி? அதற்கு யக்ஞும், வேள்வி தவம் முயற்சி, கடும் உழைப்பு தேவை. நாம் எந்தத் தொழில் செய்தாலும் செய்து கொண்டிருந்தாலும் எங்கு நாம் இருந்தாலும் எந்தப் பொறுப்பில் இருந்தாலும் அந்த முயற்சிகளில் ஈடுபடலாம். அதற்கான சிந்தனை பற்றி பாரதி கூறுகிறார்.

"எல்லாம் ஈசன் செயல் எல்லாம் அவனுடைய ரூபம். கம்ப ராமாயணத்தில் இரண்யனுக்கு பிரஹ்லாதாழ்வான் உப –தேசித்தருளிய படி அவன்,

"சாணிலுமுளன், மற்றாங் கோர்
அணுவினைச் சத கூறிட்ட
கோணிலும் உளன்! மாமேருக்
குன்றிலும் உளன், இந்நின்ற
தூணிலும் உளன், யான் சொன்ன
சொல்லினும் உளன்"

அவனைத் தவிர வேறு பொருளே கிடையாது. அவனன்றி ஓரணுவும் அசையாது. ஆதலால் இந்த உலகம் முழுவதும் பரிபூரண அழகுடையது. பரிபூரண மங்களத்தன்மை உடையது. அந்தக் கடவுள் சர்வ சக்தியுடையவன். ஆதலால் கீதையிலே சொல்லியபடி எல்லாப் பொறுப்புகளையும் அவன் பாதங்களிலே சுமத்தி விட்டு நாம் எப்போதும் கவலையின்றி ஆனந்தத்துடன் வாழும் படியாக நாம் மனதைத் திருத்திக் கொள்ளக் கடவோம் என்னும் துணிவே ஞானத்தீ என்று சொல்லப்படும். இது வேதாக்கினி.

இங்ஙனம் நிச்சயிக்கப் பட்ட கடவுளிடத்தும் அவனுடைய கலைகளாகிய எல்லா ஜீவர்களிடத்தும் தீராத மாறாத அன்பு செலுத்துதலே பக்தி என்று சொல்லப் படும். இந்த பக்திதான் முடிவான சாதனம்" என்று பாரதி குறிப்பிடுகிறார்.

கடவுளிடத்தில் செலுத்தும் பக்தி என்பது கடவுள் படைத்த அனைத்து ஜீவன்களிடத்திலும் செலுத்தும் அன்பாகும். இந்த அன்பின் நிலை பாட்டில் ஞானம் பிறக்கிறது. அந்த நெருப்பில் "நான்", "எனது" என்னும் அகந்தை வெந்து சாம்பலாகி விடுகிறது.

மேலும் பாரதி குறிப்பிடுகிறார்,

"படைத்தல், காத்தல், மாற்றுதல், அருள் செய்தல், வலிமையுடமை, தெளிவுடமை, ஒளியுடமை எங்கும் பரந்திருக்கும் தன்மை, பல படத்தோன்றும் தன்மை, ஆனந்த இயல்பு முதலிய கடவுளின் எண்ணிறந்த குணங்களையும் இயல்புகளையும் பிரிவு படுத்தி நோக்குமிடத்தே வேதம் அந்தந்த குணங்களுக்கும் இயல்புகளுக்கும் தக்கபடி அவன் ஒருவனுக்கே பிரமன், சிவன், விஷ்ணு, இந்திரன், வாயு, ஸோமன், சூரியன், வருணன், அக்கினி பகவான் முதலிய நாமங்களை வழங்குகிறது.

"இந்த விஷயத்தை ரிக் வேதத்தில் "ஏகம் ஸத்" என்ற தொடக்கமுடைய மந்திரத்தில் மிகவும் தெளிவாக விளக்கிக் காட்டப் பட்டிருக்கிறது.

"எனவே வேதத்தின் வழி நூல்களாகிய புராணங்களில் இக்கடவுளை உணர்வதற்கு ஸாதனங்களாகிய தவம், பக்தி, யோகம், முதலியவற்றை அனுஷ்டிக்கும் நெறிகளும் இந்த வழியே செல்ல விரும்புவோனுக்கு இன்றியமையாதனவாகிய திட சித்தம், நேர்மை, ஜீவகாருண்யம் முதலிய குணங்களைப் பழக்கப் படுத்திக் கொள்ளும் நெறிகளும், இந்த குணங்கள் ஏற்படாத படி தடுக்கும் பயம், கர்வம், கோபம், நிஷ்டுரம் முதலிய அசுர குணங்களை அறுக்கும் நெறிகளும் பல திருஷ்டாந்தங்களாலும் சரித்திரக் குறிப்புகளாலும், உவமைக் கதைகளாலும், உபதேசங்களாலும், விஸ்தாரமாகக் காட்டப் பட்டிருக்கின்றன" என்று பாரதி கூறுகிறார்.

கடவுளின் எண்ணிறந்த குண இயல்புகளை தனித்தனியாக ஒருமுகப்படுத்தி அவைகளை உருவகப் படுத்தி புராணங்கள் எழுதப் பட்டன. பரமாத்மாவின் முக்கியமான மூர்த்தி பேதங்களை அதாவது குண பேதங்களை சிறப்பாகக் காட்டுவதற்காக சில தேவர்களை மேம்படுத்திக் காட்டி மக்களுக்கு எளிய முறையில் புரிய வைக்கப் புராணங்கள் எழுந்தன. ஆனால் கால நடையில் இப்புராணங்களை ஆதாரமாகக் கொண்டு மத பேதங்கள் நமது நாட்டில் ஏற்பட்டு விட்டன" என்று பாரதி குறிப்பிடுகிறார். அதனால் வைதீக மதத்தில் பல பிரிவுகள் ஏற்பட்டு விட்டன. அதில் ஏற்ற தாழ்வுகளும் ஏற்பட்டு விட்டன. தூஷணைகளும் சண்டைகளும் ஏற்பட்டு விட்டன. வேத ஒளி மறைந்தது. இந்த அலங்கோலங்கள் எல்லாம் தீர்ந்து ஹிந்து மதம் ஒற்றுமை நிலையெய்தி ஹிந்துக்கள் ஒன்றுமையும் வைதீக ஞானமும் எய்தி மேம்பாடு பெற்று பூமண்டலத்தின் ஆச்சார்ய பதவி கொண்டு வாழ வேண்டுமாயின் நாம் கீழ்க்கண்ட உபாயங்களைக் கையாள வேண்டும்" என்று பாரதி கூறுகிறார்.

1. வேதம், உபநிஷத்துக்கள், புராணங்கள், இவற்றை இக் காலத்தில் வழங்கும் தேச பாஷைகளில் தெளிவாக மொழி பெயர்க்க வேண்டும்.

2. புராணங்களில் தத்தம் தேவர்களை மேன்மைப் படுத்தும் அம்சங்களையும் மேற்படி பொது வேதக் கொள்கைகளாகிய தவம், உபாஸனை, யோகம் முதலியவற்றை விளக்கும் அம்சங்களை மாத்திரமே பிரமாணமாகக் கொண்டு இதர தேவ தூஷணை செய்யும் அம்சங்களை ப்ரமாணமி ல்லாதனவென்று கழித்து விட வேண்டும்.

3. வேதத்தின் உண்மைக் கருத்தை உணர்ந்தோரும் ஸமரஸ ஞானிகளுமான பண்டிதர் மூலமாக நாடு முழுவதும் புஸ்தகம், பத்திரிகை, உபந்யாசங்கள் முதலியவற்றால் பிரம்மாண்டமான பிரச்சாரத் தொழில் நடத்த வேண்டும்.

ஹிந்துக்களே பிளவுண்டு மடியாதீர்கள் வேதத்தின் பொருளை உணர்ந்து மேம்பட்டு வாழ வழி தேடுங்கள்" என்று பாரதி கூறுகிறார். இங்கு பாரதி நமக்கு முன்பாக மூன்று கடமைகளை நிறைவேற்றும் படி எடுத்துக் கூறுகிறார்.

ஹிந்துக்களே, பிளவுண்டு போகாதீர்கள். ஹிந்துக்கள் அனைவரும் ஒன்றுபடுங்கள் என்று பாரதி கூறுகிறார். ஹிந்துக்களின் ஒற்றுமையை வலியுறுத்துகிறார். ஹிந்துக்களின் ஒற்றுமை என்பது, இந்திய மக்கள் அனைவரின் ஒற்றுமைக்கும் அதாவது பாரத மக்கள் அனைவரின் ஒற்றுமைக்கும் அடிப்படையாகும். வழி பாடுகளில் ஆசாரங்களில் சிலவேறுபாடுகள் இருந்த போதிலும் தேசத்தால் பண்பாட்டால் கலாச்சாரத்தால் பழக்க வழக்கங்களால் நடை உடை பாவனைகளால் வரலாறு பூர்வமாக ஒன்று பட்டவர்கள் ஒன்றிணைந்தவர்களாகும்.

ஆங்கிலேயர்களின் ஆட்சி காலத்தில் அந்த அன்னிய ஆட்சிக்கெதிராக, சுதந்திரம் கோரி, இந்திய மக்கள் ஒன்று பட்டு நின்று போராடிய காலத்தில், இந்திய மக்களுடைய பாரத மக்களுடைய ஒற்றுமை ஜாதி, மத, மொழி வேறுபாடுகளுக்கப்பால் அனைத்து இந்திய மக்களுடைய ஒற்றுமை வலியுறுத்தப் பட்டது. இதைக் கண்டு அன்னிய ஆட்சியாளர்கள் பயந்து, இந்திய மக்களை மத வேறுபாடுகளை வைத்துப் பிரித்தாள்வதற்கு முயன்றார்கள். இஸ்லாம் மதத்தவரும், கிறிஸ்தவ மதத்தவர்களும் வெளியிலிருந்து வந்த மத வழிபாடுகளைத் தழுவிய இந்திய மக்கள் என்னும் முறையில் அவர்களை அரசியல் பூர்வமாகவும் மத ரீதியிலும் பிரிப்பதற்கு அன்னிய ஆட்சியாளர்கள் முயற்சி செய்தார்கள். அதில் முஸ்லீம் தனி அரசியல் அமைப்பாக உருவாகி அகில இந்திய முஸ்லீம் லீக் என்னும் பெயரில் முஸ்லிம்கள் தனி தேசம் என்று கூறி இரு தேசக் கொள்கையை உருவாக்கி நாட்டைப் பிரிவினை செய்வதற்குக்

கிளர்ச்சி நடத்தினார்கள். சுதந்திரப் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்த போது பிரிவினைக் கிளர்ச்சியும் வகுப்புக் கலவரங்களும் படுகொலைகளும் நடந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிர்ப் பலியாகி நாடு துண்டாடப் பட்டு, பாரத நாடு இந்தியா, பாகிஸ்தான் என்னும் இரு நாடுகளாக சுதந்திரம் பெற்றது. பாகிஸ்தான் என்பது இஸ்லாமிய நாடாகப் பிரிந்தது. மேற்கு பாகிஸ்தான் கிழக்கு பாகிஸ்தான் (இப்போது பங்களாதேஷ்) ஆகிய பாகிஸ்தான் பகுதிகளிலிருந்தும் பல லக்ஷக்கணக்கான ஹிந்து மக்கள் தங்கள் பூர்வீக இடங்களிலிருந்து உடமைகள் அனைத்தையும் இழந்து அகதிகளாக இந்தியாவுக்குள் வந்து அவர்கள் இந்தியாவின் பல இடங்களிலும் குடியேற்றப் பட்டார்கள். இந்திய வரலாற்றில் நாட்டுப் பிரிவினை என்பது ஒரு கண்ணீர்க் கதையாகும். பின்னர் அந்தப் பாகிஸ்தானிலிருந்து கிழக்கு பாகிஸ்தான் மொழி அடிப்படையில் பிரிந்து பங்களாதேஷ் நாடு தோன்றி நிலை பெற்றது.

எஞ்சிய பாரதம் இந்திய யூனியன் என்னும் பெயரில் அரசு அமைந்து அதன் அரசியல் சட்டமும் உருவாக்கப் பட்டு இந்தியக் குடியரசாக அறிவிக்கப்பட்டு ஒரு ஜனநாயக நாடாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்திய அரசியல் சட்டப்படி இங்கு வாழும் முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் மத சிறுபான்மையினர் என்று அங்கீகரிக்கப் பட்டிருக்கிறார்கள். 1950–ம் ஆண்டில் அரசியல் சட்டம் அறிவிக்கப்பட்ட பின்னர் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான அனுபவத்தில் நாட்டின் சமுதாய வாழ்வில் பல புதிய வளர்ச்சி நிலைகளும் அனுபவங்களும் ஏற்பட்டு நமது அரசியல் சட்டத்திலும் பல திருத்தங்களும் கொண்டு வரப் பட்டு நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மதச் சிறுபான்மையினர் என்னும் முறையில் முழுமையான மத சுதந்திரம் – வழிபாட்டு சுதந்திரம் பெற்றவர்கள் என்பது அரசியல் சட்டத்தால் மட்டுமல்ல

இந்தியாவில் உள்ள அனைத்து மக்களாலும் அங்கீகரிக்கப் பட்டுள்ள ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ள ஒன்றாகும். மற்றப்படி இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் அனைவரும், அரசியல் பொருளாதார சமுதாய கல்வி கலாச்சாரத் துறைகளில் அனைவரும் சமமாகும். இதை பரஸ்பரம் அங்கீகரித்து நாட்டின் ஒற்றுமையை பலப்படுத்த வேண்டும். இந்தியாவில் வாழும் அனைத்து முஸ்லிம் மக்களும் இந்திய முஸ்லிம்கள் என்றும் கிறிஸ்தவர்கள் அனைவரும் இந்தியக் கிறிஸ்தவர்கள் என்றும் தேச பக்தியின் அடிப்படையில் முழுமையாக இணைக்கப்பட்டால், சிறுபான்மை பெரும்பான்மை என்பது தீர்ந்து அனைவரும் சமம் என்னும் உணர்வு மேலோங்கி இந்திய ஒற்றுமை நிலைபெற்றுவிடும்.

பாரத சமுதாய அமைப்பில் வரலாறு பூர்வமான அதன் கலாச்சாரத்தில் வழிபாட்டு சுதந்திரம் என்பது எல்லாக் காலங்களிலும் முழுமையாக அனைவருக்கும் இருந்திருக்கிறது. சிவன் கோவில்கள், பெருமாள் கோவில்கள், முருகன் கோவில்கள், ஏராளமான அம்மன் கோவில்கள் முதலியன இருப்பதைப் போல பள்ளி வாசல்களும் கிறிஸ்தவ தேவாலயங்களும் இருப்பதிலும் அவைகள் சிறப்பாகச் செயல் படுவதிலும் அவர்களுடைய திருவிழாக்களும் நோன்புகளும் நடைபெறுவதிலும் யாருக்கும் ஆட்சேபணைகளும் முரண்பாடுகளும் இருந்ததில்லை. ஆனால் இந்தப் பிரச்னைகளில் சில வலராற்றுப் பிழைகளும் அரசியல் உள்நோக்கங்களும் ஆக்கிரமிப்பு நோக்கங்களும் இருக்குமாயின் அப்போது முரண்பாடுகள் ஏற்பட்டு விடுகின்றன. அவைகளையும் பரஸ்பரம் நம்பிக்கையுடன் பேச்சு வார்த்தைகள் மூலம் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளலாம்.

நமது நாட்டில் சில அரசியல் சுயநல சக்திகளால் ஒரு தப்பெண்ணம் உருவாக்கப்பட்டிருக்கிறது. முஸ்லிம் என்றால் சிறுபான்மையினர். கிறிஸ்தவர் என்றால் சிறுபான்மையினர். அவர்கள் தனிச்சலுகைகளும் சிறப்புச் சலுகைகளும் பெற்றவர்கள்.

ஆனால் இந்து என்றால் மதவாதி, வகுப்புவாதி, சிறுபான்மையினருக்கு எதிரானவர்கள் என்று கூறப்படுகிறது. இது என்ன வேடிக்கை? அறிவார்ந்த மக்கள் சிலர் கூட இப்படிப் பேசுகிறார்கள். இத்தகைய மூடங்களை அகற்ற வேண்டும்.

பாரதி காலத்தில் இந்திய மக்களைப் பிரிவினைப் படுத்தும் இத்தகைய பிரச்னைகள் இல்லை. ஆனால் அவர் காலத்தில் அன்னிய ஆட்சியின் கொடுமைகள், அவர்களின் ஆதிக்கம், கருத்து ஊடுறுவல், காரணமாக இந்துக்களின் பூர்வீக ஞானமெல்லாம் சிதைந்தும் மறைந்தும் கிடந்தது. இந்தச் சூழ்நிலையில் இந்துக்களுக்குள் உள்ள வேறுபாடுகளை மறந்து இந்து தர்மம் ஒற்றுமை நிலை எய்தி, ஹிந்துக்கள் ஒற்றுமையும் வைதிக ஞானமும் எய்தி, பாரத நாட்டின் மிக உயர்ந்த பூர்வீக ஞானத்தை உலகரியச் செய்ய வேண்டும். அவைகளையெல்லாம் உலகின் பலவேறு மொழிகளிலும் மொழியாக்கம் செய்து உலகெங்கும் பரப்ப வேண்டும். அப்போது பாரத புத்திரன் உலகத்தின் ஆச்சாரியன் ஆவான் என்று பாரதி சிந்தித்தார். அதற்காக, அதாவது,

வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சங்க நூல்கள், காப்பியங்கள், சைவத்திரு முறைகள், வைணவப் பிரபந்தங்கள், இசை நூல்கள், இந்திய மொழிகளில் உள்ள பலவேறு கலை இலக்கிய நூல்கள், அறிவியல் தொழில் நுட்ப நூல்கள், வைத்தியம் மருந்தியல் நூல்கள், சிற்பம் கட்டிடக் கலை நூல்கள், பஞ்ச பூதங்களைப் பற்றிய நூல்கள், நீரியல், இயற்பியல், வானவியல், கணிதவியல் நூல்கள் முதலியவற்றையெல்லாம் இக்காலத்தில் வழங்கும் இந்திய மொழிகளிலும் உலக மொழிகளிலும், மொழி பெயர்த்து பாரதமெங்கும் உலக மெங்கும் பரப்ப வேண்டும். இதை ஒரு மகத்தான பேரியக்கமாக நடத்த பாரதத்தின் அறிவுச் செல்வர்கள் பண்டிதர்கள் முன் வர வேண்டும் என்று பாரதி சிந்தித்தார்.

15. கொள்கையும் செய்கையும்:

"கொள்கைக்கும் செய்கைக்கும் உள்ள தூரம்" என்னும் தலைப்பில் பாரதியார் ஒரு சிறந்த வலுவான கருத்துக்களைக் கொண்ட ஒரு கட்டுரையைத் தனது உரைநடையில் எழுதியுள்ளார். அக்கட்டுரை அவருடைய உரைநடைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். அவருடைய அரசியல் கருத்துக்கு நல்லதொரு உதாரணமாகும். அவருடைய தேசபக்த உணர்வு நிலைக்கும் சுதந்திர வேட்கைக்கும் கொள்கை உறுதிப் பாட்டிற்கும் ஒரு நல்ல சாட்சியமாகும். அரசாங்க நிர்வாகத்தை அவர் விமர்சனம் செய்துள்ள முறையே அலாதி.

பாரதி கூறுகிறார் "ஒருவன் கொடுங்கோல் அரசில் குடித்தனம் செய்தால் வயிற்றுக்கு சோறில்லாமலும் சர்க்கார் அதிகாரிகளின் ஹிம்சையால் மானமிழந்தும் துன்பமடைய வேண்டியதிருக்கிறது"என்று தொடங்கி, மேலும், "குடியான –வனாயிருந்தும் பயிர்த் தொழில் செய்யவோ அநேக தடங்கல்கள் இருக்கின்றன. பட்டத்தில் மழை பெய்யவில்லை. அப்படி மழை பெய்தாலும் உழ எறுதுகள் இல்லை. உழுதாலும் விதைக்க வித்துக்கள் இல்லை. விதை விதைத்தாலும் களைகளை சரியான காலத்தில் எடுத்துப் பயிர் அடித்துக் காவல் காத்து மகசூலை அறுவடை செய்து வீடு கொண்டு வந்து சேர்த்துச் சுகிக்க ஐவே ஜில்லை. அப்படி வீடு கொண்டு வந்து சேர்த்துப் பலனை அனுபவிக்கவும் இடமில்லை. ஏனென்றால் சர்க்கார் தீர்வைக்கே தானிய தவசங்களைக் களத்தில் விற்று விட வேண்டியிருக்கிறது என்று பாரதி அக்காலக் குடியானவர்களுடைய நிலையைப் பற்றி எழுதுகிறார்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் பாரதியார் காலத்திலிருந்து பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் பெரும்பாலான

விவசாயிகளின் வாழ்க்கை நிலைமைகளில் அதிகமான அபிவிருத்தி ஏற்படவில்லை. அதற்கு வேறு பல காரணங்களும் குவிந்து விட்டன.

சுதேசி மன்னராட்சி முறை, ஜமீன்தாரி முறை ஆகிய ஆங்கிலேய ஆட்சியினர் உருவாக்கிய நிலப்பிரபுத்வ முறை நீக்கப் பட்டது. விவசாயிகள் நேரடியாக அங்கெல்லாம் நிலத்தின் உரிமையாளர்களாகியிருக்கிறார்கள். பல அணைகள் புதிதாகக் கட்டப் பட்டு நீர்ப்பாசன ஏற்பாடுகள் அதிகரித்துள்ளன. பெரும்பாலான கிராமங்களுக்கு மின்சாரம் வந்து விட்டது. கிராமம் தோறும் பல இடங்களிலும் டிராக்டர்கள் போன்ற நவீன உழவு கருவிகளும் எந்திரங்களும் வந்து விட்டன. ரசாயன உரங்கள் பழக்கத்திற்கு வந்து விட்டன. கிராமம் தோறும் விவசாயிகளின் கூட்டுறவு நாணய சங்கங்கள் வந்துள்ளன. கிணறுகளிலிருந்து நீர் இரைக்க விவசாய பம்பு செட்டுகள் வ்ந்துள்ளன. விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளது. பணப் புழக்கமும் ரூபாய் அளவில் அதிகரித்துள்ளது. ஆயினும் கிராமப்புற மக்களின் குறிப்பாக விவசாயிகளின் கஷ்டங்கள், கடன்கார நிலை மாறவில்லை. பெரும்பாலான விவசாயிகள் கடன் சுமையால் கடுமையாக பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். விவசாயச் செலவுகள் அதிகரித்துள்ளன. விவசாய உற்பத்திப் பொருள்களுக்குப் போதுமான விலையில்லை. அதனால் விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கவில்லை. கடன்கள் தீரவில்லை. ஏழ்மையும் வறுமையும் போகவில்லை. விவசாயத் தொழில் கட்டுபடியாகவில்லை. அதற்கான காரணங்களை ஆராய வேண்டியதிருக்கிறது. விவசாயப் பொருளாதாரத்தைப் பற்றித் தனி ஆய்வு தேவைப்படுகிறது.

ஒரு காரணம் வறட்சியும் வெள்ளமும் தொடர்கிறது. இந்த இரண்டு அசுரர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும். குறிப்பாக அதிகமாக பாதிக்கப்படும் விவசாயிகளைக் காப்பாற்ற முன்னுரிமை கொடுக்க வேண்டும். ரசாயன உரம் அதிகரித்து

இயற்கை உரம் குறைந்து நிலத்தின் சாரம் பாதிக்கப் பட்டிருக்கிறது. கடனுக்கு வட்டியும் கூடுதல் வட்டியும் அதிகரித்து வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலை பெரும்பாலான விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. விதைகளில் பழைய பாரம்பரியமான இந்த மண்ணுக்கேற்ற விதைகள் மறைந்து போயின. விதை உற்பத்தி விதை வினியோகம் பற்றி புதிய முயற்சிகள் புதிய கொள்கை தேவைப்படுகின்றன.

நாடு விடுதலை அடைந்த பின்னர் விவசாயத்துறை ஆராய்ச்சி அதிகரித்துள்ளன. விவசாயக் கல்லூரிகள், விவசாயப் பல்கலைக் கழகங்கள், விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள், விதைப் பண்ணைகள், பால், முட்டை, பழச்செடிகள், மலர் உற்பத்தி காய்கறி உற்பத்தி அதிகரித்துள்ளன. நமது நாட்டு ஆராய்ச்சி அதிகரித்து புதிய க்ண்டு பிடிப்புகள் வந்துள்ளன. விஞ்ஞான்க் கண்டு பிடிப்புகளுக்கும் விவசாயிகளின் சாகுபடித் தொழிலுக்கும் நேரடியான தொடர்பும் இணைப்பும் ஏற்பட வேண்டும்.

நமது நாட்டின் இன்றைய கணக்குப் படி நிலமுள்ள விவசாயிகளில் குறு, சிறு, நடுத்தர விவசாயிகள்தான் அதிகம். இவர்களுடைய பொறுப்பில் சாகுபடியில் நாட்டில் மொத்தமுள்ள நிலத்தில் எண்பது சதவீதத்திற்கும் மேல் இருக்கிறது. எனவே இந்த குறு, சிறு, நடுத்தர விவசாயிகளின் நில உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு விவசாய உற்பத்தியைப் பெருக்க, விவசாயப் பொருளாதாரத்தில் கிராமப் பொருளாதாரத்தில் அபிவிருத்தி காணுவதற்கான முறையில் விவசாயக் கொள்கை அமைய வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக விவசாயிகளின் விளை பொருளுக்குக் கட்டுபடியாகும் விலை இல்லாமை தான் முக்கியமான பிரச்னையாக உள்ளது. அதுதான் இன்றைய நிலையில்

விவசாயிகளின் வறுமைக்கு முதல் காரணமாக இருக்கிறது. எனவே விவசாயம் ஒரு தொழில் என்னும் முறையில் கட்டுபடியாகவில்லை. கிராமப்புற மக்களின் கடன் சுமை, கடன் பளு கழுத்தை நெறிக்கிறது. எனவே இன்றைய விவசாயத்துறை பற்றி விவசாய உற்பத்தியைப் பெருக்குவது பற்றித் தனியாக ஆய்வு செய்ய வேண்டும். நாட்டின் முதல் நிலை உற்பத்தியில் அபிவிருத்தி காண்பதற்கான முயற்சிகள் தனி முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும். இதில் காடுகள் வளர்த்தல், பழம், மலர், தென்னை உற்பத்தியைப் பெருக்குதல், கால்நடைகளைப் பெருக்குதல் ஆகியவைகளிலும் அதிக கவனம் எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்துப் போலீஸைப் பற்றி பாரதி மிக நுட்பமான வாக்கியங்களில் ஒரு கருத்தை எடுத்துக் கூறியுள்ளார். நாட்டில் திருடு, வழிப்பறி ஆகியவை நடை பெறுவது பற்றிக் குறிப்பிட்டு விட்டு பாரதி பேசுகிறார்.

"பிரயாணிகளோ, ஆங்கிலேயர் ஆசீர்வாதத்தால், நிராயுத பாணிகளாய் இருக்கிறார்கள். போலீஸ் என்ற உள்நாட்டுக் காவற் காரரோ, சம்பளம் சொற்பமானதாலும் அந்நியர் அரசாட்சி தங்கள் தயவின்றி நடவாது என்ற நம்பிக்கையாலும், தாங்களே திருடத் தயாராக இருக்கிறார்கள். கொள்ளைக் கூட்டத்தாரோடு "எக்கிரிமென்ட்" (உடன் படிக்கை) செய்து கொண்டு அவர்கள் கொள்ளையில் ஒரு பங்கு பெற்றுக் காலத்தைத்தள்ளக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று பாரதி குறிப்பிடுகிறார். இது ஒரு நிஜத்தை வெளிப்படுத்திக் கூறும் கருத்தாகும். இதில் ஆங்கில ஆட்சிக்கு ஒரு அத்தாட்சி அமைந்துள்ளது.

கடந்த ஐம்பது ஆண்டு காலத்தில் அதாவது ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து நாடு சுதந்திரம் பெற்ற பின்னரும் காவல்துறை மாநில அரசுகளின் பொறுப்பில் தான் உள்ளது. காவல் நிலையங்களும்

மாநில அரசுகளின் பொறுப்பில் தான் உள்ளன. காவலர்களின் சம்பளம் உயர்த்தப் பட்டிருக்கிறது. வீட்டு வசதி முதலிய வசதிகள் அதிகப் படுத்தப் பட்டுள்ளன. தனிப்பட்ட சிலர் நல்லவர்களாகவும் திறமையானவர்களாகவும் இருக்கிறார்கள். பல சீர்திருத்தங் –களுக்கும், போலீஸ் – பொதுமக்கள் நல்லுறவுக்கும் சில முயற்சிகள் நடந்துள்ளன. ஆயினும் ஆங்கிலேயர் ஆட்சி காலத்துப் போலீஸிலிருந்து, அடிப்படையில் பெரிய குணமாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தென்படவில்லை. நாட்டில் நடைபெறும் குற்றங்களில் சரி பாதிக்கு மேல் போலீஸ் அக்கிரிமெண்டுடன் நடை பெறுகின்றன என்னும் தீர்ப்புகளில் உண்மை இருக்கின்றன. அத்துடன் நாட்டில் உள்ள கிரிமினல்கள் காவல் துறையினர், அரசியல் வாதிகள் ஆகியோரின் கூட்டாட்சியும் நடைபெறுகிறது.

ஆங்கிலேயர் ஆட்சி காலத்திய வரிக்கொள்கையை உருவகப் படுத்தி அதன் கொடுமைகளை பாரதி விவரித்துக் கூறுகிறார்.

“தன்னைப் பகலில் கொள்ளையடித்த சாவுகாரனையும், லேவாதேவி செய்யும் நிஷ்கண்டகனையும் ஏன் இரவில் கொள்ளையடிக்கக் கூடாது என்று தன்னைத் தானே கேட்கலானான் என்றும்,” இன்னும் “குனிந்தால் வரி, நிமிர்ந்தால் வரி, நின்றால் வரி, உட்கார்ந்தால் வரி, நில வரி, நீர் வரி, பாசி வரி, ரோட்டு வரி, காட்டு வரி, வீட்டு வரி, மோட்டு வரி, கொடுக்கல் வரி, வாங்கல் வரி, வருமான வரி, தொழில் வரி, டோல்கேட் வரி, ரயில் வரி, சாக்கடை வரி, சாராயக்கடை வரி, மாட்டு வரி, நாய் வரி, பூனை வரி, இறக்குமதி வரி, ஏற்றுமதி வரி, இன்னும் எண்ணமுடியாத வரிகளைப் போட்டு வீடு, வாசல், கதவு, நிலை, ஆடு, மாடு, சட்டி, பெட்டி இவைகளை ஜப்தி செய்து ஏலம் கூறிக் கொள்ளை அடித்துப் போகும் சர்க்கார் பணத்தை நாம் ஏன் திரும்பக் கொள்ளையடிக்கப் படாது? என்ற கேள்வியும் அவனுக்கு உண்டாகிறது?” என்று பாரதி

வரிக் கொடுமைகளைப் பற்றியும் ஜப்திக் கொடுமைகளைப் பற்றியும் எழுதுகிறார். ஆட்சியின் கொடுமைகள் அளவுக்கு மீறிப் போகும் போது அந்த அன்னிய ஆட்சிக்கு எதிரான நமது கோபமும் அளவுக்கு மீறிப் போகிறது.

"ஒரு கொள்கையாவது, பகுத்தறிவின் துணையால், செய்யத் தக்கது இது செய்யத் தகாதது இது என்று ஒருவன் அறிந்து முன்பின் யோசித்துத் தன் வாழ்நாளில் நீடித்துச் செய்ய மனத்தால் ஒப்புக் கொள்ளும் கருமத் தொடரின் அஸ்திவாரமாகிய ஒரு கருத்தாம். நம் நாட்டில் இவ்வாறு கொள்கைகளைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளும் சக்தி வாய்ந்த மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் கொள்கைகளை அவரோடு மனத்தால் கிரகித்தல் வேறு. அவற்றின் படி நடத்தல் வேறு. யாதேனும் ஒரு கொள்கையை ஒருவன் ஆங்கீகரித்துக் கொண்டு அத்ன்படி நடக்க முடியாதவனாக இருந்தால் அவனும் ஜீவப்பிரேதம் தான்" என்று கொள்கை பற்றி பாரதி அக்கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

இன்னும், "தான் குடிக்கும் காப்பிக்காகவும், தான் தின்னும் சோற்றிற்காகவும் தான் உடுக்கும் ஆடைக்காகவும் ஒருவன் தன்னுடைய அருமையான கொள்கைகளைக் கை விடுவானானால் அவனை மானிடரில் எந்த வகுப்பில் நாம் சேர்க்கலாம்? அவனினும் பதரான மனிதன் ஒருவனும் இருக்க முடியாது. அவன் சம்மந்தப் பட்ட மட்டில் கொள்கைக்கும், செய்கைக்கும் வெகு தூரம் உண்டு" என்று பாரதி குறிப்பிடுகிறார்.

அடுத்து சுதந்திர உணர்வின் வேகத்தோடும், அதற்கான கொள்கை பற்றி எடுத்துக் கூறி பாரதி பேசுகிறார்.

பாரத தேசத்தோராகிய நாம் சகலவிதமான சுதந்திரங் –களையும் இழந்து எங்கேயோ இருந்து வந்த ஒரு வெள்ளை நிற

ஜாதியருக்கு அடிமைப்பட்டிருக்கிறோம். நாம் முப்பது கோடி ஜனங்கள். அவர்கள் இரண்டு லட்சம் கூட இல்லை. உலகத்தோர் எல்லோரும் இதை எங்கும் எக்காலத்திலுமில்லாத அற்புதம் என்று நினைக்கிறார்கள். இதனால் உலகத்தில் உள்ள மற்ற ஜாதியார்கள் நம்மை (முப்பது கோடி அல்லது மூவாயிரம் லட்சம்) ஜனங்களையும் அடக்கியாளும் ஆங்கிலேயர்களை மகாவீர சூரர்கள் என்றும் ஒப்பற்ற பலிஷ்டர்கள் என்றும் ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் அதற்கு பதிலாய் நம்மிடத்தில் அவர்களுக்கு அவ்வளவுக்கு அவ்வளவு வெறுப்பும் மதிப்புக் குறைவும் ஏற்பட்டு விடுகின்றன. இந்தியன் எங்கே போனாலும் நிந்திக்கப்படுகிறான். யாரும் நம் மீது காறித் துப்புகிறார்கள். உலகத்தோர் இந்த இந்தியர் என்ற ஆடுகளை, ஆங்கிலேயர் மட்டுமல்ல வேறே எந்த ஜாதியாரும் இலேசாக ஆளலாம் என்று நம்பியிருக்கிறார்கள். அப்படியிருக்க நாம் மிகுந்த அந்தஸ்துகளைப் பாராட்டினால் அது ஒவ்வா ஒழுக்கம். நாம் சுயாதீனம் அடைந்த பிறகு மீசை முறுக்கலாம். இப்பொழுது வீண் டம்பங்கள் செய்தால் எல்லோரும் நகைப்பார்கள்.

நம்மில் ஒவ்வொரு புருஷனும் ஒவ்வொரு ஸ்திரியும் ஏற்றுக் கொள்ள வேண்டிய கொள்கை ஒன்றே தான் உண்டு. அதாவது நம்முடைய அருமை நாட்டில் சுயாதீனத்தை நாட்டி, பிறர் அஞ்சி மதிக்கும் படியாக நாம் ஜீவிக்க வேண்டியது. இந்தக் கொள்கைப் படி நடக்க என்ன இடையூறுகள் வந்தாலும் அவற்றை நாம் விலக்கிக் கொண்டு போக வேண்டும். இந்தக் கொள்கையைக் கடைப் பிடித்து நடப்பதில் எவ்விதமான சுகத்தையும் மரியாதையையும் அந்தஸ்தையும் இச்சிக்கப் படாது. வீடு வாசல் மனைவி மக்கள் எல்லோரையும் இழக்கும் படி நேர்ந்தாலும் இழந்தே தீர வேண்டும்.

"மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார் கண் துஞ்சார்,
எவ்வெவர் தீமையும் மேற் கொள்ளார் – செவ்வி

அருமையும் பாரார், அவ மதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்"

என்ற மூதுரைக்கு இணங்கியே நாம் நடக்க வேண்டும். இவ்வாறு நடக்க முடியாதவன் தான் பேடி என்று ஒப்புக் கொண்டு பின்னடைய வேண்டும். நானும் சுவராஜ்யக் கொள்கையுள்ளவன் என்று முன் வந்து நிற்க வேண்டாம்.

சுதந்திரக் கொள்கையுடையவன் தன் ஆத்மாவைத் தவிர்த்து மற்ற எல்லாவற்றையும் இழந்து விடச் சித்தமாயிருக்க வேண்டும். ஹே, பாரதா, சோம்பர் உள்ளவனுக்கு எவ்விதக் கொள்கையும் ஏற்காது. மழையென்றும், வெயிலென்றும், காற்றென்றும், பசியென்றும், தியாகமென்றும், நித்திரையென்றும், பாராட்டாதே. இந்தச் ச்ரீரமே அநித்யம் என்றால் அதையொட்டிய அவஸ்தைகள் நித்தியமாகுமா? இந்திரிய அவஸ்தைகளுக்கு அஞ்சியாவது, இந்திரிய சுகங்களைக் கோரியாவது தேசிய தர்மத்தைக் கை விடாதே. பிரம்மமே நித்தியம். சத்தியமே ஜெயம். நீயும் அடிமைத் தனத்திலிருந்து நீங்க வேண்டும். உன்னுடைய ஜய பேரிகையை அடித்துக் கொண்டு உலகத்தில் எந்த பாகத்தில் யார் யார் அடிமைப்பட்டிருக்கிறார்களோ அவரவரை விடுவிக்க வேண்டும். உன் செயலால் பாரத மாதா முன்போல உலகத்திற்குத் திலகமாய் ஜ்வலிக்க வேண்டும். இந்தக் கொள்கைகளைக் கை விடாதே, கை விடாதே கை விடாதே, முக்காலும் சொன்னோம் வந்தே மாதரம் என்று மகாகவி தனது கட்டுரையை முடிக்கிறார்.

பாரதியாரின் இந்தக் கட்டுரை சற்று நீளமானது என்று கூறலாம். இதன் உரைநடை பேச்சு வழக்கில் சரளமாக அமைந்துள்ளது. இக்கட்டுரையில் பாரதி அக்காலத்தில் நிலவிய சில முக்கியமான செய்திகளை எடுத்துக் கூறுகிறார்.

உலகில் ஒவ்வொருவரும் தனக்கொரு கொள்கையை உடையவராக இருக்க வேண்டும். ஒரு நியாயம், ஒரு தர்மம், ஒரு மதம் ஆகிய ஒன்றில் விசேஷப்பற்று கொண்டிருக்க வேண்டும். கொள்கையில்லாதவன் மனிதப் பதர் என்பது பாரதியின் கருத்து.

அவர் காலத்தில் விவசாயிகள் தங்கள் சாகுபடித் தொழிலைச் செய்வதில் உள்ள கஷ்டங்களையும் நஷ்டங்களையும் தெளிவாக உள்ளம் நெகிழும் படி பாரதி எடுத்துக் கூறுகிறார். ஒரு விவசாயி, தான் செய்யும் தொழிலில் நஷ்டப்பட்டு அதைச் செய்ய முடியாமல் கொள்ளை, வழிப்பறித் தொழிலுக்கு மாறுவதாகக் கூறுகிறார். இந்த சொற்கள் விவசாயத் தொழிலில் உள்ள கஷ்டங்களின் தீவிரத்தை கொடுமையான துன்ப துயரங்களை எடுத்துக் காட்டுகிறது.

போலீஸ்காரர்களும், திருடர்கள் மற்றும் கொள்ளைக் கூட்டத்தாரோடு கூட்டுச் சேர்ந்து கொண்டு கொள்ளையில் பங்கு போட்டுக் கொள்ளும் கொடுமையைப் பற்றிக் கூறுகிறார். இது ஒரு நிஜமான செய்தியாகும். இப்படிப் பட்ட ஒரு காவல் துறையை வைத்துக் கொண்டுதான் நாட்டு மக்களை அச்சுறுத்தி ஆங்கிலேயர்கள் தங்கள் ஆட்சியை நீடித்துக் கொள்ள விரும்பினார்கள் என்று தெரிகிறது.

அந்நிய ஆட்சியின் வரிக் கொடுமைகளை அவலச் சுவையுடன் சுட்டிக் காட்டுவது நமது உள்ளத்தை உலுக்குகிறது. நமது சிந்தனையைக் கிளறுகிறது. அந்நிய ஆட்சியின் வரிக் கொள்கை முறைதான் தொடர்ந்து நீடிக்கிறது. நமது நாட்டின் வரிக் கொள்கை முறையை மாற்றியமைத்திட வேண்டும் என்பது பல அறிஞர்கள் அனுபவசாலிகளின் கருத்தாக உள்ளது.

கொள்கை என்றால் என்ன என்பது பற்றி பாரதி ஒரு நல்ல விளக்கத்தைக் கொடுக்கிறார். கொள்கைக்கும் செய்கைக்கும் இருக்க வேண்டிய இணைப்பைப் பற்றிக் கூறுகிறார்.

வெறும் கொள்கையைக் கூறி ஏமாற்றுபவர்களைச் சாடுகிறார். ஏமாறுபவர்களையும் கண்டனம் செய்கிறார். பாரதியார் தன் காலத்தில் காங்கிரஸ் கட்சியில் இருந்த மிதவாதிகளையும், நடிப்பு சுதேசிகளையும் மனதில் வைத்து இதை எழுதுகிறார் போலும். பாரதியாருடைய இந்தக் கருத்துக்கள் இக்கால போலி அரசியல் வாதிகளுக்கும் அவர்களுடைய தேர்தல் வாக்குறுதிகளுக்கும் கொள்கை அறிவிப்புகளுக்கும் பொருந்தும்.

கடைசியாக நாம் சுதந்திரம் பெறுவதற்காக அத்தனை தியாகங்களையும் செய்யவும் தயாராக இருக்க வேண்டும் என்று நமக்கு உணர்ச்சியூட்டுகிறார். நமது நாட்டின் விடுதலைக்காகப் போராடுவது மட்டுமல்ல. உலகில் அடிமைப்பட்டுள்ள நாடுகளெல்லாம் சுதந்திரம் பெறுவதற்கு பாரதம் பாடுபட வேண்டும் என்றும், உலகம் முழுவதும் விடுதலை பெற்று ஒரு சுதந்திர உலகம் ஏற்படவேண்டும் என்று பாரதி அழுத்தமாகக் கூறுகிறார். இந்தக் கட்டுரைக்காகப் பாரதியைப் பல முறை பாராட்ட வேண்டும். பாரதி வாழ்க.

✡ ✡ ✡

16.இந்துக்களின் சிறப்பு:

"அட்டுற யார் மாட்டும் நில்லாது
செல்வம் சகடக்கால் போல வரும்."

என்று நாலடியார் பாடல் குறிப்பிடுகிறது என்று அதை சுட்டிக் காட்டி பாரதியார் மேலும் கூறுகிறார்.

லக்ஷிமிதேவி எந்த இடத்திலும் ஒரே நிலையாக நிற்பது வழக்கமில்லை. செல்வமும் அதனால் உண்டாள பெருமையும் ஒரு கூட்டத்தாருக்கிடையே குறைவு படும்போது உட்பொறாமையும் மாற்சரியமும் வெளிப்பட்டு அவை தலை தூக்கி ஆடுகின்றன. உலக சரித்திரத்தை அறிவுடன் படித்த புத்திமான்கள் இதனை நன்றாக அறிவார்கள்.

ஆனால் இவ்விஷயத்தில் கூட மற்ற தேசத்தாரைக் காட்டிலும் ஹிந்துக்கள் மேல் என்று எனது விசாரணையில் தென் படுகிறது. ஏனென்றால் ஹிந்துக்களிடம் தெய்வ பக்தி என்ற சிறந்த குணம் மற்றெல்லா தேசத்தாரைக் காட்டிலும் அதிகம் என்பதை மேற்குப் பக்கத்துப் பண்டிதரிலே கூடப் பக்ஷாபாதமற்ற பல யோக்கியர் கண்டு பிடித்துச் சொல்லியிருக்கிறார்கள். தெய்வ பக்தியால் ஜீவதயை உண்டாகிறது.

"எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"

என்று தாயுமானவர் நமது தெய்வ பக்தியின் உண்மையை விளக்கினார்.

பாரதி மேலும் கூறுகிறார்.–

"சென்ற கார்த்திகை மாதம், புயற் காற்றடித்தது பற்றி தென்னாற்காடு

ஜில்லாவைச் சோதனை செய்த சர்க்கார் அதிகாரியான ஓர் ஆங்கிலேயர் தம்முடைய அறிக்கையில் ஹிந்து ஜனங்களுடைய விசேஷ ஜீவதயை, அதிதீசத்காரம் என்ற குணங்களை மிகவும் புகழ்ந்து பேசியிருக்கிறார். காற்றடித்த இரவில் சில வைதீக பிராமணர் தமது வீட்டிற்குள் பறையர் வந்திருக்க இடம் கொடுத்ததாகப் பத்திரிகைகள் கூறின. ஏழைகளாக நம்மைச் சூழ்ந்திருப்போர் சிவனுடைய கணங்கள் – நாராயணனுடைய மக்கள், முருகனுக்குத் தோழர், சக்தியின் அவதார ரூபம், பரமசிவன் சண்டாள ரூபத்துடன் சங்காராச்சாரியாருக்கு சமத்துவ ஞானத்தை ஊட்டினார். ஸ்ரீரங்கத்தில் எம்பெருமான் கடைக் குலத்தவராகிய திருப்பாணாழ்வாரை பரிசாரக வேதியன் முதுகிலே சுமந்து கொண்டு வந்து தனது கர்வ நோயைத் தீர்த்துக் கொள்ளும் படி கட்டளையிட்டருளினார்.

சந்திரனில் ஒரு களங்கம், *ஆனால் தீர்க்கக் கூடியது.*

சந்திரனுக்குள் ஒரு களங்கம் இருப்பது போல் இப்போது நமது கூட்டத்தில் ஒரு களங்கம் இருக்கிறது. ஆனால் பூத சந்திரனில் உள்ள களங்கத்தை அது தானே மாற்றிக் கொள்ளாது. ஞான சூர்யராகிய ஹிந்துக்கள் தமக்குள்ள குறையை விரைவாக நீக்கி வருகிறார்கள். அந்தக் களங்கமாவது நமது ஜாதிக் கட்டிலுள்ள சில வழக்கங்கள். மறுபடி தெய்வத்தை நம்பி எல்லோரும் இன்புற வேண்டி குண கர்மங்களால் வர்ணநிச்சயம் செய்து கொண்டு பூமண்டலத்துக்கு ஞானோபதேசம் செய்யும் பொருட்டாக பாரத தேவி தனது பத்மாசனத்தில் வீற்றிருக்கிறாள். காலம் ஹிந்துக்களின் சார்பில் வேலை செய்கிறது. தேவர்கள் எல்லோரும் ஹிந்துக்களை கை தூக்கிவிடப் புறப்பட்டிருக்கிறார்கள். பரமாத்மா ஒன்று. அவனுக்கு ரிஷிகள் பல பெயர் சொல்லிப் போற்றுகிறார்கள் என்று வேதம் சொல்லுகிறது.

"பேரானந்தம் பேசி மறையனந்தஞ்சொலும்,
பெரிய மௌனத்தின் வைப்பு"

என்று தாயுமானவர் காட்டினார்.

இராமகிருஷ்ணர் இதையே சொன்னார். இந்த உண்மை ஹிந்துக்களுடைய புத்தியில் வேரூன்றி விட்டது. எனவே கலி நீங்கி விட்டது என்று பாரதி தனது கட்டுரையில் கூறுகிறார்.

லக்ஷிமி தேவி எந்த இடத்திலும் ஒரே நிலையாக நிற்பது வழக்கமில்லை என்று பாரதி குறிப்பிடுவது தனி நபருக்கு மட்டுமல்ல ஒரு நாட்டிற்கும் பொருந்தும். ஆயினும் நாடுகளில் அதன் இயற்கை வளம், மனித வளம் ஆகிய இரண்டும் சிறப்பாக இருக்கும் போது அதன் செல்வத்தின் சராசரி நிலைக்கு எப்போதும் குறைவில்லை. அதற்குள்ள ஒரே நிபந்தனை அதன் சுதந்திரமேயாகும். பாரதம் அவ்வாறு சிறந்த இயற்கை வளமும் மனித வளமும் நிறைந்த நாடாகும். இது செல்வ வளம் மிக்க நாடாகும். ஆயினும் இது இப்போது ஏழை மக்களைக் கொண்டிருக்கிறது. இந்த ஏழ்மைக்குக் காரணம் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக நாம் அனுபவித்த ஆக்கிர மிப்புகளும், படையெடுப்புகளும், துன்ப துயரங்களுமேயாகும். பாரத நாடு திருமகளின் பிறப்பிடம். நமது நாட்டு மக்களின் உழைப்புத் திறனுக்கு ஈடு இணையே இல்லை. ஆயினும் நமது மக்களுக்கு சில சமயங்களில் கும்பகருணத் தூக்கம் ஏற்பட்டு விடுகிறது. இப்போது அந்த சாபம் நீங்கி விட்டது. நாம் சுதந்திரம் புதிய சுதந்திரத்தைப் பெற்று விட்டோம். நமது மக்களின் உழைப்பின் திறத்தால் நமது நாட்டை மட்டுமல்ல உலகின் பல நாடுகளையும் வளப்படுத்தியிருக்கிறோம். உடல் உழைப்பாளர் மட்டுமல்ல. தேயிலைத் தோட்டங்களிலும் கரும்புத் தோட்டங்களிலும் மட்டுமல்ல. இக்காலத்தில் நமது தொழில் நுட்ப நிபுணர்கள், அறிவுச் செல்வர்கள், விஞ்ஞானிகள், எஞ்சினியர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள்,

பேராசிரியர்கள், வர்த்தகர்கள் இவ்வாறு பலவேறு துறை நிபுணர்களும் இல்லாத நாடில்லை. இல்லாத தொழில்களும் பல்கலைக் கழகங்களும் இல்லை.

நமது நாட்டு மக்களில் பெண்களுடைய உழைப்பும் "பஞ்சமர்கள்" "சூத்திரர்களின்" உழைப்பும் தனிச் சிறப்பு மிக்கது. இவர்களின் உழைப்பு இல்லாதிருந்தால் இந்த நாடு எப்போதோ செத்திருக்கும். இவர்கள் இந்திய நாகரிகம் உறுதியுடன் நிற்பதற்கான வலுவான வைரத் தூண்களாகும். அனைத்து தொழில்களிலும் பெண்கள் பாதி. விவசாயத்தில் உழவும் சீரமைப்பும் ஆண்கள் பணியென்றால், நடுகையும், களையெடுப்பும், பெண்கள் அறுவடை இருவரும் சேர்ந்து நெசவுத் தொழிலில் பாவும் நெசவும் ஆண்கள் என்றால் தார் சுற்றுவதும், கண்டு சுற்றுவதும் பெண்கள், கடலுக்குள் சென்று மீன் பிடித்தலில் மீன் பிடித்தல் ஆண்கள் என்றால் அதை சுமந்து சென்று விற்பனை செய்வது பெண்கள், கால்நடை பராமரிப்பில் ஆடு, மாடு மேய்த்தல் மற்றும் பராமரித்தல் பணிகளில் ஆண்கள் என்றால், பால் கறத்தல், தயிர், மோர், வெண்ணெய், நெய் தயாரித்தல் அவைகளை விற்பனை செய்தல் பெண்கள் இவ்வாறு பல தொழில்களிலும் சரிபாதி பெண்கள் பணியாற்றுகிறார்கள். அத்துடன் பெண்கள் வீட்டு வேலைகளையும் குழந்தைகள் பராமரித்தலையும் கவனித்துக் கொள்கிறார்கள்.

இன்னும் நாடு விடுதலை பெறுவதோடு நமது நாட்டுப் பெண்களும் நமது பஞ்சமர்கள், சமுதாயத்தின் களங்கம் நீங்கி முழு விடுதலை பெறுவார்களானால் நமது உழைப்பின் திறன் மும்மடங்கு அல்ல பல மடங்கு பெருகும். பொலிவு பெரும். வையத் தலைமையை பாரதம் அடைய முடியும்.

✡ ✡ ✡

17.ராகவ சாஸ்திரி கதை:

ராகவ சாஸ்திரி கதை பாரதியார் எழுதியுள்ள ஒரு அற்புதமான கதை. ராகவ சாஸ்திரி ஒரு மலையாளி. அவர் தன்னை தீயர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று கூறிக் கொண்டார். நாடெல்லாம் சுற்றி சமஸ்கிருதம் மற்றும் இதர இந்திய பாஷைகளைக் கற்றுக் கொண்டவர். அவர் காளிதாஸரிடம் (பாரதி) வந்து.

"எனக்கு விவாஹம் ஆகவில்லை. தனி மனிதன். வேறு பந்துக்களும் இல்லை. ஆதலால் எவ்விதமான குடும்ப பாரமும் கிடையாது. போஜனத்துக்குப் பூர்வீக சொத்து கொஞ்சம் இருக்கிறது. ஆதலால் என் காலத்தை தேசத்துக்காக உழைப்பதிலே செலவிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிருக்கிறது. தேசத்துக்கு எவ்விதமான கைங்கரியம் பண்ணலாம் என்பதைத் தங்களிடம் கேட்டுக் கொண்டு போகலாம் என்ற நோக்கத்துடன் இந்த ஊருக்கு வந்தேன்" என்று சொன்னார். நாட்டுக்கு உழைக்க வேண்டும் என்னும் கருத்தை பாரதியார் இங்கு மிகவும் அழுத்தமாகக் கூறுகிறார். ராகவ சாஸ்திரியுடன் நடைபெறும் உரையாடலில் பாரதி அழுத்தமான சில அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார். அதை நாம் அடிக்கோடிட்டுக் கொள்ள வேண்டும்.

பாரதி மலையாள சாஸ்திரியிடம் "நீர் உலகத்துக்கு என்ன விதத்திலே உபகாரம் பண்ண முடியுமென்பது உம்முடை [illegible] வர்த்தமானங்களையும் உம்முடைய திறமைகளையும் பொறுத்து விஷயம்" என்று சொன்னார். அதற்கு அந்த சாஸ்திரி [illegible]:-

ஜாதி பேதம் கூடாது. அதற்கு நமது பூர்வ சாஸ்திரங்களில் ஆதாரம் இல்லை. ஆணும், பெண்ணும் சமானமாம். யாரும் யாரையும் அடிமையாக நடத்தக் கூடாது. இன்று நாம் பிறரை அடிமையாக

நடத்தினால் நாளை நம்மையேனும் நம்முடைய மக்களையேனும் பிறர் அடிமையாக நடத்துவார்கள். ஹிந்துக்கள் சட்டத்தை உடைக்காமல், இரவிலும், பகலிலும் விழிப்பிலும் தூக்கத்திலும் கனவிலும் எப்போதும் ஸ்வராஜ்யத்திற்குப் பாடுபட வேண்டும். விடுதலையில்லாதவர் எப்போதும் துன்பப்படுவார்கள். இது போன்ற விஷயங்களை ஊரூராகப் போய் உபந்யாசம் செய்தால் என்ன? தாங்கள் உத்தரவு கொடுத்தால் நான் இந்தக் காரியம் செய்யக் காத்திருக்கிறேன்" என்று இராகவ சாஸ்திரி சொன்னார்.

எளிய சொற்களில் வலுவான அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்களை பாரதி தெளிவாகத் தனது உரை நடையில் எடுத்துக் கூறுகிறார். பாரதியின் கருத்தில் சுதந்திரம் என்றால் அங்குயாரும் அடிமையில்லை. அங்கு ஜாதி கிடையாது. ஆணும், பெண்ணும் சமம். சட்டத்தை உடைக்காமல் அமைதியான வழியில் சுதந்திரப் போராட்டம் நடை பெற வேண்டும். இந்தக் கருத்தை மக்களிடம் விரிவாக எடுத்துக் கூறி அவர்களிடம் சுதந்திரம் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும் என்று தனது கருத்தை வெளிப்படுத்துகிறார்.

இந்த உரையாடலில் இராமராயர் குறுக்கிட்டு, "காளிதாஸர் சக்தி உபாசனை செய்து கொண்டிருக்கிறார். அரசியல் விவகாரங்களை சென்னையிலும் இதர நகரங்களிலும் உள்ள புகழ் பெற்ற ஜனத்தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் போய்த் தெரிந்து கொள்ளும்" என்று கூறினார். இராகவ சாஸ்திரி அதில் திருப்தி அடையாமல் காளிதாஸரிடம்," எனக்கு என்ன உத்தரவு என்று திரும்பவும் கேட்டார் அதற்குக் காளிதாஸர் கூறுகிறார்.

"கேளீர், இராகவ சாஸ்திரியாரே, சட்டத்திற்கு விரோத மில்லாமல் நீர் சுதேசியம் பேசுவதிலும் மற்றபடி சமத்துவம் விடுதலை

முதலிய தர்மங்களை நீர் ஹிந்துக்களுக்குப் புகட்டுவதிலும் எனக்கு யாதொரு ஆட்சேபமும் கிடையாது. ஆனால் நாம் இப்போது கைக் கொண்டிருக்கும் தர்மத்தை உம்மிடம் சொல்லி விடுகிறேன். சம்மத முண்டானால் அதை இந்தியாவில் மாத்திரமன்று பூமண்டலம் முழுதும் சென்று முரசு அடிக்கக்கடவீர். அந்த தர்மம் யாதெனில், மானுடரே நம்முடைய இஷ்டப்படி உலகம் நடக்கவில்லை. தெய்வத்தின் இஷ்டப்படி உலகம் நடக்கிறது. "தெய்வமே சரண்" என்று நம்பி எவன் தொழில் செய்கிறானோ, அவன் என்ன தொழில் செய்த போதிலும் அது நிச்சயமாகப் பயன் பெறும். மனிதன் தன் உள்ளத்தை தெய்வத்துக்குப் பலியாகக் கொடுத்து விட வேண்டும். அதுவே யாகம். அந்த யாகத்தை நடத்துவோருக்கு தெய்வம், வலிமை, விடுதலை, செல்வம், ஆயுள், புகழ் முதலிய எல்லாவிதமான மேன்மைகளும் கொடுக்கும். இந்தக் கொள்கை நமது பகவத் கீதையில் சொல்லப் படுகிறது. அதனை அறிந்தால் பயமில்லை. ஹிந்துக்களுக்குத்தான் இவ்விதமான தெய்வ பக்தி சுலபம். ஆதலால் ஹிந்துக்கள் தெய்வத்தை நம்பி எப்போதும் நியாயத்தைப் பயமில்லாமல் செய்து மேன்மை பெற்று மற்ற தேசத்தாரையும் கை தூக்கி விட்டாலொழிய இந்த பூமண்டலத்துக்கு நன்மை ஏற்படாது. உலகத்தார் அகங்காரம் என்ற அசுரனுக்கு வசப்பட்டு சகல தேசங்களிலும் நரகத் துன்பத்தை அனுபவிக்கிறார்கள். அஹங்காரத்தை வெட்டி எரிந்து விட்டால் மனித ஜாதி அமரர் நிலையடையும். தன்னை மற, தெய்வத்தை நம்பு. உண்மையே பேசு. நியாயத்தை எப்போதும் செய் எல்லா இன்பங்களையும் பெறுவாய். இப்போது பழைய யுகம் மாறிப் புதிய யுகம் தோன்றப் போகிறது. அந்தப் புதிய யுகம் தெய்வ பக்தியையே மூலாதாரமாகக் கொண்டு நடை பெறப் போகிறது. ஆதலால் அதில் ஹிந்துக்கள் தலைமை பெறுவார்கள். இது சத்தியம். இதை எட்டு திசைகளிலும் முரசு கொட்ட முடியும். இதுவே யான் சொல்லக் கூடிய விஷயம்" என்று காளிதாஸர் கூறி முடித்தார்.

இப்போது பாரதி ஒரு சாதாரணமான புலவர், பத்திரிகையாளர், சிறந்த ஒரு எழுத்தாளர், ஒரு நேர்மையான அரசியல் ஞானி, ஒரு ஆழ்ந்த சிந்தனையாளர், ஒரு கவிஞன், பாரத நாட்டின் பேருருவத்தைத் தனது கவிதைகளின் மூலம் எடுத்துக் காட்டும் ஒரு மகா கவிஞன் என்ற நிலையிலிருந்து ஒரு உயர்ந்த தத்துவ ஞானியாக, மகா ஞானியாகக் காட்சியளிக்கிறார். அவர் வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு சொல்லிலும் உயர்ந்த பொருள் நிறைந்த அருள்வாக்கு நிறைந்திருக்கிறது. இந்த மாபெரும் தத்துவ ஞானியின் ஒவ்வொரு சொல்லும் நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. "தெய்வத்தை நம்பு, உண்மையே பேசு, நியாயத்தைச் செய், எல்லா இன்பங்களையும் பெறுவாய்" என்றல்லவா கூறுகிறார்.

ஆங்கிலேயர்களின் கொடுங்கோலாட்சி பாரதத்தைக் கவ்விப் பிடித்திருக்கிறது,. எட்டியின் விஷமென அது நமது நாடு முழுவதும் பரவி நம்மை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் மட்டுமல்ல இந்த பூமண்டலத்தின் பல நாடுகளிலும் பரவியிருக்கிறது. விடுதலைப் பேரியக்கத்தின் உரத்த குரல் உலகெங்கும் கேட்க வேண்டும் என்று பாரதி சிந்திக்கிறார். எனவே தெய்வ பக்தி மிகுந்த ஹிந்துக்கள் தெய்வத்தை நம்பி எப்போதும் நியாயத்தை பயமில்லாமல் செய்து மேன்மை பெற்று, மற்ற தேசத்தாரையும் கை தூக்கி விட்டாலொழிய இந்த பூமண்டலத்திற்கு நன்மை ஏற்படாது என்று கூறுகிறார்.

மேலும் ஆங்கிலேயர்கள் தங்கள் உலக ஆதிக்கத்தைக் கையில் வைத்துக் கொண்டு அவர்களுடைய பணபலம், வியாபார பலம், பத்திரிகைப் பிரச்சார பலம், வானொலிப் பிரச்சார பலம், ஆட்சி பலம் ஆகியவைகளை வைத்துக் கொண்டு தங்களைப் பெரிய மனிதர்களென உலகிற்குக் காட்டிக் கொண்டு, தங்கள் கொடுங்கோன்மையை மறைத்துக் கொள்கிறார்கள். எனவே

ஹிந்துக்கள் தங்கள் தேச பக்தி, தெய்வ பக்தியின் பலம் கொண்டு, உண்மையை வெளிப்படுத்தி உலகம் முழுவதையும் விழிப்படையச் செய்ய வேண்டும் என்று மகாகவியின் உள்ளுணர்வு பேசுகிறது.

ராகவ சாஸ்திரி ஐரோப்பிய உடை அணிந்திருந்தார். ஐரோப்பிய உடையை மறியாதை மிக்க உடையென்று சில இந்தியப் பெரிய மனிதர்கள் கருதிக் கொண்டிருந்த காலம். இன்றும் கூட அந்த நிலை நீடிக்கிறது. அரசியல் வாதிகள் அமைச்சர்கள் இந்திய உடை அணிந்து கொள்கிறார்கள். அதிகாரிகள் ஐரோப்பிய உடையில் காட்சியளிக்கிறார்கள்.

ஒரு தடவை சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் எழுபதாம் ஆண்டுகளில் டில்லியில் நான் எட்டு முழவேஷ்டியும் முழுக்கைச் சட்டையும் அணிந்து கொண்டு ஒரு உணவு விடுதிக்குச் சென்றிருந்தேன். நான் உணவு விடுதிக்குள் நுழைந்ததும், அதன் உரிமையாளர் எழுந்து நின்று மரியாதை செலுத்தி உள்ளே அமரச் செய்தார். அங்கிருந்த வேலையாட்களும் மிகுந்த மரியாதையுடன் கவனித்தார்கள். நான் சாப்பிட விரும்பியது மசால் தோசையும் நல்ல காப்பியும் தான். அப்போதெல்லாம் மசால் தோசையும் காபியும் டில்லியில் பிரபலமாகியிருந்தது. அதற்கு அதிக மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டிருந்தது. அந்த உணவு விடுதியின் உரிமையாளர் வட இந்தியாவைச் சேர்ந்தவர். லாகூர் பகுதியிலிருந்து டில்லி வந்து குடியேறியவர்.

எனக்குக் கொடுக்கப் பட்ட மரியாதையைக் கண்டு நானும் சிறிது வியப்படைந்து, நானும் உணவு பரிமாறும் வேலையாளிடம் என்ன இவ்வளவு மரியாதை என்று கேட்டேன். ஒரு காலத்தில் வேஷ்டி கட்டிக் கொண்டு போனால் டில்லியில் மதராஸி லுங்கி வாலா என்று கூறுவார்கள். இப்போது இந்த மரியாதை எப்படி வந்தது

என்று கேட்டேன். அந்த வேலையாள் கேரளாவைச் சேர்ந்தவர். என்னிடம் நல்ல தமிழில் பேசினார். சிரித்துக் கொண்டு, அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றிக் கூறினார். சில தினங்களுக்கு முன்பு டில்லியில் ஒரு பெரிய ஓட்டலில் ஒரு சிறப்பு விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு உடை ஒழுங்கு முறை பற்றி ஒரு அறிவிப்பு இருந்தது. ஐரோப்பிய உடை அல்லது இந்திய தேசீய உடை என்று அறிவித்திருந்தார்கள். மத்திய அரசின் ஓர் உயர் அதிகாரி, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் எட்டு முழ ஜரிகை வேஷ்டி முழுக்கைச் சட்டையுடன் வந்தார். அவருடைய துணைவியார் காஞ்சிபுரம் பட்டுப் புடவையில் வந்திருந்தார். அந்த ஹோட்டல் உரிமையாளருக்கு வந்த உயர் அதிகாரி யார் என்று தெரியாது. தென்னிந்திய உடையில் வந்திருந்த அவரைத் தடுத்து நிறுத்தி விட்டார். காரணம் உடை ஒழுங்கு முறை இல்லை என்று கூறினார். அந்த உயர் அதிகாரி தான் உடுத்தியிருந்தது தேசீய உடை என்று கூறி வாதிட்டார். ஹோட்டல் உரிமையாளர் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார். தென்னிந்திய உடை தேசீய உடையாக அக்காலத்தில் டில்லியில் அங்கீகரிக்கப் பட்டிருக்கவில்லை. மனைவியுடன் வந்திருந்த அந்த உயர் அதிகாரிக்கு இது கௌரவப் பிரச்னையாகி விட்டது. கோபம் வந்து விட்டது. உடனே அவர் தொலைபேசியில் போலீஸ் பெரிய அதிகாரிக்கு தகவல் கொடுத்தார். சற்று நேரத்தில் போலீஸ் பெரிய அதிகாரி, பெரிய போலீஸ் படையுடன் போலீஸ் ஜீப் வண்டியில் ஹோட்டலுக்கு முன்பு வந்து இறங்கி விட்டனர். அதற்குள் செய்தி ஹொட்டலுக்கு வந்திருந்த பிரமுகர்களிடம் பரவி விட்டது. அந்தப் போலீஸ் அதிகாரியும் தென்நாட்டைச் சேர்ந்தவர். ஹோட்டல் உரிமையாளர் பயந்து விட்டார். தென்னிந்திய உடை குறிப்பாக தமிழ்நாடு கேரளாவின் வேஷ்டி சட்டை தேசீய உடையாக ஏற்றுக் கொள்ளப் பட்டு விட்டது.

நானும் தமிழ் நாட்டு உடையில் சென்றிருந்ததால் ஹோட்டலில் இருந்த அனைவரும் எனக்குப் பெரிய மரியாதை செலுத்துவதற்கான கதை தெரிந்து விட்டது. இவ்வாறு இந்திய உடைக்கே கூட இந்திய நாட்டிலேயே அங்கீகாரம் தேவைப்பட்டது.

காளிதாஸரிடம் (பாரதியிடம்) பேசிக் கொண்டிருந்த ராகவ சாஸ்திரியிடம் ராமராயர்," முதலில் இந்த ஐரோப்பிய உடுப்பை மாற்றி இந்துக்களைப் போல உடுப்பு போட்டுக் கொள்ளும். அதுவே ஆரம்ப திருத்தம்.

கெல்கத்தாவில் அமிர்த பஜார் பத்திரிகையின் ஆசிரியராகிய ஸ்ரீமான் மோதிலால் கோஷ் அங்கே கவர்னராக இருந்த லார்டு கார் மைக்கேல் என்பவரைப் பார்க்கப் போயிருந்தாராம். உஷ்ண காலத்தில் சீமை உடுப்பைப் போட்டுக் கொண்டு லார்டு கார் மைக்கேல் வியர்த்துக் கொட்டுகிற ஸ்திதியில் இருந்தாராம். அப்போது மோதிலால் கோஷ் கவர்னரை நோக்கி இந்தியாவில் இருக்கும் வரை எங்களைப் போல் உடுப்பு போட்டுக் கொண்டால் இத்தனை கஷ்டமி ராது என்று சொன்னாராம். அதற்கு லார்டு கார் மைக்கேல், "நீர் சொல்வது சரிதான். எங்களுடைய மூடத்தனத்தாலே அவ்வாறு செய்யாமல் இருக்கிறோம்" என்று மறுமொழி சொன்னாராம். அப்படியிருக்க நம்மவர் நம் தேசத்தில் சீமையுடுப்பு மாட்டுவது எவ்வளவு மூடத்தனம், பார்த்தீரா" என்று சொன்னார்.

"இனிமேல் சுதேசி உடுப்பு போட்டுக் கொள்கிறேன்" என்று ராகவ சாஸ்திரி சமஸ்கிருத பாஷையில், சொல்லி விடை பெற்றுக் கொண்டு போய் விட்டார்.

பாரதியின் இந்த வார்த்தைகளை கவனிக்கவும். உடுப்புகள் கூட சதேசியத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியத்தை பாரதி சுட்டிக் காட்டுகிறார். இன்றும் அந்தப் பிரச்னை நீடிக்கிறது.

சுதேசி என்பது சுதந்திரப் போராட்ட காலத்தில் மட்டுமல்ல. இன்றும் நமது நாட்டில் நமக்கு ஒரு சுதேசி இயக்கம் தேவைப் படுகிறது. நமது உடை, நமது உணவு, நாம் உபயோகிக்கும் பொருள்கள், நமது பாஷை நமது பழக்கவழக்கங்கள், நடை உடை பாவனைகள் அனைத்திலும் நாம் சுதேசியத்தை செயல் படுத்த வேண்டும். அதில் நாம் பெருமை கொள்ள வேண்டும். இரண்டு தமிழர்கள் சந்தித்தால் அவர்கள் எங்கு சந்தித்தாலும் தமிழிலேயே சுத்தமான தமிழிலிலேயே பேச வேண்டும். நமது வீட்டிற்கு வரும் விருந்தாளிகளுக்கு நமது உணவையே அளிக்க வேண்டும்.

✡ ✡ ✡

18. பதிவிரதை – பெண்ணுரிமை:

பதிவிரதை என்னும் தலைப்பில் பாரதியார் ஒரு சிறந்த கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் பெண்களின் சம உரிமை பற்றிக் கவிஞர் பேசுகிறார்.

இந்தக் காலத்தில் பல பொய்கள் இடரிப் போகின்றன. பல பழைய கொள்கைகள் தவிடு பொடியாகிச் சிதறுகின்றன. பல அநீதிகள் உடைபடுகின்றன. பல அநியாயக்காரர்கள் பாதாளத்தில் விழுகிறார்கள். இந்தக் காலத்தில் யாருக்கும் பயந்து நாம் நமக்குத் தோன்றுகின்ற உண்மைகளை மறைக்கக் கூடாது" என்றும்,

சில தேசங்களில் அன்னியர் வந்து கொடுங்கோல் அரசு செலுத்துகிறார்கள். அவர்களிடம் அந்த ஜனங்கள் ராஜபக்தி செலுத்த வேண்டும் என்றும் அங்ஙனம் பக்தி செய்யாவிட்டால் சிறைச் சாலையிலே போடுவோம் என்றும் சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட ராஜ்யத்தை உலகத்து நீதிமான்கள் அவமதிக்கிறார்கள்.

அந்த அரசு போலே தான் ஸ்திரீகள் மீது புருஷர் செய்யும் கட்டாய ஆட்சியும் என்பது யாவருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக விளங்கும். கட்டாயப் படுத்தி என்னிடம் அன்பு செய் என்று சொல்வது அவமானமல்லவா? என்று பாரதியார் குறிப்பிடுகிறார். இதில் அன்னிய ஆட்சியை மறைமுகமாகக் கண்டிக்கும் செய்கையும் ஆண்களின் ஆதிக்கத்தைக் கண்டிக்கும் செய்கையும் இணைந்து அடங்கி இருப்பதைக் காண்கிறோம்.

பெண்கள் விடுதலை என்னும் தலைப்பிலான இரண்டாவது கட்டுரையில் பாரதி தனது நுட்பமான இலை மறைவு காயான அரசியல் கருத்துக்களை வெளியிடுகிறார். அவை வருமாறு–

"அடிமைகள் யாராயினும் அவர்களுக்கு விடுதலை கொடுத்தால் அதனின்று யுகப்பிரளயம் நிச்சயமாக நேரிட்டு அண்டச்

சுவர்கள் இடிந்து போய் ஜகமே அழிந்து விடும் என்று சொல்லுதல் அவர்களை அடிமைப் படுத்தி ஆள்வோருடைய சம்பிரதாயம்" என்று குறிப்பிடுகிறார். அத்துடன் மற்றொரு வேடிக்கையான உதாரணத்தையும் குறிப்பிடுகிறார்.

"மதராஸ் மெயில்" போன்ற ஆங்கிலேயப் பத்திராதிபரிடம் போய் இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்தால் என்ன நடக்கும் என்று கேளுங்கள். "ஓ ஹோ! ஹோ! ஹோ! இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்தால் பஞ்சாபிகள் ரஜபுத்திரர்களைக் கொல்வார்கள். பிறகு ரஜபுத்திரர்கள் மஹாராஷ்டிரர்களின் கூட்டத்தையெல்லாம் விழுங்கிப் போடுவார்கள். அப்பால் மகாராஷ்டிரர் தெலுங்கரையும், கன்னடரையும் மலையாளிகளையும் தின்று விடுவார்கள். பிறகு மலையாளிகள் தமிழ்ப் பார்ப்பாரையும், தமிழ்ப் பார்ப்பார் திராவிடரையும் சூரணமாக்கி விடுவார்கள். சூரணித்த திராவிடர் வங்காளிகளின் எலும்புகளை மாலையாகப் புனைவர்" என்று சொல்லி பெருமூச்சு விடுவார். அதே கேள்வியை நீதிபதி மணி அய்யர், கேசவப் பிள்ளை, சிதம்பரம் பிள்ளை முதலியவர்களைப் போய்க் கேளுங்கள். "அப்படிப் பெரிய அபாயம் ஒன்றும் உண்டாகாது. ஸ்வராஜ்யம் கிடைத்தால் கஷ்டம் குறையும். பஞ்சம் வந்தால் அதைப் பொருக்கத்திறன் உண்டாகும். அகால மரணம் நீங்கும். அவ்வளவு தான்" என்று சொல்லுவார்கள் என்று குறிப்பிடுகிறார். இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுத்தால் இந்த நாட்டிலிருந்து ஆங்கிலேயர்கள் வெளியேறி விட்டால் இந்த நாட்டில் குழப்பம் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் வெட்டிக் குவித்துக் கொள்வார்கள் என்று ஆங்கிலேயர்களும் ஆங்கிலேய ஆட்சியின் ஆதரவாளர்களும் அன்று பேசியதையே பாரதி சிலேடையாக மதராஸ் மெயில் பத்திரிகையைக் குறிப்பிட்டுக் கூறுகிறார். மதராஸ் மெயில் என்னும் பெயரில் அக்காலத்தில் சென்னையிலிருந்து ஒரு ஆங்கிலப் பத்திரிகை ஆங்கிலேயர்களால் துவக்கப் பட்டு ஆங்கிலேய

ஆட்சியின் ஆதரவாக நடத்தப்பட்டு வந்தது. இந்தியா சுதந்திரம் பெற்ற சில ஆண்டுகளுக்குப் பின்னர் அது நின்று விட்டது.

விடுதலை என்றால் என்ன அர்த்தம்? விடுதலை என்பது என்ன என்பது பற்றி பாரதியார் ஒரு நல்ல விளக்கம் தருகிறார். அது அற்புதமானது. அந்த விளக்கம் அன்றைக்குத் தேவையாக இருந்தது. இன்றைக்கும் அது தேவையாக இருக்கிறது. பெண்கள் விடுதலை என்னும் தலைப்பிலே தான் கவிஞர் அதை விளக்குகிறார். ஆனாலும் அதில் பொதுவான உண்மைகளும் அடங்கியிருப்பதைக் காணலாம்.

"விடுதலையானது யாது? என்ற மூலத்தை விசாரிக்கும் படி நேரிடுகிறது" என்று தொடங்கி, "இதற்கு மறுமொழி சொல்லுதல் வெகு சுலபம். பிறருக்குக் காயம் படாமலும், பிறரை அடிக்காமலும், வய்யாமலும், கொல்லாமலும், அவர்களுடைய உழைப்பின் பயனைத் திருடாமலும், மற்றப்படி ஏறக்குறைய நான் ஏது பிரியமானாலும் செய்யலாம் என்ற நிலையில் இருந்தால் மாத்திரமே என்னை விடுதலையுள்ள மனிதனாகக் கணக்கிடத்தகும். "பிறருக்குத் தீங்கில்லாமல் அவனவன் தன் இஷ்டமானதெல்லாம் செய்யலாம் என்பதே விடுதலை என்று ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் சொல்லுகிறார்." இந்த விதிப்படி உலகத்தில் பெரும்பான்மையான ஆண்களுக்கே விடுதலை உண்டாகவில்லை. ஆனால் இவ்விடுதலை பெரும் பொருட்டாக நாடுதோறும் ஆண் மக்கள் பாடுபட்டு வருகிறார்கள். ஆண் மக்கள் ஒருவருக்கொருவர் அடிமைப் பட்டிருக்கும் கொடுமை சகிக்க முடியாது. ஆனால் இதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக் காட்டிலும் பல்லாயிரம் மடங்கு அதிகக் கஷ்ட நஷ்டங்கள் பெண்கள் கூட்டத்தை ஆண் கூட்டம் அடிமைப் படுத்தி வைத்திருப்பதால் விளைகிறது என்று பாரதி குறிப்பிடுகிறார். சத்தியமான விஷயமாகும். இந்த வாசகங்களைத் திரும்பத் திரும்பப் படித்துப் புரிந்து கொண்டு மனதில் பதிய வைத்துக் கொள்வோமாக.

பெண் விடுதலை பற்றி பாரதியார் மிகவும் வலுவான கருத்துக்களைத் தனது கவிதைகளிலும் கட்டுரைகளிலும் எடுத்துக் கூறுகிறார். அந்தக் கருத்துக்கள் பெண் விடுதலையைப் பற்றிக் குறிப்பாகச் சொல்லப்பட்டிருந்தாலும் பொதுவாக விடுதலை, சுதந்திரம் பற்றி அவருடைய பொதுக் கருத்துக்களையும் அதில் தெளிவாகக் காண்கிறோம்.

✡ ✡ ✡

19.சமுதாய ஒற்றுமை:

நமது நாட்டில் கிறிஸ்தவ மிஷனரியார் பல இடங்களிலும் தங்கள் மத நிறுவனங்களை அமைத்து மாதாகோவில்களைக் கட்டினார்கள். அத்துடன் சேர்ந்து பள்ளிகளையும் கல்லூரிகளையும் தொடங்கினார்கள். இது ஆங்கிலேயர் ஆட்சியுடன் சேர்ந்து நடந்த நிகழ்ச்சிகளாகும். இந்தக் கல்வியில் அவர்கள் மெக்காலே வகுத்த பாடத்திட்டங்களை செயல் படுத்தினார்கள். நமது நாட்டின் படித்தவர்களிடம் ஆங்கிலேய சிந்தனையை வளர்ப்பதே இந்தக் கல்வித் திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்திருக்கிறது.

பாரதி தனது உரைநடையில் எழுதியுள்ள ஒரு கதையில் கதாநாயகன் கூறுகிறான். "நான் சுமார் பதினாறு பிராயம் வரை சென்னை கிறிஸ்தியன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தேன். வேதகாலம் முதலாக இன்றுவரை பாரத தேசத்திலுள்ள ரிஷிகள் எல்லோரும் ஒன்றும் தெரியாத மூடர்கள். அர்ஜுனனும் காளிதாசனும் சங்கராச்சாரியாரும் சிவாஜியும் ராமதாசரும் கபீர்தாஸரும் அதற்கு முன்னும் பின்னும் நேற்று வரையிருந்த பாரத தேசத்தார் அனைவரும், அவர்கள் நெஞ்சில் வளர்த்து வந்த பக்தியெல்லாம் இழிந்த அநாகரிகமான மூட பக்திகள் என்பது முதலான ஆங்கிலேய சத்தியங்கள் எல்லாம் என் உள்ளத்திலே குடி புகுந்து விட்டன. ஆனால் கிறிஸ்தவ பாதிரி ஓர் வினோதமான ஜந்து. ஹிந்து மார்க்கத்திலும், ஹிந்து நாகரிகத்திலும் பக்தி செலுத்துவது பேதமை என்று ருஜூப் படுத்திக் கொண்டு வரும் போதே அவர் கொண்டாடும் கிறிஸ்து மார்க்கமும் மூடபக்தி என்று வாலிபர் மனதில் படும்படி ஏற்பாடு செய்து விடுகிறார். மத விஷயங்களைப் பற்றி விஸ்தாரமான விவகாரங்கள் எழுதிப் படிப்பவர்களுக்கு நான் தலை நோவு உண்டாக்கப் போவதில்லை. சுருக்கம் நான் எனது பூர்வ மதாச் சாரங்களில் பற்று நீங்கி 'ஞானஸ்நானம்' பெறவில்லை. பிரம்ம சமாஜத்தில் சேர்ந்து கொண்டேன்" என்று கூறுகிறார்.

இளைஞர்களின் உள்ளங்களில் ஹிந்து கலாச்சாரத்தைப் பற்றி தப்பெண்ணம் உண்டாவதற்கு எவ்வாறு அன்னிய ஆட்சியாளர்களுடைய கல்வி பிரச்சாரம் இருந்தது என்பதற்கு இந்தச் செய்தி சாட்சியமாக அமைந்துள்ளது.

அந்தக் கதையில் அந்த இளைஞன் மேலும் பேசுகிறான். "ஆம், பாரத தேசத்தை இப்பொழுது பிரம்மச்சாரிகளே ரக்ஷிக்க வேண்டும். மிகவும் உயர்ந்திருந்த நாடு மிகவும் இழிந்து போய் விட்டது. இமயமலை இருந்த இடத்தில் முட் செடிகளும் விஷப் பூச்சிகளும் நிறைந்து ஒரு பாழுங்காடு இருப்பது போல் ஆயிவிட்டது. அர்ஜுனன் வாழ்ந்த மாளிகையில் வெளவால்கள் தொங்குவது போலிருக்கிறது. இதை பிரம்மச்சாரிகளே காப்பாற்ற வேண்டும். பொப்பிலி ராஜாவின் மகனாக வேனும் பிறவாமல் நம்போன்ற சாதாரண குடும்பங்களிலே பிறந்தவர்கள் விவாகம் செய்து கொண்டால் இந்தப் பஞ்ச நாட்டில் அவர்களுக்கு மூச்சு முட்டிப் போகிறது. குருவியின் தலையிலே பனங்காயை வைப்பது போல இந்த நரிக் கூட்டத்திலுள்ள ஒரு வாலிபன் தலையிலே ஒரு குடும்ப பாரத்தை சுமத்தும் போது அவனுக்குக் கண் பிதுங்கிப் போகிறது. அவனவனுடைய அற்பகாரியங்கள் முடிவு பெறுவதே பகீரதப் பிரயத்தனம் ஆய்விடுகிறது. தேச காரியங்களை இவர்கள் எப்படிக் கருதுவார்கள். பிரம்மச்சாரிகள் வேண்டும். ஆத்ம ஞானிகள் வேண்டும். தம் பொருட்டு உலக சுகங்களை விரும்பாத தீரர்கள் வேண்டும். இந்த சுதேசியம் கேவலம் ஒரு லௌகீக காரியமன்று. இது ஒரு தர்மம். இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீர்யம், தேஜஸ், கர்மயோகித் தன்மை முதலிய அரிய குணங்கள் வேண்டும். நான் பிரம்மசரிய விரதத்தைக் கைக்கொள்ளலாமென்று நினைத்திருக்கிறேன்" என்று கூறுகிறான். இதில் பாரதியின் உட் கருத்து தெளிவாகத் தென்படுகிறது.

இந்தக் கதை மூலம் பாரதி மேலும் சில சிறந்த கருத்துக்களை வெளிப்படுத்துகிறார். அவைகளும் நாம் நமது மனதில் கொள்ளத்தக்கதாகும். கதாநாயகன் பேசுகிறார்:–

"நான் கஷாயம் தரித்துக் கொண்டு துறவியாக வட நாட்டிலே சஞ்சாரம் செய்து வந்தேன். வந்தே மாதர தர்மத்தை மட்டிலும் மறக்கவில்லை. ஆனால் என்னை சர்க்கார் அதிகாரிகள் பிடித்து சிறையிடும்படியான முயற்சிகளிலே நான் கலக்கவில்லை. *ஜனங்களுக்குள் ஒற்றுமையும் பலமும் ஏற்படுத்தினால் ஸ்வதந்திரம் தானே சித்தியாகும் என்பது என்னுடைய கொள்கை*" என்று குறிப்பிடுகிறார்.

ஜனங்களுக்குள் ஒற்றுமையும் பலமும் ஏற்படுத்த விரிவான பிரச்சாரங்கள் செய்ய வேண்டும். அவை அமைதியான முறையில் அமைய வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும். அவ்வாறு நடத்தப் படும் அமைதியான பிரச்சாரங்களைக் கைவிட அன்னிய ஆட்சியினர் பலதடைகளை ஏற்படுத்தி இடையூறு செய்தனர் என்று பாரதி குறிப்பிடுகிறார். இந்தப் பணிகளை தேசபக்தக் கடமையாக நாம் செய்ய வேண்டும். இதை நான் செய்கிறேன் என்னும் கர்வம் ஏற்படக் கூடாது. "*இயற்கையின் குணங்களிலிருந்து செய்கைகள் பிறக்கின்றன. மூடன் நான் செய்கிறேன் என்று கூறுகிறான்*" என்னும் பகவத்கீதை வாக்கியத்தை அடிக்கடி மனனம் செய்து கொள்ள வேண்டும் என்பது பாரதியின் வாக்காகும்.

மேலும் பாரதி கதையின் கதநாயகன் பேசுகிறார்:

"பாத சாரியாகவே பல இடங்களிற் சுற்றி விட்டு பலபல தொழில்கள் செய்து கொண்டு லாகூர் நகரத்துக்குப் போய் சேர்ந்தேன்.

அங்கே லாலா லஜபதி ராய் போன்ற பலரைப் பார்க்க வேண்டும் என்ற இச்சை ஜனித்தது. அவரைப் போய்க் கண்டதில் அவர் என்னிடம் நம்பிக்கை கொண்டவராகி கோசல நாட்டுப் பிரதேசங்களில் கொடிய பஞ்சம் பரவியிருக்கிறது என்றும், பஞ்சத்தில் கஷ்டப்படும் ஜனங்களுக்குச் சோறு, துணி கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் தாம் நிதிகள் சேர்த்து வருவதாகவும் பல வாலிபர்கள் தம்மிடமிருந்து திரவியங்கள் கொண்டு போய் பஞ்சமுள்ள ஸ்தலங்களில் இருந்து உழைத்து வருவதாகவும் தெரிவித்து விட்டு "நீரும் போய் இவ்விஷயத்தில் வேலை செய்யக் கூடாதா? என்று கேட்டார். ஆ! ராமச்சந்திரன் அரசு செலுத்திய நாடு. வால்மீகி முனிவர் புகழ்ந்து போற்றிய நாடு. அங்கு ஜனங்கள் துணியும் சோறுமில்லாமல் பதினாயிரக்கணக்காகத் தவிக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யப் போவாயா என்று என்னைக் கேட்கவும் வேண்டுமா? அவர்கள் எல்லோரும் எனக்குத் தெய்வங்களல்லவா? அவர்களுக்கு வேண்டியன செய்ய முடியாவிட்டால் இந்தச் சதையுடம்பை எதற்காகச் சுமக்கிறேன்" என்று கூறுகிறார்.

பாரதியின் இந்த வார்த்தைகள் நமது உள்ளத்தை உலுக்குகிறது. ஸ்ரீராமச்சந்திரன் ஆண்ட பூமியில் அந்தப் புனித கங்கை என்னும் தெய்வத்திரு நதி பாயும் புண்ணிய பூமியில் அந்த செழிப்பு மிக்க சமவெளியில் பஞ்சமா? மக்களுக்கு உணவும் துணியும் இல்லையா? அன்னிய ஆட்சியாளர்கள் நடத்திய போர்களினாலும், கொள்ளைகளினாலும் நமது நேர்த்தியான நெசவுத் தொழில் நலிந்து, ஆடுமாடுகள் கால்நடைகள் எல்லாம் அழிந்து சாகுபடி நடை பெறாமல் அந்த வளமான பூமி வறண்டு போய் மக்கள் உணவின்றிச் சாகிறார்களா? என்ன கொடுமை என்று அன்னிய ஆட்சி மீது நமக்குக் கடுங்கோபம் ஏற்படுகிறது. கருத்துச் செறிந்த இந்த வார்த்தைகள் மூலம் பாரதி நமது சுய உணர்வைத் தட்டி எழுப்புகிறார்.

இந்தக் கதையில் கதாநாயகன் மேலும் கூறுகிறார். பஞ்சம் பசி, பட்டினியால் அடித்தட்டு மக்களே அதிகமாக பாதிக்கப் படுகிறார்கள் என்பது ஒன்று.

அவர் மேலும் பசுமாடு பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிறார். ஹிந்து நாகரிகத்தில் பசுமாடு மிகப்பிரதானமான வஸ்துக்களிலே ஒன்று. ஹிந்துக்களின் நாகரிகம் விவசாயத் தொழிலைப் பொருத்து நின்றது. விவசாயத் தொழிலுக்குப் பசுவே ஜீவன். ஆதலால் ஹிந்துக்கள் புராதன காலம் முதலாகவே கோமாம் சத்தை வர்ஜனம் செய்து விட்டார்கள் என்று குறிப்பிடுகிறார்.

அவர் மேலும் கூறுகிறார். பஞ்சம் நோய் முதலிய பொதுப் பகைவருக்கு முன்பு நமது உயர்வு தாழ்வுகளை விரித்துக் கொண்டு நிற்பது மடமை. தாழ்ந்த ஜாதியார் என்பவர்களை நாம் மித மிஞ்சித் தாழ்த்தி விட்டோம். அதன் பலன்களை நாம் இப்போது அனுபவிக்கிறோம்.

முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும். நாம் பள்ளர் பறையருக்குச் செய்ததையெல்லாம் நமக்கு அன்னிய நாடுகளில் பிறர் செய்கிறார்கள். நமது சிருங்ககிரி சங்கராச்சாரியாரும் வான மாமலை ஜீயர் சுவாமிகளும், நேட்டால், திரான்ஸ்வால் தேசங்களுக்குப் போவார்களானால் ஊருக்கு வெளியே சேரிகளிலே வாசம் செய்ய வேண்டும். சாதாரண மனிதர்கள் நடக்கும் ரஸ்தாக்களில் நடக்கக் கூடாது. பிரத்தியேகமாக விலகி நடக்க வேண்டும். பல்லக்குகள் வண்டிகள் இவற்றைப் பற்றி யோசனையே வேண்டியதில்லை என்று குறிப்பிடுகிறார்.

சாதீய முறைகள், சாதி வேறுபாடுகள், பாகுபாடுகள் தீண்டாமை முதலிய கொடுமைகளை எதிர்த்து பாரதி தனது கவிதைகள் கட்டுரைகள், கதைகள் எழுத்துக்கள் அனைத்திலும் மிகவும் கடுமையாகப் பேசியுள்ளார்.

நமது நாட்டில் ஜாதி அமைப்புகளும், ஜாதிப் பாகுபாடுகளும், வேறுபாடுகளும் என்று தோன்றியதோ அன்று முதலே அதற்கு எதிர்ப்பும் தோன்றியிருக்கிறது. சாதீய முறைக்கு சாஸ்திர சம்மதம் இல்லை. வால்மீகி, வியாசர் முதல் பாரதி வரை எத்தனையோ அறிஞர்களும் மகான்களும் ஜாதிய முறைகளை அதன் பாகுபாடுகள், வேறுபாடுகள், கொடுமைகளை எதிர்த்துப் பேசியிருக்கிறார்கள். நமது சமுதாயத்தின் நீண்டநெடும் போராட்டங்களுக்குப் பின்னர், நாடு அடிமைப் பட்டு அவமானப் பட்டு அனுவத்திற்குப் பின்னர் நமது அரசியல் சட்டத்திலும் அனைவரும் சமம் என்று ஏற்படுத்தப் பட்டது மட்டுமல்ல, நடைமுறையில் சமூக நீதியை நிலை நாட்டுவதற்கான நடவடிக்கைகளும் எடுத்து வருகிறோம்.

இன்று எத்தனையோ மாற்றங்களும் ஏற்பட்டு வருகின்றன. ஆயினும் இன்னும் சாதிப் பாகுபாடுகளின் எச்சங்கள் நீடிக்கின்றன. நமது சமுதாயத்திலிருந்து அந்தத் தீமைகள் முழுமையாகத் துடைத்தெரியப் பட்டு ஹிந்துக்கள் அனைவரையும் இந்திய மக்கள் அனைவரையும் ஒன்று படுத்த வேண்டும். நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப் பாட்டிற்கும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் மேம் பாட்டிற்கும் ஹிந்து சமுதாயத்தின் முழு ஒற்றுமை மிகவும் முக்கியமானதும் அவசியமானதுமாகும்.

✡ ✡ ✡✡ ✡ ✡

20. சுதேசிய முயற்சி:

சுதேசிய முயற்சி நாட்டிலே தோன்றிய பிறகு பல விஷயங்களில் குணம் கண்டிருக்கிறோம். கைத் தொழில் அபிவிருத்தி, தேசீய வர்த்தகம், ஜன ஐக்கியம், சுய பாஷைகளின் வளர்ச்சி முதலிய பல அம்சங்களிலே கைகண்ட பலன்களைப் பார்த்திருக்கிறோம். அதை நாம் இன்னும் எத்தனைக்கெத்தனை ஆவலுடன் பரிபாலித்து வருகிறோமோ அத்தனைக்கத்தனை நாடு பல விதங்களிலேயும் க்ஷேமப்பட்டு வரும்.

குணமது கைவிடேல் என்னும் தலைப்பில் சுதேசியத்தையும் மற்ற சுதந்திரமான பல செயல்பாடுகளைப் பற்றியும் பாரதி சில வலுவான கருத்துக்களை முன் வைக்கிறார். நமது நாட்டின் அக்கால நிலைமையைப் புரிந்து கொள்வதற்கும், எதிர் காலத் திட்டங்களை வகுத்துக் கொள்வதற்கும் பாரதியின் இந்தக் கருத்துக்கள் நமக்கு வழி காட்டியாக அமைந்துள்ளன. பாரதி கூறுகிறார்.

"ஆனால் சென்ற சில வருடங்களாக ஆங்கிலேய அதிகாரிகளிலே சில சில்லரை உத்தி யோகஸ்தர்கள் தம்மவர்களாகிய ஆங்கிலேய வர்த்தகர்களுக்கு இதனால் நஷ்டமும் தமக்கேசில அசௌகரியங்களும் உண்டாவது கருதி இதைச் சில தப்பான வியாஜ்யங்களைச் சொல்லி அடக்கி விடப் பார்க்கிறார்கள். ஆட்டுக் குட்டியைத் தின்ன விரும்பிய ஓநாய் "ஏ, ஆட்டுக் குட்டியே நீ என்னைத் திட்டினாயாமே?" என்று கேட்ட கதை போல் இந்த ஆங்கிலேய உத்தியோகதஸ்தர்கள் நம்மை இராஜத் துரோகிகள் என்று பொய்க் குற்றம் சார்த்தித் தண்டனைகள் செய்து நமது காரியத்தைக் கெடுத்து விடப் பார்க்கிறார்கள். இங்ஙனம் ஆங்கிலேய அதிகாரிகளிலே பலர் பொய்யான கோப நடிப்பு நடித்துக் கொண்டு நம்மவர்களிலே சில முதல்வர்களுக்கு மிருகத்தனமான தண்டனைகள் விதித்து விட்டதினின்றும், கிராமாந்திரங்களிலே சாமான்ய ஜனங்கள்,

சிலர் சுதேசியம் என்று சொன்னாலே ராஜாங்கத்தாருக்கு விரோதமாகலாம் என்றெண்ணி நடுநடுங்கி நமது மனத்துக்குள்ளே நமது கர்மத்தில் அபிமானம் கொண்டவர்களாயிருந்தாலும் அச்சத்தினால் வெளிக்கு அசிரத்தை காண்பிக்கிறார்கள்.

இது நிஷ் காரணமான பயம். அவசியமற்ற மூடத்தனம் "வந்தே மாதரம்" (தாயை வணங்குகிறேன்) என்பது எந்த சட்டத்திற்கு விரோதம்? உள்நாட்டு சாமான்களையே கிரயத்துக்கு வாங்குவேன் என்ற விரதம் செய்து கொண்டால் எவனுடைய சட்டத்திற்கு விரோதம்? என் பணம், அதைக் கொடுத்து எனக்கு இஷ்டமான சாமான் வாங்கிக் கொள்கிறேன். இதில் ராஜாங்கத்தார் ஏன் தலையிட வேண்டும்? கள்ளசாராயம் நாட்டிலே பரவாமல் தடுப்பதற்கு ஆங்கிலேய ராஜாங்கத்தார் யாதொரு உதவியும் செய்யாமல் தீர்வை லாபம் கருதி மதுபானத்தைப் பரவச் செய்து கொண்டு வருகிறார்கள். எத்தனையோ சீர்திருத்த சங்கத்தார் (சுதேசிகள் மட்டுமல்ல, மாச கனிக்கல் சமுவெல், ஸ்மித் முதலிய பல ஆங்கிலேயர்களும் கூட) இது கூடாதென்று முட்டி முட்டிப் பார்த்தும் ஆங்கிலேய கவர்மெண்டார் சிறிதேனும் கவனிக்காமல் இருக்கிறார்கள்.

"இப்படியிருக்க என் தேசத்து கைகோளர்கள் செய்த துணிகளை நான் எனது நாட்டிலே பரவச் செய்வேன் என்றால் இது ராஜாங்கத்தாருக்குப் பெரிய விரோதமாகவா போய்விடும்? எனது குழந்தைகள் எனது மூதாதைகளைப் பற்றியும் எனது தேச சரித்திரத்தைப் பற்றியும் ஒன்றுமே தெரியாமல் நான் நம்பும் வேதங்கள் சாஸ்திரங்கள் முதலியவற்றின் பெருமையை அறியாமல் ஜீவனத்திற்கு வேண்டிய கைத்தொழில்களைப் பற்றி ஏதுமே கற்றுக் கொள்ளாமல் மனிதர்களைப் "போனகிராம்" பெட்டிகளாகச் செய்யும் நாசகரமான கல்வி கற்கும் படி செய்து அவர்களைக் கெடுக்க மாட்டேன். ஜாதீயப் பாடசாலைகளுக்கு அனுப்பி ஐரோப்பிய

கல்வியிலே பிரயோஜனகரமான அமிசத்தை மட்டும் கற்றுக் கொள்ளும் படி செய்து எனது தேசத்து ஞானமும் என் குழந்தைகளுக்கு ஏற்படும் படி செய்வேன். இதில் சட்டத்திற்கு என்ன கஷ்டம் சம்பவித்து விட்டது?

இனி பணச் செலவு மிகுதியாவதை உத்தேசித்து எங்கள் வியாஜ்யங்களை பஞ்சாயத்துகள் மூலமாகத் தீர்த்துக் கொண்டால் எந்த சட்டத்திற்கு விரோதம்?

எனது தகப்பன் காலத்தில் எங்களவர்களுக்கு இருந்த தேக பலமும் சௌகரியமும் தீர்க்காயுளும் இந்தத் தலைமுறையிலே ஏன் இல்லை? நாளுக்கு நாள் எனது தேசத்தார்கள் குறுகி, மெலிந்து, துர்பலமடைந்து க்ஷீணித்து அற்பாயுஸாக ஏன் மடிகிறார்கள்? இதை நீக்கும் பொருட்டு ஊருக்கு ஊர் சரீர பலத்துக்குரிய கர்லா, சிலம்பு, கசரத் இவை பழகும் பயிற்சிக் கூடங்கள் ஏற்படுத்துவேன். நான் இப்படிச் செய்வதினால் எந்தச் சட்டம் முறிந்து போகிறது? இங்கிலிஷ் பாட சாலைகளிலே கூட நமது பிள்ளைகளுக்கு ஒருவிதமான சரீரப் பயிற்சி கொடுக்கவில்லையா? இங்கிலிஷ் பள்ளிக் கூடங்களிலே போய்ப் படிக்கத் தகுந்த சொத்தில்லாத பிள்ளைகள் எங்கள் தேசத்திலே கோடிக்கணக்காக இருக்கிறார்கள். அவர்களுடைய சரீரம் பலமடையக் கூடாதென்று எங்கேனும் சாஸ்திரமே தேனும் சட்டமேனும் உண்டா? அதற்குரிய முயற்சிகளை நான் செய்தால் அதனின்று சட்டத்திற்குத் தலை நோவு கண்டுவிடுமா? சிச்சீ! சுதேசியம் சட்ட விரோதம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் நம்மைக் கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பேசுகிறார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டு மயங்குபவர்கள் தேச நலம் அறியாத களிமண் அறிவு கொண்ட மூடர்கள்.

அன்னிய வஸ்து வர்ஜனம், ஜாதீயக் கல்வி, பஞ்சாயத்து, சரீரப் பயிற்சி இந்த நான்குமே சுதேசியம் என்ற புண்ணிய பலத்தைத்

தாங்குகின்ற நான்கு தூண்களாகும். இவற்றை ஆதரிப்பது நமது கடமை. இதில் சட்டத்திற்கு எவ்விதமான விரோதமும் கிடையாது. இவற்றை ஆதரிக்காமல் இருப்பவர்கள் தேசத் துரோகிகள் ஆவார்கள்.

இவ்வாறு பாரதி அக்கட்டுரையை முடிக்கிறார். இக்கட்டுரை மூலம் கைத்தொழில் விருத்தி, தேசீய வர்த்தகம், ஜனஜக்கியம், சுய பாஷைகளின் வளர்ச்சி, அன்னிய வஸ்து வர்ஜனம் (அன்னியப் பொருள் நிராகரிப்பு – உள்நாட்டு உற்பத்திப் பொருள்களுக்கு ஆதரவு) ஜாதீயக் கல்வி (தேசீயக் கல்வி) பஞ்சாயத்து, சரீரப் பயிற்சி, (உடற் பயிற்சி) ஆகியவைகளைப் பற்றியும் ஆகியவைகளின் அவசியம் பற்றியும் எடுத்துக் கூறுகிறார். இவை இன்றும் கூட பெரிய அளவில் பொருத்தமானவைகளாகவும், விவாதித்து நிறைவேற்ற வேண்டியவைகளாக உள்ளன.

பாரதியின் கருத்துப்படி சுதந்திரமும் சுதேசியமும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவை, ஒன்றோடொன்று இணைந்தவை. ஒன்றையொன்று சார்ந்தவை. சுதந்திரம் என்றால் வெறும் ஆட்சி மாற்றம், ஆட்சியாளர்கள் மாற்றம் மட்டுமல்ல. சுதந்திரம் என்றால் நல்லாட்சி ஏற்பட வேண்டும். மக்களாட்சி ஏற்பட வேண்டும். ஆட்சி நிர்வாகங்களிலும், பொது வாழ்விலும் மக்கள் நாளுக்கு நாள் அதிகமாகப் பங்கு கொள்ள வேண்டும். தீதில்லாத தொழில்கள் செய்யவும், யாருக்கும், தீங்கில்லாத படி எந்த வேலையும் செய்வதற்கான சுதந்திரம் இருக்க வேண்டும். மனிதன் அச்சமின்றி அன்பு கொண்டு வாழ வேண்டும்.

சுதந்திரம் என்றால் மக்களின் கல்வியும் ஒழுக்கமும் வளர வேண்டும், பெருக வேண்டும். மக்களின் உழைப்பும் செயல்பாடுகளும் அதிகரிக்க வேண்டும். சுதந்திரம் என்றால் நாட்டின் வளம் அதிகரிக்க வேண்டும். செல்வம் பெருக வேண்டும். பாரத

நாட்டில் செல்வ வளமும், மனித வளமும் அதிகம். இரண்டும் இணைந்தால் பாரத நாடு வல்லமை மிக்க நாடாக லோக குருவாக, வையத் தலைமையாக வளர்ந்து விடும். சுதந்திரம் என்றால் மக்களின் நல்வாழ்வு, உடல் நலம், உடல் பலம் அதிகரிக்க வேண்டும். இராமனும், அர்ஜுனனும் அனுமனும் பீமனும் பாரத புத்திரர்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சுதந்திரம் என்றால் நாட்டின் கலைகளும், இசையும், நாட்டியமும், கூத்தும், ஆடலும், பாடலும், கவிதைகளும், கட்டுரைகளும் பாட்டும் படிப்பும் பெருக வேண்டும். இவ்வாறு சொல்லிக் கொண்டே டோகலாம்.

பாரதி வழியில் சுதேசியம் என்றால் இவையெல்லாம் சேர்ந்தவை சுதேசியம் என்றால் விவசாயமும் உள்நாட்டுத் தொழில்களும், கால்நடை பராமரிப்பும், பெருக வேண்டும். நாட்டில் முதல் நிலை உற்பத்தி நிலம் காடு மலை, சுரங்கம் கடல் மூலமான உற்பத்தியும் மனித வளமும் பெருக வேண்டும். இவைகளின் மறு உற்பத்தியும் அதிகரிக்க வேண்டும். விரிவு பட வேண்டும். அதன் மூலம் தேசீய வர்த்தகம் உள்நாட்டு சந்தை பெருக வேண்டும். உள்நாட்டுச் சந்தையின் பெருக்கமும் தேசீயச் சந்தையின் வளர்ச்சியும் தான் ஒரு நாட்டின் வளத்திற்கு அளவு கோல்.

சுதேசியம் என்றால் மக்களின் ஒற்றுமை, ஐக்கியம், ஜாதி மத இனமொழி வேறுபாடுகள் நீங்கி அனைவரின் ஒற்றுமை அதிகரிக்க வேண்டும். சுதேசியம் என்றால் நமது நாட்டின் சுய பாஷைகள் வளர்ச்சி பெற வேண்டும். இந்திய பாஷைகள் பதினெட்டு என்று பிரபலம். நமது நாட்டு பாஷைகள் வளம் மிக்கவை. நேர்மையானவை இலக்கியச் செழுமை மிக்கவை. அவைகளை நாம் படிக்க வேண்டும். நமது நாட்டு பாஷைகளுக்கிடையில் நல்லுறவை வளர்க்க வேண்டும். நமது பாஷைகளை உலகின் தரத்திற்கு உயர்த்த வேண்டும். நமது

பாஷைகளிலேயே அவைகளின் வழியிலேயே படிப்பும் படிப்பித்தலும் வளர்ச்சி பெற வேண்டும். அனைத்துத் துறைகளிலும் தமிழ் அமர வேண்டும்.

சுதேசியம் என்றால் உள்நாட்டுப் பொருளுற்பத்தியை பெருக்க வேண்டும். நாம் தேச பக்த உணர்வுடன் நமது நாட்டுப் பொருள்களையே வாங்க வேண்டும்.

சுதேசியம் என்றால் நமது தேசீயக் கல்வி வளர வேண்டும். தேசியக் கல்வி என்பது நமது நாட்டுப் பாரம்பரியம். வரலாறு நமது மரபு கலாச்சாரம் பண்பாடு நாகரிகம், தொழில் தொடர்பு, அறிவு வளர்ச்சி, மனித வளம் ஆகியவற்றை நவீன கால அறிவு வளர்ச்சியுடன் இணைத்து கற்றலும் கற்பித்தலும் ஆகும். இன்று தேசியக் கல்வி என்பது ஒரு முக்கிய பிரச்னையாக முன் வந்துள்ளது. அது பற்றி விவாதித்து நமது பாரம்பரியத்தின் அடிப்படையில் நமது கல்வியை உருவாக்க வேண்டும். அது பற்றித் தனியாக விரிவாக ஆராயலாம்.

சுதேசீயம் என்பது, நமக்குள்ளே ஏற்படும் சில்லரைப் பிரச்னைகளை நாமே தீர்த்துக் கொள்வது. என்பது பாரதியின் கருத்தாகும். முன்பு நாட்டில் பஞ்சாயத்து முறை இருந்தது. அம்மாதிரி அமைப்புகளை உருவாக்கிக் செயல் பாட்டிற்குக் கொண்டு வந்தால் நமது நேரமும் காலமும் பணமும் மிச்சமாகும்.

பாரதியின் சுதேசியத்தில் நாட்டு மக்களின் உடற் பயிற்சி முக்கிய இடம் பெறுகிறது. நாம் நன்கு உடற்பயிற்சி பெற்று பலவானாக இருந்தால் மற்றவர்கள் நம்மை மதிப்பார்கள். உலகப் போட்டிகளில் நூறு கோடி மக்களைக் கொண்ட பாரத தேசம் ஒரு தங்க மெடல் கூட வாங்கா விட்டால் உலக நாடுகளும் உலக விளையாட்டு வீரர்களும் நம் நாட்டைப் பற்றி நமது இளைஞர்களைப் பற்றி என்ன நினைப்பார்கள்? இதைக் காட்டிலும் கேவலம் வேறு

என்ன இருக்க முடியும்? ஊரெல்லாம் உடற் பயிற்சி மையங்கள் ஏற்பட வேண்டும். நமது இளைஞர்கள் மாணவ மாணவிகள் அத்தனை பேரும் உடற் பயிற்சியில் பங்கு கொள்ள வேண்டும். இதை தேச பக்தியுடன் ஒரு தேசீய இயக்கமாக வளர்க்க வேண்டும்.

நமது நாடு சுதந்திரம் பெற்ற இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் கூட நமது தொழில்களும் விவசாயமும், கால் நடை வளர்ச்சியும் போதுமான அளவில் வளர்ச்சி பெற்றிருக்கிறதா? மேம் பாடு அடைந்திருக்கிறதா? நமது தேசீய சந்தை வளம் பெற்றிருக்கிறதா? விரிவு பெற்றிருக்கிறதா? எந்த அளவில்? நமது மொழிகள் எந்த அளவில் வளம் பெற்று வளர்ச்சி பெற்றிருக்கின்றன? எந்த அளவுக்கு நமது மொழிகள் அனைத்து நாடுகளின் அங்கீகாரம் பெற்றிருக்கின்றன? சுதேசிப் பொருள்கள் மீது நமது பற்று எந்த அளவில் பெருகியிருக்கிறது? அன்னியப் பொருள்களின் மீதான மோகம் எந்த அளவில் குறைந்திருக்கிறது? நமது தேசியக் கல்வியின் வளர்ச்சி எந்த அளவில் இருக்கிறது? நமது வேதங்கள், உபநிஷத்துக்கள், இதிகாசங்கள், நீதி நூல்கள், இலக்கிய நூல்கள், சங்க நூல்கள், அற நூல்கள், காப்பியங்கள், சைவத்திரு முறைகள், திவ்யப் பிரபந்தங்கள், மற்றும் நீரியல் வானவியல் கணிதம், சிற்பம் கட்டிடக்கலை, வைத்தியம், மருந்தியல், கடலியல், கப்பல் தொழில், இசை, நாட்டியம், முதலிய பல கலைகளும் தொழில் நுட்ப அறிவியல்களும் பஞ்சபூத இயல்களும் பற்றிய நமது நூல்களும் இலக்கியங்களும் சாத்திரங்களும் எந்த அளவுக்கு நமது நாட்டு மக்களிடம் அறிமுகம் ஆகியிருக்கின்றன? நமது மக்களின் சிறிய பிரச்னைகள், விவகாரங்கள், தாவாக்கள் முதலியவை நீதி மன்றங்களுக்குப் போய் பண விரயமும், கால தாமதமும் ஆகாமல் ஆங்காங்கே விரைவில் தீர்த்துக் கொள்வதற்கான பஞ்சாயத்து முறைகளை எந்த அளவுக்கு உருவாக்கி அவைகளை செயல் படுத்தி வருகிறோம்?

நமது நாட்டின் இளைஞர்களின் மாணவ மாணவிகளின் உடற் பயிற்சியிலும், விளையாட்டுப் பயிற்சிகளிலும் எந்த அளவுக்கு கவனம் செலுத்தி வருகிறோம்? நூறு கோடி மக்களைக் கொண்ட இந்த மாபெரும் பாரத நாடு உலக விளையாட்டுப் போட்டிகளில் இத்தனை தோல்விகள் அடையக் காரணம் என்ன?

நமது நாட்டுப் பற்றும், தெய்வ பக்தியும் எந்த அளவிற்கு அபிவிருத்தியடைந்திருக்கிறது? நமது நாட்டு சுதந்திரம் பற்றிய உணர்வு நிலையின் அளவில் நமது தேச முன்னேற்றம் பற்றிய சமுதாய உணர்வு நிலை உயர்ந்திருக்கிறதா? நடாது ஆலயங்களும் அவைகளின் நிர்வாகங்களும் எந்த அளவில் சீரமைக்கப் பட்டு புனரமைக்கப்பட்டு செயல் படுகின்றன? பூஜைகளும், விழாக்களும் எந்த அளவுக்கு சிறப்பாக நடைபெறுகின்றன?

என்றும் இன்னும் பல கேள்விகளுக்கும் நாம் விடை காண வேண்டும். அவை பற்றி விவாதிக்கவும் வேண்டியதிருக்கிறது. நமது ஜனத்தலைவர்கள் இவைகளில் கவனம் செலுத்த வேண்டுமல்லவா? நாம் பெற்றுள்ள சுதந்திரத்தைப் பேணிக் காப்பதற்கு நமது உள்பலம் வலுவடைய வேண்டாமா?

✡ ✡ ✡

21.தேசியக் கல்வி:

பாரதியார் கல்வி பற்றியும் தேசியக் கல்வி பற்றியும் மிக விரிவாக எழுதியுள்ளார். அது பற்றித் தனியாக ஒரு நூல் எழுதினால் தகும். இங்கு தலைப்பான சில செய்திகளைக் காண்போம்.

ஆங்கிலக் கல்வி பற்றி மகாகவி தனது கவிதைத் தொகுதியில் வலுவான தனது கருத்துக்களைக் கூறியுள்ளார்.

"கல்வி சிறந்த தமிழ் நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு"

என்று தமிழ் நாட்டைப் பற்றிக் கூறுகிறார். இன்னும் பல செய்திகளும் பாரதியின் கவிதைகளில் வருகின்றன.

"தேசமென்பது குடிகளின் தொகுதி. இது கொண்டே நமது முன்னோர் குடிக்கட்டுகளினின்று விலகி நிற்போரைப் பரதேசி என்றனர் போலும்,

"தேசக்கல்விக்குக் குடும்பக் கல்வியே வேர்.

வீட்டுப் பழக்கம்தான் நாட்டிலும் தோன்றும். வீட்டில் யோக்கியன் நாட்டிலும் யோக்கியன். வீட்டில் பொறுமையுடையவன், நாட்டிலும் பொறுமையுடையவன். மனைவியின் பொருளைத் திருட மனம் துணிந்தோன் கோவில் பணத்தைக் கையாடக் கூசமாட்டான். தான் பெற்ற குழந்தைகளுக்கிடையே பக்ஷபாதம் செய்பவன் ஊரிலே நியாயாதிபதியாக நியமனம் பெறத் தக்கவன் ஆக மாட்டான். குடும்பம் நாகரிகமடையா விட்டால் தேசம் நாகரிக மடையாது. குடும்பத்தில் விடுதலை இராவிடில் தேசத்தில் விடுதலை இராது" என்று பாரதி கூறுகிறார்.

"ஆதி மனிதன் காட்டை அழித்து வீடு கட்டினான். பல வீடுகள் சேர்ந்து கூடி ஊராயிற்று. வீடு என்ற சொல்லுக்கு விடுதலை

என்று பொருள். விடத்தக்கது வீடு என்று சிலர் பிற்காலத்தில் கூறிய உரை ஒப்பந்தக்கதன்று" என்று பாரதி குறிப்பிடுகிறார். குழந்தை தனது முதல் கல்வியை ஒழுக்கத்தை வீட்டில் பெறுகிறது. குழந்தைக்குத் தாயே முதலாவது ஆசிரியையாக இருக்கிறார். தாயே முதலாவது குரு. எனவே தாய்மார்களை குரு ஸ்தானத்திற்கு உயர்த்த வேண்டும்.

தேசீயக் கல்வி என்னும் தலைப்பில் பாரதி எழுதியுள்ள உரைநடைப் பகுதியில் வந்துள்ள அரசியல் கருத்துக்களை இங்கே முதலில் காணலாம்.

"தேசியக் கல்வி குறித்து ஆராய்ச்சி செய்கிற நாம் மேற்படி (ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கூறப்படும்) விடுதலைக் காதற் கொள்கையை அங்கீகாரம் செய்தல் சாத்தியமில்லை. ஏனென்றால் தேசமாவது குடும்பங்களின் தொகுதியான முன்னரே காட்டியுள்ளோம். குடும்பங்கள் இல்லாவிட்டால் தேசம் இல்லை. தேசம் இல்லா விடிலோ தேசியக் கல்வியைப் பற்றிப் பேச இடமில்லை" என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

குடும்ப அமைப்பு என்பது பாரத நாட்டின் கலாச்சாரத்தின் அடிப்படைகளில் ஒன்றாகும். குடும்ப அமைப்பு பற்றி நமது நாட்டின் அறநூல்களும் நமது முன்னோர்களும் முனிவர்களும் சிறந்த பல கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

குடும்பம் என்பது சமுதாயத்தின் அடிப்படை தேசத்தின் அங்கம், அஸ்திவாரம். அணுக்கூறு. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் (பயனீடுகள்) நான்கிலும் குடும்பம் இணைந்திருக்கிறது.

அறத்தில் இல்லறம் முக்கியமான பகுதியாகும். இல்லறத்தின் தலைவி, வழிகாட்டி பெண்–மனைவி, மனைவியை

வாழ்க்கைத் துணைவி என்று வள்ளுவர் கூறுகிறார். இல்லத்தரசி என்றும் தமிழ் நூல்கள் குறிப்பிடுகின்றன. அத்துடன் இல்வாழ்வான் என்பான் இயல்முடைய மூவருக்கும், அதாவது பிரம்மச்சாரியன், வனப்பிரஸ்தன், துறவறம் மேற் கொண்டுள்ளோன் ஆகிய மூவருக்கும் நல்லாற்றின் நின்ற துணை என்றும் வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

இல்லறம் என்பது இயல்பானது. துறவறம் சிறப்பானது. இல்லறம் உலகச் செயல்பாட்டில் இணைந்தது. உலகைச் செயல் படுத்துவது அதாவது உலக வாழ்க்கையை செயல் படுத்துவதாகும். பாரத தேசத்தில் வேத காலத்திலும், அதற்கடுத்த வேதாந்த காலத்திலும் தமிழகத்தில் சங்க காலத்திலும் துறவு என்பது இருந்ததாகத் தெரியவில்லை. பெரிய மகான்களும் முனிவர்களும் ரிஷிகளும் இல்வாழ்க்கையிலே சிறப்புடன் இருந்திருக்கிற்ார்கள். சமுதாயப் பணிகளில் நாட்டுப் பணிகளில் தாங்கள் சிறப்பாகச் செய்வதற்காகத் தங்களை முழுமையாகப் பக்குவப்படுத்திக் கொள்வதற்காக தெளிவான ஞானத்தைப் பெறுவதற்காக பெற்றுள்ள ஞானத்தைக் கூர்மைப் படுத்திக் கொள்வதற்காக ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக அடைவதற்காக தவம் மேற்கொள்ளுதல் கடும் தவம் மேற்கொள்ளுதல் என்பது முற்கால ரிஷிகளில் பழக்கம் இருந்தது. தவம் என்றால் கடும் முயற்சி என்று பொருள்.

பின்னர், வேதங்களையும், வேதாந்தக் கருத்துக்களான உபநிடதங்களையும் மறுத்து புத்தமும் சமணமும் (ஜைனமும்) தோன்றிய காலை ஒரு பக்கம் ஜீவகாருண்யமும், சர்வ ஜன சமத்துவமும் முன் வைக்கப் பட்டு, அவைகளைச் செயல் படுத்துவதற்காக, பல பள்ளிகளும் மடங்களும் ஏற்பட்ட போது, பல்லாயிரக்கணக்கான சமயச் சான்றோர் துறவு பூண்டுச் சமயப் பணிகளிலும் மக்கள் தொண்டிலும் தங்களை முழுமையாக

ஈடுபடுத்திக் கொண்டார்கள். அவர்களுக்கு மக்களிடையே மரியாதையும் செல்வாக்கும் வளர்ந்தது. இல்வாழ்க்கையில் இருந்தவர்கள் அவர்களை போஷித்தார்கள். அவர்களுக்கு ஆதரவு கொடுத்தார்கள். ஆனால் இந்தத் துறவறமும் துறவிகளும் சமுதாயத்தில் அளவுக்கு அதிகமாகச் சென்ற பொழுது இந்த சமுதாயம் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர், புத்தத்திற்கும் சமணத்திற்கும் எதிராகக் கருத்துப் போராட்டங்கள் நடந்த போது வேத வழியில் சங்கர மடங்களும், சைவ, வைணவ மடங்களும் தோன்றி பலர் துறவறம் பூண்டு தங்கள் சமயப் பணிகளில் சமூகப் பணிகளில் ஈடுபட்டார்கள். அப்போது வேதவழி பாடுகளிலும், வேதாந்த சமயங்களைப் பரப்புவதிலும் துறவிகள் இந்திய சமுதாயத்தில் இடம் பெற்றனர். துறவு என்பது தங்களை சமயப் பணிகளிலும் சமுதாயப் பணிகளிலும் முழுமையாக அர்ப்பணித்துக் கொள்வதாகும். அது தியாக வாழ்க்கையாகும். அதை ஹிந்து தர்மம் பிற்காலத்தில் அங்கீகரித்திருக்கிறது. இருப்பினும் துறவு என்பது புத்தமும் சமணமும் தோற்றுவித்த தர்மமாகும். உலகிற்கே இதுவே முன்னுதாரணமானதாகும்.

குடும்பம் என்பது அறத்தின் ஒரு வடிவம். அது சமுதாய ஒழுக்கத்தின் தனி மனித ஒழுக்கத்தின் அடிப்படை. ஒருத்திக்கு ஒருவன் என்றும் பின்னர் ஒருவனுக்கு ஒருத்தி என்றும் நமது முன்னோர்கள் குடும்பத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார்கள். கற்பு என்னும் உயரிய சொல்லை பாரதம் உருவாக்கியிருக்கிறது. கற்பு என்பது தூய்மையின் வடிவம் மட்டுமல்ல. அது கற்றுத் தேர்ந்த அறிவு வளர்ச்சியின் முழு வடிவம். அதனால் கற்பு என்பதை இரு பாலருக்கும் பொதுவாக வைப்போம் என்று பாரதி கூறுகிறார். சிறந்த இல்லறம், சிறந்த ஒழுக்கத்தின் சிறந்த கற்பின் கற்றறிந்த அறிவு நிலையின் உறைவிடமாக விளங்குகிறது. ஒழுக்கமும் அறிவும் நிறைந்த குடும்பங்கள் அமையுமானால், ஒழுக்கமும் அறிவும் நிறைந்த

ஊர்களும், நாடும் சமுதாயமும் உலகும் அமையும். ஒழுக்கமும், அறிவும் நிறைந்த குடும்பங்கள் அமையுமானால் மிகப் பெரும்பாலான குற்றங்கள் குறைந்து விடும், மறைந்து விடும். சமுதாய அமைதி ஏற்படும்.

குடும்பத்தில் மனைவி – கணவன் மையமாகும். அச்சாணியாகும். அதைச் சுற்றிக் குடும்பம் சுழல்கிறது. குழந்தைகள் பெற்றோர் உடன் பிறந்தோர் அங்கங்களாக அமைந்துள்ளனர். குடும்பத்தில் முழுமையான சமத்துவம் அடங்கியிருக்கிறது. குடும்ப உறவு சமத்துவமான உறவாகும். குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் அந்தக் குடும்பத்தின் ஒற்றுமையைக்காக்கவும் சமத்துவத்தைக்காக்கவும் தார்மீகக் கடமையும், உரிமையும் இருக்கிறது. அதையே தர்மம் என்று குறிப்பிடுகிறோம். குடும்பத்தில் உயர்ந்தோர் நாட்டில் உயர்ந்தோர் ஆகிறார்கள்.

வள்ளுவர் அறத்துப்பாலை இல்லறம் துறவறம் என்று இரண்டாகப் பிரித்துப் பேசுகிறார் என்பதை அறிவோம். இல்லறத்தின் சிறப்புகளை மிக விரிவாக எடுத்துக் கூறுகிறார்.

நமது நாட்டில் நமது சமுதாயத்தில் குடும்ப அமைப்பு புனிதமானது. தெய்வீகத் தன்மை கொண்டது. நாம் நமது தெய்வங்களையே கணவன் – மனைவி வடிவத்தில் காண்கிறோம். கல்வி, செல்வம், வீரம் ஆகிய சக்திகளின் இருப்பிடமாகக் காண்கிறோம். குடும்பத்தில் பெற்றோர் தெய்வங்கள் குழந்தைகளும் தெய்வங்களின் வடிவங்கள். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது தமிழ்த்தாயின் வாழ்த்து,. மாதா பிதா, குரு, தெய்வம் என்பது பாரதத்தின் தெய்வ வரிசையாகும். இவையெல்லாம் நமது சமுதாயத்தின் ஆன்மீக சக்தியால் பிணைக்கப் பட்டிருக்கிறது.

மேலை நாடுகளில் தொழில் புரட்சி ஏற்பட்டதை ஒட்டி நவீன சமுதாயங்கள் ஏற்பட்டன. அதை ஒட்டி அவைகளின் பழைய குடும்ப

அமைப்பு தகர்ந்து விட்டது. சுதந்திரம் என்ற பெயரில் குடும்ப அங்கங்கள் தனித்தனியாகப் பிரிந்து கலகலத்து விட்டன. அதன் புனிதத்தன்மை மறைந்து விட்டது. பனிக்கட்டி வெயிலில் உருகுவதைப் போல் உருகி விட்டது. அவர்களுக்கு பாரதத்தைப் போல ஆன்மீக சக்தியும் அதன் பண்பாடும் இல்லாமையே காரணமாகும். வெறும் லௌகீக வாழ்க்கை மட்டுமே குடும்ப அமைப்பைப் பாதுகாக்கப் போதவில்லை. அத்துடன் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் வலுவான புருஷார்த்தக் கட்டமைப்பு மேலை நாடுகளில் இல்லை. எனவே அங்கிருந்த பழைய குடும்ப அமைப்புகள் பழுத்த இலைபோல் உதிர்ந்து விட்டன.

பாரத நாட்டின் பொருளாதார செயல் பாடுகளிலும், அறம் பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களில் பொருள் துறையிலும் குடும்ப அமைப்பின் ஈடுபாடுகளே அடிப்படையாகும். சாகுபடித் தொழில், கால் நடை பராமரிப்புத் தொழில்,(ஆடு, மாடுகள் பராமரிப்பு, பசுப் பராமரிப்பு) நெசவுத் தொழில், மீன் பிடித்தொழில் இன்னும் இதர பல கைத்தொழில்கள் முதலியவற்றில் ஆணும் பெண்ணும் குடும்பமும் சேர்ந்தே உழைக்கிறார்கள். உற்பத்தியில் ஈடுபடுகிறார்கள். வேலைப் பிரிவினைகள் இருந்தது, ஆயினும் ஒன்றிணைப்புடன் கூட்டாகவே வேலை முறை இருந்தது. மேலை நாடுகளில் நவீன தொழில் முறைகளுக்கு முன்பு கில்ட் அமைப்பு முறைகளிலும் ஆணும் பெண்ணும் குடும்பமும் சேர்ந்து வேலை செய்தார்கள். ஆனால் அங்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் யாந்திரிக முறையில் வேலைப் பிரிவினை மூலம் வேலைகள் நடை பெற்றிருந்தன. பாரத நாட்டில் உற்பத்தியில் மட்டுமல்ல நுகர்விலும் குடும்ப அமைப்பே அடிப்படையாக அமைந்திருந்தது. இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் ஆகிய அனைத்துப் பணிகளிலும் குடும்பத்தின் ஒன்றிணைந்த கூட்டுச் செயல்பாடே அடிப்படையாக அமைந்திருக்கிறது. இந்தக் கூட்டுச் செயல்பாடுகளில் அன்பும்

பாசமும் ஆன்மீக உணர்வும் கடமை உணர்வும் இணைந்து பிணைந்து இருக்கிறது.

தற்காலத்திய வளர்ச்சி முறையிலும் கிராமங்களில் மட்டு –மில்லாமல் நகரங்களிலும், பொருள் உற்பத்தித் தொழில்கள், சேவைத் தொழில் அலுவலகம் ஆகியவற்றிலும் கடினமான உடலுழைப்புள்ள கனயந்திரத் தொழில் தவிர மற்றவை அனைத்திலும் ஆண்,பெண் இருபாலாரின் உழைப்பும் இணைந்ததாகவே இன்றியமையாததாகவே அமைந்திருக்கிறது. இன்று சுய உதவிக்குழுக்கள் பெரிய அளவில் வளர்ச்சி பெற்று வருகின்றன. பல லட்சக்கணக்கான பெண்கள் அவைகளில் பங்கு கொள்கிறார்கள். பங்கு கொண்டு வருகிறார்கள்.

தற்காலப் பொருளாதார வாழ்விலும் சம்பாதிப்பிலும் நுகர்விலும் குடும்ப அமைப்பே அடிப்படையாக உள்ளது.

மூன்றாவதாக கணவன் மனைவி கூட்டு வாழ்க்கையே இன்பமாகும். இன்ப நுகர்வுக்கு இலக்கணம் வகுத்துள்ளார்கள் நமது முன்னோர்கள். அதுவே குடும்ப அமைப்பாகும். அதில் குழந்தையின்பம் கடவுள் மயமானது. நல்ல குடும்பம் வீடாகிறது. அதுவே மோட்சம். குடும்பம் சிதைந்தால் நரகமாகிவிடும். பாரதத்தின் வாழ்க்கை நலன் நல்ல குடும்பத்தில் அமைந்திருக்கிறது.

குடும்ப அமைப்புக்கு குடும்ப வாழ்க்கைக்கு குடும்பக் கல்வியே அடிப்படையாகும். அதுவே தேசியக் கல்விக்கு அடிப்படையாகும் என்று பாரதி குறிப்பிடுகிறார்.

தேசியக் கல்வியில் தாய் மொழி முக்கிய இடம் பெறுகிறது. முதலிடம் பெறுகிறது. தாய் மொழியில் அல்லாமல் வேறு மொழியில் கல்வி பயில்வது பயிற்று விப்பது முழுமை பெறாது.

"தமிழ் நாட்டில் தேசியக் கல்வி என்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையைப் பிரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலிஷ் மூலமாகவும், தமிழ் ஒருவித உபபாஷையாகவும் ஏற்படுத்தினால் அது "தேசியம்" என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை. தேச பாஷையே ப்ரதானம் என்பது தேசியக் கல்வியின் ஆதாரக் கொள்கை. இதை மறந்து விடக் கூடாது. தேச பாஷையை விருத்தி செய்யும் நோக்கத்துடன் தொடங்கப்படுகிற இந்த முயற்சிக்கு நாம் தமிழ் நாட்டிலிருந்து பரி பூரணசகாயத்தை எதிர் பார்க்க வேண்டுமானால் இந்த முயற்சிக்கு தமிழ் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படும் என்பதை தம்பட்டம் அடிக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் தமிழ் சிறந்திடுக. பாரத தேசம் முழுவதிலும் எப்போதும் போலவே வட மொழி வாழ்க. இன்னும் நாம் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூரணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும் வடமொழிப் பயிற்சி மேன்மேலும் ஓங்குக. எனினும் தமிழ் நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக" என்று பாரதி குறிப்பிடுகிறார்.

இவ்வாறு பாரதி தேசியக் கல்விக்கு, தாய் மொழிக்கு, தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்பதை வலுவாக எடுத்துக் கூறுகிறார்.

இத்துடன் ஆரம்பப்பள்ளிக் கூடம், பாடங்கள், அவைகளில் எழுத்து, படிப்பு, எண் கணக்கு, இலேசான சரித்திரப் பாடங்கள், பூமி சாஸ்திரம், மதப் படிப்பு, ராஜ்ய சாஸ்திரம், பொருள் நூல், ஸயன்ஸ் அல்லது பௌதீக சாஸ்திரம், கைத்தொழில், விவசாயம், தோட்டப் பயிற்சி, வியாபாரம், சரீரப் பயிற்சி, யாத்திரை, முதலியவை பற்றியெல்லாம் பாரதி தேசியக் கல்வி என்னும் தலைப்பில் விவரித்துக் கூறுகிறார்.

அத்துடன் நமது கல்வி நிலையங்களின் கட்டிடங்கள், இந்தியக் கட்டடக் கலையில் கட்டப்பட வேண்டும். கல்வித் துறையில் கொள்கை முடிவுகள் எடுப்பத்தில் ஆசிரியர் பணிகளில் பெண்களையும் கலந்து கொள்ளும் படியாக அமைய வேண்டும் என்பது பாரதியின் தெளிவான கருத்தாகும்.

நாடு விடுதலை பெறுவதற்கும் விடுதலை பெற்ற பின்னர் நாடு வளர்ச்சி அடைவதற்கும் மேம்பாடு அடைவதற்கும் தேசியக் கல்வி மிகவும் அவசியம் என்பது பாரதியின் தெளிவான் கருத்தாகும்.

"எது எப்படியானாலும் இந்த தினத்தில் இந்த க்ஷணத்தில் நாமெல்லாரும் பறையர் பார்ப்பார் எல்லோரும் ராஜாங்க விஷயத்தில் ஒரே ஜாதி. இப்போது எங்களுக்கு அதிகாரிகள் தயவு செய்ய வேண்டிய விஷயம் என்னவென்றால் எல்லா ஜாதியாரும் சீட்டுப் போட்டுப் பிரதிநிதிகள் குறிக்க வேண்டும். அந்தப் பிரதிநிதிகள் சேர்ந்ததொரு மகாசபை வேண்டும். ராஜ்யத்தில் வரவு செலவு உள்பட எல்லா விவகாரங்களும் மேற்படி மகாசபையார் இஷ்டப்படி நடக்க வேண்டும். அவ்வளவுதான். மற்றப்படி ஆங்கிலேய சாம்ராஜ்யத்தை விட்டு விலக வேண்டும் என்ற யோசனை எங்களுக்கில்லை. மேற்படி பிரார்த்தனை பிராமணர் மாத்திரம் செய்வதாக அதிகாரிகள் நினைக்கலாகாது. எல்லா ஜாதியாரும் விண்ணப்பம் செய்கிறோம். விடுதலை விண்ணப்பத்துக்கு நல்ல உத்தரவு கொடுக்க வேண்டும்" என்று பாரதியார் குறிப்பிடுகிறார். "அன்றைய விடுதலை இயக்கத்தின் ஜனத்தலைவர்களின் உணர்வு நிலையைப் பாரதியார் இக்கட்டுரையில் பிரதிபலிப்பதாகத் தெரிகிறது.

தேசீயக் கல்வி, மனுஷ்ய ஜாதியின் விடுதலை, இவ்விரண்டு பெருங்காரியங்களைத் தொடங்குவதற்கும் இப்போது காலம் மிகவும் பொருத்தமாக வாய்த்திருக்கிறது. இவற்றுள் மனுஷ்ய ஜாதியின்

விடுதலை நிறைவேற வேண்டுமாயின் அதற்கு பாரத தேசத்தின் விடுதலை இன்றியமையாத மூலாதாரமாகும். இங்ஙனம் பாரத தேசம் விடுதலை பெற வேண்டுமாயின் அதற்கு தேசியக் கல்வியே ஆதாரம்" என்று தேசிய விடுதலையின் விரிவடைந்த பொருளில் தேசியக் கல்வியை இணைத்து பாரதி குறிப்பிடுகிறார்.

பாரதி குறிப்பிடும் தேசீயக் கல்வி த்திட்டத்தை நிறை வேற்றுவது எப்படி? அதற்கு அன்னிய ஆட்சியை நம்பியிருக்க முடியாது. அதிலும் குறிப்பாக சரியான பாடத் திட்டத்தை உருவாக்குவது என்பது அன்னிய ஆட்சியை வைத்துச் சாத்தியமேயில்லை. இன்று கூட எல்லோருக்கும் கல்வி என்னும் திட்டத்தை நிறைவேற்ற அரசை மட்டும் நம்பியிருக்க முடியாது. அது சாத்தியமும் அல்ல. நூறு கோடி மக்களையும், பல மொழிகளையும் பேசும் மக்களையும் கொண்ட பரந்த பாரத தேசத்தில் அனைவருக்கும் கல்வி என்பது, அதிலும் ஆரம்பக் கல்வி மட்டுமல்ல, அனைத்துக் கல்வியும் கொடுக்க வேண்டும் என்பது ஒரு பிரம்மாண்டமான பணியாகும். எனவே இம்மகத்தான பணியில் பல பகுதி மக்களும் மக்கள் அமைப்புகளும் சபைகளும், ஆர்வலர்களும் தேசியக் கல்வியைப் பரப்ப முயற்சிகள் செய்ய வேண்டும்.

ஏற்கனவே நமது நாட்டில் முன்பு குருகுலங்கள், திண்ணைப் பள்ளிக் கூடங்கள் ஏராளமான அளவில் இருந்தன. போதுமான அளவில் அவை கல்வித் தேவைகளை நிறைவேற்றின. பெரிய பல்கலைக் கழகங்களும் இருந்தன. இன்றைக்கு புதிய நோக்கில் நமது பாடத் திட்டங்களையும் அமைத்து, விரிவான முறையில் தேசியக் கல்வியைப் பரப்ப வேண்டும். இதில் பல அமைப்புகளும் யாவரும் பங்கு கொள்ள வேணும்.

✡ ✡ ✡

22.ஹிந்துக்களின் கூட்டம்:

இந்தத் தலைப்பில் பாரதியார் சில முக்கியமான கருத்துக்களைத் தனது கட்டுரைகளில் வெளிப்படுத்தியுள்ளார். அவை இன்றும் நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய பிரச்னையாகும். பாரதி எழுதுகிறார்.

"இந்தியா முழுவதிலுமுள்ள ஹிந்துக்களின் அனு கூலத்திற்குப் பாடுபட்டுவரும் அகண்ட பாரத ஹிந்து சபையின் காரியதரிசியாக ஸ்ரீரத்தினசாமு என்பவர் தேராதூன் பட்டணத்திலிருந்து "ஹிந்து" பத்திரிகைக்கு எழுதியிருக்கும் லிகிதமொன்றில் பின்வருமாறு சொல்கிறார்.

"இந்த மாதம் முதல் தேதி சென்னைத் தலைமைப் பாதிரி எல்லூரில் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாக ஏறக்குறைய முன்னூறு பேரைக் கிறிஸ்து மதத்தில் சேர்த்துக் கொண்டார் என்று தெரிகிறது. இந்த விஷயம் நமது நாட்டில் பல இடங்களில் அடிக்கடி நடந்து வருகிறது. இது ஹிந்து மதத்தில் அபிமான –முடையவர்களுக்கெல்லாம் மிகுந்த வருத்தத்தை விளைவிக்கத் தக்கது."

ஆம் ஹிந்துக்கள் வருத்தப் படத்தக்க செய்திதான் அது. ஹிந்துக்களுடைய ஜனத்தொகை நாளுக்கு நாள் குறைபட்டு வருகிறது. கவிதையிலுள்ள மலைப்பாம்பு போல வாலில் நெருப்புப் பிடித்தெரியும் போது தூங்கும் வழக்கம் இனி ஹிந்துக்களுக்கு வேண்டாம். விழியுங்கள். ஜனத்தொகை குறையும் போது பார்த்துக் கொண்டே சும்மா இருப்போர் விழித்திருக்கும் போதே தூங்குகிறார்கள். அவர்கள் கண்ணிருந்தும் குருடர்" என்று பாரதி குறிப்பிடுகிறார்.

மதமாற்றம் செய்வதை, இஸ்லாமிய மதத் தலைவர்களும், கிறிஸ்தவ மதத் தலைவர்களும் பல ஆண்டுகளாகச் செய்து

வருகிறார்கள். இந்திய நாட்டில் இஸ்லாமிய மதத் தலைவர்கள் கடந்த ஆயிரம் ஆண்டுகளாகவும், கிறிஸ்தவ மதத்தலைவர்கள் கடந்த முன்னூறு ஆண்டுகளாகவும் மற்றவர்களை மத மாற்றங்கள் செய்வதில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். அதற்கு அக்காலங்களில் இருந்த அரசுகளும் அவர்களுக்கு சாதகமாக ஆதரவாக இருந்திருக்கின்றன.

இந்த மத மாற்றங்களில் கட்டாய மத மாற்றங்கள் தான் அதிகம். ஆட்சி அதிகாரங்களின் ஆதரவு, அதிகார அச்சுறுத்தல், ஆசை வார்த்தை காட்டல், பெருளுதவி செய்தல், மற்ற மதங்களைப் பற்றி அவதூறு செய்து ஏமாற்றுதல் இன்னும் இம்மாதிரியான முறையற்ற செயல்கள் மூலம் இந்தக் கட்டாய மத மாற்றங்கள் பல இடங்களிலும் நடை பெற்றுள்ளன. இத்தகைய கட்டாய மத மாற்றங்களினால் அதிகமாக பாதிக்கப் பட்டவர்கள் ஹிந்துக்கள் தான். எனவே அவர்களுக்கு இது விஷயத்தில் மனவருத்தம் ஏற்படுகிறது. அது இயல்பேயாகும்.

ஒவ்வொரு மதஸ்தருக்கும் அவரவர்களுடைய மதமும் மதபோதனைகளும் மத வழிபாடுகளும் முக்கியமானதும் மேலானதும் தான். அதை இந்த நாடு தொன்றுதொட்டு அங்கீகரித்து வந்திருக்கிறது. அவ்வப்போது மதத்தின் பேரால் சில கலவரங்கள் நடைபெற்றிருந்த போதிலும் பொதுவாக பாரதத்தின் பொது குணம் இவ்விஷயத்தில் இணக்கமானதாகும்.

ஐரோப்பாவில் கிறிஸ்தவர்களுக்குள்ளே பல உள்கல –வரங்களும், கலகங்களும், போர்களும், போப் அதிகாரத்திற்கு எதிரான ஆயுதக் கலகங்களும் சிலுவையுத்தங்களும் நடைபெற்றிருக்கின்றன, என்பது வரலாற்றுப் பதிவுகளாகும். இஸ்லா மியர்களுக்கிடையிலும் ஷியா–சன்னி என்று மோதல்களும் கலகங்களும் ஏற்பட்டிருக்கின்றன. பல படுகொலைகள் நடந்திருக்கின்றன என்று வரலாற்றுக்குறிப்புகள் கூறுகின்றன.

ஹிந்துமதம் என்பது ஒரு மதமல்ல. அது ஒரு வாழ்க்கை வழிமுறை. இன்று இந்தியாவிலுள்ள இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் பெரும்பாலும் ஹிந்து மதத்திலிருந்து மதமாற்றம் செய்யப்பட்டவர்கள்தான். அவர்களுடைய முன்னோர்கள் ஹிந்துக்களாக இருந்தவர்கள்தான். எனவே வாழ்க்கை வழிமுறையால் நாம் அனைவரும் இந்துக்களே. வழி பாடுகளினால் –தான் வேறுபட்டிருக்கிறோம்.

ஆயினும் சில சூழ்நிலைக் கட்டாயங்களினால் இன்றைய ஹிந்துக்கள் என்பவர்கள் ஒன்று படவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதைவைத்தும் பாரதியார் தனது கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

பாரதியார் கூறுகிறார்:

ஹிந்து மதம் ஒன்று. சைவம், வைஷ்ணவம் முதலிய ஆறு சமயங்களும் அதன் உட்பிரிவுகள் இதை தேசத்து ஜனங்களில் பெரும்பாலோர் நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொண்டி –ருக்கிறார்கள்.

பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ர, – என்ற நான்கு பிரிவிலும், பெரும் பகுதியோர் எல்லா தெய்வங்களையும் ஒன்று போலவே வணங்குகிறார்கள், வேத காலத்து ரிஷிகளைப் போலவே. ஆனால் சைவ வைஷ்ணவ மடங்களிலும் பௌராணிகர் கூட்டத்தினர் பரஸ்பரமாகிய மத தண்டனைகள் கொஞ்சம் நடந்து வருகின்றன. அதை உடனே நிறுத்த வேண்டும்.

பாரதியார், அக்காலத்தில் நடைபெற்ற கட்டாய மத மாற்றங்களைப் பற்றி மிக்க வருத்தத்துடன் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார். இத்தகைய கட்டாய மதமாற்ற நடவடிக்கைகள் இப்போதும் கூட நடைபெறுகிறது. இது ஒரு நாகரிகமற்ற செயலாகும். இத்தகைய செயல்கள் நிறுத்தப்படுவது நல்லது.

23. ஹிந்துக்கள் யார்?

வேதத்தை நம்புவோர்.

ருத்ரன், நாராயணன், குமாரன், முதலிய தேவர்கள் வேத ரிஷிகளால் ஒன்றாகக் கருதி வணங்கப் பெற்றோர். ஒரே தெய்வத்தை அங்ஙனம் பல பெயர் கூறி வணங்கியதாக அந்த ரிஷிகளே சொல்லியிருக்கிறார்கள்.

நல்ல காலம்

ஹிந்து மதம் ஒன்று. ஆகவே வைஷ்ணவ சமயாசிரியர், சைவ சமயாசிரியர், சங்கர மடத்தார், முதலிய குருக்கள் எல்லோரும் தமது பிரதிநிதிகள் மூலமாக ஒன்று கூடி யோசனை செய்து ஹிந்துக்களுடைய ஜனத்தொகை குறையாமல் பார்ப்பதற்கு வழி செய்ய வேண்டும். "பிற மதங்களிலிருந்து ஜனங்களை நமது கூட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு வழிகள் என்ன என்பது" பற்றி யோசனை செய்ய வேண்டும். தெய்வம் ஹிந்துக்கள் மீது கடைக்கள் செலுத்திவிட்டது. நாம் கும்பிடும் சிலைகள் எல்லாம் வெறும் கல்லும், செம்பும் அல்ல – மனிதர்களாலே சீர்படுத்த முடியாதபடி அத்தனை கெட்ட நிலைமைகள் ஹிந்துக்கள் வீழ்ந்த சமயத்தில் மேற்படி தெய்வங்கள் காப்பாற்றக் கருதி முற்பட்டு நிற்கின்றன. நமக்குள்ளே மகாஞானிகளும் சித்த புருஷர்களும் அவதரித்து விளங்குகிறார்கள். ஹிந்துக்களுக்கு நல்லகாலம் பிறந்து விட்டது. இதனை எல்லோரும் தெரிந்து நடக்க வேண்டும் என்று பாரதி கூறுகிறார்.

இங்கு பாரதியார் கூறியுள்ள கருத்து மிகவும் சிறந்த கருத்தாகும், சிந்திக்க வேண்டிய கருத்தாகும். சில ஆண்டுகளுக்கு முன்பாகப் பத்திரிகைகளில் ஒரு செய்தி படித்தேன். அந்த செய்தியாவது;

தமிழ் நாட்டில் உள்ள கிறிஸ்தவ சபைகளின் தலைவர்கள் பாதிரியார்கள் கொண்ட ஒரு பெரிய கூட்டம் ஒரு மகாநாடு போல் திருச்சியில் நடைபெற்றது. அம்மகாநாட்டில் கிறிஸ்தவ சபைகள்,

பாதிரியார்கள் ஆகியோரின் பணிகள் பற்றி விரிவான விவாதங்கள் நடைபெற்றது. அவ்விவாதங்களில் ஒரு சாரார் நாம் மதப்பிரச்சாரங்கள், வழிபாடுகள், மதச்சடங்குகளுடன் நமது பணிகளை நிறுத்திக் கொள்ள வேண்டும். நாட்டின் பொதுப் பிரச்னைகளில் தலையிட வேண்டாம் என்று கருத்துக் கூறினார்கள். மற்றொரு சாரார் அப்படியல்ல, நாம் மதப் பிரச்சாரம் மற்றும் வழிபாடுகளுடன் நிறுத்திக் கொள்ளக் கூடாது. கல்வி, சுகாதாரம், வைத்தியம், திருவிழாக்கள் மற்றும் பலவேறு சமுதாயப் பணிகள், சமூக சீர்திருத்த இயக்கங்கள் முதலியவற்றிலும் கலந்து கொள்ள வேண்டும். கலந்து பணியாற்ற வேண்டும், என்று கருத்துக் கூறினார்கள் என்று அந்த செய்திகள் தெரிவித்தன. இவ்வாறு சில கிறிஸ்தவ சபைகள் பலவேறு சமுதாயப் பணிகளிலும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுகிறார்கள்.

இந்து மதத்திலும் சமயச் சார்பான பல அமைப்புகள் இருக்கின்றன. மடங்கள், பலவேறு ஜனசபைகள் நாடு முழுவதிலும் இருக்கின்றன. அவைகளின் பிரதிநிதிகளின் மகாசபைகள் மகாநாடுகள் கூடித் தீர்மானங்கள் எடுத்து எல்லாக் குடியிருப்புப் பகுதிகளிலும் சமயப் பிரச்சாரம் செய்தல், கோவில்கள் கட்டுதல், பழைய கோவில்களைப் புதுப்பித்தல், திருவிழாக்கள் நடத்துதல், ஆலய வழிபாடுகள், பூசைகள் நடத்துதல் முதலிய பணிகள் செய்வது அத்துடன் பள்ளிக் கூடங்கள் அதில் முக்கியமாக ஆரம்பப் பள்ளிகள் நடத்தி மக்களுக்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் எழுத்தறிவித்தல், ஆஸ்பத்திரிகள் நடத்துதல், இலவச மருத்துவ முகாம்கள் நடத்துதல், சுகாதாரப் பணி நமது நாட்டில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் உள்ள லட்சக்கணக்கான ஊருணிகள், குளங்கள், திருக்குளங்கள் முதலியனவற்றைச் சீரமைத்தல், சாலைகள் அமைத்தல், ஆலயங்களில் அன்னதானம் போன்ற சமூக சேவைகள் நிவாரணப் பணிகள், குடிதண்ணீர் ஏற்பாடு செய்தல் முதலியவைகளைச் செய்தால் மெத்தப் பயனுள்ளதாக இருக்கும். வாசக சாலைகள், படிப்பகங்கள், நூலகங்கள், வேதப் பாட சாலைகள்

கம்பன் வள்ளுவன் இளங்கோவடிகள் பாரதி முதலியோருக்கு மன்றங்கள் அமைத்து விழா எடுத்தல், மற்றும் சைவத்திருமுறை சபைகள், திவ்யப் பிரபந்தச் சபைகள் மூலம் சமயச் பிரச்சாரம் செய்தல் முதலிய பணிகளை மேற் கொள்ளலாம்.

அத்தகைய பணிகள், இப்போதும் பல ஊர்களிலும் நடை பெறுகின்றன. அவை விரிவு பட்டும் வருகின்றன. ஆயினும் ஹிந்து சமுதாயத்தின் விரிவின் அளவுக்கு இன்னும் விரிவு படவில்லை. கிராமங்களுக்குச் செல்ல வேண்டும்.

இராமகிருஷ்ணா மிஷன் பல அறிய சேவைகள் குறிப்பாகக் கல்வி, ஆஸ்பத்திரி முதலிய சேவைகளில் முன்னணியில் இருக்கிறது. வித்தியா பாரதி அமைப்பு நாடு முழுவதிலும் பெரிய அளவில் கல்விப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. சேவா பாரதி அமைப்புகள். பல சமூக சேவைகள் செய்து வருகின்றன. வள்ளலார் சார்பான சபைகள் தமிழ் நாட்டில் ஆயிரத்திற்கு மேல் உள்ளன. அவைகள் மூலம் கல்விப் பணிகளும் சமுதாயப் பணிகளும் செய்ய வேண்டும். அவைகளுக்கு பல செல்வந்தர்களும் பல தொழில் நிறுவனங்களும் அவைகளின் அறக்கட்டளைகளும் உதவி செய்ய வேண்டும்.

நமது ஆலயங்களின் நிர்வாகங்கள் அரசாங்கத்தின் பிடியிலிருந்து அரசாங்க நிர்வாகத்திலிருந்து நீங்க வேண்டும். சயேச்சையாக செயல்பட வேண்டும். அவைகள் ஹிந்து சமயப் பணிகளும் சமுதாயப் பணிகளும் செய்ய வழி செய்யப்பட வேண்டும். திருப்பதி – திருமலை தேவஸ்தானம் ஒரு முன்னுதாரணம். அந்த தேவஸ்தானம் பல சிறந்த சமுதாயப் பணிகளைச் செய்து வருகிறது. ஒரு சிறப்பான புகழ் பெற்ற பல்கலைக் கழகத்தை நடத்தி வருகிறது என்பதை அனைவரும் அறிவார்கள். அது போல் நமது கோவில்களும் அதன் சொத்துக்களும் அதன் செல்வாக்கும் பக்தர் ஆதரவும் ஹிந்து சமுதாயத்தை மேம்படுத்த, நாட்டின் கல்வி, சுகாதாரம், வைத்திய வசதிகளை மேம் படுத்த வழி செய்ய வேண்டும்.

24. திலகர் கூறியது:

நாற்குலம் (சதுர்வர்ணம்) என்னும் தலைப்பில் பாரதி எழுதியுள்ள கட்டுரையில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

"சென்ற காங்கிரஸ் ஜன சபை லக்நௌ நகரத்தில் கூடிக் கலைந்த பிறகு ஸ்ரீமான் லோகமான்ய பால கங்காதரத் திலகர் தமது இஷ்டர்களுடன் கான்பூருக்கு வந்தார். அங்கு ராம் லீலா நாடக வெளியே பதினையாயிரம் ஜனங்கள் சேர்ந்த பொதுக் கூட்டம் ஒன்று கூடி அவரை சுவராஜ்ய போதனை செய்யும் படி வேண்டினார்கள். ஸ்வராஜ்யப் பேச்சுக்கிடையே அவர் ஜாதிக் கட்டை முறித்துச் சொல்லிய சில வார்த்தைகளை இங்கு மொழி பெயர்த்துக் காட்டுகிறேன்.

திலகர் சொன்னார். பழைய காலத்து நான்கு வர்ணப் பிரிவுக்கும் இப்போதுள்ள ஜாதி வேற்றுமைக்கும் பேதமிருக்கிறது. திருஷ்டாந்தமாக இப்போது ஒரே பந்தியில் இருந்துண்ண விரும்பாதிருத்தல் சாதிப் பிரிவுக்கு லக்ஷணம் என்று பலர் நினைக்கிறார்கள். பழைய காலத்து விஷயம் இப்படியில்லை.

"நான்கு வர்ணங்கள் பிறப்பினாலேயல்ல. குணத்தாலும் தொழிலாலும் உண்டாயின என்று கீதை சொல்லுகிறது. அதன் படி பார்த்தால் இப்போது நமக்குள் க்ஷத்திரியர் எங்கேயிருக்கிறார்கள்? நம்மைக் காப்போர் ஆங்கிலேயர்கள். ஹிந்துக்களுக்குள் க்ஷத்திரியரைக் காணோம். இந்தக் கான்பூர் பெரிய வியாபார ஸ்தலம். ஆனால் இங்குள்ள வைசியர் பிற தேசத்து வியாபாரிகள் வசத்தில் நிற்கிறார்கள். செல்வத்தலைமை நமக்கில்லை. இப்போதுள்ள பிராமணர் தாமே தேசத்தின் மூளை என்று சொல்லுகிறார்கள். ஆனால் இந்த மூளை மண்ணடைந்து போய் நாம் வெளியிலிருந்து அதிக மூளை இறக்குமதி செய்யும் படி நேரிட்டிருக்கிறது.

"நான்கு வர்ணத்தோருக்குரிய நால்வகைத் தொழில்களும் ஹிந்துக்கள் அல்லாத பிறர் நியமனப்படி நடக்கின்றன. நாமெல்லோரும் தொண்டர் நிலையில் இருக்கிறோம். தேசம் கெட்ட ஸ்திதியில் இருக்கிறது. உங்கள் உடம்பில் பிராம்மணரத்தம் ஓடுவதாகவும் க்ஷத்திரிய ரத்தம் ஓடுவதாகவும் நீங்கள் வாயினால் சொல்லலாம். ஆனால் உங்களுடைய வாழ்க்கை அப்படியில்லை."

இவ்வாறு திலகர் சொல்லியதிலிருந்து நமது தேசத்திற்கு மிகுந்த நன்மை உண்டாகக் கூடும். ஏனென்றால் இவர் தேசம் முழுவதிலும் சுதேசிக் கட்சியாருக்குத் தலைவராக இருப்பது மாத்திரமேயன்றி மஹாராஷ்டிரத்து வைதீகப் பிராமணர்களுக்கும் தலைவராக விளங்குகிறார். வேத சாஸ்திர ஆராய்ச்சியில் உயர்ந்த கீர்த்தி பெற்றவர். நெடுங்காலமாக இடைவிடாது செய்து வரும் ஆராய்ச்சியினாலும் உயர்ந்த மேதையினாலும் நமது பூர்வீகமான ஜாதி தர்மத்தின் உட்கருத்தை நன்றாகத் தெரிந்து கொண்டு நமது தற்காலப் பிரிவுகளைக் கண்டிக்கிறார். புராதன தர்மமே பின் பற்றத் தக்கது. ஹிந்துக்களாகிய நாமெல்லாரும் இவருடைய உபதேசப்படி நடந்தால் நன்மை உண்டாகும். இப்போதுள்ள ஜாதி விரோதங்களும் தாழ்வுகளும் நீங்கி எல்லோருக்கும் மேன்மையுண்டாகும்" என்று பாரதியார் எழுதுகிறார்.

பாரதி தனது பல கட்டுரைகளிலும் ஜாதி அமைப்பு முறையைக் கண்டித்தும் ஜாதிப் பாகுபாடுகளையும் வேறுபாடுகளையும் சாடியும், ஜாதிக் கொடுமைகளைக் கடுமையாக ஆட்சேபித்தும் எழுதியுள்ளதுடன் தாழ்த்தப்பட்டுள்ள மக்களைக் கை கொடுத்து மேலுயர்த்த வேண்டும் என்றும் மற்றவர்களுடன் சமமாகக் கொண்டு வர வேண்டும் என்றும் எழுதுகிறார். அவர்கள் வசிக்கும் இடங்களில் இந்து சமயத் தலைவர்கள் சென்று அவர்களுக்குப் போதனைகள் செய்ய வேண்டும். பள்ளிக் கூடங்கள் அமைத்து அவர்களுக்குப்

பாடம் சொல்லிக் கொடுத்து கல்வி அறிவில் உயர்த்த வேண்டும். அவர்களுக்கு வாழ்க்கைத் தேவைகள் கிடைக்கச் செய்ய வேண்டும், என்றெல்லாம் பல இடங்களிலும் பேசுகிறார். கவிதைகளிலும் கட்டுரைகளிலும் எழுதுகிறார். பறையர் என்னும் தலைப்பில், ஹிந்து மத விரோதிகளின் பேச்சைக் கேட்க வேண்டாம். நந்தனாரையும் திருப்பாணாழ்வாரையும் மற்ற ஹிந்துக்கள் கும்பிடவில்லையா? பறையருக்கு நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முதற்கடமை. அவர்களுக்கு முதலாவது வேண்டியது சோறு. சென்னைப் பட்டணத்து "பட்லர்" களைப் பற்றிய பேச்சில்லை. கிராமங்களில் உள்ள பண்ணைப் பறையர்களைப் பற்றிய பேச்சு. அவர்களையெல்லாம் ஒன்று திரட்டி, உடனே விபூதி நாமத்தைப் பூசு. பள்ளிக் கூடம் வைத்துக் கொடு. கிணறு வெட்டிக் கொடு. இரண்டு வேளை ஸ்நானம் பண்ணச் சொல்லு. அவர்களோடு சமத்துவம் கொண்டாடு. நான் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறேன். அவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஹிந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதற விடாதேயுங்கள். மடாதிபதிகளே! நாட்டுக் கோட்டைச் செட்டிகளே! இந்த விஷயத்தில் பணத்தை வாரிச் செலவிடுங்கள். இது நல்ல பயன் தரக் கூடிய கைங்கரியம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமாகும் கைங்கரியம்.

மகாத்மா காந்தி தனது நிர்மாண திட்டத்தில் ஹரிஜன சேவை என்னும் பணிக்கு முன்னோடியாக, பாரதி இந்த திட்டத்தை முன் வைத்திருப்பதைக் காணலாம். ஜாதி ஒழிப்பு பற்றி வாய்ச் சவடாலாகப் பேசிப் பயனில்லை. ஆக்க பூர்வமாக இத்தகைய பணிகளைச் செய்ய வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும். என்ன சொன்னோம் என்பதைக் காட்டிலும் என்ன செய்தோம் என்பது முக்கியமாகும்.

✡ ✡ ✡

25. பஞ்சமர்:

பஞ்சமர் என்னும் தலைப்பில் பாரதி எழுதுகிறார்.

"பறையர் ஹித்துக்கள். அவர்களைக் கை தூக்கி விட்டு மேல் நிலைக்குக் கொண்டு வருதல் நம்முடைய தொழில்.

"பறையருக்கெல்லாம் நல்ல சோறு, நல்ல படிப்பு, முதலிய சௌகரியங்களும் மற்ற மனுஷ்ய உரிமைகளும் ஏற்பாடு செய்து கொடுத்தல் நம்முடைய கடமை. சென்னை பட்டினத்தில் நாயர் கட்சிக் கூட்டமென்றில் பறையரை விட்டு இரண்டு மூன்று பார்ப்பனரை அடிக்கும் படி தூண்டியதாக பத்திரிகைகளில் வாசித்தோம். ராஜாங்க விஷயமான கொள்கைகளில் அபிப்ராயபேதமிருந்தால், இதை ஜாதி பேதச் சண்டையுடன் முடிச்சுப் போட்டு அடிபிடி வரை கொண்டு போவோர். இந்த தேசத்தின் ஹிந்து தர்மத்தின் சக்தியை அறியாதவர்கள். இது நிற்க.

அடுத்த நவம்பர் மாதம் பட்டினத்தில் பறையரை உயர்த்த வேண்டும் என்கிற நோக்கத்துடன் மகா சங்கம் நடத்தப் போவதாகக் கேள்விப் பட்டு மிகவும் சந்தோஷமடைந்தேன். முற் காலத்தில் நந்தனார் தோன்றியது போலவே இப்போது மேற்படியார் குலத்தில் ஸஹஜாநந்தர் என்ற சந்யாசி ஒருவர் நல்ல பக்தராயும் ஸ்வஜநாபிமானம் உடையவராகவும் தோன்றியிருக்கிறார். அவருடைய முயற்சிகளை முன்னுக்குக் கொண்டு வரும் படி உதவி செய்ய விரும்புவோர் குத்தியில் ஸ்ரீகேசவப் பிள்ளை திவான் பஹதூருக்கு எழுதி விவரங்கள் தெரிந்து கொள்ளலாம். மேற்படி ஸஹஜா நந்தர் சிதம்பரத்திற்கு அருகே ஒரு கிராமத்தில் பறைப் பிள்ளைகளுக்காக ஒரு பள்ளிக் கூடம் போட்டிருக்கிறார். அந்தப் பள்ளிக் கூடம் மே மாதம் திறக்கப் பட்டது. இப்போதைக்கு மண் கட்டிடம். கூரை வேய்ந்திருக்கிறார்கள். அதில் நானூறு பிள்ளைகள் வரை ஏற்கனவே

சென்று படிக்கிறார்கள்" என்று எழுதுகிறார். மேலும் "தியஸாபிக்கல் சங்கத்தார் சில பஞ்சமப் பாட சாலைகளை ஏற்படுத்தி அந்த ஜாதியாரை மேன்மைப் படுத்தும் பொருட்டு மிகுந்த சிரத்தையுடன் உழைத்து வருகிறார்கள். ஸ்ரீமதி அனி பெஸண்டுக்கு இந்த விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் அன்பும் உத்சாஹமும் மெச்சத் தகுந்தன.

பகவன் என்ற பிராமணனுக்கும் ஆதி என்ற பறைச்சிக்கும் ஔவை, திருவள்ளுவர், கபிலர், பரணர், உப்பை உறுவை, வள்ளி என்ற குழந்தைகள் பிறந்து உபய குலத்துக்கும் நீங்காத கீர்த்தி ஏற்படுத்தியதை இக்காலத்திலும் பறையர் மறந்து போகவில்லை. சிறிது காலத்திற்கு முன்பு ஒரு கிழச் சாம்பான் என்னிடம் வந்து *"முப்போதும் நீரில் முழுகிக் குளித்தால் முனிவர்களாவாரோ? எப்போதும் இன்பத்திலிருப்பவரன்றோ? இரு பிறப்பாளராவார்?"* என்ற தத்துவராயர் வாக்கைச் சொல்லிப் பறை என்பது ஹிந்து தர்மத்தில் கோயிற் பேரிகையென்றும் அதைக் கொட்டுவோன் பறையன் என்றும் பறை என்பது சக்தியின் பெயரென்றும் அவளே ஆதி என்றும் சிவனே பகவன் என்றும் பிராமண ரூபம் கொண்டு அவளுடன் வாழ்ந்தார் என்றும் பறையர் மேன்மைப் பட்டால் பார்ப்பார், வேளாளர், முதலியார், செட்டியார் முதலிய இதர ஜாதியாரும் மேன்மையடைவார் என்றும் பலவித நீதிகளைச் சொன்னார். அதே கருத்துடையவராய் ஹிந்துக்களுடைய விடுதலையிலும், மேம்பாட்டிலும் மிகுந்த நாட்டத்துடன் உழைத்து வரும் ஸ்ரீநீதிபதி மணி அய்யரும், வைத்தியர் நஞ்சுண்டராயரும், சுதேச மித்திரன் ரங்கசாமி அய்யங்காரும் பறையர் குலத்தைக் கை தூக்கி விடுவதில் தம்மால் இயன்றவரை உதவி செய்வதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்" என்று பாரதி எழுதியுள்ளார்.

தாழ்த்தப் பட்ட மக்களை மேம்படுத்துவதில் சமத்துவம், கல்வி, வாழ்க்கை வசதிகள் ஆகியவற்றை பாரதி வற்புறுத்தியுள்ளதைப்

பார்க்கிறோம். இன்று சில மாற்றங்கள் அபிவிருத்திகள் ஏற்பட்டுள்ளன. இட ஒதுக்கீடு மூலம் மற்றும் இதர முயற்சிகள் மூலம் தாழ்த்தப் பட்ட மக்களுக்குப் படிப்பு வசதி, அரசு வேலைகளில் வாய்ப்பு, சட்ட மன்றங்கள் பாராளுமன்றங்களில் பிரதிநிதித்வம், அரசியல் சட்டப்படி சமத்துவம் சம வாய்ப்புகள் முதலியன ஏற்பட்டுள்ளன. இவை மூலம் அவர்களில் பத்து சதவீத மக்களுக்கே அதிக பலன் கிடைத்துள்ளது. என்றாலும் நம்ப ஆளு அங்கே இருக்கிறார் என்னும் சமூக அந்தஸ்து வந்திருக்கிறது என்றாலும் நலிந்த பிரிவுகளில் உள்ள அனைத்து மக்களும் கை தூக்கி விடப் பட வேண்டிய பணிகள் இன்னும் உள்ளன. அவைகளையும் விரைவில் முழுமையாக நிறைவேற்ற வேண்டியது அவசியம்.

✡ ✡ ✡

26. ஜாதிபேத விநோதங்கள்:

பிராமணர் – பிராமணர் அல்லாதார் என்று பேசுவது பற்றியும் ஆரியர் திராவிடர் என்று பேசுவது பற்றியும் அதில் உண்மையில்லை என்பது பற்றியும் ஜாதிபேத வினோதங்கள் என்னும் தலைப்பில் பாரதி தனது கருத்துக்களை உண்மை நிலையை தெளிந்து தனது கட்டுரையில் எழுதியுள்ளார். அக்கட்டுரையில் பிராமணரல்லாதார் என்ற வகுப்பே கிடையாது. அதுவே பொய். எனவே இந்தக் கிளர்ச்சியின் மூலமே பொய்யாக இருப்பது கொண்டு இதனை உண்மையில்லாத கிளர்ச்சி என்கிறேன். உண்மையாகவே இந்தியாவில் ஜாதி பேதங்களில்லாமல் சமத்துவக் கொள்கை வெற்றியடைய வேண்டுமென்றால் அதற்கு ஸ்வராஜ்ய ஸ்தாபனமே சரியான உபாயம். ஸ்வராஜ்யம் கிடைத்தால் சட்ட சபைகளில் எல்லா ஜாதி மேதாவிகளும் கலந்திருப்பார்களாதலால் அந்தச் சபைகளின் மூலமாக இந்தியாவில் முதலாவது ராஜரீக வாழ்வில் சமத்துவக் கொள்கையை நிறுத்தி விடலாம். பிறகு சமூகவாழ்விலும் சமத்துவக் கொள்கை தானே பரவிவிடும். இதை விட்டுப் பொய்யும் புலையுமாக திராவிடர்கள் என்றும் ஆரியர் என்றும் உள்ள பழைய சொற்களுக்குப் புதிய அபாண்டமான அர்த்தங்களைக் கற்பித்துக் கொண்டு வீண் சண்டைகள் வளர்ப்பதினால் ஹிந்து சமுதாயத்துக்கே கெடுதி விளையக்கூடும். எந்த வகுப்புக்கும் அனுகூலம் ஏற்படாது" என்று பாரதி மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

இந்த ஆரியர்–திராவிடர் மாயையும், பொய்யும், பிராமணர்–பிராமணரல்லாதார் மாயையும், பொய்யும் தமிழ்நாட்டை நல்ல வழியில் கொண்டு செல்லவில்லை. தமிழ் நாட்டில் ஹிந்து சமுதாயத்திற்கு கேடுகளையே விளைவித்திருக்கிறது. எதிர் மறையான சிந்தனைகளையே வளர்த்துவிட்டு தமிழ் மக்களைத் தனிமைப் படுத்தியிருக்கிறது. தமிழகத்தில் 1967–ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக திராவிடமே ஆண்டு கொண்டிருக்கிறது. இங்கு தேனும் பாலும் ஓடவில்லை. பின்னுக்குத்தான் சென்றிருக்கிறது. சொந்த முயற்சியில் கடுமையாக உழைத்து அசைந்து கொண்டி –ருக்கிறோம். விழிப்படைய வேண்டும்.

27. பிராமணன் யார்? :

பிராமணன் யார் என்னும் தலைப்பில் ஓர் உபநிஷத்தின் கருத்தை பாரதி இங்கு விவரித்துக் கூறுகிறார்.

"அஷ்டாதச உபநிஷத்துக்களிலே வஜ்ரஸூசிகை என்பதொன்று. வஜ்ரஸூசி என்றால் வைர ஊசி என்று பொருள் . இவ்வுபநிஷதம்" பிராமணன் யார் என்பதைக் குறித்து மிகவும் நேர்த்தியாக விவரித்திருக்கிறது.

"நான் பிராமணன், நீ சூத்திரன்" என்று சண்டைபோடும் குணமுடையவர்களுக்கெல்லாம். இவ்வேத நூல் தக்க மருந்தாகும். அன்னிய ராஜாங்கத்தாரிடம் ஒருவன் போலீஸ் வேவுத் தொழில் பார்க்கிறான். அவன் ஒரு பூணூலைப் போட்டுக் கொண்டு ஏதேனும் ஒரு நேரத்தில் கிராமபோன் பெட்டி தியாகைய கீர்த்தனைகள் சொல்லுவதைப் போல் பொருள் தெரியாத சில மந்திரங்களைச் சொல்லிவிட்டு, அய்யர், அய்யங்கார் அல்லது ராயர் என்று பெயர் வைத்துக் கொண்டு, "நான் பிராமணன், நான் தண்ணீர் குடிப்பதைக் கூட மற்றவர்ணத்தவன் பார்க்கலாகாது" என்று கதை பேசுகிறான். மற்றொருவன் தாசில்தார் வேலை பார்க்கிறான். பஞ்சத்தினால் ஜனங்கள் சோறின்றி மடியும்போது அந்த தாசில்தார் தனது சம்பளம் அதிகப்படும் பொருட்டு, "பஞ்சமே கிடையாது, சரியான படி தீர்வை வசூல் செய்யலாம்" என்று ரிப்போர்ட் எழுதிவிடுகிறான். ஆறில் ஒரு கடமைக்கு மேல் ராஜாங்கத்தார் தீர்வை கேட்பதே குற்றம். பஞ்ச நாளில் அது கூடக் கேட்பது பெருங்குற்றம். அங்ஙனம் தீர்வை வாங்கிக் கொடுக்கும் தொழிலிலே இருப்பவன் ஹிந்து தர்மத்துக்கு விரோதி. அதற்கும் அப்பால் உள்ள பஞ்சத்தை இல்லை என்று எழுதி ஜனத்துரோகம் செய்யும் தாசில்தாருக்கு என்ன பெயர் சொல்லுவதென்று நமக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட தாசில்தார் தனக்கு "சாஸ்திரியார்" என்று பெயர் வைத்துக்கொண்டு "நான்

கௌதம ரிஷியின் சந்ததியிலே பிறந்தேன்" என்பதாகப் பெருமை பாராட்டிக் கொள்கிறான். இப்படியே வைசியத் தொழில், சூத்திரத் தொழில் என்ற கௌரவத் தொழில்கள் செய்வோரும் இவற்றிற்குப் புறம்பான புலைத் தொழில்கள் செய்வோருமாகிய பல போலிப் பார்ப்பார் தங்களுக்கு இயற்கையாக உள்ள பெருமையை மறந்து விட்டுப் பொய்ப் பெருமையைக் கொண்டாடி வருகிறார்கள்.

நாட்டிலே இவ்விஷயமான விவாதங்களும் போராட்டங்களும் அதிகரிக்கின்றன. இத்தருணத்தில் நமது வேதம் இவ்விவகாரத்தைப் பற்றி என்ன அபிப்ராயம் கொடுக்கிறது என்பது ஆராயத்தக்க பொருளாகும்.

வஜ்ரஸூசி உபநிஷத்து பின்வருமாறு:

ஞானமற்றவர்களுக்கு தூஷணமாகவும் ஞானக்கண் உடையவருக்குப் பூஷணமாகவும் விளங்குவதும் அஞ்ஞானத்தை உடைப்பது மாகிய "வஜ்ரஸூசி" என்ற சாஸ்திரத்தைக் கூறுகிறேன்.

பிரம்ம, ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்று நான்கு வர்ணங்கள் உண்டு. அவற்றிலே பிராமணன் பிரதானமானவன் என்று வேத சாஸ்திரத்தைத் தழுவி ஸ்மிருதிகளாலும் சொல்லப்படுகிறது. அதில் பிராமணன் யாரென்பது பரிசோதிக்கத் தக்கதாகும். ஒருவன் தன்னைப் பிராமணன் என்று சொல்லிக் கொள்கிறான். அங்ஙனம் பிராமணன் என்பது அவனுடைய ஜீவனையா? தேகத்தையா? பிறப்பையா? அறிவையா? செய்கையையா? தர்ம குணத்தையா? அவனுடைய ஜீவனே பிராமணன் என்றால் அஃதன்று. முன் இறந்தனவும், இனி வருவனவும், இப்போது உள்ளனவும் ஆகிய உடல்களில் எல்லாம் ஜீவன் ஒரே ரூபமுடையதாயிருக்கின்றது. ஒருவனுக்கே செய்கை வசத்தால், பலவித உடல்கள் உண்டாகும் போது எல்லா உடல்களிலும் ஜீவன் ஒரே ரூபமுடையதாகத்தான் இருக்கின்றது. ஆகையால் (அவனுடைய) ஜீவன் பிராமணனாக

மாட்டாது. ஆயின் (அவனது) தேஹம் பிராமணன் எனில் அதுவுமன்று. சண்டாளன் வரையுள்ள எல்லா மனிதர்களுக்கும் பஞ்ச பூதங்களால் ஆக்கப் பட்ட உடலும் ஒரே அமைப்புடையதாகத் தானியிருக்கிறது. மூப்பு, மரணம், இயல்பு, இயலின்மைகள் – இவையனைத்தும் எல்லா உடல்களிலும் சமமாகக் காணப்படுகின்றன. மேலும் பிராமணன் வெள்ளை நிறைமுடையவன். கூஷத்திரியன் செந்நிறமுடையவன், வைசியன் மஞ்சள் நிறமுடையவன், சூத்திரன் கருமை நிறமுடையவன் என்பதாக ஓர் நியமத்தையும் காணவில்லை. இன்னும் உடல் பார்ப்பானாயின், தகப்பன் முதலியவர்களை இறந்தபின் கொளுத்தும் மகன் முதலியவர்களுக்குப் பிரமஹத்தி தோஷம் உண்டாகும். ஆதலால் (அவனுடைய) தேஹம் பிராமணனாக மாட்டாது. ஆயின் பிறப்புப் பற்றி பிராமணன் என்று கொள்வோமென்றால் அதுவுமன்று. மனிதப் பிறவியற்ற ஐந்துக்களிடமிருந்து கூட ரிஷிகள் பிறந்ததாகக் கதைகளுண்டு. ரிஷிய சிருங்கர்மானிலிருந்தும் ஜாம்பூநகர் நரியில் இருந்தும், வால் மீகர் புற்றிலிருந்தும், கௌதமர் முயல் முதுகிலிருந்தும் பிறந்ததாகக் கதை கேட்கிறோம். அது போக வசிஷ்டர் ஊர்வசி வயிற்றில் பிறந்தவர். வியாசர் மீன் வலைச்சி வயிற்றில் பிறந்தவர். அகஸ்தியர் கலசத்திலே பிறந்ததாகச் சொல்லுவார்கள். முன்னாளில் ஞானத்திலே பெருமையடைந்தவர்களாகிய பல ரிஷிகளின் பிறவி வகை தெரியாமலேயே இருக்கிறது. ஆகையால் பிராமணத்வம் பிறப்பு பற்றியதன்று ஆயின் அறிவினால் பிராமணன் எனக்கொள்வோ மென்றால் அதுவுமன்று. கூஷத்திரியர் முதலிய மற்றவர்ணத்தவர்களிற் கூட அநேகர் உண்மை தெரிந்த அறிவாளியாயிருக்கிறார்கள். ஆதலால் அறிவு பற்றி ஒருவன் பிராமணன் ஆக மாட்டான். ஆயின் செய்கை பற்றி ஒருவன் பிராமணனாகக் கொள்வோமெனில் அதுவுமன்று. பிராப்தம், சஞ்சிதம், ஆகாமி என்ற மூவகைச் செயல்களும் ஒரேவிதமான இயற்கையுடையனவாகவே காணப்படுகின்றன. முன் செயல்களால் தூண்டப்பட்டு ஜனங்கள்

எல்லோரும் பின் செயல்கள் செய்கிறார்கள். ஆதலால் செய்கை பற்றி ஒருவன் பிராமணனாய் விட மாட்டான். பின் தர்மஞ் –செய்வோனைப் பிராமணனாகக் கொள்வோமென்றால் க்ஷத்திரியன் முதலிய நான்கு வர்ணத்தவரும் தர்மஞ் செய்கிறார்கள். ஆதலால் ஒருவன் தருமச் செய்கையைப் பற்றியே பிராமணன் ஆகி விட மாட்டான். அப்படியானால் யார்தான் பிராமணன்? எவனொருவன் இரண்டற்றதும் பிறவி, குணம், தொழில் என்பவை இல்லாததும், உள்ளும் புறமும் ஆகாசம் போல கலந்திருப்பதும் அளவிடக் கூடாததும் அனுபவத்தால் உணரத்தக்கதுமாகிய இறுதிப் பொருளை, நேருக்கு நேராகத் தெரிந்த காமம் ராகம் முதலிய குற்றங்களில்லாத –வனாய் பாபம், மாற்சரியம், விருப்பம், ஆசை, மோகம் முதலியவை நீங்கினவனாய், இடம்பம், அகங்காரம் முதலியவை பொருந்தாத நெஞ்சமுடையவனாய் இருக்கிறானோ, இங்ஙனம் கூறப்பட்ட இலக்கணமுடையவனே பிராமணனென்பது சுருதி ஸ்மிருதி புராண இதிகாசமென்பவற்றின் அபிப்ராயமாகும். மற்றபடி ஒருவனுக்கு பிராமணத்வம் ஸித்தியாகாது என்பது உபநிஷத்து.

பிராமணனாக வேண்டுவோர் மேற் கூறப்பட்ட நிலைமையைப் பெற முயற்சி செய்யக்கடவர். க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் முதலிய மற்ற லௌகீக வர்ணங்களுக்கும் இது போலவே தக்கவாறு லக்ஷணங்கள் அமைத்துக் கொள்க. அவ்விலக்கணங்கள் பொருந்தியவர்களே அவ்வருணத்தினரென்று மதிக்கத் தக்கவர்கள். அந்த இலக்கணங்கள் இல்லாதவர்கள் அவற்றையடைய முயற்சி செய்ய வேண்டும். போலிஸ் வேவுத்தொழில் செய்பவன் பிராமணன் ஆக மாட்டான். குமாஸ்தா வேலை செய்பவன் க்ஷத்திரியன் ஆக மாட்டான். சோம்பேறியாக முன்னோர் வைத்து விட்டுப் போன பொருளையழித்துத் தின்பவன் வைசியன் ஆகமாட்டான். கைத் தொழில்களையெல்லாம் இரக்கக்கொடுத்து விட்டுச் சோற்றுக்குக் கஷ்டமடைவோர் சூத்திரர் ஆக மாட்டார்கள். இவர்கள் எல்லாம்

மேம்பாடுடைய ஆரியவர்ணங்கள் நான்கிற்கும் புறம்பாகிய நீசக் கூட்டத்தார் நமது தேசம் முன் போலக் கீர்த்திக்கு வர வேண்டு –மானால் உண்மையான வகுப்புகள் ஏற்படவேண்டும். பொய் வகுப்புகளும் போலிப் பெருமைகளும் நசிக்க வேண்டும். இது நம்முடைய வேத சாஸ்திரங்களின் கருத்து" என்று பாரதி கூறி முடிக்கிறார். இந்த விளக்கத்திற்கு மறு விளக்கம் தேவையில்லை. பாரதி தன் காலத்தில் நிகழ்ந்த அரசியல் மற்றும் சமுதாயப் பிரச்னைகள் பற்றி எழுந்த விவாதங்களுக்குப் பதிலளிப்பதைப் போல் இந்தக் கட்டுரை அமைந்திருக்கின்றது. அன்னிய ஆட்சியின் நிர்வாகத்தைப் பற்றிய, பாரதியின் கசப்பான அனுபவங்களையும் நம்மவர்களின் சில இழி செயல்களையும் சுட்டிக்காட்டி வெளிப் படுத்துவதாகவும் இக்கட்டுரை அமைந்திருப்பதைக் காணலாம். இக்கட்டுரையில் அமைந்துள்ள பாரதியின் தமிழ் உரைநடையும் அக்காலத்தில் மக்களிடம் பழக்கத்தில் இருந்த பேச்சு மொழியில் சரளமாக அமைந்திருக்கிறது.

இன்று நமது நாட்டில் இந்து சமுதாயத்தின் முழுமையான ஒற்றுமைக்கும் பாரதத்தின் தேச பக்தி உணர்வு உறுதிப் படவும் தேசீய உணர்வு மேம்படவும் முக்கிய தடைகளில் ஒன்றாக இருப்பது இன்றைய ஜாதீய உணர்வு. இந்தத் தடையைப் போக்க பாரதியின் இந்தக் கட்டுரை நல்ல கூர்மையான ஆயுதமாகும்.

✡ ✡ ✡

28. எதிர் ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை:

எதிர் ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை என்னும் கட்டுரையில் பாரதி எழுதுகிறார்.

"நமது தேசத்தில் வறுமை அதிகம். முன்னேயிருந்தவர்களின் கோழைத்தன்மை, ஒற்றுமைக் குறைவு, சாஸ்திர ஞானமின்மை, பல தேச விவகாரங்கள் தெரியாமை, மூடகர்வங்கள் முதலியவற்றால் லக்ஷ்மியை இழந்தோம். மேற்படி குணங்கள் இன்னும் நம்மை விட்டு நன்றாக நீங்கவில்லை. நாளொன்றுக்கு சராசரியாக நமது நாட்டில் ஒரு மனிதனுக்கு முக்காலணா வரும்படியென்று கணக்காளிகள் சொல்லுகிறார்கள். அதாவது நரகத்துன்பம் உலகத்தில் வேறு எந்த நாட்டிலும் இப்படி இல்லை.

இந்த நிலையில் நமக்குள்ளே பலர் பலவிதமான இகழ்ந்த காரியங்கள் செய்வது வியப்பில்லை. மிகுந்த செல்வமுடைய நாடுகளிலே கூட மனிதர் பணத்திற்காக எத்தனையோ மானம் கெட்ட காரியங்கள் செய்கிறார்கள். ஏழை தேசத்தாராகிய நாம் இவ்வளவு மானத்துடன் பிழைப்பதே பெரியகாரியம்.

"பணம், பொதுக்கல்வி, விடுதலை மூன்றும் இல்லாவிட்டால் அந்த நாட்டில் மானமேது?" என்று பாரதி மிகுந்த கவலையுடன் அன்னிய ஆட்சியால் நாட்டில் ஏற்பட்டிருந்த அவல நிலையை எடுத்துக் காட்டி எழுதுகிறார்.

பாரதி இந்தக் கட்டுரையில் கூர்மையான சில சொற்களில் வரதட்சணைக் கொடுமையைப் பற்றிக் கடுமையாக எடுத்துக் கூறுகிறார்.

"மானமுடைய தேசங்களிலே சீதனம் கொடுத்தல் பெண்ணின் பெற்றோர் செய்வது சாதாரணமேயாகும். ஆனால் மாப்பிள்ளை –களுக்கு விலைத் தரங்கள் போட்டு இன்ன பரீட்சை தேரினவனுக்கு

இத்தனை ரூபாய் கிரையம் என்று முடிவு செய்து வைத்து அதன் படி விவாஹங்கள் நடத்தும் வழக்கமில்லை.

"சீனா, ஜப்பான், பாரசீகம் முதலிய எல்லா மனுஷ்ய தேசங்களிலேயும் விவாஹம் அன்பையே ஆதாரமாகக் கொண்டு செய்யப் படுகிறது. இங்கே பணத்துக்காக விவாஹங்கள் செய்து கொள்ளுகிறார்கள். சாதாரணமாகப் பெண்களுக்கு விலை கூறி விற்பது வழக்கமாகவே இருந்தது. இப்போது "பூசுரர்" (பூமண்டலத்திலே தேவர்) ஆகிய பிராமணக் கூட்டத்தார் மாப்பிள்ளைக்கு விலை போட்டு விற்கத் தொடங்கியிருக்கிறார்கள். புண்ணிய பூமி பாரதம். பணம் கொடுக்கச் சொல்லி ஏழைக் –குடும்பத்தாரை வதை செய்யும் போது தான் துன்பம் அதிகப் படுகிறது." என்று பாரதி குறிப்பிடுகிறார்.

இந்த வரதட்சணைக் கொடுமை என்பது பெரும்பாலும் பிராமணர்களுக்கிடையில் தான் இருந்தது. இன்று அந்த நோய் எல்லா ஜாதிகளுக்கிடையிலும் பரவியிருக்கிறது. பணம், பவுன்(நகை) பண்ட பாத்திரம், இப்படி மாப்பிள்ளையும் மாப்பிள்ளை வீட்டாரும் கேட்பது என்றாகிவிட்டது,. திருமணத்திற்குப் பின்னர், அந்தப் பெண் கொடுமைப் படுத்தப்படும் செய்திகள் வருகின்றன. சட்டம் ஒரு பக்கம் இருந்தாலும் அதை யாரும் சட்டை செய்வதில்லை. இந்தத் தீமை தொடருகிறது.

வரதட்சணைக் கொடுமையை எதிர்த்து மாதர் சங்கங்கள் பல தீர்மானங்கள் போடுகிறார்கள். ஆயினும் இது சமுதாயப் பிரச்னையாக நீடிக்கிறது.

பாரதியார் தனக்குத் தெரிந்த ஒரு செய்தியை எடுத்துக் கூறி இந்தக் கொடுமையை சுட்டிக் காட்டுகிறார். "திருநெல்வேலி ஜில்லாவில் எனக்குத் தெரிந்த ஒரு கிராமத்திலே ஒரு பெண்ணுக்கு

விவாஹம் நடந்தபோது அவளுடைய பெற்றோர்கள் மாப்பிள்ளைக்குப் பணம் கொடுத்தார்கள். பிறகு ருது சாந்தியின் போது அந்த மாப்பிள்ளை "ஐநூறு ரூபாய் கொடுத்தால் தான் ருது சாந்தி செய்து கொள்வேன். இல்லாவிட்டால் பெண் உங்கள் வீட்டோடே இருக்கட்டும்" என்று சொல்லி ஐந்நூறு ரூபாய் தண்டம் வாங்கிக் கொண்டான்." என்று பாரதியார் அந்தக் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

பாரதியாருடைய இந்தக் கட்டுரை அக்காலத்தில் மிகவும் பிரபலம். மணிக்கொடி காலத்தில் தமிழ் எழுத்தாளர்களுக்கிடையில் இந்தக் கட்டுரை மிகவும் பிரபலமாகப் பேசப்பட்டது.

வரதட்சணைக் கொடுமை ஒரு பெரிய சமுதாயக் கொடு நோயாகப் பரவியிருக்கிறது. அது பற்றி ஏராளமான கதைகள் சொல்லலாம். அவையெல்லாம் பற்றி இங்கு கூறுவதற்கு இடமும் இல்லை, நேரமும் இல்லை. இதைக் காட்டிலும் மானக்கேடானது எதுவுமில்லை. மக்களுடைய சமுதாய உணர்வுநிலை உயரும் போது தான் இந்தக் கொடுமை நீங்கும்.

பாரதி இந்தக் கட்டுரையில், பணம், பொதுக்கல்வி, விடுதலை மூன்றையும் வற்புறுத்திக் கூறுகிறார். இதில் பொதுக்கல்வி வேண்டும் என்று பாரதி குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

வரதட்சிணையை எதிர்த்து பொதுக்கல்வியும், பொது இயக்கமும் தேவை. இதை வருங்காலம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

✡ ✡ ✡

29. மதிப்பு: இந்துக்களின் மதிப்பும் மரியாதையும்

மதிப்பு என்னும் தலைப்பிலான கட்டுரையில் பாரதி ஹிந்துக்களின் ஒற்றுமையை வலியுறுத்தியும், நம்மை உலகத்தார் முன்னே சிறுமைப் படுத்தி மதிப்பில்லாமல் செய்து கொண்டிருக்கும் புறக் கருவிகளையும் சுட்டிக்காட்டி ஹிந்துக்களின் மதிப்பை உயர்த்துவதற்கு நாம் செய்ய வேண்டிய பணிகளைப் பற்றியும் அவை பற்றிய நமது கடமைகளைப் பற்றியும் குறிப்பிட்டுக் கூறுகிறார்.

"ஹிந்துக்களை உலகத்தார் பாமர, அநாகரிக, முக்காற்காட்டு ஜனங்கள் என்று நினைக்கும் படி நாம் இதுவரை இடம் கொடுத்து விட்டோம். இந்தியாவை வெளியுலகத்தார் பாமர தேசம் என்று நினைக்கும் படி செய்த முதல் குற்றம் நம்முடையது. புறக்கருவிகள் பல.

முதலாவதாக, கிறிஸ்தவப் பாதிரி: அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் சில கிறிஸ்தவப் பாதிரிகள் தங்கள் மத விஷயமான பிரச்சாரத்தை உத்தேசித்து நம்மைக் குறித்து பெரிய பெரிய பொய்களைச் சொல்லி இப்படித் தாழ்ந்து போய் மஹத்தான அநாகரிக நிலையிலிருக்கும் ஜனங்களைக் கிறிஸ்து மதத்திலே சேர்த்து மேன்மைப் படுத்தும் புண்ணியத்தைச் செய்வதாகச் சொல்லுகிறார்கள். ஹிந்துக்கள் குழந்தைகளை நதியிலே போடுகிறார்கள், என்றும், ஸ்திரிகளை (முக்கியமாக அநாதைகளாய்ப் புருஷரை இழந்து கதியில்லாமல் இருக்கும் கைம் பெண்களை) நாய்களைப் போல் நடத்துகிறார்கள் என்றும் பலவிதமான அபவாதங்கள் சொல்லுகிறார்கள். நம்முடைய ஜாதிப் பிரிவுகளிலே இருக்கும் குற்றங்களையெல்லாம் பூதக் கண்ணாடி வைத்துக் காட்டுகிறார்கள். இந்தக் கிறிஸ்தவப் பாதிரிகளாலே நமக்கு நேர்ந்த அவமானம் அளவில்லை.

இரண்டாவது, அன்னிய தேசப் பண்டிதர் சரித்திரக்காரர் முதலானவர்கள் ஹிந்துக்களை அன்னிய தேசத்தார், போர் செய்தும் தந்திரத்தாலும் வென்று ஹிந்துக்களின் மீது அன்னிய ராஜ்யம் நடை பெற்று வருவதையொட்டி வெளி தேசத்து சரித்திரக்காரர் நமது நாட்டு வீரம் ஒற்றுமை, முதலிய குணங்களையும் நமது பொது அறிவையும் மிகவும் இழிந்த நிலைமையிலே இருப்பதாகக் காட்டுதல் வழக்கமாய் நடைபெற்று வந்திருக்கிறது.

"நம்மை உலகத்தார் முன்னே சிறுமைப் படுத்தி மதிப்பில்லாமல் செய்து விட்ட புறக்கருவிகள் பல. அவற்றை விரிவாக எழுத வேண்டுமானால் தனிப் புஸ்தகம் போட வேண்டும்" என்று பாரதியார் எழுதுகிறார். மேலும் அவர் எழுதுகிறார்.

"போனது போகட்டும். இனி மேலாயினும் புத்தியாய் பிழை மனமே" என்று ஒரு பண்டாரப் பாட்டு உண்டு. அதுபோல நடந்த தெல்லாம் நடந்து போய் விட்டது. சிறுமைப் படுவதெல்லாம் பட்டாய் விட்டது. இனிமேலாயினும் ஹிந்துக்கள் தம்மை மதிப்புடையோராகச் செய்து கொள்ள வழி தேட வேண்டும். வெளி தேசங்களில் நமக்கு மதிப்பு உண்டாக்க வேண்டுமானால், அதற்கு மூலம் இங்கே வலிமை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இங்ஙனம் வலிமை சேர்ப்பதற்குக் கூட்டம் ஒன்றே உபாயம் என்பதை இந்த வியாசத்தின் தொடக்கத்தில் சொன்னோம்.

நம்முடைய ராஜரிக நிலைமையைச் சிர்திருத்துவதற்குப் பல முயற்சிகள் நடந்து வருகின்றன. அந்த முயற்சிகள் மேம்மேலும் வளர்ந்து வெற்றி பெறவேண்டுமானால் அதற்குக் கூட்டங்களை அதிகப் படுத்துவதே வழி. கூட்டங்கள் கூடி யோசனை பண்ணுகிற விஷயம் கை கூடும். ஓயாமல் கூட்டங்கள் சேர்ந்து திரும்பத் திரும்ப உறுதி செய்யப் படும் தீர்மானம் நிச்சயமாகக் கைகூடும். நமது ராஜாங்கக் கூட்டங்களில் இதுவரை சரியானபடி சக்தி ஏற்படாத

காரணம் யாதெனில் இந்தக் கூட்டங்களில் உண்மையாகவே தேசத்துக்கு அனுகூலம் செய்ய வேண்டும் என்ற கருத்துடையவர்கள் மிகச் சிலராகவே இருந்தனர். தேச பாஷைகளிலே பேசுவது கிடையாது. அதாவது பொய் அதிகப்பட்டு தலை தூக்கி நின்றது. இப்போது நாட்டில் உண்மையான தேசாபிமானிகள் தொகை அதிகப் பட்டிருக்கிறது. தேச பாஷைப் பேச்சு வழக்கப் பட்டு வருகிறது. ராஜ்ய விஷயங்களுக்கு மாத்திரம் நான் பேசவில்லை. நான் பொதுப் படையாகப் சொல்லுகிறேன். எவ்விதமான வலிமைக்கும் கூட்டம் ஆதாரம். சபை சேர்ந்து பேசினால் மாத்திரம் போதாது. எப்போதுமே எங்கும் நாம் ஒவ்வொருவரும் நாம் இன்ன பெருங் கூட்டத்தைச் சேர்ந்திருக்கிறோம் என்பதையும் நமது வாழ்க்கையின் நோக்கம் இன்னதென்பதையும் மறவாதிருக்க வழி தேட வேண்டும்.

"இங்கிலாந்து, பிரான்ஸ், முதலிய ஐரோப்பிய தேசங்களில் கோடானு கோடியாக மனிதரைத் திரட்டிச் சண்டைக்கு உபயோகப் படுத்துகிறார்கள். ஒரு தேசம் முழுதுமே ஒரு சைன்யம் போல் ஆகும் படி செய்ய வேண்டும் என்று அங்குள்ள சில தலைவர்கள் நினைக்கிறார்கள். நான் சண்டைக்காரனில்லை. சமாதானக்காரன். இருபது கோடி ஹிந்துக்களையும் ஒரே கூட்டமாகச் செய்து, சண்டைக்கன்று சமாதானமாக மனிதன் சாதனை செய்யக் கூடிய நல்ல பயன்களை நிறைவேற்றும் பொருட்டாக உபயோகப்படுத்த வேண்டுமென்பது என்னுடைய நோக்கம்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மற்ற ஹிந்துக்களின் உதவி வேண்டும். தெய்வ பலம் வேண்டும். இவ்விரண்டும் கை கூடும்" என்று பாரதியார் எழுதுகிறார்.

நாடு அடிமைப்பட்டிருந்த காலத்தில் ஏற்பட்ட அவமானங்களைப் பற்றி பாரதி மனம் நொந்து எழுதுகிறார். எனவே நாடு விடுதலை

பெறுவதற்கு நமது மக்கள் பல லட்சக்கணக்கில் கோடிக்கணக்கில் ஒற்றுமையுடன் ஒன்று திரள வேண்டும் என்பது பாரதியின் குரலாகும்.

மேலை நாடுகள் தங்கள் நாடுகளில் மக்கள் தங்கள் உரிமைகளை முன் வைத்து கோரிக்கைகளை முன் வைத்து அதற்கான கிளர்ச்சிகளில் ஈடுபடும் போது அதைத் திசை திருப்புவதற்கு அடுத்த நாடுகளுக்கு எதிராகப் போர்க் குரலைக் கிளப்புகிறார்கள். நாட்டு மக்கள் அனைவருக்கும் போர் பயிற்சி கொடுத்து வீடு தவறாமல் ஆள் பிடித்து பல லட்சக் கணக்கில் படை சேர்த்து போர்களைத் தொடுக்கிறார்கள், போர் நடத்து –கிறார்கள்.

நான் சண்டைக்காரன் இல்லை. சமாதானக்காரன் என்று பாரதி குறிப்பிடுகிறார். அதன் பொருள் நாம் சண்டைக்குப் பயந்த கோழைகள் என்பதல்ல. நாம் மனிதாபிமானம் மிக்கவர்கள். நமக்கு ஆக்கிரமிப்பு நோக்கம் கிடையாது. ஆனால் நாட்டை அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க விரும்புகிறோம். நம் மீது திணிக்கப்படும் அவமானத்தைப் போக்க விரும்புகிறோம். நாட்டின் வறுமையையும் பட்டினியையும் போக்கி நாட்டை வளப்படுத்த விரும்புகிறோம். நாட்டை மற்றவர்கள் சூரையாடுவதைத் தடுக்க விரும்புகிறோம். அதற்காக நாட்டு மக்களை பல லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் திரட்ட விரும்புகிறோம். முதலாவது உலகப் போரை ஐரோப்பிய நாடுகள் நடத்தி முடித்த போது, இந்தியாவில் இருபதாம் ஆண்டுகளில் வலுவான சுதந்திரக் கிளர்ச்சி ஏற்பட்டது.

1939–ம் ஆண்டில் இரண்டாவது உலகப் பெரும் போர் ஐரோப்பாவில் தொடங்கியது. ஜப்பான் மூலம் ஆசியாவிலும் போர் பரவியது. இந்தியாவிற்கு நேரடியாகப் போரில் சம்பந்தமில்லை. ஆயினும் இங்கிருந்த அன்னிய ஆட்சியாளர்கள் இந்திய நாட்டையும் போரில் ஈடுபடுத்தினார்கள்.

பாசிஸத்திற்கெதிராக உலக நாடுகள் அனைத்தும் திரண்டன. அந்த உலக மகாயுத்தத்தில் யுத்த களங்களில் மட்டும் ஆறு கோடிக்கு மேல் உயிர் மடிந்தனர். எராளமான பொருள் நஷ்டமும் ஏற்பட்டது. போர் நடந்த நாடுகளில் மக்கள் சொல்லொணாத துன்ப துயரங்கள் அடைந்தனர்.

1945–ம் ஆண்டில் பாஸிஸம் தோல்வியடைந்து போர் முடிந்தது. உலகின் பல நாடுகளிலும் சுதந்திரத்திற்கான பெருங் கிளர்ச்சி வெடித்தது. ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளில் பல லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் விடுதலைக் கிளர்ச்சியில் திரண்டனர். ஆசியாவில் இந்தியா, இந்தோனேஷியா, மலேஷியா, இலங்கை, பர்மா, வியட்நாம், பிலிப்பைன்ஸ், சீனா முதலிய பல நாடுகளில் விடுதலைக் கிளர்ச்சி உச்சத்தை எட்டியது.

1946–ம் ஆண்டில் இந்தியாவில் பெருங்கிளர்ச்சி ஏற்பட்டது. கோடிக்கணக்கான மக்கள் திரண்டனர். 1947–ம் ஆண்டில் இந்தியா விடுதலை பெற்றது. இன்று உலக நாடுகள் அனைத்தும் விடுதலை பெற்று விட்டன.

✡ ✡ ✡

30. வருங்காலம்:

வருங்காலம் என்னும் தலைப்பில் பாரதி நெடிது நோக்குடன் பல கருத்துக்களை எடுத்துக் கூறுகிறார்.

உலகம் எவ்வளவு தீவிரமாக மாறிக் கொண்டு வருகிறதென்பதைத் தமிழ் நாட்டார் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். ஒவ்வொருவரும் சிற்சில விவகாரங்களில் மனத்தைப் பதிய வைத்துக் கொண்டு வெளியுலகத்தின் மாறுதல்களிலே புத்தி செலுத்தாமல் அற்ப விருப்பங்களிலும், அற்பச் செயல்களிலும் நாளையெல்லாம் கழிய விட்டுக் கிணற்றுத் தவளைகளைப் போல வாழ்வதில் பயனில்லை.

வர்த்தகம் செய்வோர் கோடிக்கணக்கான பணப் பழக்கம் ஏற்படும் படி பெரிய வர்த்தகங்கள் செய்ய வழி தேட வேண்டும். படிப்பவர் அபாரமான சாஸ்திரங்களையும் பல தேசத்துக் கல்விகளையும் கற்றுத் தேற வேண்டும். ராஜ்ய விவகாரங்களில் புத்தி செலுத்துவோர் உலக சரித்திரத்தை நன்றாகத் தெரிந்து கொண்டு மற்ற ராஜ தந்திரிகளும் மந்திரிகளும் கண்டு வியக்கும் படியான பெரிய பெரிய யோசனைகள் செய்து நிறைவேற்றிப் புகழ் பெற வேண்டும்.

"நம்முள்ளே கல்வியும், செல்வமும் உடையோர் கூடிய ஆராய்ச்சிகள் செய்து வெளிநாடுகளில் ஆவலுடன் வாங்கக் கூடிய மாதிரிகள் எவை என்பதைக் கண்டு பிடித்து அவற்றை நமது தொழிலாளர்களைக் கொண்டு செய்வித்தல் லாபமுண்டாகும்.

"வெளிநாடுகளுக்குக் கப்பலேறிப் போங்கள். (இப்போது விமானம் ஏறிப் போங்கள்) புறப்படுங்கள் புறப்படுங்கள் தொழிலாளர்களே, வியாபாரிகளே! வித்வான்களே, புத்திமான்களே, எப்படியேனும் யாத்திரைச் செலவுக்குப் பணம் தயார் செய்து

கொண்டு அன்னிய தேசங்களைப் பார்த்து விட்டு வாருங்கள். நமது தொழில்களுக்கும் கலைகளுக்கும் வெளிநாடுகளில் எராளமான உதவி கிடைக்கும். சந்தேகப் பட வேண்டாம் என்று பாரதி எழுதுகிறார்.

மேலும், சங்கீத ஞானமுடைய தமிழ்ப் பிள்ளைகள், முதலாவது கொஞ்சம் இங்கிலிஷ் கற்றுக் கொண்டு பிறகு ஐரோப்பிய சங்கீதத்தின் மூலாதாரங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். இது மிகவும் சலபமான காரியம். தமிழருடைய அறிவுக்கு எந்த வித்தையும் சுலபம். இந்தத் தேர்ச்சி கொஞ்சமிருந்தால் பிறகு நமது சங்கீதத்தை ஐரோப்பியர் அனுபவிக்கும் படி செய்தல் எளிதாகும். அப்பால் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் போய் நமது சங்கீதத்தின் உயர்வை அவர்களுக்குக் காட்டினால் மிகுந்த கீர்த்தியும் செல்வமும் பெறலாம்.

எவ்விதமான யோசனை, எவ்விதமான தொழில், எவ்விதமான ஆசை, எதையும் கொண்டு பிற தேசங்களுக்குப் போக வேண்டும். ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவுக்கும் யாத்திரை செய்யப் போதுமான திரவியம் இல்லாதவர்கள், ஜப்பானுக்குப் போகலாம். வெளியுலகம் நம்மை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறது. நமது வரவுக்குக் காத்திருக்கிறது. நமது மேன்மைக்கு வசப்பட ஆவல் கொண்டிருக்கிறது. வெளியுலகத்தில் நாம் சென்று மேம்பாடு பெற்றாலொழிய இங்கே நமக்கு மேன்மை பிறக்க வழியில்லை. ஆதலால் தமிழ்ப் பிள்ளைகளே! வெளி நாடுகளுக்குப் போய் உங்களுடைய அறிவுச் சிறப்பினாலும் மன உறுதியினாலும் பலவிதமான உயர்வுகள் பெற்றுப் புகழுடனும் செல்வத்துடனும், வீரியத்துடனும், ஒளியுடனும் திரும்பி வாருங்கள். உங்களுக்கு மகாசக்தி துணை செய்க" என்று மகாகவி அற்புதமாக எழுதுகிறார்.

பாரதி எண்பது – தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய கருத்துக்கள், தமிழக இளைஞர்களுக்கு அவர் கூறிய அறிவுரைகள் இன்றும் பொருத்தமாக இருக்கிறது,. இன்று லட்சக்கணக்கான நமது இளைஞர்கள், தொழிலாளர்கள், தொழில் நுட்ப நிபுணர்கள், தொழில் தேர்ச்சி பெற்ற பணியாளர்கள், வணிகர்கள், வியாபாரிகள், டாக்டர்கள், நர்ஸுகள், என்ஜினியர்கள், விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், கணக்கியல் நிபுணர்கள், மற்றும் பல்வேறு துறை வல்லுனர்கள் பலரும் வெளி நாடுகளுக்குச் சென்று பணியாற்றுகிறார்கள். குறிப்பாக அராபிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள், தென்கிழக்கு ஆசிய நாடுகள், அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளுக்குச் சென்று பணியாற்றி வருகிறார்கள். அநேகமாக இந்திய நிபுணர்கள் வேலை செய்யாத நாடு எதுவும் உலகில் இல்லை. நமது ஆசிரியர்கள் பேராசியர்கள் பணியாற்றாத பல்கலைக் கழகங்கள் உலகில் எதுவு –மில்லை. பங்கேற்காத திட்டப் பணிகள் வளர்ச்சிப் பணிகள் எதுவு –மில்லை. இந்தியாவிலும் தமிழ் நாட்டைச் சேர்ந்த நிபுணர்கள், வல்லுனர்கள் இல்லாத மாநிலம் இல்லை, நகரங்கள் இல்லை. பல்கலைக் கழகங்கள் நிர்வாக அமைப்புகள் இல்லை. அங்கு பணம் சம்பாதித்து தாய் நாட்டிற்குத் தங்கள் குடும்பங்களுக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

கேரளாவிலிருந்து அராபிய நாடுகளுக்குச் சென்று அங்கு உழைத்துச் சம்பாதித்து மணியாடர் மூலம் அனுப்பும் பணம் கேரளத்தின் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான பிரிவாகி விட்டது. அதற்கு மணியாடர் பொருளியல் என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணமாக கேரள மாநிலம் ஒரு நல்ல நுகர்பொருள் சந்தையாக ஆகியிருக்கிறது.

சுமார் இருநூறு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்பு உலகின் பல நாடுகளுக்கும் தேயிலைத் தோட்டங்களுக்கும் கரும்புத்

தோட்டங்களுக்கும் இந்தியாவிலிருந்து குறிப்பாகத் தமிழ் நாட்டிலிருந்தும் பிகார் மாநிலப் பகுதிகளிலிருந்தும் ஒப்பந்தக் கூலிகளாகச் சென்று அந்த நாடுகளில் குடியேறினார்கள். அங்கு அந்த நாடுகளின் வளர்ச்சியிலும், மேம்பாட்டிலும், பொது வாழ்விலும் பங்கு கொண்டு, அந்த நாடுகளின் சிறந்த பிரஜைகளாக வளர்ந்திருக்கிறார்கள். இன்று அவர்கள் அந்தந்த நாடுகளின் அரசியல் பொருளாதார கலாச்சார வாழ்விலும் சிறப்பாகப் பங்கு கொண்டு பணியாற்றி வருகிறார்கள். அந்த நாடுகளில் உள்ள பூர்வ குடிமக்கள், குடியேறியுள்ள இதர மக்களுடன் இணக்கமாக வாழ்ந்து வருகிறார்கள். இந்தியாவில் அன்னிய ஆட்சி இருந்த வரை, அந்த நாடுகளில் வாழ்ந்த இந்திய மக்கள் எந்தவிதமான ஆதரவும் இல்லாதிருந்தார்கள். இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் நமக்கும் அந்த நாடுகளுக்கும் இடையிலான உறவுகள், அரசியல் பொருளாதார கலாச்சார ராஜ தந்திர உறவுகள் அபிவிருத்தி அடைந்து வருகிறது. நமது நாடு பொருளாதாரத் துறையிலும் கலாச்சாரத் துறையிலும் பலம் பெற பலம் பெற அந்த நாடுகளுடன் உள்ள நல்லுறவுகள் மேலும் பலப்படும். நமது பல்கலைக் கழகங்கள், என்ஜினியரிங், தொழில் நுட்பம் மற்றும் வைத்தியக் கல்லூரிகள், அந்த நாடுகளின் மாணவர்களுக்கு தனி இடம் கொடுத்து சலுகைகள் கொடுத்து, உதவிகள் செய்ய வேண்டும். அந்த நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்களுக்கும் சிறப்புக் கல்லூரிகளுக்கும் நமது பேராசிரியர்கள், ஆசிரியர்கள் சென்று உதவி செய்ய வேண்டும். அந்த நாடுகளுடன் உள்ள வியாபாரத் தொடர்புகளையும் கலாச்சாரத் தொடர்புகளையும் மேலும் அதிகமாக பலப்படுத்த வேண்டும், விரிவு படுத்த வேண்டும். நமது பத்திரிகைகள் அந்த நாடுகளின் பால் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ் நாட்டிலிருந்து ஏராளமான பொருள்கள் இப்போது ஏற்றுமதியாகின்றன. இந்தியாவின் இதர மாநிலங்களுக்கும்

செல்கிறது. இந்தியர்கள் வாழும் இதர நாடுகளுக்கும் நமது பொருள்கள் செல்வதற்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். இப்போது தமிழ் நாட்டின் வர்த்தகம் உபரியாகவே உள்ளது. மேலும் அதை அதிகரிக்கவும் செய்ய வேண்டும்.

பலவேறு தொழில்களுக்காக வெளிநாடுகள் சென்று அங்கு பணியாற்றும் தமிழர்கள், பலநாடுகளிலும் குடியேறியுள்ள அங்கு வரும் இந்தியர்களின் பகுதியாகவுள்ள தமிழ் பேசும் மக்கள் தமிழ் மொழியின் வளமையையும், தமிழ் இலக்கியங்களையும் தமிழ் பண்பாட்டுச் சிறப்புகளையும், நமது இசை நிகழ்ச்சிகளையும், அறிமுகப் படுத்த வேண்டும். நமது தமிழ் நூல்களையும், பத்திரிகைகளையும் அறிமுகப் படுத்த வேண்டும். தமிழ் நாட்டின் பத்திரிகைகள் அந்த நாடுகளின் சிறப்பு மலர்களாகவும் வெளியிட வேண்டும். தமிழ் இலக்கிய மன்றங்கள் அமைத்து தமிழ் இலக்கியங்களையும், இசையையும், உணவு முறைகளையும், கட்டிடக் கலைகளையும் அந்த நாடுகளில் அறிமுகப் படுத்தி வளர்க்க வேண்டும்.

ஏற்கனவே, மலேஷியா, சிங்கப்பூர், இலங்கை, மொரிஷஸ், தென் ஆப்பிரிக்கா, பீஜி, மேற்கு இந்திய தீவுகள், கயானா, ரீயூனியன், சுரிநாம் மற்றும் பல ஆப்பிரிக்க தென் அமெரிக்க நாடுகளுடன் தென் கிழக்கு ஆசிய நாடுகளுடன் நமது தொடர்புகள் அதிகரித்து வருகின்றன. இந்த நாடுகளிலுள்ள மக்களுடன் இந்திய அரசின் உதவியுடன் உள்ள நல்லுறவுகளை மேலும் அதிகரிக்க வேண்டும்.

✡ ✡ ✡

31. தொழிலாளர்:

தொழிலாளர் என்னும் தலைப்பில் பாரதியார் அருமையான –தொரு கட்டுரையை எழுதியுள்ளார். இக்கட்டுரை மூலம் பாரதி தொழில் செல்வம் கல்வி அறிவு ஆகியவற்றை இணைத்துக் காட்டுகிறார். இது மிக முக்கியமான கருத்தாகும். இக்கருத்தை நாம் ஆழ்ந்து கவனத்தில் கொள்வதும், புரிந்து கொள்வதும் அவசியமாகும். அக்கட்டுரையில்,

"கைத்தொழில்களாலே செல்வம் விளைகிறது. அறிவுத் தொழிலால் அது சேகரிக்கப் படுகிறது. கைத் தொழில் செல்வத்தை ஏற்படுத்துகிறது. அறிவுத் தொழில் கைத் தொழிலை நடத்துகிறது.

வியாபாரம், கைத்தொழில் முதலிய சமாதான நெறிகளில் செல்வம் சேர்ப்பதற்கு மிக உயர்ந்த புத்தி நுட்பம் எக்காலத்திலும் இன்றியமையாததாக நிகழ்ந்து வந்திருக்கிறது. இக்காலத்திலும் இவை புத்தித்திறமை இல்லாமல் போனால் ஒரு க்ஷணம் கூடத் தரித்து நிற்கமாட்டா.

இந்தச் செய்தியை உணர்ந்தே ஆதிகால முதல் அறிவுப் பயிற்சியுடைய வகுப்பினர் கைத்தொழிலாளிகளுக்கு கல்வி ஏற்படாத படியாக வேலை செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். "எழுத்துத் தெரிந்த சூத்திரனை மிகவும் தொலைவில் விலக்கி விட வேண்டும்" என்ற வினோத விதியொன்று மனு ஸ்மிருதியிலே காணப்படுகிறது. நமது தேசத்திலே மட்டுமேயன்று, உலகம் முழுமையிலும் எல்லா நாடுகளிலும் கைத் தொழிலாளருக்குக் கல்விப் பயிற்சி உண்டாகாத வண்ணமாகவே ஜனக்கட்டுகள் நடைபெற்று வந்திருக்கின்றன.

ஆனால் இந்த சூழ்ச்சியை மீறி எல்லா நாடுகளிலும் முக்கியமாக நமது பாரத தேசத்தில் கைத்தொழில் புரியும் கூட்டத்தோரில் பற்பலர் கல்வித் தேர்ச்சியடைந்து வந்திருக்கிறார்கள்.

"சர்வ ஜனக்கல்வியை நமது நாட்டில் நிறைவேற்றிட வேண்டும் என்று பல புண்ணியவான்கள் பெரு முயற்சி செய்து வருகிறார்கள். இங்ஙனம் எல்லா வகுப்புகளையும் சேர்ந்த எல்லா மனிதரிடையேயும் கல்வியும், அதன் விளைவுகளாகி பல்வகைப் பட்ட அறிவுப் பயிற்சிகளும் பரவி விடுமானால் அதனின்றும் கைத் தொழிலாளர்கள் கல்விப் பயனைக் காவியங்கள் இயற்றுவதிலும் படிப்பதிலும் மாத்திரமே, செலவிடும் வழக்கம் மாறிப் போய் அவரவர் தத்தமக்கு உரிய தொழில்களிலும் கல்வியறிவைப் பயன் படுத்தத் தொடங்குவார்கள். இதனின்றும் இதுவரை உலகத்தில் கைத் தொழிலாளர் பரம ஏழைகளாக இருந்து வரும் நிலைமை நீங்கி மேல் மேலும் கைத் தொழிலாளருக்குள்ளே செல்வம் வளர்ச்சி பெற்று வர ஹேது உண்டாகும்.

அறிவே வலிமை. கல்வியே செல்வத்தின் தாய். சரஸ்வதியும், லக்ஷ்மியும் மாமியும் மருமகளும் போல்வர் என்றும் கல்வியுள்ள இடத்தில் செல்வமும், செல்வம் உள்ள இடத்தில் கல்வியும் ஏற்படுதல் மிகவும் அரிது என்றும் நமது நாட்டில் பரம மூடத்தனமான கொள்கையொன்று பரவீ நிற்கிறது. வெறுமே வர்ணனைகளும் கற்பனைகளும் சமைத்து யாருக்கும் எளிதில் புலப்படாத வலிய நடையில் காவியங்கள் எழுதுவதிலே படித்த படிப்பையெல்லாம் செலவிடுவோருக்கு அதிக செல்வம் சேர மார்க்கமில்லை என்பது பிரத்யக்ஷம். இந்த அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டே மேற்படி கொள்கை ஆதி காலத்தில் உற்பத்தியாயிற்று. ஆனால் அது இக்காலத்திற்குப் பொருந்தாது. காவியங்களைக் கூட எளிய நடையில் எழுதினால் அச்சுத் தொழிலும் பொது ஜனக் கல்வியும் பரவி வரும் இக்காலத்தில் ஆசிரியர்களுக்கு ஏராளமான லாபம் கிடைக்கும். காவியங்கள் எழுதுவதற்கு மாத்திரம் என்று படிக்காமல் பலவகை வியாபாரங்களுக்கும் தொழில்களுக்கும் வேண்டிய படிப்புகள் படித்து அவற்றை ஊக்கத்துடன் கையாளுவோருக்கு

மேன்மேலும் செல்வம் பெருகும். ஆதாலால் தொழிலாளிகளே, கல்விப் பயிற்சி செய்யுங்கள். உங்களுக்கும் உங்கள் மக்களுக்கும் கல்வியறிவு மிகுவதற்குள்ள வழி செய்யுங்கள்" என்று பாரதியார் எழுதுகிறார். தொழிலையும், கல்வியையும் இணைக்க வேண்டும் என்பது பாரதியாரின் தீர்க்கமான கொள்கையாகும்.

இக்கட்டுரையில் பாரதி சில முக்கியமான செய்திகளைக் கூறுகிறார். ஒரு அடிப்படையான பிரச்னை தொழில், கல்வி, செல்வம், அறிவு, ஆகியவற்றின் தொடர்பு இணைப்பு எப்படியிருக்க வேண்டும் என்பதை வரலாற்று அனுபவத்தோடு எடுத்துக் காட்டி அதற்கு சரியான விடையையும் முன் வைக்கிறார். இதில் இடையில் ஏற்பட்டு மக்களிடம் நிலவியிருந்த தவறான கருத்துக்களை மறுத்தும் தெளிவு படுத்துகிறார். இவைகளைப் பகுத்துப் பார்த்து நாம் இன்றைய நிலைமைக்கு ஏற்ற்வாறு நாம் செயல் படுத்தவும் முயல வேண்டும்.

பாரதியின் இந்தக் கட்டுரை மூலம் சில கேள்விகள் எழுகின்றன. அதற்கும் நாம் கெளிவடைகிறோம்.

சரஸ்வதி கலைமகள் கல்வி கடவுள லக்ஷ்மி திருமகள் செல்வத்தின் கடவுள். இருவரும் சேர்ந்து ஒரு இடத்தில் இருக்க மாட்டார்களா? இருக்க மாட்டார்கள் என்று கூறுவது மடமை. இருவரும் ஓரிடத்தில் இருப்பார்கள். அதற்காக முயற்சி செய்யலாம் அதில் வெற்றி பெறலாம்.

கல்வி என்பது முதலில் எண்ணும் எழுத்தும். அது அத்தனைக் கல்விக்கும் அடிப்படை. எண்ணும், எழுத்தும் தோன்றுவதற்கு முன்பே வாய் மொழிப் பயிற்சி மூலம் கல்வி இருந்திருக்க வேண்டும். பயிற்சி மூலம் அறிவை வளர்க்கிறோம்.

மனிதன் தான் உயிர் வாழ்வதற்காக உணவு தேடும்போதும், இதர தேவைகளைப் பெறுவதற்காக உழைக்கும் போதும்,

உழைப்பதற்காக கருவிகளை உண்டாக்கிக்கொள்ளும் போதும், அவைகளைப் பயன்படுத்தும் போதும், நெருப்பைக் கண்டு பிடிக்கும் போதும், அதைப் பயன் படுத்தும் போதும், பஞ்சபூத சக்திகளின் பயன் பாட்டை அறியும் போதும் அவைகளைப் பயன் படுத்தும் போதும் அனுபவத்தில் அறிவைப் பெறுகிறான். அனுபவம் நடை முறைச் செயல்பாடுகள், உழைப்பு மூலம் அதிகமாகிறது. அதன் பலனாக மனிதனுடைய அறிவும் விரிவடைகிறது. மனிதன் தான் பெற்ற அறிவை மற்றவர்களுக்குச் சொல்லி, அது மேலும் மேலும் விரிவடைகிறது. எண்ணும், எழுத்தும் கண்டு பிடிக்கப் பட்டபோது, மனிதன் தான் இதுவரை பெற்றிருந்த அறிவைச் சேகரித்து வைத்திருந்த அறிவைப் பதிவு செய்கிறான். இவ்வாறு பதிவு செய்யப் பட்ட அறிவு வேதங்களாகிறது. இலக்கியங்களாகிறது, பலவேறு நூல்களாகின்றன. அவைகளைத் கற்பது கல்வியாகிறது.

கல்வி வளர்ச்சி பெறுகிறது. அடிப்படைக் கல்வி, வளர்ச்சியடைந்த கல்வி ஆகிய இரண்டையும் பெறுவதற்கு மனிதனுக்கு இப்போது வாய்ப்புகள் ஏற்பட்டு அவை இப்போது வளர்ச்சியடைந்திருக்கின்றன, விரிவடைந்திருக்கின்றன. மேலும் விரிவடைந்து வருகின்றன.

அறிவாளிகள், அதாவது ஆரம்பக் கல்வியையும், வளர்ச்சியடைந்து விரிவடைந்துள்ள கல்வியையும் பெற்றுக் கொண்டவர்கள் அதைத் தங்களதாக ஆக்கிக் கொண்டு, மனிதனுக்கு மனித சமுதாயத்திற்குத் தேவையான செல்வங்களை உண்டாக்கும் உழைப்பாளிக்குக் கிடைக்கவிடாமல் தடுத்து அதன் மூலம் உழைப்பினால் உற்பத்தி செய்யப் பட்ட செல்வத்தின் மீது தனது ஆதிக்கத்தை வைத்துக் கொள்வதற்கு முயற்சி செய்திருக்கிறான். அதற்காகக் கல்வியும், செல்வமும் ஒரு இடத்தில் இருக்காது என்று கதை கட்டி விட்டான். ஆனால் அவ்வாறு

நடைபெறவில்லை. அந்த முயற்சிகளுக்கு எதிர்ப்பு ஏற்பட்டு கல்வியும் செல்வமும் அறிவும் உழைப்பும் இணைந்தே வந்திருக்கிறது, இணைந்தே வளர்ச்சி பெற்று வந்திருக்கிறது.

வள்ளுவன் மிகப் பெரிய அறிவாளி. திருக்குறளைப் படைத்தவன். அவனை நெசவுத் தொழிலோடு இணைத்துப் பேசுகிறோம். எத்தனையோ நெசவாளர்கள் அறிவிற் சிறந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

கம்பன் மாபெரும் கவிஞன் கவிச் சக்கரவர்த்தி, அவன் படைத்த பேரிலக்கியம் உலக இலக்கியங்களில் முதல் வரிசையில் முன் வரிசையில் உள்ளது. அந்த கவிஞன் கம்பனை சாகுபடித் தொழிலோடு, பயிர் தொழிலோடு இணைத்துப் பேசுகிறோம்.

கண்ணன் கடவுள் பிறப்பு. மாபெரும் அரசியல் ஞானி. சகல கலைகளிலும் வல்லவன். பகவத் கீதையைப் படைத்தவன். அந்த மாபெரும் சக்தி படைத்த தெய்வத்தை ஆடுமாடு மேய்த்தலோடு கால் நடைச் செல்வத்தோடு இணைத்துப் பேசுகிறோம்.

வியாசன் மிகப்பெரிய அறிஞன். அவருடைய அறிவாற்றலுக்கு உலகில் எங்கும் ஈடுஇணையே இல்லை. அவன் வேதங்களைத் தொகுத்தவன். மகாபாரதத்தை இயற்றியவன், பாகவதத்தை எழுதியவன், அவனை மனிதனுடைய ஆதி தொழில்களில் ஒன்றான மீன் பிடித்தொழிலோடு இணைத்துப் பேசுகிறோம்.

எனவே கல்வியும் செல்வமும் அறிவும் தொழிலும் ஓரிடத்தில் சேர்ந்து இருக்காது என்னும் கட்டுக்கதை தகர்ந்து விட்டது.

பெண்களும், சூத்திரர்களும் படிக்க வேண்டாம், அவர்கள் வேதங்களைப் படிக்க வேண்டாம், அவர்களுக்குக் கல்வி பயிற்சி

கூடாது என எழுதி வைத்தவன் மடையன், அயோக்கியன். அந்த வார்த்தைகள் மனுவில் இடைச்செறுகல். அந்தக் கருத்துக்கு பெண்பாற் பெரும் புலவர் ஔவையே சரியான பதில். எண்ணற்ற பெண் பாற் புலவர்கள் பாரதத்தில் தோன்றி அறிவைப் பெருக்கியிருக்கிறார்கள். நமது நாட்டின் பேரிலக்கியங்களைப் படைத்தவர்கள் எல்லாம் சூத்திரராய்ப் பிறந்துப் பேரறிவு பெற்றவர்களேயாகும். நாம் நன்கு அறிவோம்.

எனவே பாரதி இக்கட்டுரை மூலம் அதைத் தெளிவு படுத்தி விட்டார். கல்வியும் செல்வமும் அறிவும் தொழிலும் இணைந்தே இருக்கிறது. தொழிலாளர் எல்லாம் படிக்க வேண்டும். அறிஞர்கள் தொழிலை நிர்வகிக்க வேண்டும்.

✡ ✡ · ✡

32. பருந்துப் பார்வை:

பருந்துப் பார்வை என்னும் தலைப்பில் பாரதி நானா விஷயங்களைப் பற்றி எழுதியிருக்கிறார். அவை சிறந்த உரை நடைக் குறிப்புகள். அவைகளில் சிலவற்றை இங்கு காண்போம்.

கலைகள்

இன்று தேவர்களை அழைக்கிறோம்.

இந்த மண்ணுலகத்திலே மீளவும் கிருதயுகத்தை நாட்டும் பொருட்டாக.

அறிவின்மை, அசுத்தம், சிறுமை, நோய், வறுமைக் கொடுமை, பிரிவு, அநீதி, பொய் என்ற ராக்ஷசக் கூட்டங்களை அழித்து மனித ஜாதிக்கு விடுதலை தரும் பொருட்டாக,

கல்வி, அறிவு, தூய்மை, பெருமை, இன்பம், செல்வம், நேர்மை, ஒற்றுமை, நீதி, உண்மை என்ற ஒளிகளெல்லாம் வெற்றியடையும் பொருட்டாக,

இன்று தேவர்களை அழைக்கிறோம் என்று பாரதி கூறுகிறார். மக்கள் அனைவரும் முழுமையான விடுதலை பெற்று செல்வமும் கல்வியும் அறிவும் பெருமையும் பெற வேண்டும் என்பதே பாரதியின் வேண்டுகோளாகும்.

விடுதலை பெற்று இவ்வுலகத்தில் நீண்ட காலம் வாழ்வேன் என்று பாரதி பராசக்தியைப் பலமுறை வேண்டுகிறார்.

தென் மாநில மொழிகள் – மொழிவழிக் கல்வி

தக்ஷிண பாஷைகளிலே – அதாவது தமிழிலும், தெலுங்கிலும், கன்னடத்திலும், மலையாளத்திலும் – சாஸ்திர (சயின்ஸ்) பாடம் கற்றுக் கொடுப்பதற்கு மேற்படி பாஷைகள் தகுதியில்லை என்று

பச்சையப்பன் காலேஜ் தலைமை வாத்தியார் மிஸ்டர் ரோலோ என்பவர் சொல்லுகிறார்.. அவருக்கு இவ்விடத்து பாஷைகள் தெரியாது. சங்கதி தெரியாமல் விரிக்கிறார். சாஸ்திர பரிபாஷை நமது பாஷைகளில் மிகவும் எளிதாகச் சேர்த்து விடலாம். மேலும் இயற்கை நடையிலே இங்கிலிஷ் பாஷையைக் காட்டிலும் தமிழ் அதிக நேர்மையுடையது. ஆதலால் சாஸ்திரப் பிரவசனத்துக்கு மிகுந்த சீருடையது. இந்தச் சங்கதி நம்மவர்களிலே கூடச் சில இங்கிலிஷ் பண்டிதருக்குத் தெரியாது ஆதலால் மிஸ்டர் ரோலோவை நாம் குற்றம் சொல்வது பயனில்லை.

நமது பூர்வீகர் சயன்ஸ் தேர்ச்சியில் நிகரில்லாது விளங்கினார்கள். அந்தக் காலத்து லௌகீக சாஸ்திரம் நமக்குத் தெரிந்த மாதிரி வேறு யாருக்கும் தெரியாது. இந்தக் காலத்துச் சங்கதிதான் கொஞ்சம் இழுப்பு" என்று பாரதி எழுதுகிறார். தமிழ் மொழியிலேயே எல்லா அறிவியல் கல்விகளையும் கற்க வேண்டும். கற்பிக்க வேண்டும் என்பது பாரதியாரின் கொள்கை. அதை நாம் இன்னும் நிறைவேற்றவில்லை. உயர் கல்வியில் எல்லாம் இன்னும் ஆங்கிலத்திலேயே தான் கற்கிறோம் கற்பிக்கப் படுகிறோம். இந்த நிலை மாற வேண்டும்..

பாடப் புத்தகம் இல்லையென்று சில பண்டிதர்கள் கூறி வருகிறார்கள். தேவைப் பட்ட பாடப் புத்தகங்கள் நமது வல்லுனர்களைக் கொண்டு எழுதுவிக்கலாம். இதர பல மொழிகளிலிருந்து தமிழில் மொழியில் பெயர்த்தும் கொள்ளலாம்.

உடம்பு – உடல் வலிமை

உடம்பு என்னும் தலைப்பில் பாரதி எழுதுகிறார். உடம்பு நாடிகளுக்கு வசப்பட்டது. நாடிகள் மனதின் வசமாகும். ஆகையால் உடம்பிலுள்ள நோய்களைத் தீர்த்து வலிமை பெறுவதற்கு மன உறுதி,

நம்பிக்கை, உத்ஸாகம் முதலிய குணங்கள் பிரதானமாகக் கொள்ளத்தகும்" என்று பாரதி கூறுகிறார்.

"எவனும் உடம்பை உழைப்பினாலும், அசைவினாலும், சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள வேண்டும். மனதை உத்ஸாக நிலையில் வைத்துக் கொண்டால் உடம்பிலே தீவிர முண்டாகும். உடம்பைத் தீவிரமாகச் செய்து கொண்டால் மனது உற்சாகத்துடன் இருக்கும். மனத்தளர்ச்சிக்கு இடம் கொடுக்கலாகாது. கவலை மனிதனை அரித்துக் கொன்று விடும். பயத்தை உள்ளே வளர்ப்பவன் பாம்பை வளர்க்கிறான்.

மன உறுதி, சந்தோஷம், உலகை நடத்தும் சக்தி நமக்கு நன்மை செய்யும் என்ற நம்பிக்கை, சரீர உழைப்பு, முதலிய நற்குணங்களைக் கைக்கொண்டு ஊக்கத்தை வழக்கப் படுத்த வேண்டும்.

"உடம்பிலே நோயில்லாமல் வலிமையுடன் இங்கே நூறாண்டு வாழலாம்" என்று பாரதி தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

ஒரு நாட்டின் பலம் அந்த நாட்டின் உடல் பலத்தில் உடல் ஆரோக்கியத்தில் இருக்கிறது என்பதை பாரதி தனது கட்டுரையில் வலியுறுத்திக் கூறுகிறார். நாட்டு மக்களுக்கு ஆரோக்கியமும் பலமும் இருந்தால் நல்ல உழைப்பு வளரும், செல்வம் பெருகும், கல்வியும் அறிவும் ஒளி வீசும். மற்ற நாடுகளிலிருந்து மரியாதை கிடைக்கும். அந்த இடத்திற்கு எனது நாடு உயர வேண்டும் என்பதுவே பாரதியின் சிந்தனை.

செல்வம் என்னும் தலைப்பில் பாரதி எழுதுகிறார்.

முற்காலத்திலே இந்தியா செல்வத்துக்கும், கல்விக்கும், ஞானத்துக்கும், தியானத்துக்கும், பக்திக்கும், வீரத்துக்கும், பராக்கிரமத்துக்கும், சாஸ்திரங்களுக்கும், பலவிதமான

கைத்தொழில்களுக்கும், விசேஷஸ்தலமாகி விளங்கி வந்தது. இக்காலத்தில் இந்தியா பஞ்சத்துக்கும் பசி மரணத்துக்கும் வறுமைக்கும், சிறுமைக்கும், தொத்து நோய்களுக்கும் சாசுவதஸ்தலமாயிருக்கிறது.

இந்திய தேசத்தார் அழிவுறுவது போல் மற்றப்படி பூமண்டலம் முழுவதிலும் எந்த நாட்டிலும் மனிதர் இவ்வாறு வருஷம் தவறாமல் வேறு காரணம் யாதொன்றுமில்லாமல் சுத்தமான பஞ்சக் காரணமாக பதினாயிரம் லக்ஷக்கணக்கில் மடிந்து போகும் ஆச்சர்யத்தைக் காண முடியாது.

"கோடிக் கணக்கான ஜனங்கள் வயிறு நிறைய உணவு கிடைக்கும் என்ற நிச்சயமில்லாமலும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஒரு வேளைக் கஞ்சி கிடைக்காமலே சுத்தப் பட்டினியால் கோர மரண மெய்தும் படியாகவும் நேர்ந்திருக்கும் தற்கால நிலைமையை நாம் க்ஷணம் கூடச் சகித்திருப்பது ஞாயமில்லை என்பது சொல்லாமலே போதரும்.

"எனவே உலகத் துன்பங்கள் அனைத்திலும் கொடிதான இந்த ஏழ்மைத் துன்பத்தைச் சமாதான நெறியால் மாற்றக் கூடிய உபாயம் ஒன்றை நாம் கண்டு பிடித்து நடத்துவோமானால் அதனின்றும் நமது நாடு பயனுறுவது மட்டுமேயன்றி உலகத்தார் எல்லாரும் நம்முடைய வழியை அனுஷ்டித்து நன்மை அடைவார்கள்" என்று பாரதி தனது கட்டுரையில் எழுதுகிறார்.

இந்தியாவில் ஆங்கிலேயர்களின் கிழக்கிந்திய கம்பெனியாரின் நூறாண்டுகளுக்கு மேலான ஆக்கிரமிப்புப் போர்கள் நடத்திய காலத்திய கொள்ளை, போர்ப் படுகொலைகள், உள்நாட்டுத் தொழில்களின் நாசம், கால்நடைகளின் அழிவு, நீர் நிலைகளின் சேதங்கள், சாகுபடித் தொழிலின் சீரழிவு, ஆலயங்களின் சிதிலங்கள்,

பூஜைகளின் மறைவு, மக்களின் வியாகூலங்கள், உள்நாட்டு நிர்வாகங்களின் நிலை குலைவு, கேள்வி கேட்பாரற்றநிலை, பிரிட்டிஷ் நேரடி ஆட்சி காலத்திய வியாபாராக் கொள்ளை, வரிக்கொடுமை, உள்நாட்டு வட்டிக் கொடுமைகள் காரணமாக ஏற்பட்ட பொது வாழ்வின் சீரழிவு பொருளாதாரத்தின் சீர் குலைவு, இவை காரணமாக பஞ்சம், பசி, பட்டினி, பல்லாயிரக்கணக்கான பல லக்ஷக்கான மக்களின் பட்டினிச் சாவு இந்தக் கோர நிலையைக் கண்ட வள்ளலாரும், அடுத்து பாரதி யாரும் கண் கலங்கி நெஞ்சில் உதிரம் கொட்ட நாட்டு நிலைமையை எடுத்துக் கூறினர். கருணையில்லாத ஆட்சி கடுகி ஒழிக என்றார் வள்ளலார், பொழுதெல்லாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு போகவோ நாங்கள் சாகவோ என்று உள்ளம் குமுறினார் பாரதியார்.

பாரத மக்கள் அமைதி வழியைக் கடைப்பிடித்து ஆங்கிலேய அன்னிய ஆட்சியை எதிர்த்து, கோடிக்கணக்கான மக்கள் திரண்டு கருணையில்லாத ஆட்சியை ஒழித்து வீர சுதந்திரம் பெற்றார்கள். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், பசி, பட்டினியைப் போக்க சில நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். உணவு தான்யங்கள், காய்கறி, பழங்கள், பால், முட்டை, முதலிய பொருள்களின் உற்பத்தி அதிகரித்திருக்கிறது. இருப்பினும், நாட்டின் மொத்த வறுமை முழுமையாகக் குறிப்பாக கிராமப்புற மக்களின் வறுமை நீங்கவில்லை. அதன் காரணங்கள் ஆராயப்படுகின்றன. பல ஆலோசனைகளும் முன் வைக்கப்படுகின்றன. நாட்டில் உள்ள அனைத்து மக்களுக்கும் வறுமை நீங்கி வாழ்க்கை வளம் பெறுவதற்கு வழி வகுக்க முனைவோமாக.

தண்டனையின் கருத்து.

இந்தத் தலைப்பில் பாரதி எழுதுகிறார்.

குற்றம் செய்த மனிதனைச் சீர் திருத்தி இனிமேல் அவன்

குற்றம் செய்யாத படி அறிவிலும் ஒழுக்கத்திலும் மேம்பட வழி செய்ய வேண்டும். இந்தக் கருத்துடன் தண்டனை செய்வோரையே தர்ம தேவதை க்ஷமிக்கலாம். பழிக்குப்பழி வாங்கி விட வேண்டும் என்ற கருத்துடன் தண்டனை செய்கின்ற அதிகாரம் மனிதனுக்குக் கிடையாது. மூடனுக்குப் படிப்பு சொல்லிக் கொடுத்தால் இந்திரியங்களைக் கட்டியாள முடியாதவனை விரதங்களிலே போட்டால் உயர்ந்த பதவியில் இருப்போர் எப்பொழுதும் நியாயத்தையே செய்து காட்டினால் பிறகு களவு இராது.

பள்ளிக் கூடங்கள் மற்றும் தொழிற்சாலைகளை அதிகப் படுத்தினால் சிறைச்சாலைகள் குறையும் என்பதை அநேக நீதி சாஸ்திரக்காரர் தெரிந்து சொல்லுகிறார்கள். வாத்தியார்களின் தொகை அதிகப் பட்டால் போலிஸ் சேவகரின் தொகை குறையும். நியாயமான அதிகாரத்தின் கீழ் பள்ளிக் கூடமும் வாத்தியாரும் மிகுதிப்படும். போலீஸ் சேவகமும் சிறைச் சாலையும் குறையும்" என்று பாரதி எழுதுகிறார்.

நீதி என்னும் தலைப்பில்

"நீதி என்பது பொது ஒழுக்கம். ஒரு கிராமத்தில் வலியவனுக்கு வேறு நியாயம், எளிவனுக்கு வேறு நியாயமாக இருந்தால் அங்குள்ள நீதிக்காரரை உடனே மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் கிராமம் உடனே அழிந்து விடும். ஜனங்கள் குற்றம் செய்யாமல் நீதிக்காரர் பார்த்துக் கொள்ள வேண்டும். நீதிக்காரர் குற்றம் செய்யாமல் ஜனங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். நீதிக்காரரிலே இரண்டு பெரிய பிரிவு உண்டு. நியாயஸ்தலங்களிலிருந்து நீதியைப் பரிபாலனம் செய்வோர் ஒரு பகுதி. நீதி (சட்ட) சபைகளிலிருந்து விதிகள் ஏற்படுத்துவோர் மற்றொரு பகுதி. இவ்விரு நிறத்தாரும் கோணல் வழியிலே இறங்காமல் அடக்க வேண்டிய பொறுப்பு பொது

ஜனங்களைச் சேர்ந்தது.

தண்டனை, நீதி என்னும் தலைப்புகளிலே பாரதியார் எழுதியுள்ள பருந்துப் பார்வைக் குறிப்புகளிலே தண்டனை, சிறைச்சாலை, பள்ளிக் கூடங்கள், போலீஸ் சேவகர்கள், ஆசிரியர்கள், நீதி, நீதி (சட்ட) சபைகள், நியாய ஸ்தலங்கள் முதலியவற்றைக் குறிப்பிடுகிறார். பாரதி காலத்திலிருந்து இன்று சுமார் நூறு ஆண்டுகளாகியுள்ள நேரத்தில் நாடு விடுதலை பெற்று ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ள நேரத்தில் சில நடவடிக்கைகள் சில சில்லரைத் திருத்தங்கள் செய்யப் பட்டிருந்த போதிலும் அடிப்படையில் பெரிய மாற்றங்கள் ஏற்படவில்லை.

குற்றவியல் சட்டங்கள், தண்டனைவியல் சட்டங்கள், போலீஸ் சட்டங்கள், சாட்சியச் சட்டங்கள் முதலிய கிரிமினல் சட்டங்கள் எல்லாம் ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டு காலத்தில் இயற்றப் பட்டவை. அவைகளின் படி சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியவர்கள் போலீஸ் சேவகர்கள். போலீஸ்காரர்களுக்கு நமது சட்டங்களின் படி, குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் விசாரணை நடத்துவதில் வழக்குகள் பதிவு செய்வதில், சாட்சிகளைத் தயாரிப்பதில் வழக்குகளை நடத்துவதில் வானளாவிய அதிகாரங்கள் உள்ளன. ஆங்கிலேயர் உண்டாக்கியது ஒரு அடிமை நாட்டை ஆள்வதற்குரிய போலீஸ் அரசு போலீஸ்ஆட்சி. போலீஸ் சட்டம். நீதி ஸ்தலங்களில் விசாரிப்பது, இந்த சட்டப்படியேயாகும். இந்த நியாய ஸ்தலங்கள் மூலம் கிடைக்கும் நீதி சட்ட நீதி. ஆயினும் நீதிஸ்தலங்கள் இன்று சயேச்சையாகச் செயல் படுகின்றன. அதனால் நியாயங்கள் கிடைக்கின்றன. இந்த நியாய ஸ்தலங்களின் தீர்ப்புகள் பலவும் போலீஸ் செயல்பாடுகளைப் பற்றிக் கூறிய தீர்ப்புகள் பரிசீலிக்கப் படவேண்டியவை. எனவே போலீஸ் நிர்வாகத்திலும், செயல் பாட்டிலும், குற்றவியல் மற்றும் தண்டனைவியல் சட்டங்களில்

அடிப்படையான ஜனநாயக பூர்வமான அடிப்படை மாற்றங்கள் தேவைப் படுகிறது.

சிறைச் சாலைகள் மிகப்பெரும்பாலும் பழைய முறையிலேயே நீடிக்கின்றன. சிறைச்சாலைகள் குற்றவாளிகளைத் திருத்தவில்லை. சிறைச்சாலை நிர்வாகம் அதன் சீர்திருத்தங்கள் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்.

சட்ட மன்றங்கள், பாராளுமன்றம் கோணல் வழியில் போகாமல் மக்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

✡ ✡ ✡

33. குரு :

குரு என்னும் தலைப்பில் பாரதி எழுதுகிறார்.

இக்காலத்தில் பிராமணர் நமக்கு சாஸ்திரங்களில் சொல்லப் பட்ட ஆறு தொழில்களை மறந்து பெரும்பாலும் வேறு தொழில்களைச் செய்து வருகிறார்கள். இருந்தாலும் ஐரோப்பா முதலிய இதர தேசத்து குருக்களைக் காட்டிலும் நமது தேசத்து பிராமணர்கள் சிறந்தவர்கள் என்று அமிர்தபஜார் பத்திரிகை சொல்லுகிறது. "புரோகிதத் தொழிலும் சாஸ்திரப்படிப்பும் விடாமல் இருக்கும் பிராமணர் இப்போது கூடப் பல இடங்களில் விசாலப்பயிற்சியும் அதனால் உண்டாகும் பெருமைகளும் இல்லாதிருந்த போதிலும் நல்லொழுக்கம் வைதீக புத்தி முதலியவற்றில் பிற தேசத்து குருக்களிலும் மேல்" என்பது அந்தப் பத்திரிகையின் கருத்து.

பாரதியார் மேலும் எழுதுகிறார். விதி விலக்கான சிற்சில விசேஷ மனிதரைத் தவிர மற்றபடி பண விருப்பம் எல்லாருக்கும் உண்டு. ஆனாலும் லௌகீக ஆசை விஷயத்தில் ஐரோப்பிய புரோகிதர் குருக்கள் முதலியவர்களைக் காட்டிலும் நமது தேசத்து "ஐயன்மாரை"க் கொஞ்சம் நேர்மையுள்ளவர்களாகவே நினைக்க வேண்டும். காசுக்கும் அதிகாரத்துக்கும் எல்லாரும் தான் வாயைப் பிளக்கிறார்கள். ஆனாலும் ரோமாபுரியில் கிறிஸ்தவ குருக்கள் ஐரோப்பா எல்லை முழுவதிலும் பூமியாட்சி விவகாரங்களில் தலையிட்டு, ராஜாக்களுடன் கூடியும் பகைத்தும் கலகங்கள் ஏற்படுத்தியது போல் நமது தேசத்து புரோகிதரும் குருக்களும் செய்வதில்லை. தமிழ் நாட்டில் வன்னியரும், மறவரும், நாயக்கரும், துருக்கரும், அரசும் அதிகாரமும் செலுத்துகையில் குருக்கள் தெய்வப் பக்தியை மறந்து பணத்துக்காக சூழ்ச்சிகள் செய்யவில்லை. இக்காலத்தில் கூட ஒரு ஆங்கிலேய கிறிஸ்தவப் பாதிரிக்குக்

கிடைக்கும் வரும் படியில் நூறில் ஒரு பங்கு கூட அதே தொழில் செய்யும் புரோகித பிராமணருக்குக் கிடைப்பதில்லை. இதையெல்லாம் உத்தேசித்து நான் அமிர்தபஜார் பத்திரிகையின் கருத்தை ஒப்புக் கொள்கிறேன். என்று பாரதியார் எழுதுகிறார்.

ஐரோப்பாவில் மத்திய காலத்தில் மன்னராட்சி காலத்தில் ஒவ்வொரு நாட்டிலும் மன்னர், மடம், மதகுரு மூவரும் இணைந்து கொடுங்கோல் ஆட்சி நடந்தது. அக்கொடுமைகளைத் தாங்க முடியாமல் பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டு காலங்களில் அங்கு பெரும் வன்முறைக் கலவரங்கள் ஏற்பட்டன என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

✡ ✡ ✡

34. கொல்லாமை ஜீவகாருண்யம்:

மிருகங்களையும் பக்ஷிகளையும் கொல்ல வேண்டாம், பலியிட வேண்டாம், என்பது பாரதியாரின் கருத்தாகும். அக்கருத்தை வலியுறுத்திக் கூறும் வகையில் மிருகங்களும் பக்ஷிகளும் என்னும் தலைப்பில் பாரதி ஒரு சிறந்த கட்டுரை எழுதியுள்ளார்.

"கொல்லா விரதம் குவலயமெல்லாம் ஓங்கி
எல்லார்க்கும் சொல்வதென் இச்சை பராபரமே"

–தாயுமானவர்

லௌகீக விஷயங்களில் மகா நிபுணரும் சிறந்த வேதாந்தப் பயிற்சி உடையவருமாகிய எனது நண்பர் ஒருவர், அவருக்கு "கோபாலப் பிள்ளை" என்று புனைப் பெயர் சூட்டுகிறேன். இன்று பகல் நேரத்தில் என்னிடம் வந்து சம்பாஷணை செய்து கொண்டிருந்தார்.

அவர் என்னிடம் சொன்னார். நீங்கள் பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதுவதில் எந்த வகுப்பினருக்கும் மனவருத்தம் நேரிடாதபடி எழுதுவதே நன்று. இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம் வன் சொலால் என்றும் மகிழாதே. பிறருக்குக் கோபம் ஏற்படாத வகையில் எவ்வளவோ எழுத இடமிருக்கிறது. உலகத்தை சீர்திருத்த வேண்டும் என்பதும், உலகத்தாருக்கு உங்களால் இயன்ற வரை நன்மை செய்ய வேண்டும் என்பதுமே நீங்கள் பத்திரிகைக்கு எழுதுவதன் நோக்கம். அந்த நோக்கம் விரைவில் நிறைவேற வேண்டுமானால், நம்முடைய கொள்கைகளைச் சிறிதேனும் கோப –மில்லாமலும், ஆத்திரப்படாமலும், பிறர் யாவரேயாயினும் அவர் மனம் சிறிதேனும் நோவாமலும் முற்றிலும் இன்சொற்களால் எழுதுவதே சிறந்த வழியாகும்" என்றார்.

இது கேட்டு நான் மிகவும் நன்றாகச் சொன்னீர்கள். இதுவே என் சொந்த அபிப்ராயம். ஆனாலும் ஸ்திரீகளின் நிலைமை, கீழ் ஜாதியார்களின் நிலைமை, ஏழைகளின் நிலைமை, மிருக, பக்ஷிகளின் நிலைமை. இவற்றைக் குறித்து எழுதும் போது மேற்படி மாதர் முதலான எளிய வகுப்பினருக்குச் சிறிதேனும் ஈரம் இ,ரக்கம் இன்றிக் கொடுமைகள் செய்யும் போது அந்த மக்கள் மீது சில சமயங்களில் என்னையும் மீறி எனக்குக் கோபம் வந்து விடுகிறது. ஆனால் இந்தக் கோபத்தையும் கூடிய சீக்கிரத்தில் முயற்சி பண்ணி அடக்கி விடுகிறேன். நீங்கள் சொன்ன விதியையே எப்போதும் அனுஷ்டிக்க முயலுகிறேன். ஏனென்றால் கோபச் சொற்கள் நமது நோக்கத்தின் நிறை வேறுதலுக்கே நீங்கள் குறிப்பிட்டவாறு தடையாகி முடிகின்றது. ஆடு, மாடு தின்போரை நாம் வாய்க்கு வந்தபடி வைதால், அதனின்றும் அவர்களுக்கு நம் மீது கோபம் அதிகப்படுமேயொழிய அவர்கள் மாம்ச பக்ஷணத்தை நிறுத்த வழியுண்டாகாது,. தக்க நியாயங்கள் காட்டுவதும் அவர்களுடைய காருண்யத்தை நாம் கெஞ்சுவதுமே மனிதர் நாம் சொல்லும் கக்ஷியை அங்கீகரிக்கும் படி செய்யும் உபாயங்களாகும்." என்றேன் என்று பாரதியார் எழுதுகிறார். மேலும்,

கோவில்களில் ஆடு, கோழிகள் பலியிடுவதையும், அந்த கோரமான கொடுமைகளைக் குறித்தும் மேலும் எழுதுகிறார். "இன்னும் நாடு முழுமையிலும் இம்மாதிரியான கோயில்கள் எத்தனையோ இருக்கின்றன. இவற்றில் நடக்கும் கொலைகளைத் தடுக்கும் படி அந்தக் கோயில் தர்மகர்த்தாக்களையும் பொது ஜனத் தலைவர்களையும் காலில் விழுந்து கேட்டுக் கொள்வதாகப் பத்திரிகைக்கு எழுதப் போகிறேன். கோபச் சொற்கள் சொல்வதிலும், வைவதிலும் காரியம் இல்லை என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்! நாம் என்ன செய்வோம்" என்றேன்.

இங்ஙனம் நெடுநேரம் ஜீவ நாசத்தின் அநியாயத்தையும் அதனால் மனிதனுக்கு உண்டாகும் எண்ணற்ற பாவங்களையும் அவற்றால் உண்டாகும் நோய் சாவுகளையும் குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம். அந்த சம்பாஷணை முழுவதையும் இங்கு எழுத இடமில்லை. எனினும் நான் கோபால் பிள்ளையிடம் வாக்குக் கொடுத்தப்படியே இங்கு வேண்டுதல் செய்கிறேன் "தமிழ் நாட்டு ஜனத் தலைவர்களே! உங்கள் காலில் விழுந்து கோடி நமஸ்காரம் செய்கிறேன். மாமிச பக்ஷணத்தை நிறுத்துவதற்கு வழி செய்யுங்கள்" என்று பாரதி எழுதிக் கட்டுரையை மிகவும் அடக்கமாக முடிக்கிறார்.

பாரதியார் இந்தக் கட்டுரையில் நாட்டின் மிக முக்கியமான பிரச்னைகளை வெளிப்படுத்திக் காட்டியுள்ளார். இன்றும் அவை நமது சிந்தனைக்கும் செயலுக்கும் தேவைப் படுகிறது. இந்தக் கட்டுரையின் மையமான கருத்து ஆடு கோழிகளை பலியிட வேண்டாம். ஆடு,மாடுகளை, கால்நடைகளைப் பாதுகாக்க வேண்டும் பராமரிக்க வேண்டும் என்பதாகும். பாரத நாட்டின் சாத்திரங்கள் எல்லாம் மனிதனோடு இயற்கையை இணைத்து வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்றே வற்புறுத்துகிறது. அதற்கு மனிதன் வழி காட்டியாக இருக்க வேண்டும் என்பதாகும். இராமாயணத்தில் இராமனுடன் மனிதர்களும் விலங்குகளும் பறவைகளும் இதர உயிரினங்களும் இணைந்து நிற்கின்றன. இதையே "வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றதம்மா" என்று கம்பர் குறிப்பிடுகிறார். மனிதாபிமானமே உலகனைத்தையும் அரவணைத்துச் செல்கிறது என்பது அதன் பொருளாகும்.

ஆயிரம் ஆண்டு கால ஆக்கிரமிப்புகளும், போர்களும் அன்னிய ஆட்சியும் அதன் கொள்ளையும், கொலையும், கொடுங்கோன்மையும் நாட்டை நாசப்படுத்தியிருக்கிறது. அந்த நாசத்திலிருந்து பாரத நாட்டை மீட்க வேண்டும்.

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தின் வட பகுதிகளில் ஆங்கிலேயர் – ஆற்காட்டு நவாப் படைகள் ஒரு பக்கம் பிரஞ்சுக்காரர் – ஹைதர் அலி திப்பு சுல்தான் படைகள் மறு பக்கம் நடந்த போர்களில் கால்நடைகள் ஆடு கோழி அனைத்தும் படைகளால் கொன்று தின்று தீர்க்கப் பட்டன. நீர்நிலைகள் அழிந்தன. சாகுபடித் தொழில் சிதைந்தது. நெசவுத் தொழிலும், இதர தொழில்களும் நைந்து போயின. மக்கள் பட்டினியாலும், பசியாலும் பல லக்ஷக்கணக்கில் செத்து மடிந்தனர். வடலூர் வள்ளலார் தோன்றினார். கொலைகளை நிறுத்துங்கள், பசியைப் போக்குங்கள். கருணையில்லாத ஆட்சி கடுகி ஒழிக. கண் மூடிப் பழக்கங் –களெல்லாம் மண் மூடிப்போகட்டும். வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்று கூறி தர்ம சாலைகளை ஏற்படுத்தினார். ஜீவ காருண்ய ஒழுக்கத்தை நிறுவி, ஆடு, கோழிகள் பலியிடப் படுவதை நிறுத்தும் படி வேண்டினார். வள்ளலாரின் தொடர்ச்சியே மகாகவி பாரதியாராகும்.

மவத காலத்தில் பலி இருந்தது. புத்தரும், மகாவீரரும் சர்வ ஜன சமத்துவத்தையும் ஜீவ காருண்யத்தையும் நிறுவினார்கள். பகவத் பாத ஆதி சங்கரர் அந்த ஜீவ காருண்யத்தையும் சர்வ ஜன சமத்வத்தையும் சனாதன தர்மத்தின் பகுதியாக்கி பாரதப் பண்பாட்டின் பகுதியாக இணைத்து விட்டார். பக்திப் பேரியக்கம் அவைகளை நிலை நாட்டியது.

ஆயினும் இந்து சமுதாயத்தின் பெரும்பாலான மக்கள் ஆடு, கோழிகளை பலியிடுவதை தமது வழி பாட்டின் பகுதியாக பழக்க வழக்கங்களின் பகுதியாக நீடித்துக் கொண்டு வந்துள்ளனர்.

வள்ளலார் வழியில் பாரதியும் ஜீவ காருண்யக் கருத்தை மேலும் முன்னெடுத்துக் கொண்டு வந்தார்.

ஆடு, மாடுகள், கால்நடை பராமரிப்பு, நமது கலாச்சாரத்தின் அங்கம். ஐரோப்பாவில் குதிரை சக்தியே பிரதானம். பாரத நாட்டில் காளைமாட்டு சக்தியே பிரதானம். சிவபெருமானின் வாகனம் காளை மாடு அன்றோ!, கால்நடைகள்தான் நமது சாகுப்படித் தொழிலின் அடிப்படை. கால்நடைகள் இல்லாவிட்டால் நமது சாகுபடித் தொழில் நசிந்து விடும். எனவே நமது நாட்டின் நமது சமுதாய வாழ்க்கையின் அடிப்படையே சாகுபடித் தொழிலும், கால் நடைப் பராமரிப்புமேயாகும். அதைப் பாதுகாப்பது நமது உயிர் பிரச்னையாகும்.

நமது நாட்டு மக்களின் பழக்கத்தில் உள்ள கிராமக் கோவில் பலிகளை நிறுத்த வேண்டும். நமது வழிபாட்டைத் தூய்மைப் படுத்த வேண்டும். சுத்தப் படுத்த வேண்டும், மனிதப் படுத்த வேண்டும். ஆகவே நமது ஜனத்தலைவர்களின் கால்களில் பொற்பாதங்களில் விழுந்து கெஞ்சிக் கேட்டு அமைதியான வழியில் அவர்களிடம் எடுத்துக் கூறி பலியை, நிறுத்துமாறு அவர்களிடம் வேண்டிக் கொள்ள வேண்டும் என்று பாரதி கூறுகிறார். பாரதி எழுத்தாளர், பத்திரிகையாளர். எனவே பத்திரிகைகளில் இந்த செய்தியை மட்டுமன்றி எந்தச் செய்தியையும் கருத்தையும் மற்றவர் மனது புண்படாத படி எழுத வேண்டும் என்று பத்திரிகைத் துறைக்கு எழுத்துலகுக்கு ஒரு இலக்கணமும் வகுத்துக் கூறுகிறார்.

இன்னும் பெண்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழைகள் முதலிய நலிந்த பிரிவினர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும். கால்நடைகளைப் பாதுகாத்துப் பராமரித்து, அவைகளைப் பெருக்க வேண்டும். நமது நாட்டுப் பொருளாதாரத்தில் கால்நடைச் செல்வம் முக்கியமான பகுதியாகும். முட்டை, பால், நெய் முதலியவற்றில் பாரதம் தொன்று தொட்டு முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. இன்றும் முதலிடம் பெற்றிருக்கிறது. நலிந்த பிரிவினர்களை கை தூக்கி விட்டு மேல் உயர்த்த வேண்டும். அவர்களுக்கு எதிராகக் கொடுமைகள் நடக்கும் போது நமக்குக் கோபம் வருகிறது.

இருப்பினும் நாம் பொறுமையாக இருந்து நாட்டு மக்களின் ஒற்றுமையை உருவாக்கி நாட்டின் மொத்த நலனைப் பாது காக்க வேண்டும்.

இந்தக் கட்டுரையில் பாரதியின் அரசியல், பொருளாதாரம், சமுதாய ஒழுக்கம், கலாச்சாரம், ஆன்மீக நெறி, மனிதாபிமானம், பாரதத்தின் பாரம்பரியப் பண்பாடு ஆகியவைகள் நிறைந்து அவருடைய பல்முனைக் கருத்துக்களும் வெளிப் படுவதைக் காண்கிறோம்.

பாரதியின் எழுத்து மேன்மைக்கும், சிறப்புக்கும் விசாலமான சிந்தனைச் செழுமைக்கும், நெடிது நோக்குப் பார்வைக்கும், பரந்த மனிதாபிமான தெய்வீக உள்ளத்திற்கும் இக்கட்டுரை சிறந்த எடுத்துக்காட்டாகும். பாரதி வாழ்க.

✡ ✡ ✡

35. ஐம்பெரும் குழுக்கள்:

அரசின் அங்கங்களையும், பிரிவுகளையும் பற்றி ஐம்பெரும் குழுக்கள், எண்பேராயம் என்று சிலப்பதிக்காரம் குறிப்பிடுகிறது. இதர பண்டைய தமிழ் இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.

"குழு என்னும் பழைய தமிழ்ச் சொல்லுக்குக் கூட்டம் என்று அர்த்தம். இப்போது மகாசபை என்று சொல்வதை பழைய தமிழர்குழு என்றனர். தமிழரசர் காலத்தில் ஐந்து குழுக்கள் உண்டு. 1. குடிகள் குழு, 2. குருக்கள் குழு, 3. ஜோதிடர் குழு, 4. வைத்தியர் குழு, 5. மந்திரிகள் குழு.

"ராஜா செய்யும் விதிகள் இந்த ஐந்து குழுக்களின் அனுமதி பெற்ற பிறகு தான் உறுதிப்படும். குடிகளின் குழுவிலே ஜனங்களின் பிரதிநிதிகள் இருந்தனர். குருக்கள் சபையிலே மதத் தலைவரும், ஜோதிடர் சபையிலே கணிதக்காரரும், இருந்து அரசியலானது சாஸ்திரக் கருத்தையும், ஜனாச்சாரங்களையும் தழுவி நடக்கும் படி ஆலோசனை சொல்லினர். வைத்தியர் குழு நாட்டிலே நோய்கள் பரவாதபடி அரசன் செய்ய வேண்டிய சுத்தி முறைகளை கவனிப்பது. மந்திரிகளின் குழு அரசியலின் மூல தர்மங்களிலே தவறு நேரிடாமல் அரசனை நியாய வழியில் நடத்துவது. இந்த விஷயமெல்லாம் நமது நாட்டுப் பழைய சாசனங்களை ஆராய்ச்சி செய்யும் புராதனப் பரிசோதனைப் பண்டிதர்கள் கண்டு பிடித்துச் சொல்லியிருக்–கிறார்கள். சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பழைய நூல்களிலும் காணலாம். இது நிற்க,

ஜனங்களுடைய சம்மதப் படி ஆட்சி செய்ய வேண்டும் என்ற கருத்துடன் ஏற்படும் சபைகள், இங்கிலாந்து முதலிய தேசங்களில் நாளுக்கு நாள் நாகரிகமும் சீர்திருத்தமும் பெற்று மேன்மேலும் அதிக வலிமையுடன் ஏறி வந்திருப்பதாகச் சரித்திரங்களிலே தெரிகிறது.

நமது நாட்டில் இவை விருத்தியடையவில்லை ஏன்? எதனாலே? என்னும் கேள்விகளுடன் பாரதி இந்தக் கட்டுரையை முடிக்கிறார்.

அக்காலத்தில் ஆங்கிலேய ஆட்சியாளர்கள் உலக மக்களிடையில் நேர்மையும் ஜனநாயகமும் பேசினார்கள். ஆனால் அவர்கள் பிரிட்டனில் அனுமதித்த ஜனநாயகத்தை இந்தியாவில் அனுமதிக்கவில்லை. பிரிட்டனில் ஜனநாயகம், இந்தியாவில் கொடுங்கோன்மை, யதேச்சதிகாரம், போலீஸ் ஆட்சி. எனவே தான் பாரதி இந்தக் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

நாட்டு விடுதலைக்காக பாரதி பாடினார், எழுதினார், பேசினார். பாரதி அத்துடன் நிறுத்தவில்லை. மக்களுடைய கஷ்டங்களை, துன்ப துயரங்களைப் போக்குவதற்கு நிவாரணப் பணிகள், ஜனசேவைப் பணிகள் செய்ய வேண்டுமென்று பேசினார், எழுதினார், கல்வி சுகாதாரம் வைத்தியம் முதலிய பணிகளைச் செய்ய வேண்டும். மக்கள் சேவைப் பணிகளாக என்று பேசினார், எழுதினார். கலை, இலக்கியம், இசை, கூத்து முதலிய மக்களுடைய மன மகிழ்ச்சிக்கான பணிகளையும் விரிவாக மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்று பேசினார், எழுதினார்.

அன்று அன்னிய ஆட்சி இத்தகைய மக்கள் நலப் பணிகளில் அக்கரை செலுத்தவில்லை. எனவே நாட்டு மக்களே முனைந்து இந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று பாரதி பேசினார்.

நாடு விடுதலை பெற்ற பின்னர் நாட்டில் மக்களாட்சி (ஜன நாயகம்) மலர வேண்டும் என்பது பாரதியாரின் கருத்தாகும். மக்களாட்சி அமைப்புகள் மக்களுக்கான பல பணிகளைப் பற்றியும் திட்டமிட்டு அவைகளை மக்களுடைய பங்கேற்போடு நிறைவேற்ற வேண்டும் என்பது பாரதியின் கருத்தாகும்.

நாடு விடுதலை பெற்ற பின்னர் நமது நாட்டில் மக்களாட்சிக்கான அரசியல் சட்டம் உருவாக்கப் பட்டிருக்கிறது. அரசியல் சட்டப்படி சாதி, மத, இன, மொழி, பால் வேறுபாடின்றி இந்திய மக்கள் அனைவரும் சமம் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. 21 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இப்போது அது திருத்தம் செய்யப் பட்டு 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப் பட்டு தேர்தல்கள் கிராமப் பஞ்சாயத்து முதல் பார்லிமெண்ட் (மக்களவை) வரை எல்லா அமைப்புகளுக்கும் தேர்தல்கள் நடை பெறுகின்றன.

மத்திய பாராளுமன்றம், மாநில சட்ட மன்றங்கள், அரசியல் சட்டப்படி உருவாக்கப் பட்டிருக்கின்றன. மாநிலங்களில் கிராமப் பஞ்சாயத்து, நகரப் பஞ்சாயத்து, ஒன்றியப் பஞ்சாயத்து, மாவட்டப் பஞ்சாயத்து, நகராட்சி, மாநகராட்சி முதலிய அமைப்புகள் உண்டாக்கப் பட்டிருக்கின்றன. அவைகளை முழுமையாக அரசியல் சட்டப்படியான அமைப்புகளாக நிலை பெறச் செய்ய வேண்டும். அவைகளின் அதிகார வரம்புகளையும் செயல் பாட்டு வரம்புகளையும் விரிவுப் படுத்த வேண்டும்.

கூட்டுறவு அமைப்புகளும் நமது நாட்டில் ஏராளமான எண்ணிக்கையில் பல துறைகளிலும் உருவாக்கப் பட்டுள்ளன. இவைகளையெல்லாம் ஜனநாயக பூர்வமாகச் சீராகச் செயல் படச் செய்வதற்குப் பல முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டியதிருக்கிறது.

கிராமங்களிலும், நகரங்களிலும் மக்களுடைய அடிப்படை வசதிகளை தேவைகளை நிறைவேற்றுவதற்காக பல குழுக்களையும் உருவாக்கி அரசின் தொடர்புடன் அவைகளை செயல் படுத்த வேண்டும் என்பதும் பாரதியின் சிந்தனையாகும்.

ஆரம்பக் கல்வி, ஆரம்ப சுகாதாரம், துப்புரவுப் பணிகள், சிறிய நடுத்தர நீர் நிலைகளைப் பாதுகாத்தல், பராமரித்தல், ஆலயப் பாதுகாப்பு, பராமரிப்பு, சந்தைகள், கிராமச் சாலைகள், கலை, இலக்கியம், இசை, கூத்து, விளையாட்டு, முதலிய பணிகளையும் நிறைவேற்றுவதற்கு மக்கள் அமைப்புகள் உருவாக்கப் பட்டு அப்பணிகளை நிறைவேற்ற வேண்டும் என்பது இந்திய மரபு வழியில் பாரதிக்கு ஏற்பட்ட சிந்தனையாகும். அதை பாரதி தனது பல எழுத்துக்களிலும் குறிப்பிடுகிறார், வெளிப்படுத்துகிறார். ஜனநாயகத்தில் அனைத்துப் பணிகளிலும் மக்கள் பங்கேற்பு என்பது ஒரு முக்கியமான விஷயமாகும்.

✡ ✡ ✡

36. அநந்த சக்தி:

சக்தி என்னும் சொல் பாரதிக்கு மிகவும் விருப்பமானது. அது அவருக்கு ஒரு தெய்வீக வார்த்தை. அவருடைய உயிர் மூச்சு போன்றது. பாரதி சக்தி தெய்வங்களைப் பற்றி பல பாடல்களில் பாடியுள்ளார். லக்ஷ்மி, சரஸ்வதி, சக்தி, பராசக்தி, காளி, மாரி பற்றிப் பாடுகிறார். ஒரு காவியத்திற்கு பாஞ்சாலி சபதத்தைப் பாடினார். அதில் கடவுள் வாழ்த்தாக வாணியைப் பாடினார்.

பாரதி பராசக்தியை நோக்கி, "அடி உன்னைக் கோடி முறை தொழுதேன் – இனி வையத்தலைமை எனக்கருள்வாய் அன்னை வாழி என்று பாடுகிறார்.

எண்களைக் கண்டது பாரதம். அதில் சிறப்பாக பூஜ்யமும் அனந்தமும் பாரதத்தின் தனிப் பங்களிப்பாகும்.

சக்தியை அனந்தமாகக் கூறுகிறார் பாரதி. அனந்த நாயகி என்பது பாரதத்தின் செல்வி. அனந்தம் என்றால் அளவில்லாதது. கோடி கோடி பலகோடி நூறாயிரம் கோடி அதற்கு அதிகம் எண்ணத் தொலையாது. நாராயணன் அனந்தம் அவனுடைய சயனமும் அனந்த சயனம். அதுபோல சக்தி, மகாசக்தியும் அனந்தமாகும்.

பாரதிக்கு சக்திதாஸன், வாணிதாஸன் என்றும் பெயர்களும் உண்டு. அவர் வாணியின் அருளை, பராசக்தியின் அருளை ஆசியை வேண்டினார்.

அனந்தசக்தி என்னும் தலைப்பில் பாரதி ஒரு அருமையான கட்டுரை எழுதியுள்ளார்.

"எறும்பு இறந்து போன புழுவை இழுத்துச் செல்கிறது. எதனால்? சக்தியினால். தூமகேது அநேக லட்சம் யோசனை தூரமான தனது வாலை இழுத்துக் கொண்டு திசை வெளியில் மகா வேகத்தோடு

சுழலுகிறது எதனால்? சக்தியினால். அந்தத் தூமகேது எழுபத்தைந்து வருஷத்தில் ஒரு மண்டலமாகத் தன்னைச் சுற்றிவரும் படி சூரியகோளம் நியமித்திருக்கிறது எதனால்? சக்தியினால்.

ஓர் கன்னிகை பாடுகிறாள். நெப்போலியன் ஐரோப்பாக் கண்டம் முழுமையும் வெல்கிறான். இவை இரண்டிற்கும் சக்தியே ஆதாரம். கண்ணுக்குப் புலப்படுவதும் ஊகத்திற்குப் புலப்படுவதுமாகிய வெளியுலகங்கூட எல்லையற்றதென்று பண்டிதர்கள் கண்டிருக்கிறார்கள். இந்த எல்லையற்ற உலகத்தை இயக்கும் சக்தி தானும் எல்லையற்றதாகும். அது அனந்தமானது. அதனினும் பெரிது. இவ்வித சக்தியை மனிதன் பாவனை செய்வதால் பலவிதப் பயன்கள் உண்டு. "யத்பாவயஸி தத்பவஸி" எதனை பாவிக்கிறாயோ நீ அதுவாகவே ஆகிறாய்.

"ஆனால் இங்ஙனம் பாவனை செய்வது லேசான காரியமென்று நினைத்து விடலாகாது. உயிர் ததும்பியதும் கனல்வதுமான சிரத்தையுடன் பாவனை செய்ய வேண்டும். பொறி பறக்கும் பக்தியுடன் தியானம் செய்ய வேண்டும். இதனை வீண் கதையென்று நினைத்து விட வேண்டாம். விடாமல் அனுஷ்டானம் செய்து பார்த்தால் அதன் பலன் தெரியும்.

ஞானிகள் என்றும் யோகிகள் என்றும் சொல்லப் படுவோர் இந்த சக்தியை மனதறிந்து சிலமுறைகளை அனுஷ்டித்துப் பெறுகிறார்கள். ஸாமான்ய ஜனங்கள் விஷயம் தெரியாமல் இயற்கை முறையிலே சிறிது பெற்றவர்களாகின்றனர். சக்தி சிறிதும் இல்லா விட்டால் ஒருவன் கூஷண நேரம் கூட மூச்சு விட்டுக் கொண்டு இவ்வுலகத்தில் இருக்க முடியாது. வெளிக் காற்றிலே உலவி அத்துடன் யோகப் படுவதால் சக்தி உண்டாகிறது. சரீரத்தை உழைப்புக்கு உட்படுத்துவதால் இடை வெளியெங்கும் ததும்பிக் கிடக்கும் சக்தி அதனுள்ளே குடிகொள்கிறது. அறிவைப் பல

விஷயங்களிலே சிரத்தையுடன் செலுத்தி உழைப்பதனால் சக்தி உண்டாகிறது. இங்ஙனம் சிறிது சிறிது ஏற்படும் சக்தியினாலேதான் உலகத்தில் மனிதர்கள் ஜீவித்திருக்கிறார்கள்.

தமிழ் ஜனங்களுக்குள் சக்தி மேம்மேலும் பெருகச் செய்ய வேண்டும் என்பது நமது நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாகவே நாம் உயிர் தரிக்கிறோம். மாதா இந்த நாட்டு ஜனங்களுக்கு சக்தி யதிகரிக்கும்படி செய்க. அக்காரியத்தை நிறைவேற்றுவதற்குரிய சக்தியை எனக்கு அருள் புரிக" என்று நம்மில் ஒவ்வொருவரும் தியானம் புரிய வேண்டும்.

ஆட்டம் ஆடுதல், கூத்து முதலியவை, மற்போர் முதலிய வற்றிலே பழகுதல், பாடுதல், தர்க்கம், வாதம், தவம், பிரமசரியம், சுத்தம் முதலியவற்றில் ஓர் ஜாதிக்கு சக்தி அதிகப் படுகிறது. மனம், வாக்கு, செயல் மூன்றும் சுத்தமாக இருக்க வேண்டும். உள்ளும் புறமும் மாசில்லாது செய்யப் பழக வேண்டும். பயம், சந்தேகம், சலனம், மூன்றையும் வெறுக்க வேண்டும். இதனால் சக்தி ஏற்படும்.

புராதன சம்பிரதாயம் என்பதால் மட்டுமே ஒன்று பொய்யாகி விட மாட்டாது,. புதியது என்பதால் மாத்திரமே ஒன்றை மெய்யாகக் கொண்டு விடுதலும் பிழை. ஆராய்ந்து அனுபவத்தால் பார்க்கு –மிடத்தே தான் ஒரு விஷயத்தின் மெய்ம்மையும், பொய்மையும் விளங்கும். நமது முன்னோர்கள் "யோகம்" என்றதோர் மார்க்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இஃது ஹடயோகம், ராஜ யோகம், பக்தி யோகம், ஞான யோகம் என நான்கு வகைப்படும். இவற்றில் ஹடயோகம் தான் மிகக் குறைந்த பயன் தரக் கூடியது. மற்ற மூன்றிலும் அனந்த சக்திகள் பெறலாம். விஷயம் தெரியுமுன்பாக இதில் பயன் என்ன விளையப்போகிறது என்று சந்தேகப் படுதல் தெளிந்தோர் செய்யும் காரியம் அன்று. அவற்றை ஆராய்ச்சி செய்து

பார்க்க வேண்டும். அங்ஙனம் சாதனை செய்தவர்களுக்குப் பலவித ஆபூர்வ சக்திகள் உண்டாயிருப்பதைக் கண்ணாரக் காண்கிறோம்.

நமக்கும் ஏன் இந்த சக்தி ஏற்படக் கூடாது? இந்த மூடத் –தனமான குணத்தால் என்ன சுகங்கள் கண்டு விட்டோம்? சோம்பராலும், அற்ப விஷயங்களிலே ஆசைகொண்டு மனதைக் கடலில் அகப்பட்ட துரும்பு போலச் சலிக்க விடுவதாலும் என்ன பேறுகள் பெற்று விட்டோம்?

"துணிவு, உள்ளத் தூய்மை, ஏதாவதொரு மகத்தான லட்சியத்திலே அறிவை, ஆணி கொண்டடித்தது போலப் பற்றுறச் செய்து கொள்ளுதல், லாப நஷ்டங்களிலே சிந்தனையில்லாமை, இவைதான் யோகத்தின் இரகசியம்" என்று மகாகவி எழுதுகிறார்.

நெடுங்காலமாக உறங்கி நின்ற சுதேச மாதா இப்போது கண் விழித்திருக்கிறாள். நமது நாடு மறுபடியும் பூர்வ கால மகிமைக்கு வருவதற்குரிய அறிய முயற்சிகள் செய்து வருகின்றது என்று கூறுகிறார்.

"ஒரு தேசத்தார் ஞானமும் செல்வமும் வீரமும், புகழும் கொண்டு உன்னத நிலையில் இருக்கும்போது அவர்களுக்குள் ஆண் மக்களிடம் மட்டுமேயல்லாது பெண் பாலரிடத்திலும் கூட தர்மாபிமானமும் வீரதன்மையும் விளங்கும் என்று குறிப்பிடுகிறார். இதற்கு பாரத நாட்டில் எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. ராஜ புத்திரத் தாய்மார்கள் மானத்திற்காகவும் தர்மத்திற்காகவும் கற்பிற்காகவும் செய்திருக்கும் வீரச் செயல்களை உலகம் போற்றி வியந்திருக்கிறது. தமிழ்த் தாய்மார்கள் காட்டியுள்ள வீரத்தைப் புறநானூற்றுப் பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன.

இவ்வாறு மேலான வீரப்பயிற்சி இருந்த நாடு இப்போது என்ன நிலைமைக்கு வந்திருக்கிறது என்று நாட்டின் இன்றைய அடிமை நிலை பற்றி பாரதி மனம் வெதும்பி எழுதுகிறார் ஆயினும்,

"ஆயினும் நமக்கு ஒரு ஆறுதல் இருக்கிறது. அதுவும் வீணான ஆறுதலன்று. உண்மை பற்றிய ஆறுதல் என்று எழுதுகிறார்.

"இந்த ஆறுதல் யாதெனில் நமது ஜாதியை இடையே பற்றிய சிறுமை நோய் விரைவிலே நீங்கி விடும் என்பதற்கு ஆயிரக்கணக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பரிசுத்தமான நெஞ்சமும், தெய்வ பக்தியும் தன்னல மறுப்பும் உடைய பலமேலோர்களை இப்போது நாட்டிலே காண்கிறோம். இது வீணாக மாட்டாது. நம்மைப் பற்றியிருந்த புண்ணோய் சீக்கிரத்திலே மாறிப் போய்விடும். வானத்திலே துந்துபியொலி அதிரக் கேட்கின்றோம். மகாபாரதம் (Great India) பிறந்து விட்டது. வந்தே மாதரம்" என்று எழுதி முடிக்கிறார்.

"பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்
புன்மையிருட் கணம் போயின யாவும்
எழு பகும் பொற் சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கியது அறிவெனும் இரவி."

என்பது பாரதியின் அற்புதமான கவிதை.

பாரதி இதைக் கூறிய முப்பதாண்டுகளுக்குள் பாரதம் சுதந்திரம் பெற்று விட்டது. மகாபாரதமாக உலகில் புகழ் பரப்பி முன்னேறி வருகிறது. வையத் தலைமைக்கு வந்து கொண்டிருக்கிறது.

உலகமெல்லாம் சக்தி மயம். பஞ்ச பூதங்கள் சூரிய சந்திரர்கள் சுடர்கள் அனைத்தும் சக்திமயம். நம்மைச் சூழ்ந்துள்ள காற்று, தண்ணீர், நெருப்பு, அனைத்தும் சக்திமயம், பூமியின் வளம், நீராவி,

மின்சாரம், அணுத்திரள் அனைத்தும் சக்தி மயம், நமது மனித வளம் சக்திமயம். நமது மலைகள், ஆறுகள், நமது விலங்குகள், பறவைகள், மரங்கள், தாவரங்கள், உயிர்ப் பொருள்கள், ஜடப்பொருள்கள் அனைத்தும் சக்திமயம். எல்லாவற்றிற்கும் மேலாக நமது மனித வளம் அதன் உடல்வலிமையும் மனோவலிமையும் அறிவுத் திறனும் சக்திமயம். அது பேராற்றல் மிக்கதுமாகும். நமது சாஸ்திரங்கள் வல்லமை மிக்கது. நமது கலைகளும், இலக்கியங்களும் இசையும் கூத்தும் சக்தி மயம். பாரதம் விரைவில் லோக குருவாக வளரும். பராசக்தி மகாசக்தி நமக்கு அருள் புரிவாளாக.

✡ ✡ ✡

37. தமிழருக்கு:

பாரதி தனது உரைநடைப் பகுதியில் தமிழருக்குக் கூறிய வார்த்தைகளை மீண்டும் இங்கு நினைவு கூறுவோம்.

"தமிழா, பயப்படாதே, தெய்வத்தை நம்பு. உனக்கு நல்ல காலம் வருகின்றது. பயப்படாதே.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். தெய்வம் கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்வான்கள், கைதேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல தொழில் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக் கண்ணாடியிலே போய்ப் பார்.

நமது நாட்டு ஸ்தீரிகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீரியம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்களெல்லாம் உன்னைச் சார்கின்றன.

தமிழா, பயப்படாதே! ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களையெல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.

ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. ஜாதியிரண்டொழிய வேறில்லை. என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக்கொள்.

பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை வாழ்க்கைத் துணை என்றார்கள். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

"வேதங்களை நம்பு, அவற்றின் பொருளைத் தெரிந்து கொண்டு

பின்பு நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே.

"உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க்கதைகள் மித மிஞ்சி விட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகீகக் கொள்கைகள், வைதிக நடை – எல்லா வற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடம் கொடுத்து விட்டாய். இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும் வெளியிலும் தனிமையிலும் கட்டிடத்திலும் எதிலும் எப்போதும் நேர்மையிருக்க வேண்டும். உண்மையிருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது,. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்ற வரை தடுக்க வேண்டும். எல்லாப்பேறுகளைக் காட்டிலும் உண்மைப்பேறு தான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி ஆதலால் தமிழா எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும் படி செய்.

தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை. எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை. "முந்திய சாஸ்திரம் தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய் என்று தீர்மானம் செய்து கொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டிருக்கிறதா? தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள் என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.

இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

இவற்றுள் அறமாவது கடமை. அது உனக்கும் உனது சுற்றத்தாருக்கும் பிறர்க்கும் நீ செலுத்தவேண்டிய கடமை "பிறர்" என்பதனுள் வையகம் முழுவதும் அடங்கும். கடமையில் தவறலாகாது.

தொழில்கள் எல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

பொருள் என்பது செல்வம். நிலமும், பொன்னும், கலையும், புகழும், நிறைந்திருத்தல், நல்ல மக்களைப் பெறுதல், இனப் பெருமை சேருதல் இவையெல்லாம் செல்வம். இச்செல்வத்தைச் சேர்த்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளையாகும்.

இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண் பாட்டு, கூத்து, முதலிய ரஸ வஸ்துக்களை அனுபவிப்பது இவ்வின்பங்கள் எல்லாம், தமிழா, உனக்கு நன்றாக அமையும் படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்கள் எல்லாம் தீர்க. உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகும் உடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்சபூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. வீடு என்ற சொல்லுக்கு விடுதலை என்பது பொருள். மேல் கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈடேரிய பெரியாருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலை அருள் செய்வான். தமிழா, உனது புருஷார்த்தங்கள் கை கூடுக என்று பாரதி தனது உரைநடையில் குறிப்பிடுகிறார்.

பாரதியின் கவிதைகளைப் போலவே அவருடைய உரைநடையிலும் மிகவும் சிறப்பான உயிர்த் துடிப்பான அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்கள் நிறைந்திருப்பதைக் காண்கிறோம். அவருடைய கவிதைகளைப் போலவே உரைக் கட்டுரைகளும் மக்களிடம் விரிவாகச் செல்ல வேண்டும். அவை இதர இந்திய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டு பாரத மக்கள் அனைவரும் அறியும் படி செய்ய வேண்டும். பாரதி வாழ்க, தமிழ் வாழ்க, வளர்க வந்தே மாதரம்.

✡ ✡ ✡

38. நிறைவுரை:

பாரதியாரின் கட்டுரைகள் மிகச் சிறந்த இலக்கியமாக அமைந்துள்ளது. அவர் மாபெரும் கவிஞர். அத்துடன் அவர் ஒரு சிறந்த உரைநடை எழுத்தாளர், பத்திரிகையாளர், பத்திரிகை ஆசிரியர்.

பாரதி காலத்திற்குச் சற்று முன்பு தான் தமிழில் உரைநடையும் பத்திரிகைகளும் தோன்றின. எனவே தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் விரிவான தமிழ் உரைநடையும் தமிழ்ப் பத்திரி –கைகளும் புதிது. இத்தகைய ஒரு புதிய துறைக்கு பாரதியார் சிறந்த களமும் தளமும் அமைத்து அவற்றிற்கு நல்ல பாதையும் அமைத்துக் கொடுத்தார். அவருடைய படைப்புகளும் பணிகளும் இந்தத் துறைகளுக்கு சிறந்த வழி காட்டியாக உள்ளது.

பாரதி தனது பத்திரிகைப் பணிகள் மூலம் தமிழ் உரைநடையை செப்பனிட்டு வளர்த்தார் என்று கூறலாம். அவருடைய உரைநடை தமிழ் மக்கள் மொழியாகும்.

அவர் பல கட்டுரைகளையும், கதைகளையும் எழுதியுள்ளார். அவர் எழுதிய உரைநடைக் கட்டுரைகளும், கதைகளும் முழுமையாகத் தொகுப்பு நூல்களாக இன்னும் வெளிவரவில்லை. ஆயினும் முக்கியமானவை கட்டுரைகளும், கதைகளும் தனி நூல்களாக வெளி வந்துள்ளன. அவையெல்லாம் இந்தியாவில் இதர மொழிகளிலும் மொழியாக்கம் செய்யப் பட வேண்டும்.

பாரதியார் தனது கட்டுரைகளில் நாட்டின் பலவேறு பிரச்னைகளைப் பற்றியும், அவர் காலத்திலிருந்து வந்த அரசியல் பொருளாதார சமுதாய நிலைமைகளை விமர்சித்தும் புதிய ஆலோசனைகளைக் கூறியும் புதிய கட்டளைகளை விடுத்தும் எடுத்துக் கூறுகிறார்.

பாரதி தனது கட்டுரைகளில் தொடாத பிரச்னையில்லை. அரசியல், பொருளாதாரம், பல சமுதாயப் பிரச்னைகள், ஜாதிக் கொடுமைகள், சாதி அமைப்பு பற்றிய பல பிரச்னைகள், இசை, சங்கீதம், பக்தி மார்க்கம், தத்துவ சிந்தனைகள், பெண்ணுரிமை, கலை, தொழிலாளர், முதலிய பலவேறு பிரச்னைகளைப் பற்றியும் துல்லியமாகவும், தெளிவாகவும் வெளிப்படையாகவும் பல கருத்துக்களையும் எடுத்துக் கூறியுள்ளார்.

அத்துடன் பாரதியாரின் மிகப் பெரிய சாதனைகளில் ஒன்று, தமிழுக்கு அவருடைய தலை சிறந்த பங்களிப்பு, அவருடைய பகவத் கீதை மொழி பெயர்ப்பும் அதற்கு அவர் எழுதியுள்ள முன்னுரையுமாகும்.

இந்த நூலில் பாரதியார் எழுதியுள்ள கட்டுரைகளில் உள்ள சில முக்கியமான அரசியல் மற்றும் சமுதாயக் கருத்துக்களை மட்டும் எடுத்து அவற்றின் இன்றைய பொருத்தமும் அதற்கான விளக்கமும் விரிவுரையும் எடுத்துக் கூறப் பட்டிருக்கிறது. ஏற்கனவே "தமிழ் மொழி வளர்ச்சியில் பாரதி உரைநடையின் பங்கு" என்னும் தலைப்பில் ஒரு நூல் வெளியிட்டிருக்கிறோம். அதைத் தொடர்ந்து இந்த நூலும் வெளியிடப் படுகிறது.

பாரதி தன்னுடைய கவிதைகளிலும் கட்டுரைகளிலும் எந்தத் துறையைப் பற்றியும் எந்தப் பிரச்னையைப் பற்றி எழுதியிருந்தாலும் அதில் தேச பக்தியும் தெய்வ பக்தியும் ஆழப்பதிந்து இணைந்து இருப்பதைக் காணலாம்.

அவருடைய தேசபக்திப் படைப்புகளில் தெய்வ பக்தியையும் தெய்வ பக்திப் படைப்புகளில் தேசபக்தி உணர்வுகளையும் காணலாம். பாரதியாருடைய தெய்வ பக்தியும், தேச பக்தியும் ஆத்மார்த் –திகமானது, உணர்வு பூர்வமானது. உள்ள பூர்வமானது, உண்மை உணர்வை வெளிப்படுத்துவது, உயிர்த்துடிப்பு மிக்கது.

"எமக்குத் தொழில் கவிதை, நாட்டுக் குழைத்தல், இமைப் பொழுதும் சோராதிருத்தல்" என்று உயிர்த் துடிப்புடன் எடுத்துக் கூறுகிறார்.

பாரதியாருடைய நாட்டு வணக்கம் என்ற பாடலில்

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே – அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே – அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே – இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ? – இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று வணங்கே னோ?"

"இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து அருள்
ஈந்ததும், இந்நாடே – எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்ததும் இந்நாடே – அவர்
கன்னியராகி நிலவினில் ஆடிக்
களித்ததும் இந்நாடே – தங்கள்
பொன்னுடல் இன்புற நீர் விளையாடி இல்
போந்ததும் இந்நாடே – இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?"

"மங்கையராய் அவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே – அவர்
தங்க மதலைகள் ஈன்ற முதூட்டித்
தழுவியதிந்நாடே – மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே – பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே – இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கே னோ?"

பாரதியின் இந்தப் பாடலில் உள்ள ஒவ்வொரு சொல்லிலும் பளிச்பளிச் என்று உண்மையும் உயிர்த்துடிப்பும் வெளிப்படுகிறது. இந்த மாபெரும் புலவனைப் போல், புரட்சிகர ஜனநாயகப் பெரும் புலவனைப் போல் பூமியில் யாங்கணும் நாம் கண்டதில்லை.

இதைப்போல் பாரதியின் ஒவ்வொரு கவிதையிலும் இனிய பாடல்களிலும் கட்டுரைகளிலும், கதைகளிலும் உயிர்த் துடிப்பையும், தெய்வப் பக்தியையும் தேசபக்த உணர்வையும் காண முடியும்.

தேச பக்தியும் தெய்வ பக்தியும் இணைந்து நிற்பதும், உலக வாழ்க்கையும் (லௌகிகமும்) ஆன்மீகமும் இணைந்து நிற்பதும் அறம் பொருள் இன்பம் வீடு (தர்மம், அர்த்தம், காமம், மோட்சம்) என்னும் புருஷார்த்தங்களுக்குச் சரியான ஒன்றிணைந்த விளக்கம் கூறப் பட்டிருப்பதும் பாரதியாரின் படைப்புகளின் தனிச் சிறப்பாகும்.

தேச பக்தி என்பது நாடு அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை பெறுவதற்கான சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொள்வதோடு நின்று விடுவதில்லை. தேச சுதந்திரம், தேச விடுதலை என்பது

அன்னிய ஆட்சியை அகற்றுவதோடு நின்று விடுவதில்லை. அது முதல் படிதான். ஆயிரம் ஆண்டுகளாக, நமது தாய் நாட்டின் மீது நடத்தப்பட்ட படையெடுப்புகள் கொள்ளைகள் ஆக்கிரமிப்புப் போர்கள், அன்னியக் கொடுங்கோலாட்சி, அவைகளினால் ஏற்பட்ட பாதிப்புகள் படுகாயங்கள், சேதங்கள் ஆகியவற்றை ஆற்றி, பாரதம் மீண்டும் புத்துயிர் பெற்று புனர்ஜென்மம் எடுத்து உலகின் தலைமைக்கு வர வேண்டாமா?

நம் மீது இருகப் பிணைக்கப் பட்டிருந்த அடிமைச்சங்கிலியின் ஒரு கண்ணி உடைக்கப் பட்டு விட்டது. எனவே அந்த இருகல் தளர்ந்திருக்கிறது. மற்றுமுள்ள தளைகளை முறித்தெரிவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டு விட்டன.

உள்நாட்டு மன்னர்கள், ஜமீன்தார்கள், மற்றுமிருந்த குட்டி ராஜாக்கள் அதிகாரத்திலிருந்தும் ஆட்சியிலிருந்தும் நீக்கப் பட்டு விட்டார்கள். சுதேசி சமஸ்தானங்கள் எல்லாம் இணைக்கப் பட்டு விட்டன. அதன் மூலம் அடுத்த தளையும் நீக்கப் பட்டு விட்டது. அரசியல் சாசனத்தின் மூலம் நமது மக்களுக்கிடையில் எந்த வேறுபாடும் பாகுபாடும் இல்லாமல் அனைவரும் சமம் என்று பிரகடனம் செய்யப் பட்டு விட்டது. அதன் மூலம் நமது நாடும் நாட்டு மக்களும் சுதந்திரமாக முன்னேறுவதற்கான வாய்ப்புகள் அதிகப் பட்டிருக்கின்றன.

இப்போது பாரதியாரின் ஆணைப்படி, பெண்கள் முழுமையாக விடுதலைப் பெற்று ஆண்களுடன் சரி நிகர் சமானமாக வாழ்வதற்கு என்ன தடை? ஆண்களும், பெண்களும் சரி நிகர் சமானமாக ஒருவருக்கொருவர் தோள் கொடுத்து, காதல் நிரம்பி அன்பு அரும்பி கை கோர்த்துக் கொண்டு போவதில் என்ன தடை? பாலியல் வன்முறைகள் எல்லை தாண்டிய பயங்கர வாதங்கள் சமுதாயத்தில் இன்னும் ஏன் நடைபெறுகின்றன? நமது நாட்டின் உன்னதமான

சாத்திரங்கள் போதிக்கும் அறநெறியும் ஒழுக்க நெறியும், கற்பு நெறியும் அறிவு நெறியும் என்னவாயிற்று?.

ஜாதிக் கொடுமைகள், பாகுபாடுகள், வேறுபாடுகள், ஏன் இன்னும் நீடிக்கின்றன? அது பற்றிய போலிச் சாத்திரங்கள் பாரதி கூறியதைப் போல ஏன் இன்னும் பொசுக்கப் படவில்லை. சீலம் அறிவு தர்மத்தின் அடிப்படையின் நமது சாத்திரங்கள் அறிவித்துள்ள நெறிகள் ஏன் இன்னும் நிலை நாட்டப்படவில்லை? அதற்கு என்ன தடை?

நாம் சுதந்திரம் பெற்று ஐம்பது ஆண்டுகளைத் தாண்டியும் இன்னும் நாற்பது சதவீதத்திற்கு மேல் எழுதப் படிக்கத் தெரியாத –வர்களாக ஏன் இருக்கிறார்கள். கல்லாமையும் படிப்பில்லாமையும் ஏன் நீடிக்கிறது? அதற்கு என்ன தடை? யார் தடை? நமது தேசபக்தி என்ன வாயிற்று? அனைவருக்கும் கல்வி என்பது தேச பக்தக் கடமையல்லவா?

"வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்களெங்கும் பலபல பள்ளி"

என்றும்,

"இன்னறு ங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்

பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்”

என்றும், பாரதி பாடிய பிரார்த்தனை என்னவாயிற்று?

இன்னும் நாட்டில் கால்வாசிப் பேருக்குமேல் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. நாட்டின் வறட்சியும் வெள்ளமும் நீடிக்கிறது. எந்த வளம் இல்லை இந்தத் திருநாட்டில் என்று ஒரு கவிஞர் பாடுகிறார். தெய்வத்திரு நதிகள் பாயும் இந்தப் புண்ணிய பூமியில் வற்றாத நீர்வளமும், நில வளமும் மனித வளமும் மிகுந்த இந்தத் திரு நாட்டில் வறுமையும் பசி பட்டினியும் ஏன் நீடிக்க வேண்டும்?.

உலகில் லஞ்ச ஊழல் அதிகமாக உள்ள நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இருக்கிறது. ஏன்? உயர் மட்ட ஊழல் நாட்டை பாதிக்கிறது. நடு மட்ட ஊழல் நமது தொழிலையும் வேலையையும், பணிக் கலாச்சாரத்தையும் பாதிக்கிறது. கீழ் மட்ட ஊழல் மக்களை பாதிக்கிறது. உலகிற்கே அறநெறியையும் ஒழுக்க நெறியையும் மனிதாபிமானத்தையும் போதிக்கும் சாத்திரங்கள் நிறைந்த இந்தத் திருநாட்டில் இந்த ஒழுக்கக் கேடுகள் ஏன் நீடிக்கின்றன?

இவ்வாறு பல கேள்விகள் எழுகின்றன? அவைகளுக்கு விடை காண வேண்டும். அந்த விடை நமது தேச பக்தியிலும் தெய்வ பக்தியிலும் அவை இணைந்த செயல் பாடுகளிலும் இருக்கின்றன. அவைகள் பலவற்றை பாரதியின் கட்டுரைகளில் காணலாம்.

அன்னிய ஆட்சியை அகற்றி நாடு சுதந்திரம் பெறுவதை மட்டும் பாரதி தனியாகப் பிரித்துப் பார்க்கவில்லை. விடுதலையுடன் இதர அரசியல் பொருளாதார, சமுதாயப் பிரச்னைகளையும் லௌகீக

ஆன்மீகப் பிரச்னைகளையும் கல்வி கலாச்சாரப் பிரச்னைகளையும் கலை இலக்கியம் இசை உடற் பயிற்சி முதலிய அனைத்தையும் இணைப்பாகவே பார்த்தார்.

முதலில் மக்களுடைய ஏழை எளிய மக்களுடைய பசி, பட்டினி, வறுமையைப் போக்க வேண்டும். ஏழைகளுக்கு உதவி செய்தல், தர்ம சாலைகள் அமைத்தல், அன்ன தானம் செய்தல் முதலியவை தாற்காலிகமானவை. பயணிகளுக்கும், கோவில்களுக்கு வரும் பக்தர்களுக்கும், யாத்திரிகர்களுக்கும், மற்றும் இயற்கை சீற்றங்களால் ஏற்படும் பாதிப்புகளுக்கும் மக்களுக்கு செய்ய வேண்டிய உதவிகள். ஆனால் பசி, பட்டினி, வறுமை ஆகியவற்றை நிரந்தரமாக சமுதாயத்திலிருந்து நீக்க வேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அதில் உபரியும் சேமிப்பும் இருக்கும் படி செய்ய வேண்டும்.

சிறு தொழில்களை பல வழிகளிலும் பலவகைகளிலும் கிராமப் புறங்களிலும், நகரப்புரங்களிலும் அதிகரிக்கச் செய்யவேண்டும். சுய தொழில்கள் அதிகரிக்க வேண்டும். சுய உதவிக் குழுக்கள் மூலம் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். அவை மூலம் நாட்டின் பொதுச் செல்வத்தைப் பெருக்க வேண்டும். விவசாயம், சிறு தொழில்கள் மூலம் நாட்டின் பொதுச் செல்வம் அதிகரிக்கும். அதற்கு சுதேச முயற்சிகள் அதிகரிக்க வேண்டும்.

விவசாயம், சிறுதொழில், பெருக்கவும், அதிகரிக்கச் செய்யவுமான அடிப்படை வசதிகளை அதிகரிக்கச் செய்ய வேண்டும். முதலில் நீர் நிலைகளை, நீர்ப் பாசன வசதிகளைப் பெருக்க வேண்டும். பாசனம், குடிநீர், கால்நடைகளுக்குக் குடிநீர், ஆதாரங்களை அதிகரிக்க வேண்டும். ஏற்கனவே நமது நாட்டில் குறிப்பாகத் தமிழ் நாட்டில் ஏராளமான ஏரிகள், கண்மாய்கள், குளங்கள், தெப்பக்குளங்கள், திருக்குளங்கள், ஊருணிகள்,

அதற்கான வரத்துக் கால்கள், வடிகால்கள், அணைகள், குறுக்கணைகள், தடுப்பணைகள், கால்வாய்கள், பாசனக் கால்வாய்கள் உள்ளன. தமிழ் நாட்டில் அவை சேர, சோழ, பாண்டிய பல்லவ மன்னர்களால் உருவாக்கப் பட்டவை. பாதுகாக்கப் பட்டவை. பராமரிக்கப் பட்டவை. விஜய நகர ஆட்சியாளர்களால் புதுப்பிக்கப் பட்டவை, விஸ்தரிக்கப் பட்டவை, பாதுகாத்துப் பராமரிக்கப் பட்டவை.

அவை சென்ற காலத்தில் குறிப்பாக அன்னிய ஆட்சி காலத்தில் போதுமான அளவில் கவனிக்கப் படாமல் புறக்கணிக்கப் பட்டன. இன்று அவை பெரிய அளவில் சேதப்பட்டும், சிதிலப் பட்டும், மேடிட்டும், ஆக்கிரமிக்கப் பட்டும் இருக்கின்றன. அவைகள் அனைத்தும் மறு சீரமைக்கப் பட வேண்டும். விரிவான அளவில் திட்டமிடப்பட்டு அவை புனரமைக்கப் பட வேண்டும். அரசும், பொது நிறுவனங்களும் பல்லாயிரக்கணக்கான மக்களும் பங்கு கொண்டு அவை நிறைவேற்றப் பட வேண்டும். கரைகளிலும், சாலை ஓரங்களிலும் காலி இடங்களிலும் ஆற்றோரங்களிலும் கால்வாய் ஓரங்களிலும், ஏராளமான செடிகள், மரங்கள் நட வேண்டும். இவைகள் மூலம் நீர்ப்பாசனம், குடிநீர், கால்நடைகளுக்குத் தண்ணீர், நிலத்தடி நீர்பாதுகாப்பு, மரங்கள் வளர்ப்பு, தட்ப வெப்ப நிலை சமப்படுத்தல், சுற்றுச் சூழல் பாதுகாப்பு முதலிய பல நோக்கங்கள் நிறைவேறும்.

இவைகளை நிறைவேற்ற பலமுறை பேசப்பட்டிருக்கிறது. பல குழுக்கள், கமிட்டிகள் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் நடத்துப் பட்டிருக்கின்றன. வெளி நாட்டுக் குழுக்களும் போடப் பட்டிருக்கின்றன. ஆய்வுகள் செய்யப் பட்டிருக்கின்றன. சில வேலைகள் ஐரோப்பிய பொருளாதாரக் குழுமத்திடம் கூட கொடுக்கப் பட்டிருக்கின்றன. நமது நாட்டுப் பேராஉளருணி, செக்கான் உளருணி, குழந்தையன் ஆசாரி உளருணி, செட்டியார் உளருணி, ஆலங்குளம், மேடங்குளம், ஆப்பனேரி, நக்கநேரியைச் சீரமைக்க ஐரோப்பிய

நிபுணர்களால் என்ன செய்ய முடியும்? என்னே நமது ஆட்சி நிர்வாகத்தின் அதிசய மூளை? இன்னும் நமது மேன் மக்களின் அன்னிய ஆங்கில சிந்தனை போகவில்லை. ஊர்மக்கள் உதவியுடன் ஆலோசனையுடன் பங்களிப்புடன் கீழ் மட்டங்களில் ஒரு பேரியக்கமாக நிறைவேற்ற வேண்டும். அதற்கான சிந்தனையும், திட்டங்களும் செயல்பாடும் தேவை.

அடுத்து விவசாயத்திற்கு அடுத்தப்படியாக அதாவது சாகுபடித் தொழிலுக்கு அடுத்தப்படியாக கால்நடைகளைப் பெருக்குதல், ஆடு மாடு, கோழி வளர்த்தல் வகையாறா. ஓரளவில் இப்போது பால் உற்பத்தி, முட்டை உற்பத்தியில் முன்னேற்றம் கண்டிருக்கிறோம். இதை இன்னும் மும்மடங்கு பெருக்க வேண்டும். இது விவசாயத்தோடு சாகுபடியோடு, சிறுதொழில்களோடு இணைந்தது. பல்லாயிரக்கணக்கோர் ஈடுபடுவது. பல்முனைப் பயன்பாடு கொண்டது. அனைத்து மக்களுக்கும் பயன்படக் கூடியது. இதன் மூலம் நாடு செழிக்கும். மக்கள் நலம் பெறுவர்.

ஊர்தோறும், தெருக்கள் தோறும், பள்ளிக் கூடங்கள் தொடங்க வேண்டும். அனைவருக்கும் கல்வி கிடைக்க வேண்டும். ஆரம்பக் கல்வி கட்டாயம் கிடைக்க வேண்டும். மேல் படிப்பு விரும்பும் அளவு கிடைக்க வேண்டும். என்ஜினியரிங், வைத்தியம், தொழில் நுட்பம், விஞ்ஞானப் படிப்பு, கல்வி நிலையங்கள் அதிகரித்தால் அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்கும். இட ஒதுக்கீடே அவசிய –மில்லாமல் போய் விடும். கல்லாமை நீங்க வேண்டும். அறிவு வளரும், இதில் நமது நாட்டுக் கல்வி சுதேசிக்கல்வி இடம் பெற வேண்டும். பாரதத்தின் பெருமை ஓங்க வேண்டும்.

ஊர் தோறும் உடற்பயிற்சி மன்றங்கள் அமைய வேண்டும். இது ஒரு அரசின் பணியாக மட்டுமில்லாமல் சமுதாயத்தின் பணியாக விரிவடைய வேண்டும். உலக விளையாட்டுப் போட்டிகளில் நமது

அவமானம் விரைவில் நீங்க வேண்டும். அனுமனும் பீமனும், பார்த்தனும் வாழ்ந்த இந்த நாட்டில் இன்றைய நோஞ்சான் நிலையை எத்தனை காலத்திற்கு சகிப்பது?

ஊர்தோறும், கலை, கவிதை, இலக்கியம், இசை, நாடகம், முத்தமிழ் ஆடல்பாடல் மன்றங்கள் சபாக்கள் அமைக்க வேண்டும். அதன் மூலம் நமது இசை, சங்கீதம், இலக்கியம், கவிதை வளரும். நமது நாட்டின் அத்தனை இசை மரபுகளையும் வளர்க்க வேண்டும். இவைகளில் சிறந்தவர்களைப் பாராட்ட வேண்டும். நமது மறைந்த மேதைகளுக்கும் கவிஞர்களுக்கும் விழாக்கள் எடுக்க வேண்டும். நமது நாட்டுப்புற இசை, பெண்கள் பாட்டு, கும்மி முதலியன பிரபலப் படுத்த வேண்டும். நமது சங்கீதம், கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை விஞ்ஞான பூர்வமானது. உலகிலேயே மிகச்சிறந்த இசை அமைப்பு கொண்டது. அதில் ரஸ ஞானத்தைப் பெருக்க வேண்டும். நமது இசையின் பெருமையை உலகரியச் செய்ய வேண்டும். அதன் புகழ் பரவ வேண்டும். மக்களின் கவலை தீர்ந்து மகிழ்ச்சி பெருக வேண்டும்.

ஊர்தோறும், தெருக்கள் தோறும் உள்ள நமது சிறப்பு மிக்க சிறிய பெரிய ஆலயங்களைப் புதுப்பிக்க வேண்டும். பூசைகள் சிறப்பாக நடைபெற வேண்டும். விழாக்கள் நடைபெற வேண்டும். மக்களின் பக்தியையும் நல்லொழுக்கத்தையும் அறநெறியையும் அன்பு நெறியையும் வளர்க்க வேண்டும். நமது சைவத்திரு முறைகள், திவ்யப்பிரபந்தங்கள், தாயுமானவர் பாடல், வள்ளலார் திருமுறைகள் மக்களிடம் பரவ வேண்டும். பக்தி இயக்கங்கள் பெருக வேண்டும். கோவில்களின் நிர்வாகத்தை பக்தர் மயமாக்க வேண்டும்.

ஜாதி மத பேதங்களை நீக்கி இந்து மக்கள் அனைவரையும் ஒன்று படுத்த வேண்டும். இந்திய மக்களை ஒற்றுமைப் படுத்த வேண்டும். அனைத்து மதங்களையும் இந்திய மயமாக்க வேண்டும்.

பெண்களின் கௌரவத்தை உயர்த்த வேண்டும். வாணி பூசை செய்ய வேண்டும்.

வர்த்தகத்தைப் பெருக்க வேண்டும். உள்நாட்டு வர்த்தகத்தையும் வெளிநாட்டு வர்த்தகத்தையும் பெருக்க வேண்டும். உள்நாட்டுச் சந்தைகளை, உள்ளூர் சந்தைகளை விரிவுப் படுத்த வேண்டும். நமது இளைஞர்கள், படிப்பாளிகள், தொழில் நுட்ப நிபுணர்கள் பலவகைப் படிப்பாளர்கள் உலகம் முழுவதும் சென்று சம்பாதிக்க வேண்டும். நமது நாட்டுச் செல்வத்தைப் பெருக்க வேண்டும். நமது பெருமையை உலகரியச் செய்ய வேண்டும். நமது மொழிகளையும் இசைகளையும் உலகரியச் செய்ய வேண்டும்.

இவ்வாறான, நாட்டின் முன்னேற்றத்திற்கான பலபணிகளிலும் கூட்டம் கூட்டமாக மக்களைத் திரட்ட வேண்டும். இவையெல்லாம் விடுதலை இயக்கத்தின் பகுதியாகும். சுதந்திரப் போராட்டத்தோடு இணைந்ததாகும். இவையெல்லாம் விடுதலை இயக்கம் என்னும் சக்கரத்தில் சுழலும் கால்களும், சுற்று வட்டமும், குடமும் அச்சாணியுமாகும். இவையெல்லாம் இணைந்து செயல்படும் போது அந்த விடுதலை சக்கரம் மாபெரும் சக்தியோடு செயல் படுகிறது என்று பாரதி கருதினார்.

இவைகள் மூலம் நாடு பலப்படும். அறிவு தெளிவடையும். ஒழுக்கம் பெருகும். அமைதி ஏற்படும். உடல்நலம் உடல் பலம் பெருகும். நாட்டு விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் துணையாக இருக்கும் என்று பாரதி கருதினார். இவையனைத்தும் இணைந்ததே தேசபக்தியாகும். அது தனிமரம் அல்ல. அது பெரும்சோலை. அது தெய்வ பக்தி மூலம் உறுதிப் படுகிறது. புனிதப் படுகிறது. இந்த மகத்தான இப்பணிக்கு அனைத்து தெய்வங்களும் துணை நிற்கும்.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் இவையெல்லாம் இப்போதும் பொருந்தும், எப்போதும் பொருந்தும். இப்போது நாம் சுதந்திரம் பெற்ற

பின் நாட்டின் முன்னேற்றம் நமது குறிக்கோள். நாட்டின் வளர்ச்சி மேம்பாடு, மக்களின் நலவாழ்வு, மகிழ்ச்சி, உலக அங்கீகாரம் உலகப் பெருமை, பெருக வேண்டும். வையத்தலைமை ஏற்பட வேண்டும். பாரதம் லோக குருவாக வேண்டும். அதற்கு முன்னைக் காட்டிலும் மேலான நிலையிலான தேசபக்தியும், தெய்வபக்தியும் தேவைப் படுகிறது. பாரதி வழியில் நாம் இதை வலியுறுத்துகிறோம்.

நமது உழைப்பாளர்கள், கருத்தாலும், கரத்தாலும் உழைக்கும் பெருமக்கள், படிப்பாளர்கள், ஆசிரியர்கள் தொழில்நுட்ப வல்லுனர்கள், விஞ்ஞானிகள், அரசாங்கப் பணியாளர்கள், அதிகாரிகள், அரசியல் வாதிகள், பொது சமுதாயத் தொண்டர்கள், ஆட்சிப் பொருப்பாளர்கள், பலவேறு துறைகளில் நிர்வாகப் பொறுப்புகளில் உள்ளவர்கள், நாட்டு மக்கள் அனைவரும் நாட்டின் நலன் கருதி தங்களை தங்கள் தங்கள் பணிகளில் அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். நாட்டு நலன் கருதித் தீமையற்ற தொழில் செய்ய வேண்டும், பணியாற்ற வேண்டும்.

கீதையின் வாசகங்கள் நமக்கு இவைகளில் வழி காட்ட வேண்டும். நாட்டு மக்கள் அனைவரின் அத்தகைய ஒருங்கிணைந்த உள்ளார்ந்த தேசபக்தி உணர்வை வளர்க்க வேண்டும். நமது தேச பக்த உணர்வை தெய்வ பக்தியுடன் ஒன்றிணைக்க வேண்டும். இத்துடன் நமது நாட்டின் பாரம்பரியப் பெருமை கொண்ட ஆன்மீக சக்தியை இணைத்து, தெய்வம் நீ என்று உணர் என்னும் பாரதியின் மகா வாக்கியத்தை நினைவு படுத்தி பாரதத்தை மகா பாரதமாக உயர்த்த வேண்டும். பாரதம் வையத் தலைமை பெற வேண்டும்.

பாரதி வாழ்க பாரதம் வாழ்க.

வந்தே மாதரம்.

நூலாசிரியரைப் பற்றி

நூலாசிரியர் : அ. சீனிவாசன்

நூலாசிரியர் திரு. அ.சீனிவாசன் ஒரு மூத்த தமிழறிஞர். எழுத்தாளர், பத்திரிகையாளர் முன்னாள் விமானப் படை வீரர். பல நாடுகளிலும், இந்தியாவின் பல மாநிலங்களிலும், விரிவாகச் சுற்றுப் பயணம் செய்து அனுபவம் பெற்றவர். தனது பள்ளிப் படிப்பு காலத்திலேயே பன்னிரண்டாவது வயது முதலே பொது வாழ்க்கையில் ஈடுபாட்டு நாட்டுப் பணிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசிய காங்கிரஸ், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி (1937 ம் ஆண்டில் ஜெயப் பிரகாஷ் நாராயணன் தலைமையிலான சோஷலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி என்னும் பெயரில் ஒரு தீவிரமான கட்சி என்னும் பெயரில் ஒரு கட்சி அமைத்திருந்தனர். அக்கட்சியினர் காங்கிரஸ் கட்சியிலும் உறுப்பினர்களாயிருந்தனர்). சுயமரியாதை இயக்கம், பின்னர் பொதுவுடமை இயக்கம் ஆகிய இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றியவர், சிறை வாசம் சித்திரவதை, கொடுமையான போலீஸ் அடக்குமுறைகளுக்கு ஆளாகித் தியாகத் தழும்புகள் ஏறியவர்.

இரண்டாவது உலகப் பெரும் போர் காலத்தில் விமானப் படையில் சேர்ந்து இராணுவப் பயிற்சியும் தகவல் தொழில் நுட்பப் பயிற்சியும் பெற்றவர்.

திரு. அ.சீனிவாசன் முன்னாள் இராமநாதபுரம் மாவட்டம் இன்றைய விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா,

வத்திராயிருப்பு ஒன்றியம் மகாராஜபுரம் கிராமத்தில் விவசாய குடும்பத்தில் 1925–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6–ம் தேதி பிறந்தார். தந்தையார் மெட்ட.வெ.அய்யப்ப நாயுடு, தாயார் மெட்ட.வெங்கடம்மாள், உடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரி, இரண்டு சகோதரர்கள். 1957–ம் ஆண்டு மே மாதம் 31–ம் தேதி திரு. அ.சீனிவாசன் அவர்களுக்கு திருமணம் ஆயிற்று. மனைவி திருமதி. சீ.நாகலட்சுமி. குழந்தைகள் இரண்டு பெண்கள், ஒரு ஆண். பெண்களில் மூத்தவர் திருமதி. கே.பகீரதி எம்.ஏ.,பி.எட்.,(தமிழ்) திருமணமாகி விட்டது. சென்னையில் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இளையவர் கு.வைதேகி, கர்நாடக இசையில் பட்டம் பெற்று கோவையில் இசை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். மகன் ஏ.எஸ்.வாசன் (பழைய பெயர் எஸ். அய்யாசாமி) ஏரோநாட்டிக்கல் என்ஜினியரிங் மற்றும் பி.காம். படிப்பு முடித்தவர். சினிமா துறையில் தயாரிப்பு, நிர்வாகம், இயக்கம் ஆகிய துறைகளில் பணியாற்றி வருகிறார். அத்துடன் தந்தையார் எழுதி வரும் நூல்களைப் பதிப்பித்து அப்பதிப்பகத்தின் நிர்வாகியாகப் பணியாற்றியும் வருகிறார்.

திரு.அ.சீனிவாசன் மகராஜபுரம் சாத்தூர், வத்திராயிருப்பு விருதுநகர் ஆகிய ஊர்களில் பள்ளிப் படிப்பு முடித்து இந்திய விமானப் படையில் தகவல் தொழில் நுட்பப் பயிற்சியும் பெற்றுள்ளார். அப்போது ஆங்கில மொழியில் தனிப் பயிற்சியும் பெற்றார். அத்துடன் சொந்த முயற்சியில் தமிழ் இலக்கியத்திலும் குறிப்பாக பாரதி நூல்கள், கம்பராமாயணம், நாலாயிரத்திவ்யப் பிரபந்தம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் ஆழப்படிப்பும் பயிற்சியும் பெற்றார்.

இவ்வாறு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நல்ல பயிற்சியும் அத்துடன் தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளும் அறிந்தவர்.

திரு. அ. சீனிவாசன் 1947–ம் ஆண்டு முதல் 1999–ம் ஆண்டு வரை சுமார் 52 ஆண்டுகள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில், அக்கட்சியின் வட்டாரப் பொறுப்பிலிருந்து, மாவட்ட, மாநில, அகில இந்தியப் பொறுப்புகள் வரையில் பல்வேறு பொறுப்புகளில் குறிப்பாக அமைப்பு நிலை, தொழிற் சங்கத்தலைமை, பத்திரிகைத்துறை, பிரச்சாரத்துறை, பிரசுரத்துறை, கட்சிக்கல்விப் பயிற்சித்துறை, (சித்தாந்தத்துறை) முதலிய பல துறைகளிலும் பணியாற்றியுள்ளார். கட்சியின் உயர்ந்த அமைப்பான தேசீயக் கவுன்ஸிலில் இருபத்து ஐந்து ஆண்டுகள் உறுப்பினராக இருந்து, மாநில, மத்தியப் பொறுப்புகள் பலவற்றில் இருந்து பணியாற்றியுள்ளார். தமிழ் மாநிலக் குழுவின் துணைச் செயலாளர் பொறுப்பில் இருந்து மாநில அளவில் அமைப்பு நிலை, சித்தாந்தப் பயிற்சி, பத்திரிகை பொறுப்புகள் வகித்து இருபது ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார்.

கட்சியின் உயர் மட்டக் குழுவின் பிரதிநிதியாக அன்றைய சோவியத்யூனியன் (ரஷ்யா–மாஸ்கோ, லெனின் கிராட், ஆர்மீனியா, ஆஜர்பைஜான்) மற்றும் செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து சுற்றுப் பயணம் செய்துள்ளார்.

தொழிற் சங்கத் தலைவராக

திரு.அ.சீனிவாசன் 1950–ம் ஆண்டு காலத் தொடக்கத்திலேயே இராஜபாளையம், சிவகாசி, சுத்திரப்பட்டி, தளவாய்புரம், விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகளில் பஞ்சாலை, அச்சு, தீப்பெட்டி, கைத்தறி மற்றும் பல தொழில்கள் தொடர்பான தொழிலாளர் சங்கங்கள் பலவற்றையும் தொடங்கியும், உருவாக்கியும், தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். மாநில அளவிலும் பல தொழிற் சங்கப் பொறுப்புகளில் இருந்து பணியாற்றியுள்ளார்.

பின்னர் திரு.அ.சீனிவாசன் தனது தொழிற் சங்கப் பொருப்புகளில் சென்னைக்கு மாற்றப்பட்டு, சென்னையில் ஹார்பர், ஆவடி டாங்க் தொழிற்சாலை, கல்பாக்கம் அணுமின் நிலையம், ஆகிய துறைகளில், தொழில் நிறுவன அளவிலும், அகில இந்திய அமைப்பு வரையிலும், பொறுப்புகள் வகித்து தொழிற் கங்கத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

திரு.அ.சீனிவாசன் சென்னை டாக் லேபர் போர்டு உறுப்பினராக மத்திய அரசால் நியமனம் செய்யப்பட்டு அந்தப் பொறுப்பில் தொழிலாளர் பிரதிநிதியாக பணியாற்றியுள்ளார்.

ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல்

வளர்முக நாடுகளில் இளம் தொழிலாளர்களுக்கு மறுக்கப் பட்டுள்ள வாய்ப்புகள் என்னும் தலைப்பிலும், மற்றும் இளம் தொழிலாளர்களின் பொதுப் பிரச்சனைகள் பற்றியும், உலக தொழிற் சங்க சம்மேளத்தின் சார்பில் பல்கேரிய நாட்டில் வார்னா நகரில் நடைபெற்ற சர்வ தேசத் தொழிலாளர் மகாநாட்டில் இந்தியத் தொழிலாளர்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். அம் மாநாட்டில் இந்திய நாட்டின் இளம் தொழிலாளர்களின் பிரச்னைகள் பற்றிய அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கை உலகத் தொழிலாளர் சம்மேளத்தின் ஆவணங்களின் பகுதியாகச் சேர்க்கப் பட்டிருக்கிறது.

1980–ம் ஆண்டுகளில் உலக தொழிற் சங்க சம்மேளமும், சமாதானம் மற்றும் சோஷலிஸம் பற்றிய பிரச்னைகளும் என்னும் சர்வதேச இதழும் சேர்ந்து நடத்திய கருத்தரங்கில் வளர்முக நாடுகளில் பொதுத்துறையின் பங்கும் பொதுத்துறைக்கும் தனியார்

துறைக்கும் இடையிலான உறவு தொடர்புகள் பற்றிய பிரச்னைகள் பற்றி டில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு.அ.சீனிவாசன் இந்தியாவில் பொதுத்துறைக்கும் தனியார் துறையில் உள்ள நடுத்தர மற்றும் சிறு தொழில்களுக்கும் இடையிலான உறவு என்னும் தலைப்பில் ஒரு ஆய்வறிக்கை சமர்ப்பித்து, அது உலக தொழிற் சங்க ஆவணத்தில் பதிவாகியுள்ளது.

பத்திரிகையாளராக

தொழிற் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் தொழிற் சங்கச் செய்தி ஹார்பர் தொழிலாளி ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியர் பொறுப்பில் பணியாற்றியுள்ளார். கட்சியின் மாநிலத் துணைத் செயலாளராக இருந்த போது கட்சியின் மாநில அமைப்பு நிலைப் பொறுப்பில் இருந்த காலத்தில் கட்சியின் பத்திரிகையான ஜன சக்தி வார இதழ் மற்றும் நாளிதழ்களில் தலைமை ஆசிரியராக எட்டாண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார். கட்சியின் சித்தாந்த ஏடான மார்கசீய ஒளி மாத இதழின் தலைமை ஆசிரியராக இருபது ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார்.

எழுத்துப் பணிகளில்

பத்திகை ஆசிரியராக இருந்த காலத்தில் கட்சி மற்றும் தொழிற் சங்கப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாகப் பல முக்கிய அரசியல், பொருளாதாரம், இலக்கியம் மற்றும் தத்துவ ஞானம் மற்றும் தொழிலாளர், விவசாயிகள் பற்றியப் பிரச்னைகள் பற்றிய பல கட்டுரைகள் எழுதி வந்ததுடன்,

அரசியல், வரலாறு, பொருளாதாரம், தத்துவஞானம், சர்வதேசப் பிரச்னைகள் முதலியவை பற்றிய பல தலைப்புகளிலான நூல்களை

மொழி பெயர்ப்பு (தமிழாக்கம்) செய்தும், மூல நூல்கள் எழுதியும் அவை வெளியாகியுள்ளன. கார்ல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு, மார்க்சிய லெனினிய தத்துவ ஞானப் பிரச்னைகள் அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைகள், ஐக்கிய முன்னணித்தந்திரம், மார்க்சீய தத்துவம், வரலாற்றியல் பொருள் முதல் வாதம், மார்க்சீயமும் பகவத் கீதையும் முதலியன அவர் தமிழாக்கம் செய்துள்ள முக்கியமான பெரிய நூல்களாகும். மற்றும் மார்க்சீய பொருளாதார தத்துவம், ஜீவாவின் தமிழ் பணிகள், கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி ஆகிய தலைப்புகளில் மூல நூல்கள் எழுதியுள்ளார். இந்த மூன்று நூல்களுக்கும் முறையே பேராசிரியர் வான மாமலை பேராசிரியர் சஞ்சீவி, பேராசிரியர் நா. தர்மராஜன் ஆகியோர் முன்னுரை எழுதி பாராட்டியுள்ளனர். இவ்வாறு திரு.அ.சீனிவாசன் அப்போது எழுதி வெளியான நூல்கள் சுமார் பதினேழாயிரம் பக்கங்களுக்கு மேலாகும். இவை திரு.அ.சீனிவாசன் அவர்களுடைய எழுத்துப் பணிகளில் அமைதியான சாதனையாகும்.

விருதுகள்

திரு, அ. சீனிவாசன் தனது சிறந்த எழுத்துப் பணி சாதனைகளுக்காக சோவியத் நாடு நேரு விருதும், சிறந்த பத்திரிகைப் பணிகளுக்காக, சமாதானம் சோஷலிஸம் பற்றிய பிரச்னைகள் என்னும் சர்வதேசப் பத்திரிகை நிறுவனத்தின் சார்பில் சிறந்த பத்திரிகையாளர் என்னும் கௌரவப் பட்டயமும் பெற்றுள்ளார். அத்துடன் அண்ணையில் பாரதி தொடர்பாக அவர் எழுதியுள்ள நூல்களும் தனியார் விருதுகளைப் பெற்றுள்ளன.

தேர்தல்களில் பங்கு

1950–ம் ஆண்டுகளின் கடைசியில் திரு. அ. சீனிவாசன்

இராஜபாளையம் நகரசபைத் தேர்தலில் வார்டு உறுப்பினர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று நகரசபை உறப்பினராகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

1984–ம் ஆண்டிலும் 1991–ம் ஆண்டிலும் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களில் சிவகாசி பாராளு மன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக திரு. அ. சீனிவாசன் போட்டியிட்டு ஒவ்வொரு தடவையிலும் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்று குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார். இருதடவைகளிலும் முறையே இந்திரா காந்தி படுகொலை, ராஜீவ் காந்தி படுகொலை அதனால் ஏற்பட்ட அனுதாப அலை அவருக்கு பாதகமாக இருந்தது.

திரு. அ. சீனிவாசன் சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர், நூலாசிரியர், சிறந்த பேச்சாளர், இராணுவ சேவை அனுபவம் பெற்றவர். தொழிற்சங்கத் தலைவராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர். பல நாடுகளுக்கும், இந்திய நாட்டில் பல மாநிலங்கங்களுக்கும் சென்று சுற்றுப் பயணம் செய்து அனுபவம் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகள் அறிந்தவர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் 1948–50ம் ஆண்டு காலத்தில் கடுமையான போலிஸ் அடக்கு முறைக்கும் சித்திரவதைக்கும் கொடுமையான சிறைவாசத்திற்கும் உட்பட்டு மதுரை, சேலம் சிறைகளில் கடும் தண்டனை அனுபவித்து தியாகத் தழும்புகள் ஏறியவர்.

இலக்கிய அனுபவம்

திரு. அ. சீனிவாசன் ஏற்கனவே தனது குழந்தைப் பிராயத்திலிருந்தே தனது தாய் தந்தையர் மூலம் இராமாயணம், மகாபாரதம் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், நளவெண்பா, இராமனுஜருடைய தத்துவங்கள் முதலியவை பற்றி அறிமுகமானவர். விடுதலை இயக்கத்தின் ஆதர்சத்தில் பள்ளிப் படிப்புகாலத்தில், மகாகவி பாரதியார், வ.உ. சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணிய சிவா, விவேகானந்தர் நூல்கள், அவர்களைப் பற்றிய செய்திகள், ஆனந்த மடம் முதலிய பங்கிம் சந்திரர், மற்றும் சரத் சந்திரர் நாவல்கள், கல்கி நாவல்கள், மணிக் கொடி கதைகள் முதலிய இலக்கியங்களிலும் அறிமுகமாகி நாட்டுப்பற்றை வளர்த்துக் கொண்டவர். சுதந்திரப் போராட்ட காலத்தில் தீவிர வாதக் கருத்துக்களுக்கு ஆதரவான சிந்தனைப் போக்குகளைக் கொண்டிருந்தார். பாரதி, விவேகானந்தர், ஆகியோரின் இந்திய சிந்தனைப் போக்கு அவரை மிகவும் கவர்ந்தது. அதன் பெருமி தத்தை படிப்படியாக வளர்த்துக் கொண்டிருந்தார்.

திரு. அ. சீனிவாசன், இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டபோது கம்யூனிஸ்ட் இலக்கியங்களையும் குறிப்பாக மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களின் மூல நூல்களை ஆழ்ந்து படித்தார். அப்போது, இயற்கை, சமுதாயம் தனி மனித சிந்தனை பற்றியும் அதன் வழியில் தத்துவ ஞானம், அரசியல் பொருளாதாரம் சமுதாய வரலாறு பற்றியுமான ஐரோப்பிய சிந்தனைகள், ஐரோப்பாவில் நிகழ்ந்த தீவிரமான கருத்துப் போராட்டங்கள், தொழில் புரட்சி மூலம் நிகழ்ந்த சமுதாய மாற்றங்கள் முதலியவை பற்றிய இலக்கியங்கள் மூலம் ஐரோப்பிய சிந்தனை வளர்ச்சி பற்றிய அறிமுகம் ஏற்பட்டது.

அத்துடன், சோவியத் யூனியனின் தோற்றமும் வளர்ச்சியும் சர்வ தேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள் தொடர்ச்சியான அறிக்கைகள் தீர்மானங்கள் ஆகியவற்றையும் ஆழ்ந்து படிக்க நேர்ந்தது. சீனாவின் கம்யூனிஸ்ட் இலக்கியங்களையும் படிக்க நேர்ந்தது.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், நாட்டின் வளர்ச்சிக்கான பாதை எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பது தொடர்ச்சியான விவாதப் பொருளாக இருந்து வந்திருக்கிறது. இதில் ஆங்கில (ஐரோப்பிய) சிந்தனைப் போக்குகளுக்கும் இந்திய சிந்தனைப் பொக்குகளுக்கும் இடையில் அடிப்படையான மோதல் இருந்து வந்திருக்கிறது. இந்த மோதலில் பல பெரிய அரசியல் கட்சிகளும் கூட பிளவுபட்டு உடைந்திருக்கின்றன. சுதந்திரம் அடைந்தபோது இந்திய நாடும் உடைந்து, இந்தியா, பாகிஸ்தான் பின்னர் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் எனப்பிரிந்து பிளவுபட்டிருக்கின்றன.

இந்திய நாட்டின் வெளி உறவுக் கொள்கை, இந்திய நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாடு, இந்திய மக்களின் ஒற்றுமை, நாட்டின் தற்காப்பு பலம், இந்திய நாட்டின் தொழில் வளர்ச்சி விவசாயப் பிரச்சனை, உற்பத்திப் பெருக்கம், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், கல்வி, கலாச்சார முன்னேற்றம், மக்களின் சுகாதாரம் நல்வாழ்வு பல துறைகளிலும் நாட்டின் ஒன்றிணைப்பு இந்திய மக்களின் ஆன்மீக பாரம்பரியத்தின் மேன்மை, ஒட்டுமொத்தமான அரசியல், பொருளாதார, சமுதாய, கலாச்சார, ஆன்மீக வளர்ச்சி பற்றிய பலவேறு பிரச்னைகளும் எழுந்து அவைகளுக்குச் சரியான

தீர்வு காண்பதில் இந்திய மக்களிடையில் நூறாண்டு காலத்திய ஆங்கிலக் கல்வி மூலம் ஏற்பட்ட மேலைநாட்டு சிந்தனைப் போக்குகளும், இந்திய பாரம்பரியத்தின் தொடர்ச்சியான இந்திய சிந்தனைப் போக்குகளும் எழுந்து அவை மோதியிருக்கின்றன. இன்னும் அது தொடர்கிறது.

திரு. அ. சீனிவாசன் தன்னுடைய ஐம்பது ஆண்டு காலத்திற்கு மேலான பொது வாழ்க்கை, பத்திரிகைப் பணிகள், தொழிற்சங்க இயக்கப் பணிகள், விவசாயிகளின் போராட்ட அனுபவங்கள் ஐந்தாண்டு திட்டங்களின் வளர்ச்சிப் போக்குகள் பற்றிய படிப்பு, இந்திய நாட்டின் அரசியல் வளர்ச்சி ஆகியவற்றின் அனுபவத்தில் தான் அதுவரை பணியாற்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து சித்தாந்த சிந்தனை, அரசியல் கொள்கைகள் அவைகளின் செயல்பாடு, அமைப்பு நிலைப்பணிகள், அணுகும் முறை ஆகிய பல பிரச்னைகளிலும் தனக்குச் சொந்தமான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு அக்கட்சியிலிருந்து விலகி 1999–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாரதிய ஜனதாக் கட்சியில் சேர்ந்து அக்கட்சியின் தலைமையின் கீழ் சமுதாயப் பணி ஆற்றிவருகிறார். ஒரே நாடு பத்திரிகை, மற்றும் விஜய பாரதம் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியும் எழுதியும் வருகிறார்.

அத்துடன் சொந்தமாகவும், பாரதி, கம்பன், சிலப்பதிகாரம், திவ்யப் பிரபந்தம் தொடர்பான பல நூல்களும் எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டும் வருகிறார். அதன்படி பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி, பாரதியின் புதிய ஆத்திசூடி. ஒரு விளக்கவுரை, சிலப்பதிகாரத்தில் வைதீகக் கருத்துகள், ஆகிய நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த நூல்கள் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்

துறையின் சிறந்த நூலுக்கு உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெற்றிருக்கிறது.

அத்துடன் திரு. அ. சீனிவாசன் எழுதிய சிலப்பதிகாரமும் திவ்யப் பிரபந்தமும்–ஒரு ஆய்வு என்னும் நூலை பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனமான பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டிருக்கிறது.

மேலும் திரு. அ.சீனிவாசன் எழுதி முடித்து அச்சில் உள்ள, ஆழ்வார்களும், பாரதியும், பாரதியின் தேசீயம், கம்பன் ஒரு சமுதாயப் பார்வை, கம்ப நாடன் காவியத்தில் காதலும் பெருங்காதலும், கம்பன் காவியத்தில் விதியின் பிழையும் அறத்தின் வெற்றியும் என்னும் நூல்கள் விரைவில் வெளிவரவுள்ளன.

மேலும் பாரதி, கம்பன் தொடர்பாக வேறு சில நூல்களும், கிராமங்களை நோக்கி, இந்தியப் பொருளாதார சிந்தனைகள், பாரதியும் பகவத் கீதையும் முதலிய நூல்களும் எழுதிக் கொண்டு வருகிறார். பாரதி தொடர்பாக பல நூல்களை எழுதியும் பாரதி புகழ் பரப்புவதில் பங்கு கொண்டும் வருவதால் திரு. அ. சீனிவாசன் பாரதிய ஜனதா கட்சி வட்டாரத்தில் பாரதி சீனிவாசன் என்று அழைக்கப்பட்டு வருகிறார்.

⌘ ⌘ ⌘